127/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மே ௧௨, ௨௦௦௧ தொகுதி 106

எண் 1..

V2,11,31'P00
P00·106·1
2783

12-5-2000

# உள்ளடக்கம்

பக்கங்கள்


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் — v-viii

Personnel of the Government of Tamil Nadu — ix-xii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் — xv-xvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) — xvii-xxvii

1. வினாக்கள்–விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் — 1-38

2. கவன ஈர்ப்பு—

(அ) திண்டுக்கல், தாடிக்கொம்பு பேரூராட்சி, குடகனாற்றின் குறுக்கே ஆத்துப்பட்டி பாலம் மற்றும் அய்யம்பாளையம் பாலம் — 39-41

(ஆ) தருமபுரி அவ்வையார் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு பயணியர் மாளிகை இடத்தை வழங்கக் கோருதல் — 41-45

3. அறிக்கைகள் அளித்தல்—

(அ) மதிப்பீட்டுக் குழு — 45

(ஆ) பொதுக் கணக்குக் குழு — 45-46

(இ) அரசு உறுதிமொழிக் குழு — 46

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு — 46

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்— | |
| (அ) கோரிக்கை எண் 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 15 — காவல் துறை<br>(இ) கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள் | 46-155 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 47,52,59,66, 92-95,99, 109-110, 120-124,140 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 67-75,101-102, 103,107 |
| திரு. தா. உதயசூரியன் | 75-78 |
| *திரு. கே. சுப்பராயன் | 48,53,60, 79-83,89 |
| *திரு. இ.ஜி. சுகவனம் | 83-87 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 51,56,63,87-95 |
| திரு. குழந்தை தமிழரசன் | 95-100 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 66,104,107-108 |
| *திரு. ஏ.வி.ஏ. நாசர் | 49-50,54-55,61, 110-113 |
| திரு. கே.எம். விஜயகுமார் | 113-116 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 108,116-123 |
| திரு. பி.வி.எஸ். வெங்கடேசன் | 124-127 |
| திரு. கே.ஆர். இராமசாமி | 127-129 |





| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| திரு. கே. துரை | 129-130 |
| திரு. பி. வெங்கடசாமி | 52,57,131-134 |
| திரு. வ. அன்பழகன் | 134-137 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 138-146 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 156-159 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

**7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

**8. போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

**10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

**11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

**12. பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



**13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

**14. சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

**15. கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** கைத்தறி, துணித் தொழில்.

**16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக்கட்டுப்பாடு.

**18. வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: கால்நடை பராமரிப்பு. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்: மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த திருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Youth and Pollution Control** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |

| | | |
|---|---|---|
| **21.** | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22.** | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23.** | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24.** | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25.** | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26.** | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. அ.லெ. சுப்பிரமணியன்
2. திரு. சி.டி. தண்டபாணி
3. திரு. குத்தாலம் பி. கல்யாணம்
4. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
5. திரு. நா. பெரியசாமி

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. [illegible] | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. [illegible] | .. இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, [illegible] | .. அரியலூர் |
| 7. | [illegible] | .. கோவில்பட்டி |
| 8. | [illegible] | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. [illegible].ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. [illegible] | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. [illegible] | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. [illegible] | .. அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. [illegible] | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. [illegible] | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத, திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ - ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
31. இராமச்சந்திரன். திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
34. இராமலிங்கம். திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
36. இராமன், டாகடர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. நபூ - மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. - தளி
39. இராஜேந்தர், திரு. டி - பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. - தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. - வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. - மேட்டூர்

63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
110. சைதை சா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
118. தங்கவேல், திரு. அல. - சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்



130. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
131. துரை. திரு. கே. - திருவெறும்பூர்
132. துரைமுருகன், திரு. - காட்பாடி
133. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
134. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
135. நடராசன், திரு. ஆ. - பேரூர்
136. நடராஜன், திரு. த. - செஞ்சி
137. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
138. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
139. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
140. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
143. நேரு, திரு. கா.நா. - லால்குடி
144. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
145. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
152. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்

| | | |
|---|---|---|
| 153. பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | முருங்கத்தூர் |
| 154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். | .. | பழனி |
| 155. பாலசுப்பிரமணியன், திரு. ப. | .. | பட்டுக்கோட்டை |
| 156. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 157. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 158. புரட்சிமணி, திரு. ச. | .. | [illegible] (செ.வ.) |
| 159. பூவேந்தன், திரு. த. | .. | [illegible] (செ.வ.) |
| 160. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 161. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 162. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | [illegible] |
| 163. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 164. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆவா.) |
| 165. பெர்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 167. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | [illegible] |
| 169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்றாம்பள்ளி |
| 171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 172. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 173. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 174. மணி, திரு. டி. | .. | விளாங்காடு |
| 175. மணி, திரு. ஜி.கே. | .. | [illegible] |



| | | |
|---|---|---|
| 176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 177. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |
| 178. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 179. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 180. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 181. மனோகரன், திரு. கு. | .. | தருமபுரி |
| 182. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 183. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை |
| 184. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 186. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 187. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 188. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 189. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 190. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 191. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 192. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 193. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 194. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 195. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 196. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 197. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |

| | | |
|---|---|---|
| 198. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 199. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 200. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 201. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 202. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 203. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 204. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 205. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 206. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 209. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 210. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 211. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 212. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி. |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |



| | | |
|---|---|---|
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 234. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 235. வெற்றிடம் | .. | திருப்போரூர் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 30, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 12, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்"*

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 601, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**601—**

**பாடநூல்கள்**

***24139—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சில்லறை விற்பனையாளர்கள், தனியார் விற்பனையாளர்கள் ஒரு சில பாடநூல்களுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி மாணவ/மாணவியர்களுக்குச் சிரமம் ஏற்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்குறையைப் போக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

[2000 மே 12

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விதிமுறைகளை மீறுவோரின் உரிமங்கள் இரத்து செய்யப்படுகின்றன. 1999-2000 கல்வியாண்டு முதல், பாடநூல்கள் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுவதைக் கண்காணிக்க மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவிகளுக்கு உரிய நேரத்தில் பாடப் புத்தகங்கள் கிடைப்பதற்கு நம்முடைய அரசு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதுபோல— இளம் உள்ளங்களிலே குழந்தைகள் படிக்கக்கூடிய புத்தகத்திற்குச் செயற்கையான ஒரு தட்டுப்பாட்டை உருவாக்கக்கூடிய வியாபாரிகளுடைய உரிமங்களை இரத்து செய்து நீதிமன்றத்தின் மூலமாக அவர்களுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும் அளவிற்கு இந்த அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யாரையோ மனதிலே வைத்துக்கொண்டு சட்டமே செய்வார்களா என்று கேட்கிறார்கள், தண்டனை கிடைப்பதற்கு. அப்படிப்பட்ட பிரச்சினை எதுவும் இல்லை. அரசாங்கத்தாலே பாடநூல் கழகம் மூலமாக தயாரிக்கப்படுகிற நூல்களில் ஏறத்தாழ எட்டாவது வகுப்பு வரையில் ஏழை மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிற காரணத்தால், அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்டக் கல்வி அலுவலர்களை எல்லாம் கொண்ட குழு ஒன்று அனைத்துப் பள்ளிகளுக்கும் அந்தப் புத்தகங்கள் காலத்தில் கிடைக்க, கடந்த மூன்று ஆண்டுகளாகவே முறையாக ஏற்பாடு செய்து அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. விலைக்கு விற்கப்படுகிற புத்தகங்கள் மட்டும்தான், அதுவும் மேல் வகுப்பு மாணவர்களுக்கு அப்படிப்பட்ட பாட நூலை வாங்கி விற்கிற முகவர்கள் மூலமாக, அதுவும் அந்தப் பாடநூல் கழகத்திலே விண்ணப்பித்து அனுமதிக்கப்படுகிற முகவர்கள் மூலமாக விற்கப்படுகிறது. ஆகவே, இவற்றில் செயற்கையாக மாணவர்களுக்கு புத்தகங்கள் கிடைக்காத ஒரு நிலைமையை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு யாருக்கும் இல்லை. எங்காவது ஒன்றிரண்டு



2000 மே 12]

இடங்களில் விநியோகிப்பதிலே ஒன்றிரண்டு குறைகள் ஏற்படுமானால், அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்பு அந்தப் பாடநூல் கழக மேலாண்மை இயக்குநருக்கு இருக்கிறது. ஏற்கெனவே 1997-ல் ஐந்து விற்பனையாளர்களுடைய உரிமங்களும், 1998-ல் இரண்டு சில்லறை விற்பனையாளர்களுடைய உரிமங்களும், இரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 602, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**602—**

## கல்லூரிகளுக்குத் தன்னாட்சி

**•33640—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகுதியுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி உரிமை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பல்கலைக்கழக மானியக் குழு அளித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி தன்னாட்சித் தகுதி நிலை கோரி விண்ணப்பிக்கும் கல்லூரிகளின் விண்ணப்பங்கள் முறையே அந்தந்த பல்கலைக்கழகம் மற்றும் அரசால் ஆய்வு செய்யப்பட்டு பல்கலைக்கழக நல்கைக் குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் தன்னாட்சி உரிமை வழங்கப்படுகிறது. அதனைச் சார்ந்த பல்கலைக்கழகம் அதனை அறிவிக்கையாக வெளியிடுகிறது.

முற்பகல் 9-35

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக் குழுவானது, இப்பொழுது வெறும் grant giving Body-யாக, அதாவது மானியம் வழங்கும் நிறுவனமாக மட்டுமல்லாமல், தரமான கல்விக்கு ஆலோசனை வழங்குகிற நிறுவனமாகவும் இயங்கி வருகிறது. அது மூன்று யோசனைகளை அண்மைக் காலத்திலே வழங்கி வருகின்றது. ஒன்று, ஒவ்வொரு மாநிலத்திலும், மாதிரிப் பல்கலைக் கழகங்களைத் தொடங்குதல், இன்னொன்று, தேசிய தர மதிப்பீட்டிற்கும்,

ஏற்பளிப்பிற்கும் எல்லா கல்லூரிகளையும் கட்டாயமாக உட்படுத்துதல், அடுத்து ஒவ்வொரு கல்லூரியும் தன்னாட்சி பெற உதவுதல் என்று மூன்று ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. தன்னாட்சி பெறுகின்ற காரணத்தினால், வளர்ந்து வரும் கல்வித் தேவைக்கேற்ப புதிய பாடங்களை மாணவர்கள் கற்பதற்கு அது வழிவகை செய்கிறது. அதுமட்டுமல்லாமல், தன்னாட்சி பெறுகிற கல்லூரிகளுக்கு பல்கலைக்கழக மானியக் குழு நேரடியாக பெரிய அளவிலே நிதியுதவி செய்கிறது. தன்னாட்சி பெறவேண்டுமென்று சொன்னால், பல்கலைக்கழகம் பரிந்துரை செய்ய வேண்டும். அரசும் பரிந்துரை செய்ய வேண்டும் என்ற நிலைகள் இன்றைக்கு இருக்கின்றன. கல்லூரிகள் விண்ணப்பம் செய்து பல்கலைக் கழகம் ஏற்காமல் இருக்கிற விண்ணப்பங்கள் எவ்வளவு? அல்லது அரசு ஏற்காமல் இருக்கிற தன்னாட்சி கோரும் விண்ணப்பங்கள் எவ்வளவு என்பதை தங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னாட்சி உரிமை என்பதை, இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே மட்டும்தான் அதிகக் கல்லூரிகள் பெற்று இருக்கின்றன. ஒன்று. தன்னாட்சி கேட்பதற்கு சில அடிப்படையான தேவைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு கல்லூரி சிறந்த நிர்வாகத்துடன் இருக்கவேண்டும். தகுந்த பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் ஆகியோர்களைப் பெற்றிருக்க வேண்டும். மிகச் சிறந்த நூலகம் இருக்க வேண்டும் இவையெல்லாம் 20, 30 ஆண்டுகள் அல்லது 40 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறுகிற கல்லூரிகளில்தான் படிப்படியாக உயர்ந்து தன்னாட்சி பெறுவதற்கான நல்வாய்ப்பைப் பெறும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தன்னாட்சி பெறக் கூடிய வாய்ப்பு இருந்த 67 அரசுக் கல்லூரிகளில், 8 பெற்று இருக்கின்றன. 161 அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 36 கல்லூரிகள் பெற்றிருக்கின்றன. இன்னும்கூட வேறு 2 கல்லூரிகள் பெற்று, ஆக மொத்தம் 46 கல்லூரிகள் பெற்று இருக்கின்றன. அவை தவிர 7 அரசுக் கல்லூரிகள் தன்னாட்சி பெறுவதற்குத் தகுதி பெற்று அது கருத்துருவில், ஆய்வில் இப்போது இருக்கிறது. தன்னாட்சி பெறுவது மட்டுமல்ல, தரம் பெறக்கூடிய வாய்ப்பும், தமிழ்நாட்டிலே உள்ள கல்லூரிகளுக்குத்தான் அகில இந்திய அடிப்படையில் அதிகம் இருக்கிறது. தர நிர்ணய சிறப்புகளை அண்ணா பல்கலைக்கழகம், லேடி வெலிங்டன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, வேறு பல கல்லூரிகள் பெற்று இருக்கின்றன. நான் நினைவிலே இருந்து குறிப்பிடுவது, ஒன்று தன்னாட்சி, இன்னொன்று



தர நிர்ணயம். இரண்டு நிலைகளிலும் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க அளவிற்கு சிறப்பான இடத்தை வகிக்கிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி கலை அறிவியல் கல்லூரிகளுக்கு National Assessment and Accreditation Council இருக்கிறதோ, அதுபோல தொழில் கல்வி நிறுவனங்களுக்கு National Accreditation Board என்று இருக்கிறது. இப்போது National Accreditation Board-லே 'பி', (B) கிரேடு வாங்கி விட்டால், அந்தத் தொழிற் கல்வி நிறுவனங்களுக்கு தன்னாட்சி கொடுக்கலாமா? - கொடுக்க வேண்டும் என்று A.I.C.T.E.- லே பேசப்பட்டு வருகிறது. அதுபோல கலைக் கல்லூரிகளுக்கும் National Assessment and Accreditation Council-லில் 'பி' (B) கிரேடு கிடைத்தால் அவற்றிற்கு தன்னாட்சி வழங்க அரசு பரிந்துரை செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒன்றைக் காட்டி இன்னொன்றைச் சொல்வது என்பது அவ்வளவு நியாயம் அல்ல. ஒவ்வொன்றுக்கும் ஒரு வகைத் தகுதி. தர நிர்ணயம் என்பது வேறு, தன்னாட்சி என்பது வேறு. தன்னாட்சி நிறுவனமாக இயங்கக் கூடிய வாய்ப்புப் பெற்றவர்கள்கூட தர நிர்ணயத்திலே இடம் பெற முடியாத நிலைமை இருக்கலாம். தர நிர்ணயம் பெற்ற சில வகுப்புகளை அல்லது பாடத் திட்டங்களைக் கொண்ட கல்லூரிகள்கூட தன்னாட்சி பெற முடியாத நிலைமை இருக்கலாம். ஒன்று நிர்வாகத்தோடு சேர்ந்தது. இன்னொன்று படிப்புத் தரத்தைப் பொறுத்தது. ஆகவே இவையெல்லாம் அந்தந்தப் பல்கலைக்கழகத்தாலேதான் முதல் கட்டத்திலே தீர்மானிக்கப்பட வேண்டும். அந்தந்தப் பல்கலைக்கழகம் அப்படித் தீர்மானித்து அனுப்புமானால், அரசு நிச்சயமாக அதை ஏற்கும். ஆனால் பல்கலைக்கழக மானியக் குழுவோ, A.I.C.T.E. என்ற அந்த அமைப்போ, அதனை ஏற்றுக்கொள்வது அவர்களைப் பொறுத்தது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 603, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

603—

## மூலிகைத் தோட்டம்

***2986—திரு. இரா. தாமரைக்கனி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, செம்பகத்தோப்பு அருகே அரசினர் மூலிகைத் தோட்டம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், மூலிகைத் தோட்டத்தைச் செயல்படுத்த அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் நிலத்தைக் கையகப்படுத்த அல்லது குத்தகைக்கு எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அங்கு அரசு மூலிகைப் பண்ணை எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டாக்டர் ஹண்டே அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது, அங்கே மூலிகைத் தோட்டங்கள் இருந்தன. இப்போது அது செயல்படாமல் இருக்கிறது. செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமல்லாமல் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் மூலிகைகளிலிருந்து பிறந்ததாக ஐதீகம் சொல்கிறது. அங்கே அரிய மூலிகைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த மூலிகைகளையெல்லாம் நாட்டு வைத்தியர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலிருந்தும் இமயமலையிலிருந்தும் மூலிகைகளை எல்லாம் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் வற்புறுத்தி அப்படி ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா? எம்.பி.பி.எஸ். பாடநூலில் சித்த வைத்திய முறையைக் கட்டாயப் பாடமாகக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா, ஏற்கெனவே இரண்டு காலேஜ்கள் இருக்கின்றன. அந்த இரண்டு காலேஜ்களிலும் மாணவர்கள் படிக்க முன்வரமாட்டேன் என்கிறார்கள். பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள்கூட இந்த மூலிகைகளினால்தான் குணமடைவதாகச் சொல்கிறார்கள். ஆகவே இதை





அறிந்து மூலிகைகளை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று. திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான செண்பகத்தோப்பில் சுமார் 33.5 ஏக்கர் நிலத்தை வருடம் ஒன்றுக்கு குத்தகைத் தொகையாக 9,000 ரூபாய்க்கு எடுத்து 1984 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரையில் இது செயல் முறைக்கு வந்தது. பிறகு மறுபடியும் 1-11-1984 முதல் 31-10-1988 வரை 5 ஆண்டு காலத்திற்கு குத்தகை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது அந்தத் தேவஸ்தானம் 20,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் நம்முடைய அரசின் மூலிகைப் பண்ணை அமைப்பதன் மூலம் அங்கே தொடர்ந்து 99 வருட நீண்டகால குத்தகைக்கு அந்த நிலத்தைக் கொடுத்தால்தான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று இந்தத் துறையில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அந்த தேவஸ்தானம் அபபடி 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்குக் கொடுக்க முடியாது என்று தெரிவித்துவிட்ட காரணத்தால் அந்த நிலத்தை மீண்டும் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான அந்த நிலத்தை ஒப்படைத்துவிட்டார்கள். இதனால் இப்போது அங்கே மூலிகை பயிரிட முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல மூலிகைகள் இப்போது நமக்கு நிச்சயம் தேவைப்படுகின்றன. மக்கள் நல்வாழ்வுத் துறையிலே 'இந்தியன் மெடிஸன்' பிரிவு இன்றையதினம் ஏராளமான மூலிகைகளைக் கொண்டு புதிதுபுதிதாக மருந்துகளையெல்லாம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வாங்கித் தந்தால் நிச்சயமாக இந்த இலாக்காவில் அந்த நிலத்தை எடுத்து அங்கே உள்ள ஏழை எளியவர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கித் தரவும் நடவடிக்கை எடுக்கும்.

இரண்டாவது, நம்முடைய மத்திய அரசாங்கம் மூலிகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி கொடுத்த காரணத்தாலே நம்முடைய மூலிகைகளுக்கு எல்லாம் இன்றையதினம் வெளிநாடுகளில் கிராக்கி இருக்கிறது. ஆனால் இங்கே அதனால் பாதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே இன்றையதினம்கூட பத்திரிகையில் மாண்புமிகு உறுப்பினர் பார்த்திருப்பார். வேப்ப எண்ணெய்

தயார் செய்கின்ற அந்த அங்கீகாரத்தை அமெரிக்க நாட்டுக்கு ஏற்கெனவே மத்திய அரசாங்கம் கொடுத்திருந்தது. நல்லவேளையாக நீதிமன்றத்தின் மூலம் அது இன்று தடை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இந்தக் காப்புரிமை வழங்குவதிலே மத்திய அரசாங்கம் இப்படிக் கொள்கை அளவிலே மாநில அரசுகளோடு கலந்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாநில அரசாங்கம் ஏற்கெனவே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுக்குச் சொந்தமான 'டாம்ப்கால் நிறுவனம்' தயார் செய்கின்ற அத்தனை மருந்துகளுக்கும் தேவையான மூலிகைப் பொருட்களை, மூலிகைகளை நம்முடைய மூலிகைத் தோட்டத்திலேயே பயிரிடுவதாகச் சொல்கிறார்கள். தற்போது 'வயாகராவுக்கு' இணையாக 'விகரஸ்' என்ற ஒரு மாத்திரையை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தி, அதிலே 'கோல்ட் விகரஸ்' என்ற இன்னொரு பிரீமியம் பிராண்டையும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த விகரஸ் மாத்திரைக்குப் பயன்படுகிற மூலிகைகள் எவை எவை? அவை நம்முடைய தோட்டத்திலே பயிரிடப்படுகின்றனவா? அதன் இரகசியங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. அவர் சும்மா விளையாட்டிற்குக் கேட்கிற கேள்வி. டாக்டர் ஆ. ஞானசேகரன்.

முற்பகல் 9-45

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நம்முடைய அரசினுடைய சார்பாக எந்த, எந்த இடங்களில் மூலிகைப் பண்ணைகள் நடைபெற்று வருகின்றன? காசினிக் கீரை என்கின்ற மூலிகை பல நோய்களைக் குணப்படுத்துகிறது என்று கூறப்படுகிறது. அதேபோல நித்தியக் கல்யாணி என்ற மூலிகையினுடைய வேர், அலோபதி மருந்துகளால் குணப்படுத்த முடியாத புற்று நோயைக் குணப்படுத்துகிறது என்று கூறப்படுகிறது. இதுபோன்ற மூலிகைகளை-



காசினிக் கீரை என்கின்ற மூலிகை, நித்தியக் கல்யாணி என்கின்ற மூலிகை ஆகியவற்றை— நம்முடைய அரசுப் பண்ணைகளில் அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற்றுநோயைக் குணப்படுத்த இன்றையதினம் நம்முடைய மூலிகைகள் பயன்பட்டு வருகின்றன. பல நோயாளிகள் சிகிச்சை பெற்றும் இருக்கிறார்கள். அதனால் நல்ல பயன் கிடைக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விஞ்ஞான ரீதியாக அதை நிரூபிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளிலே இந்த அரசு ஈடுபட்டு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த மூலிகைகளை எல்லாம் பயிரிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Indian Medical Council சார்பாக பரம்பரை வைத்தியர்களுக்கு தற்போது உரிமை வழங்கப்படுவதில்லை. கிட்டத்தட்ட 40, 50 ஆண்டுகாலம், ஏன் தொடர்ந்து 6 தலைமுறை, 8 தலைமுறை என்று வைத்தியம் செய்பவர்களுக்காவது, உண்மையான அவர்களுடைய மருத்துவத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் தொடர்ந்து மருத்துவம் செய்ய அனுமதி வழங்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் அந்த மருத்துவர்களைப் பதிவு செய்வதற்காக 1997 ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, விளம்பரங்கள் எல்லாம் செய்யப்பட்டு, அவர்களுக்கு ஓராண்டு காலம் அவகாசமும் கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படிப் பதிவு செய்தவர்களை இந்த அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களிலே இந்த அரசாங்கம் கொடுத்த அந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் தவிர மற்றவர்கள் பதிவு செய்துகொள்ளவில்லை.

[2000 மே 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய காலைப் பத்திரிகையில் வேப்ப மரத்திற்கு நம்முடைய நாட்டிற்கு patent right கிடைத்திருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. இது ஒரு நல்ல செய்தி. அதுபோல, தமிழ்நாட்டில் மூலிகைகள் மூலம் ஏராளமான மருந்துகள் தயார் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதை உலகமே அறியும். ஆகவே, என்னென்ன மூலிகைகளில் நாம் patent right பெற்றிருக்கிறோம். மற்ற நாடுகளுக்கு அது கிடைக்காமல் செய்வதற்கு நமது அரசு என்னென்ன முயற்சிகளைச் செய்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இந்த அவையிலே விடை அளிக்கும்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். வேப்ப எண்ணெய்க்கு, மாண்புமிகு முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் இருந்தபோது அமெரிக்க நாட்டுக்கு patent right கொடுத்துவிட்டார்கள். அப்படிக் கொடுத்தது தவறு என்று நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் அப்படி patent right கொடுத்தது தவறு என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. மீண்டும் இப்போது patent right-ஐ நாம் யாருக்கும் கொடுக்க விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதுபோல, தமிழ்நாட்டிலே, ஏன் இந்தியாவிலே ஆயிரக்கணக்கான மூலிகைகள் இருக்கின்றன. எந்த மூலிகையாக இருந்தாலும் வெளிநாடுகளுக்கு patent right கொடுக்கக் கூடாது என்ற தமிழக அரசினுடைய கருத்தை மத்திய அரசுக்கு நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு மத்திய அமைச்சரிடத்திலே இதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இன்றையதினம் தாராளமயக் கொள்கைகளின் காரணமாக, இந்த உரிமை கொடுப்பது குறித்து மத்திய அரசாங்கம்தான் முடிவு எடுக்க வேண்டும். இது குறித்து நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் மூலமாக இந்த அரசு வலியுறுத்தத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறையின் மூலமாக பல்வேறு உதவித் திட்டங்கள் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலே ஏராளமான இளைஞர்களும்,



பெண்களும் படித்துப் பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட, பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், வேளாண்மைத் துறையோடு இணைந்து மூலிகைப் பண்ணைகளை உருவாக்குகின்ற அந்தத் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்று மாவட்டந்தோறும் அப்படிப்பட்ட ஓர் அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் விளைகின்ற மூலிகைகளை அரசே கொள்முதல் செய்கின்ற வகையிலே நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் படிப்பு படித்துவிட்டு இருக்கிற வாலிபர்களுக்காக இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியாது. ஏனென்றால் மூலிகைகள் எல்லா இடங்களிலும் பயிரிடக்கூடிய ஒன்றல்ல. சில இடங்களில்தான் அந்த மூலிகைகள் பயிராகின்றன. மலைப் பகுதிகள், மலை சார்ந்த பகுதிகளில் மற்றும் சீதோஷ்ண சூழ்நிலைகளை வைத்துத்தான் அந்த மூலிகைகள் பயிராகின்றன. எனவே, எந்தெந்த இடங்களில் மூலிகைகள் பயிராகின்றனவோ, அங்கெல்லாம் கொள்முதல் செய்து மருந்து தயாரிப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைகள் அழியாமல் பாதுகாக்க வேண்டும். 99 வருஷ குத்தகைக்குக் கோயிலிலேயிருந்து நிலம் கொடுத்தார்களென்றால், உடனே ஏற்பாடு பண்ணுகிறோம் மூலிகைத் தோட்டம் என்று சொன்னார்கள். இப்போது 99 வருஷக் குத்தகை கிடையாது. என்னைப் போய் அவர்களிடம் பர்மிஷன் வாங்கிக்கொள்ளச் சொல்கிறீர்கள். கோயில் அதிகாரிகளோ— பெரிய அதிகாரிகள், சின்ன அதிகாரிகள், அறங்காவலர் குழு, நான் சொன்னால் கேட்பார்களா? நான் அண்ணா தி.மு.க. காரன். அவர்கள் தி.மு.க. காரர்கள். ஆகவே நீங்களே முயற்சி பண்ணி, அந்த நிலங்களை வாங்கி, நீங்கள் மூலிகைகள் அழியாமல் இருக்கப் பாதுகாக்க வேண்டும். எங்கள் ஊர்க்காரப் பையன் மூலிகையிலே பெட்ரோல் கண்டுபிடிக்கிறேன் என்று சொல்லி, அவன் மீது சி.பி.ஐ.-யிலே எல்லாம் வழக்குப் போட்டார்கள்; ஆனால், காப்புரிமை அரசாங்கம் கொடுப்பதற்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் இங்கு தமிழ்நாட்டில் இருக்கிற நிறைய

[2000 மே 12

மனிதர்களிடம் எல்லாம் மூலிகையிலே பெட்ரோல் இருக்கிறது என்று சொல்லி, ஏமாற்றி ரூபாய் எல்லாம் வாங்கிவிட்டார். முதலமைச்சரிடம் தங்கப் பேனா பரிசுகூட வாங்கி விட்டார். இதையெல்லாம் பறிமுதல் பண்ணுவதற்கும், சொத்தை முடக்குவதற்கும் அமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடம் சொல்லி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலே இன்றையதினம் மூலிகைகள் பயிரிடுவது குறித்து ஏற்கெனவே இலாக்கா ஆய்வு செய்து, ஐந்தாண்டு காலம் அல்லது பத்தாண்டு காலத்திலே அந்த மூலிகைகளைப் பயிரிட்டு, தொடர்ந்து அந்தத் தொழிலைச் செய்ய முடியாது என்று கருதிய காரணத்தினாலேதான் நீண்டகால குத்தகைக்கு வேண்டுமென்று அந்தத் துறை கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல மீண்டும், அறநிலையத் துறையிடம் அரசாங்கம் வலியுறுத்திக் கேட்டு, அவர்கள் கொடுத்தால், மூலிகை பயிரிடுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

இராமர் தயாரித்த போலி பெட்ரோலியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். அந்த வழக்கு சி.பி.ஐ.-யிலே இருக்கிறது. தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 604, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**604—**

### மின்மாற்றிகள்

***24750—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் அடிக்கடி மின் மாற்றிகள் பழுதடைவதால், 100 கே.வி., 63 கே.வி. ஆகிய மின்மாற்றிகள் கிடைக்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2000 மே 12]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள 63 கே.வி.ஏ. மின்மாற்றிகள் 208-ல் 69 மின்மாற்றிகள் பழுதடைந்திருந்தன. அதைப்போலவே, 100 கே.வி.ஏ. மின்மாற்றிகள் 326-ல் 125 மின்மாற்றிகள் பழுதடைந்திருந்தன. இந்த பழுதடைந்த மின் மாற்றிகள் அனைத்தும் மாற்றப்பட்டு, புதிய மின்மாற்றிகள் இப்பொழுது பொருத்தப்பட்டுள்ளன.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் இப்படி அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைவதற்கு முக்கியமான காரணம், ஆலங்குடி தொகுதியில் இருக்கக்கூடிய 110 கிலோ வாட் துணை மின்நிலையத்திற்கு இன்னும் இரண்டு 16 எம்.வி. transformers வரவில்லை. அதேபோல, கரம்பக்குடியில் இருக்கக்கூடிய 110 கிலோவாட் துணை மின்நிலையத்திற்கு 10 எம்.வி. transformer வரவில்லை. ஆகவே இப்படி துணை மின்நிலையத்திற்கு வரவேண்டிய transformer-கள் வராத காரணத்தினால், மிகக் குறைந்த அழுத்த மின்சாரம் இந்தப் பகுதி பூராவும் இருக்கிறது. ஆகவே, அடிக்கடி இப்படி மின் மாற்றிகளும் பழுதடைந்து முற்றிலும் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, அழியாநல்லை, ஆலவநத்தாங்கோட்டை, கீரமங்கலம் பகுதி, புள்ளாம்படியூர், வடகாடு, மாங்காடு, வெட்டவெளியூர், மலையூர், புதுவெளியூர், ரகுநாதபுரம், செங்கைமேடு பள்ளத்தாக்கு, இப்படி பல பகுதிகளில் ஆலங்குடி தொகுதியில் முழுமையாக இப்போது குறைந்த அழுத்த மின்சாரத்தினால் இவை பாதிக்கப்படுகின்றன. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக துணை மின்நிலையத்திற்கு வரவேண்டிய transformer, அரசிடம் வலியுறுத்தியும் வரவில்லை. ஆலங்குடிக்கு 16 எம்.வி. transformer-களும் transformer-களும், கரம்பக்குடிக்கு 10 எம்.வி. transformer-களும் உடனடியாக வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஆலங்குடியில் வாழை மற்றும் தென்னை போன்ற பணப் பயிர்கள்தான் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. அதற்கெனப் பயன்படுத்தப்படும் பம்ப் செட்களில் நீர்மூழ்கி மோட்டார்கள் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு

அதிகமாக சில நுகர்வோர் பயன்படுத்துவதால் மோட்டார்களில் எடுக்கப்படும் ஆம்பியரின் அளவு அதிகமாகி, மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, 16 எம்.வி.யாக இருந்தாலும் சரி, 10 எம்.வி.யாக இருந்தாலும் சரி, அந்த transformer-களையும் மற்ற துணை மின்நிலையங்களையும் மேம்படுத்துவதற்கு மின்வாரியம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. இப்போது transformer-கள் பற்றாக்குறை அந்தப் பகுதியிலே இல்லை. திருச்சியிலே ஏராளமான transformer-கள் கையிருப்பிலே இருக்கின்றன. எனவே, அப்படி பழுதடைந்தால், உடனுக்குடன் மாற்றி, அது சீர்செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 605, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**605—**

### ஏரிக் கால்வாய்

***6535—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பர்கூர் தொகுதியில் படேதலா ஏரிக் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இவ்வினம் தொடர்பான முதனிலை அறிக்கை ரூபாய் 8 கோடியே 99 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் தயார் செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர்களின் அறிக்கையினைப் பெற்றபின் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 9-55

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதியிலே படேதலா ஏரிக் கால்வாய் என்பது மிக முக்கியமான பிரச்சினையாக இன்றைக்கு விளங்கிக்கொண்டு இருக்கிறது. கடந்த





45 ஆண்டு காலமாக நம்முடைய விவசாயப் பெருமக்கள் எல்லாம், போராடி வருகிறார்கள். கிட்டத்தட்ட 37 ஏரிகள் பாசன வசதிக்காக இந்த ஏரிக் கால்வாயை விரிவுபடுத்தினால் பயன்பெறும். கிட்டத்தட்ட 1 இலட்சத்து 25 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுகின்ற நிலைமையிலே இப்போது விவசாயிகள் இதனை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றபிறகு 1-9-1998 இல் இந்தத் திட்டத்திற்காக 8 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, விவசாயிகளினுடைய நெடுநாளைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்தத் திட்டத்தினை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் நோக்கத்தை, அவசியத்தைப் புரிந்துகொண்ட காரணத்தால் தான் இந்த அரசு 1998-99 ஆம் ஆண்டு இதுகுறித்து ஒரு மதிப்பீட்டைத் தயாரித்து தரும்படி தலைமைப் பொறியாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையிலேதான் 8 கோடியே 99 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் அதை அரசு எடுத்துக்கொள்ளாது. அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புகையும் தேவைப்படுகிறது. அதற்கு அடுத்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையருடைய எண்ணத்தையும் ஒப்புகையையும் அரசாங்கம் கேட்டிருக்கிறது. இதையெல்லாம் எடுத்துக்கொண்ட பின்னர்தான், இவையெல்லாம் இந்தத் திட்டத்திற்கு உறுதுணையாக இருக்குமானால்தான் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். எனவே, மாவட்ட ஆட்சித்தலைவருடைய அறிக்கையும், நில நிருவாக ஆணையாளருடைய அறிக்கையும் கிடைத்தவுடன் நிதிநிலைமைக்கேற்ப அரசு இதுகுறித்து பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 606, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**606—**

**மரங்களை வளர்த்தல்**

***26929—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வனத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் கிராமிய வனக் குழு மரம் வளர்க்கும் பணியில் புளிய மரம், பனை மரம் போன்ற மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு முதல் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக வனத்தை ஒட்டிய கிராமப் பகுதிகளில் கிராம வனக் குழு அமைக்கப்பட்டு புளியமரம், பனைமரம் உள்பட பயன்தரும் மரவகைகள் வளர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் 5 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயன்தரும் புளியமரம், மா, கொய்யா போன்ற பழவகை மரச்செடிகள் தலா 5000 வீதம் உற்பத்தி செய்ய மானியமும் அளிக்கப்படுகிறது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம் ஆகும். ஆனால் இதை செயல்படுத்துகின்ற மாவட்ட வனத்துறை அதிகாரிகள் எந்த கிராமத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதையோ அல்லது அதை செயல்படுத்துகின்ற நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பது என்பதையோ குறித்து அங்கு இருக்கின்ற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அல்லது ஒன்றியக் குழுத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை கலப்பதேயில்லை. ஆனால் சமீபத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைக்கு பிறகு தகவலுக்காக எங்களுக்கு தகவல் அனுப்புகிறார்கள். அதனால் இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயல்படுத்த இயலவில்லை. ஆகவே ஒரு குழு ஏற்படுத்தி தேர்ந்தெடுக்கப்படுகின்ற கிராமங்கள், நிர்வாகிகள், அல்லது



அந்தக் குழுவில் இருந்து தேர்ந்தெடுத்து, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய திட்டத்திற்கு கிராமங்களைத் தேர்ந்தெடுக்கிறபோது காட்டை ஒட்டியுள்ள கிராமமாக அது இருக்க வேண்டும். காட்டிலே கூட பெரிய காடு அல்ல, சாதாரண அழுகுகின்ற நிலையில் உள்ள ஒரு காடு. அதை ஒட்டியுள்ள கிராமமாக இருக்க வேண்டும். எடுக்கப்பட்ட அந்தக் கிராமத்தின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுகிறபோது, அரசு தானாகவே முடிவெடுக்காமல் ஒரு கிராமக் குழுவை அமைக்க வேண்டும். அந்தக் கிராமக் குழு மூலமாகத்தான் அந்தக் கிராமத்திலே நடைபெறுகிற அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பது அரசினுடைய ஆணை. ஆனால் இதுவரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாமலேயே வனத் துறையினர் சில கிராமங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று சொன்னார். அதைத் தான் நாங்கள் இப்போது மாற்றியமைத்து இருக்கிறோம். M.L.A.-வை கேட்காமல் நீங்கள் எந்தக் கிராமத்தையும் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறோம்.

இரண்டாவது, அவர்கள் தேர்ந்தெடுக்கிற முறை சரியில்லை என்று சொன்னார். இப்போதும் நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து ஜனநாயக முறைப்படி அதில் ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் சில எம்.எல்.ஏ.க்கள் (குறுக்கீடு) எனக்கு வந்த தகவல்— நாங்கள் சொல்லுகிறவரைத்தான் அந்தக் குழுவிற்குத் தலைவராகப் போட வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. அது ஜனநாயகம் ஆகாது. எம்.எல்.ஏ.-க்கள் பணிகளைக் கண்காணிக்கலாம், ஆலோசனைகள் வழங்கலாம். எந்தக் கிராமத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதை, உங்களிடம் கலந்துகொண்டுதான் செய்ய வேண்டும். ஆனால், ஜனநாயகத்தினுடைய முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டிய இடத்தில் நாங்கள் சொல்கிறவரைத்தான் தலைவராகப் போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்தக்கூடாது.

**முற்பகல் 10-00**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 607, திரு. இரா. மணிமாறன்,** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2000 மே 12

607—

### பேருந்து வழித்தடம்

*30039—**திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலைபுதூர் வரை செல்லும் அரசுப் பேருந்தினை சிறுமலை தென்மலை வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வழித்தடம் எப்போது நீட்டிக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்-சிறுமலைபுதூர் வரை சென்ற பேருந்து அகஸ்தியர்புரம் வரை நீட்டித்து 25-9-1998 முதல் இயக்கப்பட்டு வருகிறது. அகஸ்தியர்புரம் முதல் சிறுமலை தென்மலை வரை பேருந்து இயக்குவதற்கான சாலைத் தன்மை அமையப் பெறவில்லையாதலால் திண்டுக்கல்-அகஸ்தியர்புரம் வரை இயக்கப்படும் வழித்தடத்தினை சிறுமலை தென்மலை வரை நீட்டிக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலைபுதூர், அகஸ்தியர்புரம் வரை செல்லக்கூடிய பேருந்தை தென்மலை வரை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்பதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய விவசாயிகள் தோட்டத் தொழிலாளர்களை லாரிகளிலும் வேன்களிலும் அங்கே அழைத்துச் சென்று வருகிறார்கள். அந்த வாகனங்கள் செல்கின்றபோது, நமது அரசுத் துறையைச் சார்ந்த அந்த வாகனமும், நீளம் குறைவாக இருக்கக்கூடிய வாகனம். அது தென்மலை வரை சென்று வருமேயானால், 7, 8 கிராம மக்கள் பயனடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அதை மறுபரிசிலனை செய்து தென்மலை வரை ஒரு சிறிய பேருந்தை அந்த வழித்தடத்திலே விடுவோமேயானால் 10 கிராமத்து மக்கள் பயனடைவார்கள். நீண்ட நாள் கோரிக்கை, அந்தக் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை மறுபரிசிலனை செய்து, நிறைவேற்றித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 மே 12]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகஸ்தியர்புரத்திலிருந்து தென்மலை வரை 6 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இது காட்டு வனத் துறையிலே இருக்கிற வழியின் மூலமாகச் செல்ல வேண்டியிருக்கிறது. அதிலே சாலை போடுவதற்காக அந்த ஊராட்சி ஒன்றியம் பணமும் ஒதுக்கியிருக்கிறது. இருந்தாலும், வனத் துறை அனுமதி கொடுக்காத காரணத்தினால் அந்தச் சாலையைப் போட முடியவில்லை. நேற்றைக்குக்கூட போக்குவரத்துத் துறையிலிருந்து வனத் ஆணையர் அவர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். ஆகவே, வனத் துறை அனுமதி வழங்கி, அந்தச் சாலை போடப்படுமேயானால், விரைவிலே அந்தப் பேருந்தை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனத் துறை அமைச்சர் அவர்களிடம் இதற்காக தொடர்பு கொண்டு, அதைப் போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 608, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

608—

### கூடுதல் பேருந்துகள்

*30814—திரு. மீ.அ. வைதியலிங்கம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் முதல் தாம்பரம் வரை பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலக நேரங்களில் கூடுதல் பேருந்துகள் விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முடிச்சூர் முதல் தாம்பரம் வரை பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலக நேரங்களில் 6-7-1999 முதல் ஒரு கூடுதல் பேருந்தும் 6-2-1999 மற்றும் 24-5-1999 முதல் தாம்பரம்-முடிச்சூர் வழித்தடத்தில் 19 வெட்டுப் பயண நடைகளும் இயக்கப்படுகின்றன. மேலும், வழித்தட எண் 55 தாம்பரத்திலிருந்து—மண்ணிவாக்கம், வண்டலூர்

[2000 மே 12

கேட்டுக்கு 15-10-1999 முதல் நாளொன்றுக்கு 119 பயண நடைகள் இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் 19 வெட்டுப் பயண நடைகளில் பயணிகள் அடர்வு 50% க்குக் குறைவாக உள்ள காரணத்தால் கூடுதல் பேருந்து அல்லது கூடுதல் நடைகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, வழித்தடங்கள் விட்டிருப்பது உண்மைதான். ஆனால், அந்தப் பகுதியிலே அலுவலக நேரங்களில், இப்போதுகூட, வேன்கள், தனியார் வேன்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிலே பயணிகள் படுகின்ற அவஸ்தையை அறிய, தயவுசெய்து ஒருமுறை அதிகாரிகளை என்னோடு வந்து பார்க்கச் சொன்னால் நன்றாக இருக்கும். எனவே, குறைந்தபட்சம் அலுவலக நேரங்களில் காலை, மாலை இரண்டு வெட்டுத் தடங்களாவது தாம்பரத்திலிருந்து முடிச்சூர் வரை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளினுடைய அடர்வு குறித்து போக்குவரத்துக் கழகம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 609, திரு. செங்கை சிவம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**609—**

**துறைமுகத்தை ஆழப்படுத்துதல்**

***26807—திரு. செங்கை சிவம்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணி எந்த நிலையில் உள்ளது?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட விடையைத் தெரிவிக்க அனுமதி கோருகிறேன் :



2000 மே 12]

தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம் ரூ.202.16 கோடி மதிப்பீட்டில் நவம்பர், 1999-ல் பணிகள் முடிவுற்றுள்ளன.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்திற்கு மதிப்பீட்டுத் தொகையில் மத்திய அரசினுடைய பங்குத் தொகை எவ்வளவு? இதில் வேறு எந்த அயல்நாட்டு நிறுவனங்களினாலாவது கடன் வழங்கப்பட்டிருக்கிறதா? அதுமட்டுமல்லாமல், இதனுடைய தரம் அயல் நாடுகளோடு போட்டி இடுகின்ற அளவிற்கு இருக்கிறதா என்பதை அறிவதோடு, குளச்சல் துறைமுகம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகம். Major Port. எனவே, அது மத்திய அரசினுடைய பொறுப்பிலேதான் இருக்கிறது. எனவே, அதற்கு செலவிடப்பட்டிருக்கின்ற தொகை முழுவதும் மத்திய அரசு வழங்கிய தொகைதான். ஆனால், இந்தத் திட்டத்திற்கு — ஆழப்படுத்தும் திட்டத்திற்கு — Japan Bank of International Co-operation — J.B.I.C. — என்ற நிறுவனம், இந்த 202.16 கோடி ரூபாயையும் வழங்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தை வைத்துத்தான் இந்த ஆழப்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குளச்சல் துறைமுகம்—நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்; அது—நம்முடைய மாநில அரசின் கட்டுப்பாட்டிலே உள்ள துறைமுகம். அந்தத் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு மலேசிய அரசாங்கம் முன்வந்து, அவர்கள் ஆய்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆய்வினுடைய முடிவை இந்த மாதத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வழங்குவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூத்துக்குடி பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் ஆழப்படுத்தியாகிவிட்டது என்று சொன்னார்கள். நானும் போய்ப் பார்த்தேன். ஆழப்படுத்தி முடிந்துவிட்டது. இதனைத் திரு. செங்கை சிவம் அவர்கள் கேட்டதற்கு நன்றி. இங்கே, இப்போது நான் கேட்க விரும்புவதெல்லாம், நீண்ட நாள் கோரிக்கையான சேதுசமுத்திரத் திட்டம், மத்திய சர்க்காரால் உருவாக்கப்பட்டு, அதற்கான பணம் மத்திய சர்க்காரால் ஒதுக்கியாகி விட்டது என்று அறிவிக்கப்பட்டது. சேதுசமுத்திரத் திட்டத்திற்கான பணிகள் குறித்த ஆய்வுகள்

எடுத்துக்கொள்ளப்பட்டதாக சொன்னார்கள். அந்த ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றனவா, எந்த நிலையில் இருக்கின்றன என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுசமுத்திரத் திட்டம் வருவதால், தூத்துக்குடி துறைமுகம் சிறப்படையும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடக்க காலத்திலே இருந்து புரிந்து வைத்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967 ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே எழுச்சி நாள் என்று பொதுக் கூட்டங்களை, தமிழ்நாடு முழுவதும் நடத்தினார்கள். அதிலே, சேலம் இரும்பாலைத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம், இவையெல்லாம் இடம் பெற்றிருந்தன. அன்று முதல் இன்றுவரையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்தத் திட்டத்திற்காக வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு, ஏற்கெனவே, சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போது, மேலும் நிதி ஒதுக்கீடு மத்திய அரசு வழங்கியிருக்கிறது. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 610, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**610—**

**பாலத்தைச் செப்பனிடுதல்**

***26826—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி-கூத்தன்குழி நெடுஞ்சாலை விஜயாபதி ஓடைப் பகுதியிலுள்ள சப்பாத்துப் பாலம் மிகவும் மோசமான நிலையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) ஆம்.

(ஆ) வரும் ஆண்டுகளில் நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து, இப்பணியினை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ விஜயாபதிக்கும், மேல விஜயாபதிக்கும் இடையே இருக்கின்றது இந்தப் பாலம், சுமார் 50 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள வள்ளியூர், இராதாபுரம், உதயத்தூர், பரமேஸ்வரபுரம் போன்ற 50-க்கும் மேற்பட்ட குளங்களிலுள்ள மறுகால்களிலிருந்து வருகின்ற நீரெல்லாம் இந்தப் பாலத்தின் வழியாகச் செல்கின்றது. கடற்கரை ஓரங்களில் இருக்கின்ற இடிந்தகரை, கூத்தன்குழி, உவரி போன்ற பகுதிகளிலுள்ள மீனவர்கள் எல்லாம் இந்தச் சாலையைத்தான் போக்குவரத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மழைக் காலங்களில், அதிக அளவு வெள்ளம் வரும் காலங்களில், இந்த வழியாகச் செல்வது அவர்களுக்குக் கடினமாக இருக்கிறது. ஆகவே, தரைப் பாலமாக இருப்பதை, சப்பாத்து — causeway — போன்று இருப்பதை மாற்றி, மேல்மட்டப் பாலமாகக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 200 மீட்டர் நீளமுள்ள இந்தப் பாலம் இப்போது பழுதடைந்திருக்கிறது. இதைச் சரி செய்து, இரண்டு பக்கத்திலேயும் சுவர் எழுப்பி, அதைச் சீர் செய்வதற்கு 15 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் உயர்மட்டப் பாலம் என்று கேட்கிறார். அது இனிமேல்தான் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இருந்தாலும், வரும் நிதியாண்டில், நிதிநிலைமைக்கேற்ப இந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 611, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

அவையின் சார்பிலே, அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** நன்றி.

611—

### கோயிலைச் சீரமைத்தல்

***27980—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி சாமுண்டீஸ்வரி அம்மன் கோயில் சேதம் அடைந்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998 ஆம் ஆண்டு பெய்த தொடர் மழையினால் வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி சாமுண்டீஸ்வரி அம்மன் கோயிலுக்கு அருகே அமைந்துள்ள ஏரியில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் பெருக்கெடுத்து திருக்கோயிலினுள் புகுந்து பள்ளமாக உள்ள கருவறையில் நீர் தேங்கி, மறுநாள் வடிந்துவிட்டது. இத்திருக்கோயிலுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இனி வரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வு ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு திருக்கோயிலின் கருவறையினை உயர்த்திக் கட்டுவதற்கும் திருக்கோயிலைச் சுற்றி மதிற்சுவர் அமைப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முற்பகல் 10-10

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாட்ராம்பள்ளி சாமுண்டீஸ்வரி ஆலயத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டப்படும் மற்றும் அந்தக் கோயிலைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாட்ராம்பள்ளியிலே இருக்கிறது அந்த சாமுண்டீஸ்வரி ஆலயம். அந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்கள் அதிக அளவிலே அந்தக் கோயிலுக்குச் சென்று, ஆண்டவனை வணங்கி வருகிறார்கள். அந்தப் பகுதியிலே ஆற்று வெள்ளம் அதிகமாக வந்த



நேரத்திலே, அந்தக் கோயிலுக்கு அருகில் இருந்த குடிசைகள், ஆடு மாடுகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன. நம்முடைய அரசால் அவற்றிற்கெல்லாம் நிவாரண நிதி அப்போது வழங்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது நாட்ராம்பள்ளியில் இருக்கிற கோயிலுக்கு ஒரு கோபுரத்தைக் கட்டித்தர ஆவன செய்வார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான வெள்ளம் வருகிற பகுதியில் அமைந்திருக்கிற கோயில் என்ற முறையில் அதைப் பாதுகாப்பது முதல் கடமை. பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், கோபுரம் கட்டினால், அதுவும் சேர்ந்து பாதிக்கப்படும். என்னைக் கேட்டால், அந்த நேரத்திலே வெள்ளம் வந்தபோது, அதற்குப் பக்கத்திலே தனி நபர்களால் கட்டப்பட்ட சிவன் கோயில் முற்றிலும் சேதமடைந்ததை நீங்கள் அறிவீர்கள். எனினும், இந்தக் கோயிலுக்கு இப்போது நிலங்களோ, கடைகளோ எதுவும் இல்லை. இதனுடைய ஒட்டுமொத்த வருமானமே 1,06,122 ரூபாய்தான். அதுவும் உண்டியல் மூலமாக மட்டுமே வருகிற வருமானம். என்றாலும் எதிர்காலத்தில் நீங்கள் சொல்கிற இன்றியமையாத தேவைகளாக இருக்கிற சுற்றுச் சுவர் மற்றும் கருவறைப் பகுதிகளை உறுதி செய்துவிட்டு, வருங்காலத்திலே அதுபற்றிச் சிந்திக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 612, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

612—

### கோயில் திருப்பணிகள்

***28315—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஹள்ளி ஊராட்சி, சோளப்பாடி அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோயிலின் திருப்பணிகளை மேற்கொள்ள அரசு நடப்பு ஆண்டில் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கொள்ள இயலாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 19-4-2000 அன்று புதுடெல்லியில், தமிழ்ச் சங்கத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், எங்களுடைய நிறுவனர் டாக்டர் அய்யா அவர்களும், நாங்களும் கலந்து கொண்டு, அந்த மாநாட்டிலே மகிழ்ச்சியோடு சந்தித்துப் பேசினோம். பேசுகிற நேரத்திலேகூட, எங்கள் நிறுவனர் டாக்டர் அய்யா அவர்கள் நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆற்றுகின்ற பணி அளவிடற்கரியது என்று மிகுந்த பாராட்டுக்களையும் எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்தில், அங்கே விமான நிலையத்திலே சந்தித்து, அமைச்சர் அவர்கள் வேகமாக செல்கிறார்கள். இரவு விடியற்காலை ஆகிவிடும் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்து, விமானம் 2 ½ மணி நேரம் தாமதமாகி விட்டது. அப்படி அவசரக் கோலத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்று, எதிர்பாராத விதத்திலே விபத்திற்கு ஆட்பட்டு மருத்துவமனையிலே சேர்ந்து இருந்த நேரத்திலேகூட, நாங்களெல்லாம் மலர் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அப்படி விபத்திலே சிக்கி, மீண்டும் குணமடைந்து, நம்முடைய மாமன்றத்திலே கலந்து கொண்டதை நானும் ஒரு முறை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்று மகிழ்ந்து அவர்களை வாழ்த்துகிறேன்.

என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே சோளப்பாடி அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோவிலும், அதைப்போலவே அளயபுரம் நரசிம்மர் சுவாமி திருக்கோவிலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆலயங்கள். அங்கே திருத்தேர்கள் எல்லாம் பழுதடைந்து நீண்டகாலமாக இயங்காமல் இருக்கின்றன. ஆலயமும் பழுதடைந்து இருக்கிறது. இந்த ஆலயங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று, 4 ஆண்டுகாலமாக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆகவே, இந்த ஆலயங்களை நடப்பாண்டிலேயே புதுப்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில் மிகவும் சிறப்புடையது என்பது





மறுக்க முடியாத உண்மை. ஏற்கெனவே, பழைய சோளப்பாடி என்ற அந்த ஊரில் அந்தக் கோவில் அமைந்திருந்தது. அது ஏற்கெனவே மேட்டூர் அணை கட்டப்பட்டபோது, நீரில் மூழ்கக்கூடிய சூழ்நிலை இருந்ததனால், அது மாற்றியமைக்கப்பட்டு புதிய சோளப்பாடியில் அமைந்திருக்கிறது. ஆனாலும்கூட, அதற்கு திருப்பணிகள் செய்வதற்குத் தேவையான தொகை 2,10,000 ரூபாய்தான் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். எனவே, விரைவில், அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும், கண்டிப்பாகச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 613, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**613—**

**கல்லூரிக்கு நிதியுதவி**

***20802—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரிக் கட்டடப் பணிகளுக்குக் கூட்டுறவு இணையத்திலிருந்து நிதியுதவி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம், ரூ. 25.00 இலட்சம் மானியம் மற்றும் ரூ. 25.00 இலட்சம் கடன், ஆக மொத்தம் ரூ. 50.00 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலம் 30.00 இலட்சம் ரூபாய் மானியமாக, திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் 1.00 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். ஆனால், குறைவாகத்தான் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும், அந்தக் கல்லூரியின் தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கோருகிறத்

[2000 மே 12

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கொள்ள இயலாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 19-4-2000 அன்று புதுடெல்லியில், தமிழ்ச் சங்கத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், எங்களுடைய நிறுவனர் டாக்டர் அய்யா அவர்களும், நாங்களும் கலந்து கொண்டு, அந்த மாநாட்டிலே மகிழ்ச்சியோடு சந்தித்துப் பேசினோம். பேசுகிற நேரத்திலேகூட, எங்கள் நிறுவனர் டாக்டர் அய்யா அவர்கள் நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆற்றுகின்ற பணி அளவிடற்கரியது என்று மிகுந்த பாராட்டுக்களையும் எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்தில், அங்கே விமான நிலையத்திலே சந்தித்து, அமைச்சர் அவர்கள் வேகமாக செல்கிறார்கள். இரவு விடியற்காலை ஆகிவிடும் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்து, விமானம் 2 ½ மணி நேரம் தாமதமாகி விட்டது. அப்படி அவசரக் கோலத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்று, எதிர்பாராத விதத்திலே விபத்திற்கு ஆட்பட்டு மருத்துவமனையிலே சேர்ந்து இருந்த நேரத்திலேகூட, நாங்களெல்லாம் மலர் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அப்படி விபத்திலே சிக்கி, மீண்டும் குணமடைந்து, நம்முடைய மாமன்றத்திலே கலந்து கொண்டதை நானும் ஒரு முறை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்று மகிழ்ந்து அவர்களை வாழ்த்துகிறேன்.

என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே சோளப்பாடி அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோவிலும், அதைப்போலவே அளயபுரம் நரசிம்மர் சுவாமி திருக்கோவிலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆலயங்கள். அங்கே திருத்தேர்கள் எல்லாம் பழுதடைந்து நீண்டகாலமாக இயங்காமல் இருக்கின்றன. ஆலயமும் பழுதடைந்து இருக்கிறது. இந்த ஆலயங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று, 4 ஆண்டுகாலமாக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆகவே, இந்த ஆலயங்களை நடப்பாண்டிலேயே புதுப்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில் மிகவும் சிறப்புடையது என்பது



2000 மே 12]

மறுக்க முடியாத உண்மை. ஏற்கெனவே, பழைய சோளப்பாடி என்ற அந்த ஊரில் அந்தக் கோவில் அமைந்திருந்தது. அது ஏற்கெனவே மேட்டூர் அணை கட்டப்பட்டபோது, நீரில் மூழ்கக்கூடிய சூழ்நிலை இருந்ததனால், அது மாற்றியமைக்கப்பட்டு புதிய சோளப்பாடியில் அமைந்திருக்கிறது. ஆனாலும்கூட, அதற்கு திருப்பணிகள் செய்வதற்குத் தேவையான தொகை 2,10,000 ரூபாய்தான் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். எனவே, விரைவில், அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும், கண்டிப்பாகச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 613, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**613—**

**கல்லூரிக்கு நிதியுதவி**

***20802—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரிக் கட்டடப் பணிகளுக்குக் கூட்டுறவு இணையத்திலிருந்து நிதியுதவி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம், ரூ. 25.00 இலட்சம் மானியம் மற்றும் ரூ. 25.00 இலட்சம் கடன், ஆக மொத்தம் ரூ. 50.00 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலம் 30.00 இலட்சம் ரூபாய் மானியமாக, திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் 1.00 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். ஆனால், குறைவாகத்தான் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும், அந்தக் கல்லூரியின் தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கோருகிறத்

தொகையை இணையத்திலிருந்து மானியமாகவும், கடனாகவும் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலே இருக்கின்ற நிதி கூட்டுறவை மக்கள் மத்தியிலே பரப்புவதற்கும் நலிவுற்ற சங்கங்களை நல்ல சங்கங்களாக மாற்றுவதற்கும், இப்படிப் பல்வேறு சங்கங்களுக்கு உதவுவதற்காக இருக்கின்ற இந்த நிதியை, திருப்பூரிலே இருக்கின்ற ஒரே கல்லூரிக்கு ஒரு கோடி ரூபாய் என்று வழங்கிவிட்டால், தமிழ்நாட்டில் இருக்கின்ற மற்ற சங்கங்களுக்குத் தருவதற்குச் சிரமமாக இருக்கும். கூட்டுறவு ஒன்றியத்தில், அவர்கள் ஒரு கோடி கேட்டபோது, நாங்கள் ஐம்பது இலட்சம் ரூபாய் தருகிறோம். 25 இலட்சம் ரூபாய் மானியம், 25 இலட்சம் ரூபாய் கடன் என்று சொல்லி அதை ஒப்புக்கொண்டு, பெற்றுச் சென்று, அதற்குப் பிறகு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திலிருந்து 30 இலட்சமும் பெற்றிருக்கிறார்கள். அந்த அளவிலே உதவக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 614, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**614—**

**கூட்டுறவு நகர வங்கி**

***26918—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் கூட்டுறவு நகர வங்கி தொடங்குவதற்கு பொதுமக்களிடமிருந்து உறுப்பினர் சந்தா வசூலிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?



(இ) எவ்வளவு பணம் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கடையநல்லூர் கூட்டுறவு நகர வங்கி ஆரம்பிக்க பொதுமக்களிடம் ஆரம்ப பங்குத் தொகை வசூலிக்கப்பட்டு திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி கடையநல்லூர் கிளையில் இட்டு வைக்கப்பட்டுள்ளது. நகர வங்கி தொடங்க இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதிபெற வேண்டியுள்ளதால், இத்தொகையை தற்போது திருப்பி வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ) 431 ஆரம்ப உறுப்பினர்களிடம் ஆரம்ப பங்குத் தொகையாக ரூ. 53,268/- வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் நகரக் கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கு இன்னும் என்னென்ன காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கம் அறிய விரும்புகிறேன். அப்படி எல்லா நடைமுறைகளும் பூர்த்தி செய்திருந்தால் கடையநல்லூர் நகரக் கூட்டுறவு வங்கி எப்போது செயல்படத் தொடங்கும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர வங்கி தொடங்க வேண்டுமென்றால், ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கவேண்டும். 25 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை வசூலிக்க வேண்டும். அதற்கு முன் அனுமதியாக நாம் ரிசர்வ் வங்கியினுடைய அனுமதியைப் பெறவேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, ஆறு நகர வங்கிகள் தொடங்குவதற்காக அனுமதிக்கப்பட்டு ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டது. அதிலே முசிறி மற்றும் சேலம் அருகில் இருக்கின்ற மேலூர், ஓமலூர் அந்தப் பகுதிக்கு மட்டும் அனுமதி வந்திருக்கிறது. மற்ற இடங்களுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், இதற்கான அனுமதிக்காக நாம் ரிசர்வ் வங்கிக்கு எழுதலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 615, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**615—**

**விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள்**

***24732—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் எத்தனை இயங்குகின்றன?

(ஆ) தொழில் நலிவு காரணமாக உற்பத்தியை நிறுத்தியுள்ள ஆலைகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் இயங்குகிற விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் 587 ஆகும்.

(ஆ) தொழில் நலிவு காரணமாக உற்பத்தியை நிறுத்தியுள்ள ஆலைகள் 127 ஆகும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட ஆலைகளுடைய தொழிலாளர்களுக்காக பிழைப்பூதியம் போல உதவி செய்கிற ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து வழங்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை எல்லா ஆலைகளுக்கும், விசைத்தறிகள் உட்பட எல்லா ஆலைகளுக்கும் விரிவுபடுத்துகிற செயற்குறிப்பு அரசு வசம் இருக்கிறதா? மேலும் தொழிலாளர்கள் ஆலை மூடல் காரணமாக வேலையிழப்புக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கென்று உதவி செய்வதற்கு தனி நிதியம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலை உயர்வு, மின் கட்டணம், market demand உற்பத்திச் செலவு போன்ற பல்வேறு காரணங்களினால் 127 விசைத்தறி தொழிற்சாலைகள் நலிவுற்றுள்ளன என்பது உண்மை. இங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய நலத்திற்காக பல நலத் திட்டங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களோடு கலந்தும், அதிகாரிகளோடு கலந்தும், சட்டத்திற்குட்பட்டு இதைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. காரணம், மின்சாரத்தைப் பயன்படுத்தி, 10 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தால்தான், அந்தத் தொழிற்சாலைகள் சட்டம் அவர்களுக்கு அமல் நடத்தப்படும். இருந்தாலும், இது அமல் நடத்தப்படுகின்ற விதத்திலே ஆய்வு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ மூன்று இலட்சம் விசைத்தறிகள் இருப்பதாக இன்னொரு கணக்குத் தெரிவிக்கிறது. மூன்று இலட்சம் விசைத்தறிகள் இருக்கக்கூடிய மாநிலத்தில் 587 ஆலைகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதுகுறித்து மறுஆய்வு செய்து, உள்ளபடியே எத்தனை தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் தெளிவாகக் குறிப்பிட்டேன். சட்டப்படி பத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் with the aid of power இருந்தால்தான், தொழிற்சாலைகள் என்ற பட்டியலின்கீழ் வருவார்கள். அப்படி துறை ஆய்வு செய்து தந்திருக்கக்கூடிய தகவல்கள்தான் இந்தத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. ஆக 10-க்குக் குறைவாக இருக்கலாம். ஆனால் சட்டப்படி அதைச் சேர்க்க முடியாது.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 616, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**616—**

**சார்பு நீதிமன்றம்**

***25790—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் சார்பு நீதிமன்றம் தொடங்க அனுமதிக்கப்பட்டு இதுவரை அதற்கான பணிகள் தொடங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி நகரில் சார்பு நீதிமன்றம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதிலும், நிதி நெருக்கடி காரணமாக இந்த நிதியாண்டிலும் சார்பு நீதிமன்றம் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த 3 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. நான் கேட்ட இந்தச் சார்பு நீதிமன்றம் அனுமதிக்கப்பட்டு நிதி இல்லாத காரணத்தினாலே அது நிறுத்தி வைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த ஆண்டுத் திட்டத்திலேயே நிதி ஒதுக்கீடு செய்து மன்னார்குடியில் இந்தச் சார்பு நீதிமன்றத்தைத் தொடங்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன். மேலும் நான் மன்னார்குடிக்கு ரெவின்யூ நீதிமன்றம் வேண்டாம் என்று சொல்கிறேன். அது திறக்கப்படுகிறது. சார்பு நீதிமன்றம் வேண்டும் என்று கேட்கிறேன், அது மறுக்கப்படுகிறது. ஆகவே மறுபரிசீலனை செய்து, அது திறக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியில் சார்பு நீதிமன்றம் தொடங்கப்படும் என்று இந்த அவையிலே ஒத்துக்கொள்ளப்பட்டது உண்மை. அதை அமல் செய்வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது. நிதி நெருக்கடியின் காரணமாகத்தான் அது தற்காலிகமாக தொடங்கப்படவில்லையே தவிர அந்த உறுதியிலே இருந்து, முடிவிலே இருந்து அரசாங்கம் பின்வாங்கவில்லை. எனவே மீண்டும் நிதித் துறையை அணுகி, மன்னார்குடியிலே சார்பு நீதிமன்றம் தொடங்குவதற்கு சட்டத் துறை தீவிர முயற்சி எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 617, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.





**617—**

### சத்துணவு மையங்கள்

***22142—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வரப்பநாயக்கனூர், பெரியக்கவுண்டன்வலசு, கூத்தாடிப்பாளையம் ஆகிய ஊர்களில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத்தில் வரப்பநாயக்கனூர், பெரியக்கவுண்டன்வலசு, கூத்தாடிப்பாளையம் ஆகிய ஊர்களில் புதிதாக சத்துணவு மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டிலே கேட்கப்பட்ட கேள்வி. இருந்தபோதிலும் சத்துணவு மையங்கள் அந்தப் பள்ளிகளில் அமைத்துக் கொடுத்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 618, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**618—**

### தொழில்களை ஊக்குவித்தல்

***31812—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 12

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு திரித்தல், பெட்டி, பாய் முடைதல், செங்கல், ஓடு மற்றும் மண்பாண்டம் செய்தல் போன்ற தொழில்களை ஊக்குவிக்க அரசிடம் திட்டங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கயிறு திரித்தல் தொழிலை மட்டும் ஊக்கப்படுத்த திட்டம் உள்ளது.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு திரிக்கும் தொழில் சிறப்பாக நடைபெறும் பொருட்டு மூலப்பொருட்கள் ஏதும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு தொழிற்சாலை மட்டுமல்ல தனியார் தொழிற்சாலைகூட விசேஷமாகச் சொல்லக்கூடிய அளவுக்கு அங்கு ஒன்றும் கிடையாது. படித்தவர் அதிகமாக உள்ள மாவட்டம். அதிகமான ஏழைகள் இந்தக் கயிறு திரித்தல், பெட்டி, பாய் முடைதல், செங்கல் ஓடு தொழிற்சாலை, மண்பாண்டங்கள் தயாரித்தல் இவற்றை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள். இந்தத் தொழிலில் அரசாங்கம், கயிறு தொழிலை மட்டும்தான் ஊக்குவிக்க வழி உள்ளது என்று சொல்லுகின்றார்கள். கயிறோடு இரப்பரையும் சேர்த்து அந்தக் கயிறை கொஞ்சம் நவீனப்படுத்தி, வெளிநாட்டில் ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யலாம். அதோடு இந்த பாய், வெய்யில் காலங்களில் படுப்பதற்கு மிக சுகமாக உள்ளது. அதையும்கூட கொஞ்சம் நவீனப்படுத்தி அதிக மார்க்கெட் ஏற்படுத்தினால் ஏழைகள் வாழ்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, அரசு இந்த சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக மண்பாண்டங்கள் செய்யக்கூடிய அந்த மண், செங்கல், ஓடு இவற்றிற்கு, குளத்திலிருந்து மண் எடுக்கிறார்கள். அரசு, ரெவின்யூ துறை ஏதாவது காரணத்தைச் சொல்லி அவர்களை மண் எடுக்கவிடாமல் தடுத்து விடுகின்றார்கள். அரசாங்கம் சிறு தொழில்களுக்கு என்று அனுமதி வழங்கியிருந்தாலும்கூட தடுத்துவிடுகின்றார்கள். இதன் மூலம் 2 இலாபம் இருக்கின்றது. அரசாங்கம் அனைத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள், நீங்கள்.



2000 மே 12]

**திரு. சி. வேலாயுதன்:** மண்பாண்டத்திற்கு மண் எடுக்கும் தொழிலாளர்களைத் தடுக்காமல் இருக்க அரசாங்கம் ஆவன செய்வதோடு, மேற்குறிப்பிட்ட தொழில்களுக்கு மேலும் ஏதாவது சலுகை செய்து ஊக்கப்படுத்த முடியுமா என்று அரசாங்கம் பரிசீலிக்க ஆவன செய்யுமா என்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தக் கயிறு திரிக்கின்ற தொழிலிலே கிட்டத்தட்ட 248 சிறு தொழில்களிலே ஈடுபட்டு இருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஊக்கத் தொகையாகக்கூட 20 சதவிகிதம் ரிபேட், 100 இலட்சம் ரூபாய் வரை இப்போது மத்திய மாநில அரசுகள் வழங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக செங்கல் தொழிலுக்கும் அங்கே நல்லமுறையிலே ஊக்குவிப்பு செய்யப்பட்டு, ஓட்டுத் தொழிலுக்கும் நல்லமுறையிலே அரசு உதவி செய்து வருகின்றது. அவர்கள் சொன்னதைப்போல பாய் தொழிலை பொறுத்தளவில், நம்முடைய காதி கிராமத் தொழில் மூலமாக, அதிலே நலிவடைந்த பிரிவினருக்கு, விளிம்புத் தொகைகூட வழங்கப்பட்டு, 5 சதவிகிதம் வழங்கினால் போதும், மற்றவர்கள் 10 சதவிகிதம் வழங்கினால் போதும், அதேபோல கடன் தொகையும் அவர்களுக்கு 25 சதவிகிதம் மானியமும், மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு 30 சதவிகித மானியமும் அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது. தனியாக, அரசாங்கம் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது இல்லை, செங்கல் தொழிலோ மற்ற தொழிலோ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண் எடுப்பதற்கு உரிமை வேண்டுமென்று கேட்கின்றார்கள். அந்த மண் எடுக்கின்ற உரிமை தொழில் துறை வழங்குவதல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 619, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

[2000 மே 12

**619—**

**அரசுப் பொருட்காட்சி**

***25533—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடியில் சித்திரைத் திருவிழாவின்போது, அரசுப் பொருட்காட்சி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுகுறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரிலே அருள்மிகு முத்தாலம்மன் கோவிலில் பங்குனித் திருவிழா, தேர்த் திருவிழா, அதேபோல பால்குட திருவிழா, சித்திரை மாதத்திலே சித்திரைத் திருவிழா என்று பல திருவிழாக்கள் ஒரு மாத காலம் நடைபெறுகின்றது. அந்த நேரத்திலே, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நபர்கள் அங்கே கூடுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, பரமக்குடி நகராட்சி மூலமாவது, இந்தப் பொருட்காட்சிகள் நடைபெறுவதற்கு அரசு அனுமதி அளிக்குமா. தமிழகத்திலே அரசு மூலம் எங்கெங்கு பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன, அதனால் ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக, பரமக்குடியில் பொருட்காட்சி நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை. நகராட்சியின் சார்பாக, பொருட்காட்சி நடத்த வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், அரசின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடத்துவதாக தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்குப் பரிந்துரை வருமானால், அதுகுறித்து



2000 மே 12]

நடவடிக்கை எடுத்து நடத்துவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் மதுரை, கோவை, சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் பொருட்காட்சி என்றும், திருநெல்வேலி, வேலூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை பொருட்காட்சி என்றும் பொருட்காட்சிகள் அரசின் சார்பாக நடத்தப்படுகின்றன. இதுவரையில் அரசின் சார்பாக 100 பொருட்காட்சிகள் நடத்தி முடிக்கப்பட்டு, அதன்மூலம் 753 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் இலாபமாக ஈட்டியிருக்கிறோம். இப்போது மதுரையில் 101-ஆவது பொருட்காட்சியும், கோவையில் 102-ஆவது பொருட்காட்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 620, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**620—**

**கால்நடை மருந்தகம்**

***23507—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, ஆலங்குடியில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருக்கின்ற ஆலங்குடியில், 29-1-2000 அன்று நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் தொடங்கி வைத்தார்கள்.

[2000 மே 12

ஆனால், எனக்கு நாகை மண்டல இணை இயக்குநர் எழுதியிருக்கின்ற கடிதத்தில், அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது என்றும், விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இதன் அடிப்படையில் பரிசீலித்து, இந்த ஆண்டு கால்நடை மருந்தகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை கோட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தில், ஆலங்குடியில் தற்போது பார்வை கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும், மேக்கிரிமங்கலத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், குத்தாலம், பண்டாரவாடை, கோனேரிராஜபுரம் ஆகிய மூன்று இடங்களில் கால்நடை மருந்தகங்களும், தேரெழுந்தூர், கோமல், பழையநடுவூர் ஆகிய மூன்று இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே வானாதிராஜாபுரம், கொக்கூர், ஆலங்குடி ஆகிய மூன்று இடங்களில் தற்போது பார்வை கிளை நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. ஆலங்குடி கிராமத்தில் உள்ள கால்நடைகள் ஏறக்குறைய 833 மட்டுமே.

அதைப்போல மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், அந்தப் பகுதியிலும் மற்றும் பாளையூர் பகுதிகளிலே எல்லாம் தொடர்ந்து கால்நடை பாதுகாப்புத் திட்டம் சிறப்பாக நடைபெற்று, ஏறக்குறைய 5000-க்கு மேற்பட்ட கால்நடைகள் பயன்பட்டு வந்திருக்கின்றன. எதிர்வரும் ஆண்டுகளில், ஆலங்குடி கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



2000 மே 12]

## 2. கவன ஈர்ப்பு

### (அ) திண்டுக்கல், தாடிக்கொம்பு பேரூராட்சி, குடகனாற்றின் குறுக்கே ஆத்துப்பட்டி பாலம் மற்றும் அய்யம்பாளையம் பாலம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. இரா. மணிமாறன் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. இரா. மணிமாறன்.

***திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு பேரூராட்சி, ஆத்துப்பட்டியில் குடகனாறுக்கு குறுக்கே பாலம் கட்டுவது மற்றும் அய்யம்பாளையம் தரைப்பாலம் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு பேரூராட்சியில் குடகனாற்றின் குறுக்கே ஆத்துப்பட்டி மற்றும் டி. அய்யம்பாளையம் ஆகிய இடங்களில் பாலங்கள் அமைக்க குறைந்தபட்சம் ரூ. 100.00 இலட்சம் தேவைப்படுகிறது. போதிய நிதி வசதி தாடிக்கொம்பு பேரூராட்சியில் இல்லாததால், பாலம் கட்ட இயலாமல் உள்ளது. இருப்பினும், இந்த ஊர்களுக்குச் செல்லத்தக்க மாற்றுச் சாலை வசதிகள் உள்ளதால், இந்த ஊர் மக்களுக்குப் பாலம் இல்லாததால், வெள்ளத்தின் காரணமாக எவரும் உயிரிழக்கவில்லை. மழைக்காலமான அக்டோபர், நவம்பர் மாதங்களில் மட்டுமே, இந்தக் காட்டாற்றில் தண்ணீர் அதிகம் வந்து இந்தச் சாலையை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

[2000 மே 12

முற்பகல் 10-30

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். கடந்த மூன்று, நான்கு ஆண்டு காலமாக தொடர்ந்து இந்தக் கோரிக்கையை நான் வலியுறுத்தி வருகிறேன். மழைக் காலங்களிலே குடகனாற்றிலே சீறிட்டு வரும் வெள்ளத்திலே பலர் பாதிக்கப்பட்டு, சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டுகூட முதலமைச்சர் நிவாரண நிதியிலேயிருந்து அவர்களுக்கு உதவி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாலம்—அந்த இடம் குறுகலான இடம்—நீங்கள் சொல்வதைப்போல 50 இலட்சம், 100 இலட்சம் செலவிலே கட்ட வேண்டியதில்லை. கேரளாவிலே இருப்பதைப்போல, மூங்கில் பாலம் என்று சொல்கிறார்களே, அதைப்போல நமது நெடுஞ்சாலைத் துறையிலேயிருந்து பழைய பாலத்தை உடைத்து எடுக்கின்றபோது, பெரிய கர்டர்கள் எடுக்கிறார்கள். அந்தக் கர்டர்களைப் பயன்படுத்தி கரையின் இருபுறத்திலேயும் தடுப்புச் சுவர் எடுத்து, அதன் மூலமாக ஒரு நடைபாதையை ஏற்படுத்தித் தந்தாலே, அந்தப் பகுதி மக்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தொடருவதற்கு வசதியாக இருக்கும். ஏனென்று கேட்டால், பக்கத்திலே இருக்கக்கூடிய நேஷனல் ஹைவேஸ் 7 பகுதியிலேயிருந்து, தாடிக்கொம்பு பகுதியிலேதான் மாணவர்கள் மற்றும் விவசாயிகள், திண்டுக்கல் நகரத்திற்கு படிக்கச் செல்வதற்கு, கூலி வேலை செய்வதற்கு, சென்று வரவேண்டியிருக்கிறது. மழைக் காலங்களிலே 3 மாத காலம் தங்களுடைய இல்லங்களுக்குச் செல்ல முடியாமல் பாதிப்பு ஏற்படுகிறது. மாற்றுப் பாதை இருக்கிறது என்று துறை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாற்றுப் பாதை என்பது அய்யம்பாளையம் பகுதியிலே இருக்கக்கூடிய இன்னொரு பாலம் என்று சொல்கிறீர்கள் அல்லவா, அது தான். அதுவும் குடகனாற்றின் குறுக்கே இருக்கிற காரணத்தினால், கடந்த கால ஆட்சியிலே, வெள்ள நிவாரண நிதியில் கட்டப்பட்ட அந்தப் பாலங்கள் உடைப்பு எடுத்து, அவை அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. அந்தப் பாலங்களின் வழியாகவும் மக்கள் வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது: எனவே, அங்கே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவாகப் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. மணிமாறன்:** அந்த ஆற்றின் குறுக்கே, அந்தக் கண் வைத்தப் பாலம் என்று சொல்கிறார்கள் அல்லவா, தரைமட்டப் பாலம், அந்த வகையிலே அமைத்தால்கூட போதும். இந்த இரண்டு பாலங்களைக் கட்டி முடிப்பதற்கு 10, 15 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றுகூட பொறியாளர்கள் சொல்கிறார்கள். இது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்





அவர்கள் மூலமாகச் சொல்லப்பட்டாலும்கூட, இதை மறுபரிசீலனை செய்து, அவசர, அவசியம் கருதி, செய்து கொடுப்பார்களேயானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 15, 20 கிராம மக்கள் பயம் இன்றி வாழ்வதற்கு, தங்களுடைய வாழ்க்கையைத் தொடருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, இதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1 கோடி ரூபாய், அதாவது 100 இலட்சம் ரூபாய் செலவாகாது என்று குறிப்பிடுகிறார்கள். பொறியியல் துறையிலேயிருந்து ஒரு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுத் தான் இந்தப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படி இருந்தாலும் actual estimate செய்ய வேண்டும் என்றால், 1 இலட்சம், 2 இலட்சம் குறையலாமே தவிர, 10 இலட்சம் அளவில் செலவில் நிச்சயமாக அந்தப் பாலத்தைக் கட்ட முடியாது. தரைப்பாலம் கட்டுவது என்று சொன்னால், 10 இலட்சம் செலவாகும் என்று அவராகவே குறிப்பிட்டுச் சொல்கிறார். அப்படி இருந்தால், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கணிசமான அளவுக்குக் கொடுத்து, ஒரு சிறு தொகையை பேரூராட்சி செலுத்த வேண்டும் என்று சொன்னால், அது முடியும். சிறு பாலங்கள் தவிர, பேரூராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் இவையெல்லாம் பாலங்கள் கட்டுகிற முயற்சியில் ஈடுபட முடியாது. ஆகையால்தான், நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன், ஒருவேளை 10 இலட்சம் ரூபாய்க்குத் தரைப்பாலம் கட்டலாம் என்று ஒரு முடிவு எடுத்தால், அதில் பெரும்பகுதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பீர்களேயானால், பேரூராட்சி அதற்கான பங்கைச் செலுத்தி அந்தப் பாலத்தைக் கட்ட முயற்சிக்கலாம்.

## (ஆ) தருமபுரி அவ்வையார் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு பயணியர் மாளிகை இடத்தை வழங்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மனோகரன் அவர்கள், ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி அவ்வையார் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இட நெருக்கடி நிலவுவதால் அருகில் உள்ள பயணியர் மாளிகை இடத்தை அப்பள்ளிக்கு வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்த"

[திரு. கு. மனோகரன்] [2000 மே 12

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

## அறிக்கை

நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட தருமபுரி பயணியர் மாளிகை, தருமபுரி நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இது மூன்று அறைகள் கொண்டதாகும். மாவட்டத் தலைமையிடத்தில், நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்தப் பயணியர் மாளிகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும், அவசியமானதும் ஆகும். இப்பயணியர் மாளிகையில் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளும் மற்றும் பல துறை உயர் அதிகாரிகளும், முகாமின்போது தங்குகின்றார்கள். தவிர, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அவர்களின் ஆய்வுச் சுற்றுப்பயணத்தின்போதும், மாண்புமிகு அமைச்சர்களின் முகாமின் போதும் மற்றும் முக்கியப் பிரமுகர்களும் தங்குவதற்கு இதனைப் பயன்படுத்துகிறார்கள். தருமபுரி நகரம் மாவட்டத் தலைநகரமாக இருப்பதால், நெடுஞ்சாலைத் துறையில் நகரின் மையப் பகுதியில் பயணியர் மாளிகை இருப்பது மிகவும் அவசியமானதாகும். மேலும், தருமபுரி பேருந்து நிலையத்தின் மிக அருகிலேயே உள்ளதோடு, தண்ணீர் வசதியும், நல்ல காற்றோட்டமும் உடைய இப்பயணியர் மாளிகை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், தருமபுரியில் புதிதாக நெடுஞ்சாலைத் துறை கோட்ட அலுவலகம் அமைக்கும் உத்தேசம் இருப்பதால், இப்பயணியர் மாளிகை வளாகத்திலேயே கோட்ட அலுவலகம் இயங்குவதற்கும் இந்த இடம் தேவைபபடும் என்றும், எனவே, நெடுஞ்சாலைத் துறை வசம் உள்ள மேற்குறிப்பிட்ட இடம் நெடுஞ்சாலைத் துறையின் விரிவாக்கப் பணிகளுக்குத் தேவைப்படுவதால், இவ்விடத்தை அவ்வையார் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்குத் தர இயலாத நிலை உள்ளது. தற்போது தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகைக்குட்பட்ட இடத்தை அவ்வையார் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு வழங்கிவிட்டு, அதற்குப் பதிலாக வி.சி.சி. சாலையில் (தருமபுரி - சேலம் தேசிய நெடுஞ்சாலை) உள்ள சுகாதாரத் துறைக்குச் சொந்தமான 1.00 ஏக்கர் நிலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஒரு கருத்துருவைத் தெரிவித்துள்ளார். அவ்வையார்



2000 மே 12] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு வழங்கக் கோரும் இடத்தின் தற்போதைய சந்தை விலை மதிப்பு ரூ. 4.84 கோடி ஆகும். இதற்குப் பதிலாக வழங்க உத்தேசிக்கப்படும் நிலம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தின் பின்பக்கத்தில் சுகாதாரத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இடமாகும். இந்நிலத்தின் தற்போதைய சந்தை விலை, மதிப்பு சதுர அடிக்கு ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 44.00 இலட்சம் ஆகும். நிலத்தின் மதிப்பு 10 மடங்கு அதிகமாக உள்ளதில் இருந்தே, தற்போது பயணியர் மாளிகை அமைந்துள்ள இடத்தின் முக்கியத்துவத்தை உணரலாம். வேறு புதிய இடத்தில் ஐந்து அறைகள் கொண்ட பயணியர் மாளிகை ஒன்றினை அனைத்து அடிப்படை வசதிகளுடன் அமைக்கத் தோராயமாக ரூ. 25 இலட்சம் தேவைப்படும். மேலும், வேறு புதிய இடத்தில் பயணியர் மாளிகை கட்டுதல் என்பதைப் பொறுத்த அளவில், நெடுஞ்சாலைத் துறைக்குக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு, திட்டப் பணிகளின்கீழ் நிதி ஒதுக்கீடு அளிப்பதும் இல்லை. எனவே, வேறு இடம் அளிக்கப்பட்டாலும், அவ்விடத்தில் பயணியர் மாளிகை அலுவலகக் கட்டடம் கட்ட அரசின் திட்டப் பணிகளின்கீழ் அனுமதி பெறுவது கடினமாகும். அங்ஙனம் கட்டடங்கள் கட்டத் தாமதமேற்படுமாயின், கட்டடங்கள் கட்டப்படும் முன்னரே, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகை அமைந்துள்ள இடத்தை, அவ்வையார் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றம் செய்தால், இப்பயணியர் மாளிகைக்கு முகாமின்போது வந்து செல்லும் அமைச்சர் பெருமக்கள், ஆய்வுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு செல்லும் பல துறை அரசு உயர்நிலை அதிகாரிகள், மற்றும் ஆய்வு நிமித்தம் செல்லும் நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் பிற முக்கியப் பிரமுகர்கள் ஆகியோர் வந்து தங்கிச் செல்ல ஏதுவாக இதைவிடப் பொருத்தமான, போக்குவரத்து வசதியுடைய வேறு இடம் இல்லையாதலாலும், குறிப்பிட்ட இடத்தைப் பள்ளிக்கு வழங்கும் நிலையில் மேற்குறிப்பிட்டோர் வந்து தங்கிச் செல்வதில் மிகுந்த போக்குவரத்து வசதிக் குறைவும், சிரமமும் ஏற்படுவதோடு, அவர்கள் மேற்கொள்ளும் பணிகளிலும் இடையூறு ஏற்பட்டு, பணிகள் பாதிக்கப்படும். எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில், தருமபுரியில் வேறு இடத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு இடம் ஒதுக்கி, புதிதாகப் பயணியர் மாளிகை கட்டப்படாதவரையில் தற்போது நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகை அமைந்துள்ள இடத்தை அவ்வையார் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு வழங்குவது குறித்த கருத்துருவைப் பரிசீலிக்கும் வாய்ப்புகள் தற்சமயம் இல்லை.

**திரு. கு. மனோகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் ஆய்வுக்குச் செல்லும்போது தங்க வேறு இடம் இல்லை என்பதால், வேறு இடத்தில் பயணியர் மாளிகை கட்டப்பட்டவுடன், அந்த இடத்தை வழங்குவதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே கடந்த ஆண்டுகூட இதே மன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டேன். அதற்கு பதில் அளிக்கும்போது, அமைச்சர் அவர்கள் முதல்வரிடம் கலந்து பேசி, இடம் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். இப்போது நெடுஞ்சாலைத் துறைக்கு அதியமான் கோட்டையிலே, தருமபுரி நகரத்தையொட்டி 5 கிலோ மீட்டரிலே ஒரு சிறப்பான பயணியர் மாளிகை இருக்கிறது. அந்த இடத்தைக்கூட அதிகாரிகள் பயன்படுத்தலாம். தருமபுரி நகரிலுள்ள அவ்வையார் மகளிர் மேல்நிலைப் பள்ளியிலே சுமார் 5,000 மாணவிகள் 1 ½ ஏக்கர் நிலத்தில் கடும் இடப் பற்றாக்குறையில் படித்து வருகிறார்கள். தருமபுரி நகரில் உள்ள மக்கள் சுமார் 10, 15 ஆண்டுகாலமாக இந்தக் கோரிக்கையை வைத்து வருகிறார்கள். அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பெண் கல்வியில் அக்கறை கொண்டவர்கள். ஆகவே, தயவுகூர்ந்து குறைந்தது ஒரு ஏக்கர் நிலத்தில் 50 சென்டாவது வழங்க வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்க இயலாது என்றுதான் விடை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பரிசீலிக்கப்படும் என்று நான் இங்கே விவர அறிக்கையிலே தெரிவித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

பொதுவாக, இந்தப் பயணியர் விடுதி நல்ல நிலையிலே இருக்கிறது. அந்தக் கட்டடத்தைத் தாரைவார்க்க முடியாது என்பது மட்டுமல்ல. தருமபுரி மாவட்டம் இப்போது தனி மாவட்டமாக ஆகிவிட்ட காரணத்தினால் அங்கே ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகமும் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தையும் அந்த இடத்திலேதான் கட்ட வேண்டுமென்று துறை முடிவு செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல. தார் டின்கள் அங்கேதான் வைக்கப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பல்வேறு மெஷினரிகளையும்





அங்கே வைப்பதற்காக அந்த இடம் பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல, தருமபுரியிலே மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் கேட்பதைப் போல, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களைப் பேருந்து நிலையத்திற்காகக் கேட்கிறார்கள். உழவர் சந்தைக்காகக் கேட்கிறார்கள். இன்னும் பள்ளிக்கூடங்களுக்காகக் கேட்கிறார்கள். பல்வேறு துறைகளுக்காகக் கேட்கிறார்கள். இன்னும் பெட்ரோல் பங்க் வைப்பதற்குக்கூட சில பேர் கேட்கிறார்கள். ஒரு தவறான முன்னுதாரணத்தை நான் ஏற்படுத்திவிடக் கூடாது என்று அச்சப்படுகிறேன். ஆகையினாலே இந்த இடத்தைப் பள்ளிக்கூடத்திற்கு, இந்த நிர்வாகத்திலிருந்து இன்னொரு நிர்வாகத்திற்குக் கொடுத்துவிட்டால், நெடுஞ்சாலைத் துறைக்கு எங்கே போவது? அந்தச் சிக்கல் இருக்கிறது. ஆகவேதான், இதுகுறித்துப் பரிசீலிக்க இயலாது என்று பதில் கூறியிருக்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் 'தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்' குறித்த 29ஆவது அறிக்கையையும் 'கைத்தறி மற்றும துணிநூல்' குறித்த 30ஆவது அறிக்கையையும் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் அறிக்கைகளை அச்சடித்து அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கின்றேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு) உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

[2000 மே 12

*திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் 268 முதல் 271 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் 36 முதல் 45 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 43 முதல் 50 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 2 — மாநில ஆயத்தீர்வைத் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 15 — காவல் துறை**
**(இ) கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள்**

### (அ) கோரிக்கை எண் 2 — மாநில ஆயத்தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 2 — மாநில ஆயத்தீர்வைத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2000 மே 12]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆயத்தீர்வை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 24,06,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1709, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுக்குத் தீர்வையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1432, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விலையை மேலும் உயர்த்தி அரசின் வருவாயைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4765, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் பிராந்திக் கடைகளை அதிக அளவில் ஏலம் விட்டு, கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1419, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுபானக் கடைகளுக்கு உரிமம் புதுப்பிக்கப்படும்போது ஒவ்வொரு கூட்டுறவுப் பண்டகசாலைக்கும் 5 கடைகளை ஏலமில்லாது ஒதுக்கீடு செய்து அடிப்படைக் கட்டணத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1824, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2010, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்போர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்த



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1485, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதை முற்றிலும் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1360, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3442, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் கள்ளச் சாராய விற்பனை முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2783, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3886, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் பிராந்திக் கடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தி ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3616, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2368, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3318, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில், பேராவூரணி நகரம், ரெட்டவயல், திருப்பூரணிக்காடு, சூரியநாராயணபுரம் ஆகிய கிராமங்களில் சாராயம் விற்பனை ஆவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4025, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போலி மதுபானங்களை விற்கும் கடைக்காரர்களின்மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2925, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் ஈச்சங்குடி, மகாராஜபுரம், கொள்ளிடக்கரை ஓரமாக உள்ள கிராமங்களில் கள்ளச் சாராயம் விற்பனை ஆவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1391, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 147, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதியில், நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக மதுக்கடைகளில் மதுபானங்கள் விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,06,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1053,68,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண் 1699, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் காவலர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் கூடுதல் காவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1965, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பல்ல கவுண்டன்பாளையத்தில் ஒரு புதிய காவல் நிலையம் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4810, திரு. ஐ. கணேசன்

**திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் பெரிய அளவில் பருத்தி மார்க்கெட் உள்ளதால் அங்கு திருட்டைத் தடுக்க ஒரு புறக் காவல் நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1411, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் மங்கலம் பகுதியில் முழுக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1805, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டையில் புதிய காவல் நிலையம் இவ்வாண்டே தொடங்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1566, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள போக்குவரத்துக் காவல் நிலையத்தை புதுப்பித்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1200, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3472, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலவரப் பகுதிகளில் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட அதிரடிப் படையில் முஸ்லீம்களும், தாழ்த்தப்பட்டோர்களும் இடம்பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2765, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதிக்குட்பட்ட கூட்டனூர் (விருதுநகர் மாவட்டம்) புறக் காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 4305, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் மக்கள் நெரிசல் அதிகமாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாலும் அங்கு ஒரு போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 3759, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், அம்மையார் குப்பத்தில் புதிய துணைக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

2000 மே 12] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1379, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to post more number of Police personnel in all Police Stations of Tamil Nadu', I move—

"That the sum of Rs. 1053,68,97,000/- allocated under Demand No. 15—Police be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 128, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிப் பகுதியை தென்காசி காவல் நிலைய எல்லைக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4234, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியம், பகண்டை கூட்டு சாலையில் ஒரு புறக் காவல் நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1467, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை, இரத்தினபுரியில் ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2105, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கேமோரநூரில் புதிய காவல் நிலையம் திறக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2334, திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதியைச் சேர்ந்த கருவேப்பலங்குறிச்சியில் காவல் நிலையம் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2464, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில் சட்டம்-ஒழுங்கு ஆய்வாளர் பதவிகள் காலியாக உள்ளதை உடனே நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3547, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள சேரன் மகாதேவி, பத்தமடை, கல்லிடைக்குறிச்சி, முக்கூடல் ஆகிய ஊர்க் காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1053,68,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 71,79,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1695, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தீயணைப்பு நிலையத்திற்கு இரு புதிய தீயணைப்பு வண்டிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1969, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறையில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நில ஒதுக்கீடு செய்ய

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4813, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1408, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் தெற்குப் பகுதி தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1802, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட "பெருகவாழ்ந்தானில்" புதிய தீயணைப்பு நிலையம் ஒன்று இவ்வாண்டு அமைத்து, அப்பகுதியிலுள்ள சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்படச் செய்திட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1569, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட ஆப்பகூடல், கவுந்தப்பாடி ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1195, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணாபுரத்தில் புதிய தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3474, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ. வி. ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை மற்றும் சேத்தியாதோப்பு தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டட வசதி செய்து தரப்பட வேண்டியதன் தேவை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2764, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியில் திருப்புவனத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4492, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் எரியூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3761, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டையில் தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2383, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3331, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, கடற்கரை பகுதியான சேதுபாவாசத்திரத்தில் தீயணைப்பு நிலையம் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4056, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீயணைப்பு நிலையங்களுக்கு நவீன ரக வாகனங்கள் வாங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைபபுப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2972, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, அய்யம்பேட்டை பேரூராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 163, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4228, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகர தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடமும் கூடுதல் தீயணைப்பு ஊர்தியும் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1984, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை ஸ்டேட் பாங்க் சாலையிலிருந்து அரசு கலைக் கல்லூரி சாலைக்குச் செல்ல தமிழ்நாடு தீயணைப்பு நிலையத்தின் ஒரு பகுதி நிலத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2110, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீயணைப்புத் துறைக்கு நவீன வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்டவெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2356, திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, பெண்ணாடம் நகரில் அடிக்கடி ஜாதிக் கலவரங்களால் தீ விபத்துக்கள் ஏற்படுவதால் அங்கு புதியதாக தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2467, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3546, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2727, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2826, திரு. ஆ. இராசேந்திரன என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, செந்துறை தீயணைப்பு நிலையக் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,79,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை, மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகியவை குறிதத கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும அச்சிடப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் சீரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 161 முதல் 258 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர் இன்று பேச இருக்கின்றார்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் 15 நிமிடங்களுக்குள்ளும், மற்ற எல்லா உறுப்பினர்களும் கண்டிப்பாக தலா 10 நிமிடங்களுக்குள்ளும் தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கோரி, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார் அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கின்றேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறந்த, இந்த நாட்டிற்காக தமிழகத்தினுடைய சட்டம் ஒழுங்கைச் சீராக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற, இன்னும் சொல்லப்போனால் 24 மணி நேரமும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காவலர்களைப் பெற்றிருக்கின்ற இந்தத் தமிழகம், இன்றைக்கு சில பிரச்சினைகளின் காரணமாக சிக்கிச் சிதறி தமிழகத்தினுடைய அமைதி சீர்குலைந்து விடுமோ என்கிற ஐயப்பாட்டிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட சில காலமாகப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டம மீண்டும் தலை தூக்கிவிடுமோ என்கின்ற ஐயப்பாடு இன்றைக்கு தமிழகத்தினுடைய 5-1/2 கோடி தமிழ் மக்களுடைய உள்ளத்திலும இருந்து கொண்டிருக்கிறது. இந்த விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டம் என்பது தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில், அந்த விடுதலைப் புலிகளுக்கு, தடை செய்திருக்கக்கூடிய அந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்ற அரசியல் இயக்கங்களும், பல்வேறு தலைவர்களும் இந்த நாட்டிலே, தமிழகத்திலே சுதந்திரமாக நடமாடுகின்ற சூழநிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னர் திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்றைக்கு தமிழகத்திலே ஆட்சி பீடத்திலே இருந்தபோதுதான் தமிழகத்திலே விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் அதிகமாகி, அதன் காரணமாக பத்மநாபாவினுடைய படுகொலை சென்னை நகரிலே நடந்தேறியதும், படுகொலை செய்தவர்கள் சுதந்திரமாக கோடியக்கரை சென்று தப்பிப்பதற்கு வாய்ப்பிருந்தது என்பதும் கடந்த காலத்தில் நடந்திருக்கின்ற, இன்றைக்கும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகள். அதனுடைய காரணமாகத்ததான் நம்முடைய தலைவர், அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை இந்தத் தமிழ் மண்ணிலே நாம் இழக்கின்ற மிகக் கொடிய சம்பவம் நடந்து முடிந்திருக்கின்றது

என்பதும் இன்றைக்கும் நம்முடைய நினைவுகளிலே நின்று கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக, ஏறத்தாழ 10 ஆண்டுகளாக தடைபட்ட இயக்கமாக இருந்துகொண்டிருக்கின்ற விடுதலைப் புலி இயக்கம் மீண்டும் தமிழகத்திலே தலை தூக்குகின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால் இன்றைக்கு விடுதலைப் புலிகள் என்று சொல்வதற்குப் பதிலாக ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு என்று பல்வேறு பகுதிகளிலேயும் மாநாடுகளை நடத்துகின்ற சூழ்நிலையையும் அதிலே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கக்கூடிய சூழ்நிலையையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

முற்பகல் 10-50

அண்மையிலேகூட, சிதம்பரத்திலே நடைபெற வேண்டிய ஒரு மாநாட்டினை தமிழக அரசு தடை செய்தது என்று பத்திரிகையிலே பார்த்திருக்கிறோம். ஆனால் அந்த மாநாடு தடை செய்யப்பட்டு, அந்த மாநாட்டிலே கூடியவர்கள் 200 பேர் அங்கே ஒரு கல்யாண மண்டபத்திலே அடைத்து வைக்கப்பட்ட போது அங்கே ஒலிபெருக்கி இல்லாமல் அந்த மாநாட்டிலே பேச்சுகள் நடந்திருக்கின்றன. மாநாடும் நடந்து இருக்கிறது. போலீஸ் அதற்கு சுற்றி நின்று பாதுகாப்பு கொடுத்திருக்கிறது என்ற செய்தியும் எங்களுக்கு வந்து கொண்டிருககிறது. அதைப்போலத்தான் தமிழ் தேசப் பொதுவுடமை கட்சியினுடைய பொதுச் செயலாளர் அவர்கள் பத்திரிகையிலே பேட்டி கொடுக்கிற போது சொல்லியிருக்கிறார்கள். சிதம்பரத்திலே எங்களுடைய மாநாட்டிற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் திருவாரூரிலும், திருச்செந்தூரிலும், மதுரையிலும் இதேபோன்ற மாநாடுகளை நாங்கள் நடத்தியிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மனோன்மணியக் காவியத்திலே ஒன்றைச் சொல்வார்கள். காலச் சக்கரம் சுழன்று சுழன்று மேலது கீழும், கீழது மேலுமாக மாறும் என்று சொல்வதற்கு இலக்கணமாகத்தான் 10 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலே இதே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பீடத்தில் இருந்தபோது விடுதலைப் புலிகள் எப்படி சுதந்திரமாக நடமாடி இங்கே பல்வேறு படுகொலைகளுக்கும், மக்களுடைய அமைதியைச் சீர்குலைப்பதற்கும் காரணமாக இருந்தார்களோ அந்தச் சூழ்நிலை இன்றைக்கு மீண்டும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு மாறி வருகை புரிந்திருக்கிறதோ என்கின்ற ஐயப்பாடு தமிழ் மாநிலக் காங்கிரஸைப் பொறுத்தவரை, தமிழகத்து மக்களைப் பொறுத்தவரை இன்றைக்கு எங்களது உள்ளத்திலே இருக்கிறது. (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், திரு. ஜி.கே. மணி நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இதை நான் சொல்கிறபோது ஒன்றை நான் ஆணித்தரமாக சொல்லமுடியும். அண்மையிலே 3 மாதங்களுக்கு முன்னர்கூட இராமநாதபுரம் மாவட்டம், பாசிப்பட்டணம் என்ற கிராமத்தின் வழியாக மிகப் பெரிய அளவிலே விடுதலைப் புலிகளே நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்து பெட்ரோல், டீசல் மருந்துகளில் ஒரு பகுதியினை அவர்கள் இலங்கைக்கு எடுத்துச் சென்றதும் அதில் எஞ்சியிருந்த ஒரு பகுதியினை காவல் துறை கைப்பற்றியதும், அந்தப் பகுதியிலே, அந்தப் பாசிப்பட்டணம் பகுதியிலே இருக்கின்ற மக்கள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு இருப்பதும் போன்ற சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கடலோரப் பகுதியைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் அதிகமாக இருக்கிறது என்பதைவிட, அவர்கள் சுதந்திரமாக வருகை புரிந்து பல்வேறு பொருட்களை இன்றைக்கு எடுத்துச் செல்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக தொண்டி, முள்ளிமலை, சாலகாடு, வனக்குழி போன்ற கிராமங்களில், அவர்களுடைய நடமாட்டம் அதிகமாக இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல் துறையைப் பொறுத்தவரை, சுதந்திரமாகச் செயல்படுகின்ற அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று பல கால கட்டங்களில் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

அண்மையிலே, கடந்த ஆட்சிக் காலத்திலே மத்திய அமைச்சராக இருந்த ப. சிதம்பரம் அவர்கள் திருச்சி விமான நிலையத்திற்கு, வந்தபோது, தாக்குதல் செய்தவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு நீதிமன்றத்திலே தண்டனை பெற்றுக் கொடுத்திருக்கக்கூடிய காவல் துறை அதேபோன்று 1997 ஆகஸ்டு திங்கள் 4 ஆம் தேதி சேலம் நீதிமன்றத்திலே அரசு தொடுத்த வழக்கினுடைய சம்மனை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அந்த நீதிமன்றத்தின் வளாகத்திற்குள்ளே வைத்து பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சியினுடைய துணை மேயர், நகராட்சி மன்றத்தினுடைய தலைவர்கள் உட்பட பல்வேறு ஆளும் கட்சியினுடைய தோழர்களுடைய தாக்குதல்களுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், என்னைச் சேர்ந்தவர்களும், என்னோடு அன்றைக்கு வருகை புரிந்த சக சட்டமன்ற உறுப்பினர்கள், அருமைச் சகோதரர் திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்கள், செல்வி ராணி

அவர்கள் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தேவதாஸ் போன்றவர்கள் மீது எல்லாம் தாக்குதல் செய்தபோது அன்றைக்கு வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. அஸ்தம்பட்டி போலீஸ் நிலையத்திலே பிரிவு 307-ல் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் சொல்லியிருப்பது என்ன என்று சொன்னால்— அந்தத் தாக்குதலுக்குக் காரணமானவர்களை நாங்கள் கண்டுபிடிக்க இயலவில்லை என்று காவல் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள் என்று சொன்னால், நான் இந்த அரசைக் கேட்கிறேன் ஒரு பாரபட்சமான நிர்வாகத்திற்கு, பாரபட்சமாக சட்டம், ஒழுங்கை பராமரிக்கின்ற ஒரு சீர்கெட்ட தன்மைக்கு இதைவிட நான் எந்த எடுத்துக்காட்டைச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. எனவே நான் ஒன்றைச் சொல்கிறேன், முதலமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி, எதிர்க்கட்சியினுடைய குரல்வளையை நெரிக்க வேண்டும் என்று எண்ணி காவல் துறையை தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டு சிறப்பாக, துணிவோடு பணியாற்றுகின்ற காவல் துறை அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டு, இதுபோன்ற செயல்கள் நடைபெறும் என்று சொன்னால் தமிழகத்தினுடைய சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு நான் சொல்ல முடியாது. நீண்ட நெடுங்காலமாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே சென்னை நகரில் மட்டும் அல்ல தமிழகத்தில் ஏறத்தாழ 4 இலட்சம் ஏழை மக்கள், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனங்களில் பணியாற்றியவர்கள், தனியார் நிதி நிறுவனங்களிலே முதலீடு செய்துவிட்டு அந்த நிதி நிறுவனங்கள் அவர்களை ஏமாற்றியதன் காரணமாக இன்றைக்கு வேதனையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிதி நிறுவனங்களுடைய அதிபர்களை— 1996-லிருந்து பல அதிபர்கள் இன்றைக்கும் காவல் துறையினுடைய துணையோடு வெளியிலே சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்— அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்கின்ற செயல்களும் நடந்து கொண்டிருக்கின்றன. நீதிமன்றத்தினுடைய கண்டனத்திற்கு ஆட்பட்ட பிறகுதான் சில தனியார் நிதி நிறுவனங்களுடைய அதிபர்களை கைது செய்திருக்கிறது இந்த அரசு என்று நான் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். ஏனென்று சொன்னால், 1996-லே கைது செய்யப்படாமல் தப்பித்துக் கொண்டிருப்பவர்களை, நியூ இண்டியா பைனான்ஸ் கம்பெனியினுடைய அதிபர்கள், அதுபோல ஸ்ரீமரியாஸ் நிறுவனத்தினுடைய அதிபர், ரிச்சர்ட்ஸ் அண்டு கிளிஃப் என்கிற நிறுவனத்தினுடைய அதிபர்கள், கைது செய்யப்படாமல் தப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். கைது செய்யப்பட்டு, அதற்குப் பிறகுதான் தலைமறைவு ஆகிவிட்டார்கள் என்று சொல்கின்ற முறையிலே காவினி டைரி புராடக்ட்ஸ் என்ற நிறுவனத்தினுடைய அதிபர்களைக்கூட கைது செய்துவிட்டு, பிறகு அவர்கள் தப்பிவிட்டார்கள் என்று காவல் துறை சொல்கின்றது. அதுபோல தண்டிக்கப்பட்டு நீதிமன்றத்திலே தண்டனை பெற்று 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று சொன்ன பிறகும்கூட, இன்றைக்கு ராவ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனத்தினுடைய அதிபர்கள் தப்பிவிட்டார்கள், தலைமறைவு ஆகிவிட்டார்கள் என்று காவல் துறை சொல்கிறது என்று சொன்னால் காவல் துறையினுடைய செயல்பாட்டிற்கு இதைவிட களங்கம் இருக்க முடியாது என்பதை நான் சொல்ல முடியும்.



முற்பகல் 10-55

அதுபோலவேதான், நீண்ட நெடுங்காலமாக, சந்தனக் கடத்தல் வீரப்பனுடைய நிலைமை உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். இந்த மன்றத்திலே பலமுறை வாதிடப்பட்ட ஒன்று, விவாதிக்கப்பட்ட ஒன்று. பலமுறை இப்போது பிடிக்கிறோம், இன்னும் நெருங்கி விட்டோம், இன்னும் ஒரு மணி நேரத்தில் பிடித்துவிடுவோம் என்று சொல்லி, சென்னையிலிருந்து அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு, மலைப் பகுதிக்கு வருவது வரை காவல் இருந்து, அதற்குப் பிறகு பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்த பிறகு சந்தனக் கடத்தல் வீரப்பன் தப்பிவிட்டான் என்று சொல்கின்ற செய்திகள் கடந்த காலத்திலே நடைபெற்றிருக்கின்றன. இந்த அரசை நான் கேட்கிறேன், நான்கு ஆண்டு காலம் ஆட்சி செய்து முடித்துவிட்டீர்கள். கடந்த ஆட்சி 5 ஆண்டு காலத்திலே சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க இயலாத அந்த அரசை ஒரு கையாலாகாத அரசு என்று சொன்னீர்கள். நீங்கள் 4 ஆண்டுகள் கடந்து விட்டீர்கள். இப்போது என்ன நிலைமையிலே சந்தனக் கடத்தல் வீரப்பனுடைய நிலைமை இருக்கிறது என்பதை இந்த அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குச் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவேதான், கடந்த காலத்திலே பார்க்கின்றபோது, இந்த அரசு 1996-லே பொறுப்பினை ஏற்றபோது மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு என்று 1,000 பெண்களை மாவட்டம் தோறும் நியமிக்கப்போகிறோம் என்று சொல்லியிருந்தீர்கள். நான்கு ஆண்டு காலம் கடந்துவிட்டது. இன்னும் அது நிலைபாட்டிற்கே வரவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய சட்டமன்றத் தொகுதியை எடுத்துக் கொண்டால் அது ஒரு வியாபாரத் தலமான தொகுதியாக இருக்கிறது. நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே முதலமைச்சரிடம் ஒரு காவல் நிலையத்தைப் புதியதாக எங்களுக்கு உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டு, முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்கின்றபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பெயரைச் சொல்லியே, சுட்டிக்காட்டியே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்தக் காவல் நிலையம் அங்கே திறக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் ஒரு எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள். புரோட்டோக்கால் என்று நிர்வாகத்திலே இருக்கிறது. ஒரு சட்டமன்றத் தொகுதியிலே புதியதாக காவல் நிலையம் உருவாக்கப்பட்டு, அதற்குத் தொடக்க விழா நடத்துகின்றபோது ஒரு courtesy sake-க்குக் கூட மனிதாபிமான அடிப்படையிலே, சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த தகவல் அல்லது அதற்கான ஒரு அழைப்பிதழைக்கூட அனுப்புவதற்கு காவல் துறை தயாராக இல்லையென்று சொன்னால், இந்த காவல் துறையினுடைய பாரபட்சம் எப்படி இருக்கிறது என்பதற்கு மீண்டும் ஒரு எடுத்துக்காட்டாக நான் இதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டுதான் எங்களை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்திலே நாங்கள் இல்லை. இருந்தாலும்கூட உண்மைகள் இந்த மன்றத்திற்குத் தெரிய வேண்டும் என்பதற்காக, நாட்டிலே நடக்கின்ற செய்தி என்ன என்பதை முதலமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அந்தச் சட்டமன்றத் தொகுதி மிகப் பெரிய ஒரு வியாபாரப் பகுதியாக இருக்கிறது. அதிலே இருக்கின்ற Traffic Police-னுடைய நிலைமை பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த Traffic Police-ஐ பொறுத்தவரையில் அதற்கான Strength இல்லாமல் காவல் துறை அதிகாரிகள் அதைக் கட்டுக்கோப்புக்குள்ளே கொண்டு வருவதற்கு இயலாத சூழ்நிலையில் இன்றைக்கு மிகவும் வாடுகின்றார்கள். எனவே, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் Traffic Police எண்ணிக்கையை நீங்கள் அதிகப்படுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால் முன்னுதாரணமாக, போக்குவரத்தைச் சீர்படுத்துவதற்கு என்றே தனியாக காவல் நிலையத்தை உருவாக்கி அதன் மூலமாக அந்தப் பகுதியிலே வந்துகொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான மக்கள் நல்ல முறையில்



அமைதியாக, எந்தவிதமான இன்னலுக்கும் ஆளாகாது செல்கின்ற சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. மதுக்கடைகளில் பார் நடத்துவதற்கு எந்த அளவிற்கு மாமூல் வசூலிக்கப்படுகிறது என்று ஒரு பட்டியலே அந்தப் பத்திரிகையிலே இன்றைக்கு வெளிவந்திருக்கிறது. இந்தப் பட்டியலை அரசு மறுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும், இது எழுதாத சட்டமாக நடைமுறையிலே இருக்கின்ற ஒன்று, இந்த அவையில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்கும் தெரிந்த ஒன்று. எனவே, இதைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஏறத்தாழ மதுவிலக்கு, ஆயத்தீர்வைக்கு மட்டும் மாதம் ஒன்றுக்கு டி.எஸ்.பி. அல்லது ஏ.சி.-க்கு 2,500 ரூபாய் லஞ்சமாகக் கொடுக்கிறார்களாம்; போலீஸ் நிலையத்திற்கு சட்டம்-ஒழுங்கைப் பார்க்கின்ற காவல் துறை அதிகாரிக்கு 7,500 ரூபாய் லஞ்சமாகக் கொடுக்கிறார்களாம். மதுவிலக்கு போலீசாருக்கு 4,500 ரூபாய் லஞ்சமாகக் கொடுக்கிறார்கள். எனவே இந்த ஆட்சியிலே ஏறத்தாழ 20,000 ரூபாய் ஒரு மதுக்கடை அதிபர் காவல் துறை அதிகாரிகளுக்கு லஞ்சமாகக் கொடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. இது தொடர்ந்து பல்வேறு ஆட்சிக் காலங்களிலும் இருந்தாலும் இன்றைக்கும் அது தொடர்ந்து நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு பெற்றுத் தர வேண்டும். இல்லையென்று சொன்னால் எந்தப் பகுதியிலும் நம்மால் லஞ்சத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைக்குப் போய்விடும். லஞ்சத்தைக் கட்டுப்படுத்துவதிலே இந்த அரசு தோல்வியுற்றுவிட்டது என்கிற செய்தி வந்துவிடும் என்பதற்காகச் சொல்கிறேன். எனவே இதைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 34 ஆண்டுகளுக்கு முன்னர் 500, 600 Constables பணி நியமனம் செய்யப்பட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், 25 ஆண்டுகள் சர்வீஸ் செய்தவர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பதவி வழங்கப்படும் என்று இந்த அவையில் அறிவித்திருந்தார்கள். ஆனால் 34 ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகும்கூட இந்தக் காவலர்களுக்கு

பதவி உயர்வு வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அரசு 1980-லே கொடுக்க வேண்டிய பதவி உயர்வை 1987-லே கொடுத்த காரணத்தால்தான் இந்தச் சிறப்புத் தகுதியை அவர்கள் பெறமுடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகளுடைய தவறினால் ஏற்பட்ட அந்தச் சூழ்நிலைக்கு காவலர்கள் பலிகடாவாகி விட்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதலமைச்சர் அவர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால் அந்தச் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு எந்தவிதமான பண உதவி அல்லது அலுவலகத்தில் சென்று அமருவதற்குக்கூட மேசை, நாற்காலி இல்லாத நிலையில்தான் அவர்கள் இன்றைக்கும் பெயரளவிலேதான் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என்று அங்கீகாரம் பெற்றிருக்கிறார்களே தவிர, இன்றைக்கும் அவர்கள் வெளியில் செல்லும்போதும் சரி, சக ஊழியர்களும் சரி, அவர்களை ஏட்டையா என்றே சொல்கிற ஒரு வேதனையான சூழ்நிலை, அவர்களை கேலியாகப் பேசுகின்ற சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதையும் முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள், என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆர்-2 காவல் நிலையப் பகுதியில் சம்பத் என்ற உதவி ஆய்வாளர், மாலை 5-30 மணிக்கு தன்னுடைய எல்லைப் பகுதியில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதற்காகச் சுற்றிவந்தபோது, அங்கே ஒரு பகுதியில் தீவிரவாதிகள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள், வெடிபொருட்களை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து, அவர்களைக் கைது செய்து, ஏறத்தாழ 29 பேர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, அதன் மூலமாகத் தொடர்ந்து சென்னை நகரிலே பல்வேறு பகுதிகளில் தீவிரவாதத்திற்குத் துணை போய்க் கொண்டிருந்த பலரைக் கைது செய்வதற்குக் காரணமாக இருந்த அந்த காவல் துறை அதிகாரி, தன்னுடைய உயிரையும் துச்சமென மதித்து, அந்தப் பணியைச் செய்திருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் இதுவரையில் எந்தவிதமான சலுகையும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. உதயசூரியன் பேசவேண்டும்.



**டாக்டர் அ. செல்லக்குமார்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். ஒரு நிமிடம். சம்பத் என்கிற அந்த உதவி ஆய்வாளர்— தனது உயிரைத் துச்சமென மதித்து ஏறத்தாழ பல பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அந்த வெடிபொருட்களைக் கண்டுபிடிப்பதற்குக் காரணமாக இருந்த அந்த சம்பத் என்ற உதவி ஆய்வாளருக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த காவலர்களுக்கும் பதவி உயர்வை—வழங்காமல் இருக்கும் பதவி உயர்வை—நீங்கள் வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த நான்காண்டுகளாக சட்டம்—ஒழுங்கைத் தன் கையில் வைத்துக்கொண்டுள்ள நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டிலே எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் சுமூகமாக நல்ல அடிப்படையிலே தமிழகத்தை நடத்திக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக, இந்த நான்காண்டு காலத்தில் அமைதிப் பூங்காவாக தமிழகம் இருப்பதற்குக் காரணமாக ஒரு உதாரணத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நேற்றையதினம், பொது வேலை நிறுத்தம் என்ற பெயரில் பல்வேறு அமைப்புகள், புகைவண்டிகள் ஓடாது, பேருந்துகள் ஓடாது என்று பல்வேறு கட்சிகள்— இவையெல்லாம் இயங்காது என்று— சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில், நம்முடைய காவல் துறைத் தலைவர் அவர்கள், 10 ஆம் தேதி ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல், போலீஸ் துணையுடன் பேருந்துகள் இயங்கும், புகைவண்டிகள் இயங்கும், ஆட்டோக்கள் இயங்கும், எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் பேருந்துகள் செயல்படும் என்பதைச் சுட்டிக்காட்டி நேற்றைக்கு அது வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், அதுதான் சட்டம்-ஒழுங்கு கட்டுக்கோப்பில் இருக்கிறது என்பதற்கும், தமிழகம் அமைதிப்பூங்காவாக இருக்கிறது என்பதற்கும் ஆதாரம் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை இந்தத் துறையில் பேசுவதில் நான் பெருமை அடைகிறேன்.

முற்பகல் 11-05

ஒரு காலத்தில் உதயசூரியன் என்கிற நாடகத்தை உருவாக்கி, நம்முடைய முதலமைச்சர் அன்றைக்கு போலீஸ் துறை நலிவுற்று இருக்கிற அந்த நேரத்தில் போலீஸ் துறை அலுவலர்களுக்காக ஒரு பாடலைப் பாடினார்கள். அந்த பாடலுக்காக உதயசூரியன் நாடகத்திற்கு அப்போது காங்கிரஸ் அரசாங்கம் தடை விதித்தது. அந்தப் பாடல்—

"போலீஸ் வேலைககு என்று போகின்ற உங்கப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரனே கண்வளராய்
துப்பாக்கி தூக்கிக்கிட்டு போகின்ற உங்கப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வருகின்றார் கடன்காரர்
காக்கி உடை போட்டுகிட்டு, சேப்புத் தொப்பி
மாட்டிக்கிட்டு போகிற உங்கப்பனுக்கு
உன்னைபோல் நாலைந்து வந்து பிறந்துவிட்டால்
காவியுடை வேண்டுமடா, கமண்டலமும் தேவையடா"

என்று அந்தக் காவல் துறை அலுவலர்களுடைய குறைகளை தெரிந்துகொண்டு அந்தப் பாடலை எழுதிய காரணத்தால் உதயசூரியன் நாடகம் தடைபட்டது. ஆனால் அதற்குப் பிறகு, அவர் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, இதே சபையிலே அந்தப் பாடலை பாடியிருந்தாலும்கூட, இப்போது உதயசூரியன் என்கிற ஓர் சட்டமன்ற உறுப்பினரை உருவாக்கி, அந்த உதயசூரியனாலேயே இந்தப் பாடலை பாடவைக்கின்ற ஒரு பெருமை இதுபோன்ற தலைவரைவிட எந்தத் தலைவருக்கும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல வரலாற்று சிறப்புமிக்க பல்வேறு நிகழ்ச்சிகளை இந்த நாட்டிலே சாதிமத பேதம் இருக்கக்கூடாது என்று தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் உருவாக்கித் தந்த, யாத்துத் தந்த இலட்சியங்களைப் பின்பற்றி போற்றுகின்ற வகையில் இந்தத் துறையில் பல்வேறு இடங்களில் ஆதிதிராவிட மக்களை நியமித்திருக்கிறார்கள். நீதித் துறையில் நீதிபதிகளை நியமித்திருக்கிறார்கள். ஏன் ஓங்கிச் சொல்லவேண்டுமென்றால், இப்போது குடியரசுத் தலைவரே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர். அவர் அதைப் பெறுவதற்கு முதல் குரல் கொடுத்தவர் நம்முடைய தானைத் தலைவர், தமிழக முதல்வர்



டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அவர் இந்தத் துறைக்கும்—ஒரு ஆதிதிராவிட குடும்பத்தில் பிறந்த துரை என்பவரை போலீஸ் துறைக்கு தலைவராக்கிய பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஒருவரையே சாரும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

100 ஆண்டுகள், 80 ஆண்டுகள், 70 ஆண்டுகளாக இருந்த காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை அலுவலகங்களுக்கு எல்லாம் நிலையான கட்டடங்களைக் கட்டித் தருவது கிடையாது. ஆனால் எப்போதெல்லாம் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் இந்தக் காவல் நிலையங்களுக்கு கட்டடங்கள் கொடுப்பதிலே சிறப்பான திட்டங்களைத் தீட்டி, அந்தக் கட்டடங்களைக் கட்டித் தந்த பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும்.

என்னுடைய தொகுதி கள்ளக்குறிச்சியில் நீண்ட நெடியகாலமாக இருந்த தீயணைப்பு நிலையத்தை—1973 ஆம் ஆண்டு அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தீயணைப்பு நிலையம் கொடுத்தார்கள். ஆனால் மீண்டும் 1996-க்குப் பிறகு முதலமைச்சராக வந்த கலைஞர் அவர்களதான் அதே தீயணைப்பு நிலையத்திற்கு நிலையான கட்டடத்தை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த நேரத்தில் தொகுதி மக்களுடைய சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல கச்சிரநாயக்கன்பாளையம், வடபொன்பரப்பி காவல் நிலையங்கள் எல்லாம் 100 ஆண்டு காலமாக இருக்கின்ற காவல் நிலையங்கள். வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்தக் காவல் நிலையங்களுக்கு நிலையான கட்டடங்களை 1996-ல் ஆட்சிக்கு வந்த பின்னர், சென்ற ஆண்டு இரண்டு காவல் நிலையங்களைக் கட்டிக் கொடுத்த தமிழக முதலமைச்சருக்கு கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் தொகுதி மக்கள் சார்பில் என் நன்றியினை காணிக்கையாக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல புதிய காவல் நிலையத்தை, கல்வராயன் மலை மக்களுடைய துயரை போக்குவதற்காக சென்ற ஆட்சியில் கொடுக்கப்பட்ட அந்த காவல் நிலையத்தை அப்புறப்படுத்தினார்கள். 1996 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கல்வராயன் மலைவாழ் மக்களுடைய துயர் துடைக்க புதிய காவல் நிலையத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை பெருமையோடு சொல்லி, அதற்கு நன்றி தெரிவிப்பதோடு அந்தக் காவல் நிலையத்திற்கும் இந்த ஆண்டு கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு முதல்வர்

அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1989 ஆம் ஆண்டு கழக ஆட்சி நடைபெற்றபோது தீயணைப்பு நிலையத்தை சங்கராபுரத்திற்கு நீங்கள் கொடுத்தீர்கள். அந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் இல்லை; நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே, சென்ற மானியக் கோரிக்கையில் நீங்கள் பேசுகிறபோது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் 50 சதவிகிதம் பணம் கொடுப்பீர்களேயானால், அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு முன் வருகிறேன் என்று சொல்லி கிட்டத்தட்ட 24 கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதாக நீங்கள் அப்போது பேசுகிறபோது சொன்னீர்கள். 16 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தத் தொகையை ஒதுக்கி (மணியடிக்கப்பெற்றது) பொது ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத்தின் சார்பிலும், 50 சதவிகிதம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் செலவிட்டு இப்போது, கிட்டத்தட்ட 16 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களிடம் கனிவோடு நான் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 50% கேட்கிறீர்கள், கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், நீங்கள்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது போல, தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 25 இலட்சம் கொடுத்தீர்கள். பிறகு 35 இலட்சம் ரூபாய் கொடுத்தீர்கள். அதன் பிறகு, 50 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தீர்கள். அந்த 50 இலட்சம் ரூபாய் கொடுக்கிறபோது, தமிழ்நாட்டில் இந்தியாவிலேயே இண்டர்நெட் கம்ப்யூட்டர் மையத்தை ஏழையெளிய மாணவ மாணவியர் படிப்பதற்காக பல்வேறு அரசு மேலநிலைப் பள்ளிகளில் கொடுக்கிறபோது, கிட்டத்தட்ட 24 இலட்சம் ரூபாயை, அந்த கணினிமயமாக்குவதற்கு, கட்டடம் கட்டுவதற்கு அந்தத் தொகையை நீங்கள் கொடுக்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னீர்கள். நாங்கள் அந்தத் தொகையை கொடுத்து விட்டோம். மீதியுள்ள 24 இலட்சம், 25 இலட்சத்தில், தொகுதி...

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.



***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்த மூன்று மானியக் கோரிக்கைகளின்மீது 10 நிமிடங்களுக்குள் பெரிய விஷயங்கள் ஒன்றும் சொல்ல முடியாது. சொல்ல வேண்டிய விஷயங்களையே சொல்ல முடியாத ஒரு நெருக்கடி இருக்கிறது. ஆனாலும்கூட, தமிழ்நாட்டில் மாநில அரசின் நினைவுகளுக்கு, அதனுடைய கருதுகோள்களுக்கு அப்பால் காவல் துறையின் செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பதைக் காட்டவேண்டிய கடமைப் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது.

மனித உரிமை மீறல் கடுமையான குற்றமாகக் கருதப்படும் என்று மாநில அரசு கருதுகிறது. ஆனால் போலீசாருடைய நடவடிக்கைகளிலே இன்னும் அத்தகைய கடுமையான மீறல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத்தான் நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நான் சொல்வது குறித்து வருத்தப்படக்கூடும். இன்றைய காவல் துறையை Colonial Police என்று நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். அந்தக் காலனி ஆதிக்க கட்டமைப்பைக் காப்பாற்றுவதற்காக பிரிட்டிஷாரால் தோற்றுவிக்கப்பட்ட அந்த எண்ணச் சிறைகளிலேயிருந்து இன்னும் அது விடுதலையடையவில்லை, விடுவிக்கப்படவில்லை என்பதைத்தான் விவரங்கள் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. அதுபற்றி என்னால் விரிந்த பட்டியலை விரிக்க முடியும். ஆனால் நீங்கள் அனுமதிக்கப் போவதில்லை. எனவே, இரண்டொரு விஷயங்களை மட்டும் நான் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உண்மையிலேயே என்னிடம் கைவசம் இருக்கிற மிக முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று, தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், ஈச்சங்குடி முருகேசன் என்பவருடைய கண்ணீர் முறையீடாகும். முதலமைச்சர் அவர்கள் அந்த முருகேசனை அருள்கூர்ந்து நேரடியாக அழைத்து அவருடைய துயரத்தை காது கொடுத்து கேட்டார்கள் என்றால், உண்மையிலேயே ஒரு விடிவு வரும் என்று நான் நம்புகிறேன். தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அந்த முருகேசனை நேரடியாக அழைத்து அவருடைய துயரத்தைத் தயவுசெய்து கேட்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவருடைய மனைவி கடந்த 2-7-1999-ல் பாலியல் பலாத்காரத்தால் கொல்லப்பட்டாள். அந்தக் கொலையைச் செய்த காமக் கொடூரக் குற்றவாளிகளையெல்லாம் கைது செய்யவேண்டுமென்று போலீசாரை

சம்பந்தப்பட்ட முருகேசன் நிர்ப்பந்தித்ததற்குப் பின்னால், அவருக்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? சொந்த மனைவி, மூன்று குழந்தைகளை அனாதையாக்கிவிட்டு, காமாந்தகர்களால் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்ட நிலையில், அவற்றுக்கு நீதி வேண்டுமென்று அவர் வலியுறுத்திய காரணத்தால், அவருக்குக் கிடைத்த பரிசு, அவருடைய மனைவியை அவரே கொன்றதாக 302-பிரிவில் வழக்குப் போட்டு, உள்ளே தள்ளிவிட்டார்கள். இந்த கொடுமைகளை எடுத்துச் சொல்ல வார்த்தைகளே கிடைக்கவில்லை. இந்த 50 ஆண்டு கால விடுதலைக்குப் பின்னால், மனித உரிமை மீறல் பற்றியெல்லாம் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் நடைபெறும் காலத்தில் இதுபற்றியெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறபொழுது, ஒரு முருகேசன், தமிழகத்தில் மனித உரிமை மீறல் குறித்த முறையீட்டிற்கு நீதி கிடைக்கவில்லை என்று துயருறுகிறார் என்றால் அதற்கு என்ன வழி என்று பார்க்கவேண்டும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அதுபற்றி விரிவாக, அதனுடைய சம்பவங்களை முழுமையாக, கோர்வையாகச் சொல்ல நேரமில்லை. ஆனால் ஒரேயொரு விஷயம். அவர் மாதர் சங்க அமைப்புகளிடம் புகார் செய்து, மேல்மட்டம் வரையிலும் புகார் செய்து, நீதி கிடைக்கவில்லை என்பதால், ஜனநாயக ரீதியில் போராடி, நிர்பந்திக்கத் தலைப்பட்ட காரணத்தால், அவர் தண்டிக்கப்பட்டு, அவரே மனைவியைக் கொன்றதாக காவல் நிலையத்திலே வைத்து நிர்பந்தித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருக்கிறார்கள். எனவே, நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். அவர்மீது போடப்பட்ட வழக்கை இரத்து செய்யவேண்டும். உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கு இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பிலே இருக்கிற இந்தத் துறையில் அத்தகைய அழிக்க முடியாத ஒரு வடுவை ஏற்படுத்தியிருக்கிற இந்தக் காவல் துறையின் உண்மைகளைக் கண்டறிய சி.பி. சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடவேண்டுமென்று உறுதிபட வலியுறுத்துகிறேன். இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டும். யார் குற்றவாளிகள் என்றெல்லாம் முருகேசன் சொல்லியிருக்கிறார். அதுபற்றிச் சொல்ல எனக்கு நேரமில்லை.

இன்னொரு விஷயம், துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தலையாட்டுவது எனக்குப் புரிகிறது. ஆனால் அதிகத் துயரமான விஷயம் என்பதால் நான் பட்டியலிடுகிறேன். இரண்டாவது விஷயம். அஞ்சலை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதினார்கள். பராசக்தி சினிமாவிலேகூட எழுதினார்கள். திரைப்படக் கதையிலேகூட எழுதினார்கள் கல்யாணி பற்றி. நம்முடைய கலைஞர் அவர்களுடைய



பேனா வடித்த கல்யாணி, 'ஓடினாள், ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்' —ஆனால் தப்பித்துக் கொண்டாள். உங்கள் கல்யாணி தப்பித்துக் கொண்டாள். ஆனால் நான் சொல்கிற அஞ்சலை தப்பிக்கவேயில்லை. அழிந்துவிட்டாள், அழிக்கப்பட்டாள் இது எங்கே தெரியுமா? இங்கு அல்ல, சென்னையிலே அல்ல. விழுப்புரம் மாவட்டம், மணலூர்பேட்டை, முருக்கம்பாடியில்.

முற்பகல் 11-15

முருக்கம்பாடியைச் சேர்ந்த அஞ்சலை என்ற பெண் 20 வயது. அவள் செய்த குற்றம் காதலித்ததுதான். காதலித்தவனை இவளும் காதலித்தாள். அவன் செய்ய வேண்டிய விஷயங்களைச் செய்து, மூன்று மாத கர்ப்பிணியாக்கி விட்டு, கைவிட்டுவிட்டான். இந்த விஷயத்தை அங்கே மணலூர்பேட்டை போலீஸ் நிலையத்திலே புகார் செய்தாள் அஞ்சலை. புகார் செய்தவுடன் என்ன நடந்தது தெரியுமா? நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல் துறை, புகார் செய்த அந்த அஞ்சலையின் புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில் ஜாதி வித்தியாசம் இல்லை. ஒரே ஜாதிதான். ஒரே ஒரு வித்தியாசம், இவர் சாமனியப்பட்டவர். ராஜா என்கிற அந்த 22 வயது பையனுடைய தந்தை சிங்காரவேடி, மணலூர்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியினுடைய தலைவர். இவருடைய மகன் ராஜாதான் இத்தகைய வேலையைச் செய்தான். தன்னுடைய செல்வாக்கைச் செலுத்தி அந்தப் புகாரின்மீது நடவடிக்கை எடுக்காமல் தடுத்துவிட்டார். இந்த நிலையில் 13-3-2000-ல் மணலூர்பேட்டை போலீஸ் நிலையத்தில் புகார் செய்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று 18 ஆம் தேதி இதே இன்ஸ்பெக்டரிடம் அஞ்சலை புகார் செய்தாள். அந்தப் புகாரைக் கேள்விப்பட்டவுடன் சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்தார் தெரியுமா? நேரடியாக அஞ்சலையின் வீட்டுக்குச் சென்று 'நீ எங்கெங்கேயோ மேய்கிறாய்' என்று அவர் சொன்ன வார்த்தையை நான் திரும்பச் சொல்கிறேன். 'நீ எங்கேங்கேயோ மேய்ந்திருக்கிறாய், இந்தக் கேசை ஒழுங்காக வாபஸ் வாங்கிக் கொள்ளவில்லையென்றால் நடப்பதே வேறு, உன் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மிரட்டி, 'உன்னால் அப்படிச் செய்ய முடியவில்லையென்றால், நீ உயிரோடு இருக்க வேண்டாம், செத்துத் தொலை' என்று தற்கொலைக்கு நிர்பந்தித்தார். இது நடந்த மறுநாள் அந்தப் பெண் அரளி விதையை அரைத்துக் குடித்து இறந்துவிட்டாள். அவரை இறக்க வைக்கத் தூண்டியவர் முதல் குற்றவாளி, 302 பிரிவில் வழக்கு போடப்பட வேண்டிய குற்றவாளி, சப்-இன்ஸ்பெக்டர். அந்த

சப்-இன்ஸ்பெக்டரின் மீது 302-வது பிரிவில் வழக்குப்போட வேண்டுமென்று புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நடவடிக்கை இல்லை. என்ன செய்ய முடியும்? அந்த அஞ்சலை குடிசை வீட்டில் பிறந்தவர். குடிசை வீட்டில் பிறந்தவருடைய கண்ணீர் முறையீடு, ஏன் இந்தக் காவல் துறையிடம் ஏறவில்லை சாமானியப்பட்டவர்களைப் பற்றி இந்தக் காவல் துறை கவலை கொண்டிருக்கிறதா என்றால் கவலை கொள்ளவில்லை. எனவேதான், இதற்கு நியாயம் கேட்டு எங்களுடைய இளைஞர் பெருமன்றத்தைச் சேர்ந்தவர்கள் போராடினார்கள். போலீஸ் என்ன செய்தது தெரியுமா? எப்படி முருகேசன் வழக்கில் கொலைக்கு நியாயம் வேண்டுமென்று கேட்டவனையே கொலைக் குற்றவாளியாக்கினார்களோ அதுபோல, இந்த அஞ்சலையினுடைய பிரச்சினையை முன்வைத்துப் போராடியவர்களின் மீது பொய் வழக்குப் போட்டு, 506/2 பிரிவில் போட்டு ஜாமீனில் வெளி வர முடியாத வழக்கு. ஜனநாயக உரிமைகளை பிரஜைகள் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று போராடுகிற ஜனநாயகக் காவலர்களுக்குக் கிடைத்த பரிசு 506/2 என்றால், இது என்ன நியாயம் என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த விஷயத்திலும் சக்தி மிக்க கைகள் தடுக்கின்றன. அந்தச் சக்தி மிக்க கைகள் முறிக்கப்பட வேண்டும். அந்தச் சக்தி மிக்க கைகள் ஜனநாயக நெறிமுறைகளை நெருக்குவதை, நெரிப்பதைத் தடுக்க சி.பி. சி.ஐ.டி. விசாரணைக்கு இந்த அஞ்சலை விஷயத்திலேயும் மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நேரம் ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன. நினைவூட்டத்தான் இது.

**திரு. கே. சுப்பராயன்:** அடுத்து, நான் இங்கே குறிப்பிட விரும்புவது, வேறு விஷயத்தைக் குறிப்பிட்டால் காலதாமதமாகிவிடும். எனவே, நான் மீண்டும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இன்னொரு 7 வயது குழந்தைக் கொலை நெய்வேலியில் நடந்து இருக்கிறது. அந்தக் கொலையிலும் போலீசார் முறையாக நடந்துகொள்ளவில்லை. அந்தக் கொலைக் குற்றவாளிகளையும் போலீசார் காப்பாற்றுகிறார்கள். கொலைக் குற்றவாளிகளைத் தப்ப வைக்கிறார்கள். ஒரே ஒரு விஷயம், இந்த போலீஸ் எப்படி நடந்துகொண்டது என்பதற்கு வக்கீல் விஜயன் வழக்கு உதாரணமாக இல்லையா? வக்கீல் விஜயனைத் தாக்கியவர்கள் வேறு. ஆனால், அதில் சம்பந்தமே இல்லாத 5 பேரை நீதிமன்றத்திலே கொண்டு போய் நிறுத்தி, இவர்கள்தான் வக்கீல் விஜயனைத்



தாக்கினார்கள் என்று சொன்னதை High Court-ஏ கண்டனம் செய்ததை, நாம் இந்த மாநிலத்திலேயே பார்த்தோம். இந்த ஆட்சியில் அல்ல என்றாலும்கூட இதே மாநிலத்தில் நடந்தது. இந்தக் காவல் துறையால் நடத்தப்பட்டது. எனவே, இந்த இரண்டு விஷயங்களிலும் நீங்கள் அருள்கூர்ந்து சி.பி. சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, காவலர்களைப் பற்றி மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

சப்-இன்ஸ்பெக்டர் ரேங்குக்கு மேல் இருக்கிறவர்கள் எல்லாம் வசதியாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், [illegible], உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்குப் பல கோரிக்கைகள் இருக்கின்றன. சொல்ல நேரமில்லை. ஆனால், காவலர்கள் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு அவர்களின் கோரிக்கையில் தலைமைக் காவலர் முதல் அதற்குக் கீழே இருக்கக்கூடிய காவலர்கள், இவர்கள் பந்தாடப்படுகிறார்கள். திருச்சி ஆயுதப்படைப் பிரிவிலே இரண்டு போலீசார் எந்த அளவிற்குப் பந்தாடப்பட்டார்கள் என்ற விவரம் என்னிடம் இருக்கிறது. ஓர் உயர் அதிகாரி இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்களைக் கண்டபடி அடித்தார். இதே திருச்சியில், அவர் transfer செய்யப்பட்டார். உயர் அதிகாரி என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அளவுக்கு இருக்கிறது. காவலர்களைக் கொத்தடிமைகள்போல் நடத்துகிறார்கள். இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு உரிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம்.

***திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பு ஏற்ற 4 ஆண்டு காலத்தில் தீர்க்கமான பார்வையோடு, ஆற்றல் மிக்க ஆளுமையாலும், அயராத உழைப்பாலும், ஊழல் அற்ற நிர்வாகத்தாலும், உறுதியான திட்டங்களாலும், கடந்த கால ஆட்சியிலே ஏவல் துறையாக இருந்த இந்தக் காவல் துறை, இப்போது தமிழக மக்களின் நலனுக்காக நட்புக் கரம் நீட்டும் இந்தக் காவல் துறை மானியத்தில் என்னுடைய கருத்துகளைக் கூற வாய்ப்பு அளித்த தமிழினக் காவல் தெய்வம். வாழும் அய்யன் வள்ளுவர், ஐந்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அரசியலிலும் சமுதாயப் பணியிலும், வாய்மைக்கும் தூய்மைக்கும் எங்களுக்கெல்லாம்

வழிகாட்டியாக இருக்கக்கூடிய, சென்னை நகரைச் சிங்கார நகரமாக ஆக்கிட பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்ற வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர், தந்தைக்கே தந்தையாக இருக்கக்கூடிய எங்கள் தளபதியார் அவர்களுக்கும், தங்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் காவல் துறை மானியத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 1116 கோடி ரூபாய் ஒதுக்கி அந்தத் துறையை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. சட்டம்-ஒழுங்கைப் பேணிக் காப்பதிலும், சமுதாய நல்லிணக்கம் மற்றும் நல்லுறவைப் போற்றி, நலிந்த பிரிவினர், மகளிர் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாகச் செயல்பட்டு, காவல் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, கடந்த காலங்களிலே அந்தக் காவல் துறையினுடைய உடைகளை எல்லாம் மாற்றி அவர்களுக்கும் ஒரு மரியாதை ஏற்படுத்தியவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த காலங்களிலே எல்லாம் கிராமப்புறங்களிலே சொல்லுவார்கள். காவல் துறையைச் சேர்ந்த போலீஸ்காரர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கிராமப்புறங்களிலே பெண் தரமாட்டோம் என்று சொல்லுவார்கள். ஆனால், இன்றைக்கு நம்முடைய கலைஞருடைய ஆட்சியிலே அது தலைகீழாக மாறி, கல்யாணச் சந்தையிலே காவலர்களுக்குப் போட்டி போட்டுக்கொண்டு வரவேற்பு இருக்கிறது. எப்படி உழவர் சந்தைக்கு நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் வரவேற்பு அளிக்கிறார்களோ, அதைப்போல அவர்களுக்கு இன்றைக்கு போட்டிப் போட்டுக்கொண்டு வரவேற்பு அதிகமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய முன்னாள் ஐ.ஜி. அருள் அவர்களால் 1978 ஆம் ஆண்டு எழுதப்பட்ட போலீஸ் டைரி என்ற புத்தகத்தில்—விரிந்த நீலக் கடலைப் பார்த்தவாறு அமைந்திருக்கும் இந்தக் காவல் துறை அலுவலகத்தைப் போல இந்தியாவிலே மட்டுமல்ல; உலகத்திலே எங்கும் இதுபோன்ற ஒரு காவல் தலைமை இடம் அமையவில்லை என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த, பழமை வாய்ந்த கட்டடத்தை,



1850 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வாங்கி பாதுகாக்கப்பட்ட இந்தக் கட்டடத்தைத்தான் சென்ற ஆட்சியாளர்கள் இடித்துத் தள்ள வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால், சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றதன் காரணமாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அதைச் சரிபார்த்து, அதைச் செப்பனிட்டு, புதுப் பொலிவு ஊட்டி, இன்றைக்கு சென்னை கடற்கரை ஓரத்திலே அழகான அந்த அலுவலகக் கட்டடம் மிகச் சிறப்பான முறையிலே பயன்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதே ஐ.ஜி. அருள்தான் அவருடைய புத்தகத்திலே, போலீஸ் கமிஷன் அமைத்து தமிழகத்திலே போலீஸ் துறை எவ்வாறு பணி புரிகிறது என்பதைக் கண்டறிந்து அறிக்கை அளிக்க வழி கண்டவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர்தான் என்று அந்தநேரத்திலே குறிப்பிட்டு இருக்கிறார். அதேபோல, அன்றைக்கு அந்த போலீஸ் கமிஷனால் பரிந்துரை செய்யப்பட்ட 133 பரிந்துரைகளில் 115 பரிந்துரைகளை உடனே ஏற்று நிறைவேற்றிட ரூபாய் 4 கோடியே 60 இலட்சம் ஒதுக்கியவர் மாண்புமிகு முதல்வர்; அதனால்தான் இந்தியாவிலே தமிழக போலீஸ் துறையை நவீன முறையில் மாற்றி அமைக்க முடிந்தது என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

காவல் துறையில் பணிபுரிவோரின் கஷ்டங்களை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதலவராக பொறுப்பு ஏற்ற பிறகு, ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையிலே, காவல் துறையினரின் நிலைமைகளை அறியச் சொல்லி, தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு கமிஷன் அமைத்தவர் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் 1989 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்று 3-வது முறையாக முதல்வர் பொறுப்பேற்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மீண்டும் சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு அளித்த பரிந்துரை அடிப்படையிலே 79 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

புதுடெல்லியிலே இருக்கின்ற தேசிய குற்ற ஆவணக் கூடம்— National Crime Records Bureau என்ற ஒரு துறை சென்ற ஆண்டிலே வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி ஒவ்வொரு 100 சதுர கிலோமீட்டருக்கும் அகில இந்திய சராசரியில் காவலர்களுடைய எண்ணிக்கை 38 பேர். ஆனால் தமிழ்நாட்டில் 57 பேர். (மணியடிக்கப்பெற்றது) ஒரு காவலருக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு அகில இந்திய சராசரியில் 61,883 ரூபாய் ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 68,059 ரூபாய் எனக் கணக்கிட்டுக் கூறுகிறது.

இவ்வாறு காவல் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து எண்ணிக்கையிலும் சரி, அவர்களுக்கு செலவு செய்வதிலும் சரி, மற்ற மாநிலங்களைவிட தமிழகம் முன்னோடியாக விளங்குகிறது என்றால், அது முதல்வர் அவர்கள் நம்முடைய காவல் துறையின் மேல் கொண்டுள்ள மதிப்பை பிரதிபலிக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி, மாவட்டத்தைப் பற்றி சில கருத்துக்களை, கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள சாமல்பட்டியில் ஒரு காவல் நிலையத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பர்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட தொகரப்பள்ளி சாலை சந்திப்பிலே ஒரு புறக் காவல் நிலையத்தினை அளித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக பர்கூர் மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதை மாற்றி அரசின் சார்பில் அங்கே கட்டடம் கட்டித் தர வேண்டுமாயும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் பர்கூர், போச்சம்பள்ளி தீயணைப்பு நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். மத்தூரில் ஒரு தீயணைப்பு நிலையம் உருவாக்கித் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



என்னுடைய தருமபுரி மாவட்டம் தமிழகத்திலே ஒரு பெரிய மாவட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. கர்நாடகம் மற்றும் ஆந்திர எல்லையோரப் பகுதிகளிலிருந்து மக்கள் போர்ப் படையைச் சேர்ந்த தீவிரவாதிகள் அதாவது நக்சலைட்டுகள் இங்கே அதிகமாக வந்து ஊடுருவக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆந்திராவிலிருந்து போர்ப் படையைச் சார்ந்தவர்கள் தருமபுரிக்கு வருகிறார்கள். ஆந்திராவில் நக்சலைட்டுகளைச் சுட்டுக்கொன்ற காரணத்திற்காக, நக்சலைட்டுகள் கடந்த டிசம்பர் மாதத்தில் ஒகேனக்கல் மற்றும் நாயக்கன்கொட்டாய் என்ற இடங்களில் இரண்டு அரசுப் பேருந்துகளை தீயிட்டுக் கொளுத்தி உள்ளார்கள். நம்முடைய காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றி, அந்தத் தீவிரவாதிகளில் ரவீந்திரன் என்ற நக்சலைட் காவல் துறையினரைச் சுட முயன்றபோது காவல் துறையினர் அவனைச் சுட்டுக்கொன்றார்கள். சிவா என்கின்றவனும் சிறையிலே அடைக்கப்பட்டுள்ளான்.

ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, எங்களது மாவட்டம், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தினாலே, இந்த மாவட்டத்திற்கு என்று ஒரு சிறப்புக் காவல் படையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இராசிபுரம் பஸ் நிலையத்தில் புறக் காவல் நிலையம் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும், இன்னும் அந்தப் புறக் காவல் நிலையம் அமைக்கப்படவில்லை. அந்தப் புறக் காவல் நிலையத்தினை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராசிபுரம் நகரிலுள்ள தீயணைப்பு நிலையம் தற்காலிகமாக கீற்றுக் கொட்டகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு நிதியுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டகலூர் கேட்டில்—அது நேஷனல் ஹைவேஸ் ஆக இருக்கிற காரணத்தால்—புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அரசையும் நான் முதற்கண் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சென்ற ஆட்சியால் போலீஸ் துறையினுடைய ஈரல் 75 சதவீதம் கெட்டுவிட்டது என்று கூறினார்கள். நான் தற்போது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய அணுகுமுறையால், எங்களைப் போன்ற எதிர்க்கட்சிகளைப் பழி வாங்குவதற்காக போலீசைவிட்டு பொய் வழக்கு போட வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக போலீஸைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால், போலீசாருடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்படாத காரணத்தினால், போலீஸ் துறையினுடைய இதயத்தையே நீங்கள் சீர்குலைத்து விட்டீர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்காட்லாந்து நாட்டு போலீஸுக்கு இணையான போலீஸ், ஸ்காட்லாந்து நாட்டு போலீஸுக்கு அடுத்த போலீஸ், என்றெல்லாம் நம்முடைய போலீஸைப் பற்றிக் கூறுவார்கள். ஆனால் இன்று அந்தப் போலீஸ் துறை, உள் துறை எவ்வளவு நத்தை வேகத்தில் நகர்ந்து செல்கின்றது என்பதற்கு உதாரணமாக கொள்கை விளக்கக் குறிப்புகள் காலை 7-00 மணிக்குத்தான் எங்களுக்குக் கிடைத்தன என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) எங்களுடைய பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முறையாக அனுப்பி வைக்கப்படுகிறது. நீங்கள் எங்கேயோ போய்விட்டு 7-00 மணிக்கு வந்தால், அதற்கு என்ன செய்வது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை. காலை 7-00 மணிக்குத்தான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்களைக் கேளுங்கள். எல்லோருக்கும் நேற்று இரவே கொடுத்தாகி விட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு எத்தனை மணிக்கு வந்தது என்று கேளுங்கள் நீங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்களைக் கேளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் எங்கேயோ போய் விட்டு என்று **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவரையே ** என்று சொல்லக் கூடாது. இங்கே 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். திரு. சுந்தரத்திற்கு மட்டும் காலையிலேதான் வந்தது என்று சொன்னால் என்ன நியாயம்? இங்கே இருக்கக்கூடிய தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள், அவர்களுக்கு எல்லாம் நேற்றே வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) எல்லோரும் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

*திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலேதான் எங்களுக்குக் கிடைத்தது. பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியைப் பொறுத்தவரையில் காலை 7-00 மணிக்குத்தான் கிடைத்தது. நான் அப்போதுகூட கேட்டேன். இவ்வளவு காலதாமதமாக வருகிறதே, இந்த மூன்று விஷயங்களை நாங்கள் படிக்கக்கூட முடியாது, இந்த விஷயத்தை ஸ்பீக்கரிடம் நாங்கள் தெரிவிப்போம் என்று தெரிவித்தோம். எங்களுக்குக் காலையிலேதான் பாலிசி நோட் வந்தது என்பது உண்மை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்று இரவே எல்லோருக்கும் வழங்கப்பட்டுவிட்டது என்று செயலாளர் குறிப்பிடுகிறார். சரி, நீங்கள் அடுத்த பாயின்டுக்கு வாருங்கள். உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிடப் போகிறது. அதனால் அடுத்த பாயின்டுக்கு வாருங்கள். நீங்கள் ** என்று சொன்னது நீக்கப்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு திட்டமிட்டு எதிர்க்கட்சிகள்மீது, எங்களுடைய புரட்சித் தலைவிமீது எப்படியாவது அவருடைய புகழைக் குறைக்க வேண்டும், எங்கள் கட்சிமீது அவதூறு சொல்ல வேண்டுமென்று பொய் வழக்கு போட்டதற்கு ஒரே ஒரு சாட்சியை மட்டும், ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் நான் இங்கே அவையில் விளக்கமாக பேச இருக்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே இருக்கின்ற பத்திரிகையாளர் எல்லாம் தயவு செய்து இங்கே நான் பேசுவதை கவனித்து இந்த அரசினுடைய தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கடந்த 2-4-2000 ஞாயிற்றுக் கிழமை அன்று தினத்தந்தியில் அன்றைக்கு ஒரு நிகழ்ச்சி நடந்ததைப் பொறுத்து, ஒரு சம்பவத்தை நான் சொல்கிறேன். அதன் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியில் கொடைக்கானல் பிளசன்ட் ஓட்டல் வழக்கில் தந்த தண்டனையை எதிர்த்துப் போராட்டம், கல்வீச்சில் இடது கண் இழந்த மாணவிக்கு தமிழக அரசு காவல் துறையில் வேலை போட்டுத் தந்ததாக, முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் செய்தி வெளியிட்டுள்ளார்கள். மற்றும் 3-4-2000 அன்று வெளிவந்த அதே தினத்தந்தியில் கொடைக்கானல் ஓட்டல் வழக்கில் புரட்சித் தலைவி அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறையில் சட்டக் கல்லூரி மாணவி சீதாபிரியா ஒரு கண்ணை இழந்தார். அவருக்கு தமிழக அரசு வேலை வழங்கியுள்ளது. இதற்காக முதலமைச்சர் அவர்களை நேற்று சீதாபிரியா குடும்பத்துடன் சந்தித்து நன்றி தெரிவித்தபோது எடுத்த படம் என்று ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். இது திட்டமிட்டு உங்களால் போட்ட பொய் வழக்கு. நான் இதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தீர்ப்பு வந்தது 2 ஆம் தேதி, பிப்ரவரி 2 ஆம் தேதி தீர்ப்பு வந்தது. அப்போது பலர் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டார்கள். 3 ஆம் தேதியும் கைது செய்யப்பட்டார்கள். எங்களை எல்லாம் இங்கே கைது செய்து வேலூர் சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள். இதைப் பொறுத்தவரையில் இந்த நிகழ்ச்சி சென்னையிலே நடந்திருக்கிறது. 5 ஆம் தேதி, 5-4-2000 அன்று சென்னையிலே நடந்திருக்கிறது. அதாவது அந்த மாணவி, மாணவியினுடைய தாய் அவர்கள் எல்லாம் வந்த பஸ்ஸில் கல்வீசி அந்தப் பெண் கண் இழந்துவிட்டார் என்று கூறி அந்தக் கேசை கல்வீச்சு சம்பவத்தை கோர்ட் சம்பவத்துடன் இணைத்து கூறியிருக்கிறார்கள். அங்கே அந்த நிகழ்ச்சியிலே அவர்கள் கொடுத்த புகாரின்பேரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றப்பத்திரிக்கையில் அவர்கள் சாட்சியமளித்ததை நான் படிக்கிறேன். நேரம் ஆனாலும்கூடப் பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முறைப்படி முதலில் பேரவைத் தலைவர் அவர்களிடத்திலோ அல்லது என்னிடத்திலோ காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இப்போது காட்டுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தவறு. இப்போது காட்டினால் அதை முதலமைச்சரிடம் எப்படிக் கொடுப்பது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** காட்டவில்லை என்றால் பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காட்டவில்லை என்றால் பரவாயில்லை என்று நீங்களே சொல்லிவிட்டால் எப்படி?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே அங்கே கொடுத்த வாக்குமூலம், '5-2-2000 தேதி அன்று சொந்த வேலையாக தாம்பரம் சென்று நானும் என் அப்பா, அம்மா, அக்கா ஆகியோர் அன்று மாலை தாம்பரத்திலிருந்து நுங்கம்பாக்கம் இரயில் நிலையத்தில் இறங்கி சூளைமேட்டில் 27 எண் பஸ் பிடித்து அண்ணா நகரில் உள்ள என் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தபோது சுமார் 7.55 மணி அளவில், அமைந்தகரை 3-வது அவின்யூ, உதவும் கரங்கள் அருகில் வந்துகொண்டிருந்தபோது ரோட்டில் இடது புறத்தில் ஒரு நபர் நின்று கொண்டு செங்கற்களை எடுத்து வேகமாக வீசிக்கொண்டிருந்தார். அவர் யார் மீது வீசுகிறார் என்பது தெரியவில்லை. அவர் வீசிய கல் ஒன்று பஸ் உள்ளே வந்து, அடுத்த கல் எனது இடது கண்ணிலே பட்டு என் கண்ணை இழந்தேன்' என்று அந்த மாணவி கொடுத்திருப்பது. அடுத்தது, அங்கே இருக்கிற சாட்சி கொடுத்திருக்கிறார். திரு. அமரன், அமைந்தகரை என்.எஸ்.கே. நகர், சென்னை-106. '5-2-2000 தேதி இரவு சுமார் 7.55 மணி அளவில் நான் என் கடையில் என் வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் என் கடைக்கு எதிரில் 3-வது அவின்யூ ரோடில் பாபு, தந்தை பெயர் அருணாச்சலம், திருவான்மியூர் என்பவரும் மற்றொரு நபரும் என் கடைக்கு அருகே ஒருவருக்கொருவர் திட்டிக்கொண்டு, அடித்துக்கொண்டார்கள். அதில் ஒரு நபர் பாபு என்பவரை பலமாக அடித்துவிட்டு ரோட்டிலே கிராஸ் செய்து ஓடினார்....'

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** குறிப்புப் புத்தகம் குறித்த விவாதத்திலேயே 3 நிமிடங்கள் போய்விட்டன.

அடுத்து, அந்த நபர் மீது ரோட்டில் இருந்த செங்கற்களை எடுத்து வீசினார் என்று அவர் சாட்சி சொல்லியிருக்கிறார்.

அடுத்து, திரு. இக்பால் என்பவர் சொல்லுகிறார். நான் 5-2-2000 ஆம் தேதி இரவு 7-55 மணிக்கு....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதன் மூலம் அவர் என்ன குற்றச்சாட்டைச் சொல்ல வருகிறார் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பஸ்ஸிலே கல் வீசிய காரணத்தால் ஒரு பெண்ணுக்குக் கண்ணிலே அடிபட்டு, ஒரு கண் பார்வை இழந்துவிட்டார் என்ற செய்தி வந்தது. அது தருமபுரி சம்பவத்தைத் தொடர்ந்து ஒரு நாளோ, இரண்டு நாளோ, அதற்குப் பிறகு வந்திருக்கலாம், அது வேறு விஷயம். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள எல்லா பத்திரிகைகளும் அவருக்கு அரசு எந்த உதவியையும் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டி, அரசின் மீது குறை கூறுகின்ற அளவுக்குப் பத்திரிகையிலே செய்தி வெளியிட்டார்கள். பிறகு அந்தப் பெண்ணை அழைத்து அரசு அவருக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கிறது. வேலை வாய்ப்பு வழங்கியதைக் குற்றம் என்று சொல்லுகிறாரா, என்ன சொல்லுகிறார், என்ன குற்றச்சாட்டை அரசின் மீது சுமத்துகிறார்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு, அந்தத் தீர்ப்பையொட்டி பஸ் மீது கல் எறிந்ததாக...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர் தொடங்கியபோது பொய் வழக்குத் தீர்ப்பு, பொய் வழக்குத் தீர்ப்பு என்றார். அவர் சொல்லுகின்ற அந்த அம்மையார், முன்னாள் முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தவறான தீர்ப்பு என்று சொல்லுகிறாரா? அது பொய் வழக்கிலே வழங்கப்பட்ட தீர்ப்பு என்று சொல்லுகிறாரா? வேறு எதைச் சொல்லுகிறார்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, அந்த நபரை நீங்கள் கைது செய்து— அங்கே நடந்த நிகழ்ச்சி என்னவென்றால் ஒருவருக்கொருவர் திட்டிக்கொண்டு, அவர்கள் தனிப்பட்ட முறையிலே சண்டை செய்து கொண்டார்கள். தனிப்பட்ட முறையிலே இரண்டு நபர்கள் சண்டை செய்ததற்குப் பிறகு, பாபு என்ற நபரை மற்றொருவர் அடித்துவிட்டுச் சென்றுவிட்டார். ஆகவே, பாபு அவரை அடிப்பதற்காக கல்லை எடுத்து வீசியிருக்கிறார். அந்தக் கல்தான் பஸ்ஸிலே பட்டிருக்கிறது. பஸ்ஸிலே பட்ட அந்தக் கல், பஸ்ஸிலே அமர்ந்திருந்த மாணவியின் மீது பட்டு அதில் அவர் கண்ணை இழந்திருக்கிறார். இதுதான் உண்மையான நிகழ்ச்சி.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, பஸ் தாக்கப்பட்ட காரணத்தினால் ஒரு மாணவி கண்ணை இழந்தார், பார்வை இழந்தார். அவருக்கு அரசு பரிவு காட்ட வேண்டுமென்று பத்திரிகைகள் சிபாரிசு செய்த போதே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், அதனால் ஒன்றும் கண்ணை இழக்கவில்லை, அவருக்கு ஒன்றும் பரிவு காட்டத் தேவையில்லை என்று அறிக்கைவிட்டிருந்தால் அதையும் அரசு பரிசீலித்து இருக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அந்த மாணவிக்கு உதவி செய்ததைப் பற்றி நாங்கள் வருத்தப்படவில்லை. ஆனால் அந்தச் சம்பவம் இந்தச் சம்பவத்தை ஒட்டி நடந்தது. 2 ஆம் தேதி நடந்த சம்பவம் குறித்து போலீசிலே இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்தச் சம்பவத்தை ஒட்டி நடந்தது என்று நான் சொல்லியிருக்கிறேனா? சட்டக் கல்லூரி மாணவர்கள் திரளாக வந்து, ஒரு பெரிய ஊர்வலமாக வந்து, என்னை சேம்பரிலே சந்தித்து, அந்த மாணவிக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டதன் காரணமாக உதவி செய்யப்பட்டது. இனிமேல் அத்தகைய பரிவு காட்ட வேண்டாமென்று சுந்தரம் சொன்னால், அதைப்பற்றி மனிதாபிமானம் உள்ளவர்களுடைய தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரச்சினையை திசை திருப்பக் கூடாது. நான் கூறுவது இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் (குறுக்கீடு) அவர் பிறகு பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் உண்மையான சம்பவம். கல்லடிப்பிலே கண்ணாடி உடைபட்டு கண் பாதிக்கப்பட்டது என்பது உண்மை. முதலமைச்சர் அவர்களை அவர்கள் சந்தித்தார்கள் என்பதும் உண்மை. அதைப்போல அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு, அந்தக் கல்லூரி மாணவர்கள் எங்களையும் அழைத்துக்கொண்டு வந்தார்கள். எங்கள் டாக்டர் ஐயா அவர்களும், நாங்களும் முதல்வர் அவர்களுக்கு சிபாரிசு செய்தோம். பல்வேறு அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் முதலமைச்சருக்குச்

சிபாரிசு செய்தது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி மனிதாபிமான அடிப்படையிலே, பிரதான உறுப்பாகிய கண்ணை இழந்த ஒரு நபருக்கு உதவி செய்ததை இங்கே விமர்சிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களுக்கு மனிதாபிமானம் இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பு நண்பர் ஜி.கே. மணி அவர்களுடைய மனிதாபிமானத்தை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். ஆனால் நாங்கள் அந்தப் பெண்ணுக்கு நீங்கள் உதவி செய்ததை தவறு என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. இரண்டாம் தேதி நடந்த சம்பவம். அதற்கு நீங்கள் 5 ஆம் தேதி நடந்த சம்பவத்தைச் சம்பந்தப்படுத்தி, அந்தச் சம்பவத்தால்தான் இந்தச் சம்பவம் நடந்தது என்று கூறியதைத்தான் நான் கூறுகின்றேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் கூறியதாக என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொய் வழக்குப் போடுவது, போலீசாரை நீங்கள் சம்பந்தப்படுத்துவது, உங்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் நேரடியாகக் கேட்டார்கள். முதலமைச்சர் கூறியதற்கு ஆதாரம் இருக்கிறதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் அப்படிக் கூறியதாக என்ன ஆதாரம் தாங்கள் வைத்திருக்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்தச் சம்பவத்திற்கும், அந்தச் சம்பவத்திற்கும் சம்பந்தமே இல்லை. சம்பந்தப்படுத்தி நீங்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிற காரணத்தினால்தான், நீங்கள்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அப்படிக் கூறியதாகச் சொன்னால், நான் அப்படிக் கூறியதாக சுந்தரம் அவர்கள் என்ன ஆதாரம் வைத்திருக்கிறார்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களுடைய செய்திக் குறிப்பிலே அப்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ஒவ்வொன்றிற்கும் ஆதாரம், ஆதாரம்



என்று சொன்னால், ஆதாரத்தை நீங்கள் வேண்டுமானால் தேடிக்கொண்டு செல்லுங்கள். என்ன ஆதாரத்தை நீங்கள் பண்ணிக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதெல்லாம் முறையில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒவ்வொன்றிற்கும் ஆதாரம் கொடுக்க முடியாது என்று சொன்னால், நானே சுந்தரம் மீது ஒரு அபாண்டமான பழியைச் சுமத்திவிட்டு, ஆதாரம் கேட்டால், ஒவ்வொன்றிற்கும் ஆதாரம் தரமுடியாது என்று சொல்லிவிடலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதோடு உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் இத்துடன் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலீசாருடைய கைகளெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன என்று நாங்கள் கூறியபொழுது, அது உங்களுடைய ஆட்சியில்தான் கட்டப்பட்டிருந்தன என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். நான் ஒவ்வொன்றையும் விளக்கமாக இந்த ஆட்சியில் எப்படி போலீசாருடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதற்கு, ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே ஆயத்தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பை நல்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், துணை சபாநாயகர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எனக்கு முன்னால் பேசியவர் காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்

காவல் துறையினுடைய கைகள் கட்டப்படவில்லை. முந்தைய முதல்வர், தன்னுடைய தோட்டத்திலிருந்து இந்தக் கோட்டையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள் என்றால், வழியிலே இருக்கின்ற gate - களெல்லாம் பூட்டப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டுதான் அந்தக் காலத்து காவல் துறை, அங்கே நின்று கொண்டு இருந்தது என்பதைத் தெரியப்படுத்துகிறேன். தமிழகத்திலே முந்தைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் இந்த நாட்டிற்குள் எங்கெல்லாம் செல்கிறாரோ, அங்கெல்லாம் கட் அவுட்கள் வைக்கப்படுகின்றனவா, அந்தக் கட் அவுட்களெல்லாம் ஒழுங்காகப் பாதுகாக்கப்படுகின்றனவா, நிற்கின்றனவா என்று பார்ப்பதற்குக் காவல் துறை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த காலம், இப்போது இல்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. காவல் துறை சுதந்திரமாகச் செயல்படுகிற காரணத்தினால்தான், இன்று தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்திலே சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. சாதிக் கலவரம் தென் மாவட்டங்களிலே ஏற்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளிலே அது வெகுவாகக் குறைந்திருக்கிறது. அந்தச் சாதிக் கலவரங்கள்கூட தொடங்கப்பட்ட இரண்டு நாட்களில், அல்லது ஓரிரு நாட்களில் தமிழகத்தினுடைய காவல் துறையால் அடக்கப்பட்டு, அங்கே அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இதே தென்மாவட்டங்களிலே 1957 ஆம் ஆண்டு, சாதிக் கலவரம் முதுகுளத்தூரிலே ஏற்பட்டது. அந்தச் சாதிக் கலவரத்தை அடக்குவதற்கு ஏறத்தாழ 45 நாட்கள், அப்போதிருந்த தமிழகத்தினுடைய காவல் துறைக்குத் தேவைப்பட்டது. அதிலும்கூட, அந்தப் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு, இரண்டு சாதித் தரப்பிலும் மூன்று பேரை நிற்க வைத்து, இரண்டு தரப்பிலும், காவல் துறை சுட்டு, அமைதியைக் கொண்டு வந்தார்கள். எனவே, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். “நோய் நாடி நோய்முதல் நாடி” என்று சொல்வார்கள். அதற்கேற்பதான், இந்தச் சாதிக் கலீவரம் ஏன் ஏற்படுகிறது என்பதை ஆராய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு கமிஷனை அமைத்து, அங்கே இருக்கிற பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு சூழ்நிலையை



உருவாக்குவதற்கு அவர்கள் கொடுத்த பரிந்துரைகளை இப்போது அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, நீதிபதி மோகன் அவர்கள் தலைமையில் சாதிக் கலவரம் ஏன் ஏற்படுகிறது, அதை எப்படி ஒடுக்கலாம் என்பதை அறிவதற்காக ஒரு கமிஷன் அமைத்தார்கள். அந்தக் கமிஷன் கொடுத்த அனைத்துப் பரிந்துரைகளும் இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இங்கே, தமிழகத்திலே அமல்படுத்தப்பட்டு, சாதிக் கலவரங்கள் பெருமளவு ஒடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரியப்படுத்த விரும்புகிறேன். சாதிக் கலவரங்களை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை மூன்று முறை இந்தத் தமிழகத்திலே கூட்டினார்கள். மே, 1997, ஜூன் 1997, அக்டோபர் 1998 ஆகிய தேதிகளில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் அழைத்து “தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டும்; உங்கள் ஆலோசனைகள் என்ன; அந்த ஆலோசனைகளை ஏற்று இந்த அரசு செயல்படத் தயாராக இருக்கிறது” என்று அரிய ஆலோசனைகளைப் பெற்று, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரியப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதிப் பூசல்கள் இல்லாத காரணத்தால்தான் இப்பொழுது தேவர் குருபூசை உள்ளிட்ட, பொதுத் தேர்தல் உள்ளிட்ட அனைத்தும் அமைதியாக நடந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

அதேபோன்று, குற்றங்கள் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே வெகுவாகக் குறைக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த கொள்ளை, கொலை, ஆதாயக் கொலை என பல வழக்குகள், அதிலே 1999-லே, 23,680 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளினுடைய எண்ணிக்கை 17,946. ஏறத்தாழ 75 சதவிகித வழக்குகள் தமிழகத்தினுடைய காவல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, குற்றங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழகத்திலே, கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களினுடைய மதிப்பு 1999-லே 36 கோடி ரூபாயாகும். அதிலே கண்டுபிடிக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு 24 கோடி ரூபாயாகும்.

எனவே, கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களிலே ஏறத்தாழ 67 சதவிகிதம் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு, திருட்டுக் கொடுத்த மக்களிடம், தமிழகத்தினுடைய காவல்துறை ஒப்படைத்து, தமிழகத்தினுடைய காவல் துறை பாரம்பரியத்தை நிலைநாட்டி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, குற்றவாளிகளைத் தண்டிப்பதிலே தமிழகத்தினுடைய காவல் துறை மிகச் சிறப்பாக விளங்கி வருகிறது. இதுசம்பந்தமாக புதுதில்லியிலே இருக்கின்ற தேசிய குற்ற ஆவணக் காப்பகம் என்கிற ஒரு நிறுவனம், இந்தியாவின் குற்ற நிகழ்வுகள் எப்படி இருக்கின்றன என்பதை ஓர் ஆய்வு செய்திருக்கிறது. ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறது. அதிலே, 1997-1998 ஆம் ஆண்டுகளில் இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் தமிழகத்திலே பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (மணியடிக்கப்பெற்றது) charge sheet போடப்பட்ட வழக்குகளிலே, தண்டனை வாங்கிக் கொடுத்ததினுடைய சதவிகிதம் 64 ஆனால், இதிலே, தேசிய சதவிகிதம் 34 தான். எனவே தமிழகத்தினுடைய காவல் துறை, குற்றவாளிகளைத் தண்டிப்பதிலே முன்னிலையிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலே, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதில், தமிழகத்தினுடைய காவல் துறை, முன்னோடியாக விளங்கி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1997-லே பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலே, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. பதிவு செய்யப்பட்ட வழக்குகளில், ஏறத்தாழ 99 சதவிகிதம் charge sheet போடப்பட்டிருக்கிறது. அந்த நிலையும் தமிழகக் காவல் துறைக்குத்தான் இருக்கிறது. அதிக தண்டனை என்று சொல்கிறபோது, கள்ளக்குறிச்சியிலே நீதிமன்றத்தில், ஏறத்தாழ 120 ஆண்டுகள் ஒரு குற்றத்திற்காக ஒருவருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, ஒரு சாமியார் -- போலி சாமியாருக்கு 30 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) போலி சாமியார்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களையும் கட்டுப்படுத்துகின்ற நிலையை உருவாக்கி, தமிழக அரசு அவர்களையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரியப்படுத்த விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி சார்பாக 2 கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். அதிலே, விருத்தாசலத்திலே... (குறுக்கீடு)



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் பேசுகிறபோது, ஒரு சாமியாருக்கு 30 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். 30 ஆண்டுகள் என்று ஒரே court-லே வரக்கூடிய வாய்ப்பு இல்லை. அவரும் ஒரு வழக்கறிஞர். எந்த அடிப்படையிலே சொன்னார் என்று தெரியவில்லை. ஆகவே, விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரேமானந்தா சாமியார். (குறுக்கீடுகள்) இப்போது பல வழக்குகள் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பிரேமானந்தா என்ற சாமியார் எனப்படுபவருக்கு (சிரிப்பு) வழங்கப்பட்டது. அது concurrent என்ற அளவிலே வழங்கப்பட்டது. அதுதான் தமிழகத்திலே தரப்பட்ட மிகப் பெரிய தண்டனை. அந்தத் தண்டனை அவருக்குத் தரப்பட்டது; அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதுதான் உண்மை.

எனவே, பல counts சேர்ந்து, பல தண்டனைகள் சேர்ந்து, 30 ஆண்டுகளுக்கு மேலாக அவருக்குத் தண்டனை வழங்கியிருக்கிறார்கள் என்பது உண்மை. அது நீதிமன்றத்திலே, தீர்ப்பிலே இருக்கிறது.

அடுத்து, விருத்தாசலத்திலே மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். விருத்தாசலம் தாலுகாவில் காவல் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்தில் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே 2 வழக்குகள் திடீரென்று ஏற்பட்ட ஒரு துப்பாக்கிச் சூட்டில் போடப்பட்டிருக்கின்றன. அவற்றை withdraw செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் நிறைவாக சொல்ல விரும்புவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் பாராட்டத் தேவையில்லை. ஏனென்றால் தமிழகம் அமைதியாக இருக்கிறது. தமிழக மக்கள் அமைதியாக இருக்கிற காரணத்தினால், நல்லிதயம் கொண்டவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள்.

அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இன்று காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. நல்லாட்சி நடத்தும் கலைஞர் அவர்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமென்று அவர் குறிப்பிடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னவர் யார் என்றால், 67 ஆண்டு காலம் கணவனும் மனைவியுமாக தம்பதியராக குடும்பம் நடத்திய ஒருவர், தன்னுடைய ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்ற அந்த நேரத்திலே சொல்லியிருக்கிறார். தமிழகத்திலே நல்லாட்சி நடக்கிறது. அமைதிப் பூங்காவாக இருக்கிறது. அவருடைய பெயர் ஏ.எம். லூயிஸ், வயது 88. அவருடைய மனைவியின் பெயர் ரோஸரி மேரி, வயது 82. அவர்கள் குடியிருக்கிற இடம், எண்ணூரில் இருக்கின்ற காமராஜர் நகர். காமராஜர் நகரிலே இருக்கின்றவரே, கலைஞரை இன்னும் நீண்ட காலம் இந்தத் தமிழகத்தை ஆள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட வேறு பாராட்டு வேண்டாம்.

தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், தமிழகத்தினுடைய காவல் துறை மிகச் சிறப்பாக, தமிழகத்தினுடைய இதயமாக இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் சிறப்பாக விளங்கி வருகிறது என்பதைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001-ஆம் ஆண்டிற்கான மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை, தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை ஆகிய துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, தமிழகக் காவல்துறை என்பது, தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பேணி, மக்கள் எங்கும் அமைதியாக வாழவேண்டும், தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ வேண்டும் என்பதற்குண்டான ஆக்கபூர்வமான பணிகள், அதேநேரத்திலே சமய சமுதாயத்தை நல்லிணக்கத்தோடு உருவாக்கக்கூடிய மகத்தான பணிகளையெல்லாம் நம்முடைய தமிழகக் காவல் துறை சிறப்பான முறையில் செயலாற்றி வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உலக நாடுகளாலே பாராட்டப் பெற்ற காவல் துறை என்பது Scotland Yard Police. அதற்கு இணையான



காவல் துறை, தமிழகக் காவல் துறை என்று சொல்லி, இன்று தொடர்ந்து பாராட்டினைப் பெற்று வரக்கூடிய நம்முடைய தமிழகக் காவல் துறையை, மென்மேலும் அந்தப் பெயரைப் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றக் கூடிய நிலையிலே, மேலும் அந்தக் காவல் துறைக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை நான் மனதார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நண்பர் திரு. செல்லக்குமார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, இன்று ஈழத் தமிழகத்திலே போராளிகள் எப்படியெல்லாம் போராடி வருகிறார்கள் என்ற நிலையை உணர்ந்த பிறகும்கூட, அந்தப் போராளிகளைக் கொச்சைப்படுத்தக் கூடிய வகையிலே அந்தப் போராளிகள் தமிழகத்திலே ஊடுருவியிருப்பதாகவும், இங்கே பல்வேறு குற்றங்கள் எல்லாம் நிகழ்வதாகவும் சுட்டிக் காட்டினார்கள். இதை நிச்சயமாக நான் வன்மையாகக் கண்டிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்ன என்று சொன்னால், இன்று தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே மாத்திரமல்ல, உலக நாடுகளிலே வாழக்கூடிய தமிழர்களெல்லாம், தமிழ் உணர்வோடு, இந்தியா எப்படி சுதந்திரம் பெற்றதோ, அதைப்போல அங்கே தமிழ் இனம் வளர வேண்டுமென்ற ஆர்வத்தோடு, உணர்வோடு வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இப்படித் தமிழ் உணர்வோடு, வரவேற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே அவர்களைக் கொச்சைப்படுத்தக் கூடிய வகையிலே அந்தப் போராளிகளினுடைய போராட்டத்தைத் திசை திருப்பச் சொல்கிறார்களா என்ற உணர்வை இங்கே நான் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்... கண்டிக்கிறேன் என்கிறார், நான் பேசி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசுகின்றபோது, மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை, ஒரு தடை செய்யப்பட்ட இயக்கம். இவர்கள் அங்கம் வகித்து கொண்டிருக்கின்ற மத்திய அரசேகூட, விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. அது தடைசெய்யப்பட்டு இருக்கின்ற இயக்கம். என்னுடைய கருத்தை மிக ஆழமாகச் சொல்கிறேன், மிக அழுத்தமாகச் சொல்கிறேன். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது இந்த மன்றத்திலே



சென்னை-600 001

ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அதற்காகத் தமிழர்களுக்கு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி ஒரு போதும் விரோதிகளாக இருந்ததில்லை. எங்களைப் பொறுத்தவரை தீவிரவாத இயக்கத்தை எதிர்க்கிறோம், விடுதலைப் புலிகளைத்தான் எதிர்க்கிறோம். இங்கே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக, தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக ஒரு அரசியல் கட்சி குரல் கொடுக்க முடியும் என்று சொன்னால், தீவிரவாதத்திற்குத் துணை போகிறது என்பதுதான் அர்த்தம். அதைத்தான் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசுகின்ற நேரத்தை நீங்கள் எல்லோரும் எடுத்துக்கொள்கிறீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கூறுகிறபோது, தனி ஈழத்திற்குப் போராடக் கூடிய விடுதலைப் போராளிகளைத் தான் ஆதரிப்பதாகவும், அதில் உறுதியாக தங்களது கொள்கைகளிலே இருபபதாகவும் அவரும் சொல்கிறார், அவருடைய கட்சியினுடைய தலைவர் பாட்டாளி மக்களுடைய நிறுவனரும் சொல்கிறார். ஆனால், இவர்கள் அங்கம் வகிக்கக்கூடிய மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியின் பாரதப் பிரதமர் அவர்கள், தனி ஈழத்திற்கு இடமில்லை என்று சொல்கிறார், அதை அனுமதிக்க முடியாது என்கிறார். அப்படி உண்மையாக தமிழ் ஈழத்திற்குப் போராடக் கூடிய கட்சியாக, பாட்டாளி மக்கள் கட்சி இருந்தால், அந்தக் கூட்டணியிலிருந்து விலகுவதற்குத் தயாராக இருக்கிறார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியினுடைய கொள்கையை நாங்கள் என்றும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை. அதை உறுதிபடச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இங்கே நம்முடைய செல்லக்குமார் அவர்கள் சொன்னது, தடை செய்யப்பட்ட இயக்கத்திலே இருப்பவர்கள் தமிழ்நாட்டிலே ஊடுருவிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பல்வேறு அசம்பாவிதங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். அப்படி ஒரு சம்பவமும் நடக்கவில்லை. தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்துகொண்டிருக்கிறது. காவல் துறை சரியாகப்



பணியாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, இந்தப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகிறாரா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அதைப் போலவே, கடந்த .... (குறுக்கீடு)

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வதால் நான் சிறு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அவருக்கு 10 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்தான் சொல்லிவிட்டாரே, ஞானசேகரன்தான் பேசுகிறாரே...

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இல்லை, அவர் என்னைப் பற்றிச் சொல்கிறார்.

முற்பகல் 11-55

**திரு. ஜி.கே. மணி:** துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி ....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரு நிமிடம், என்னுடைய கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுக்கொள்ளுங்கள். பிறகு நீங்கள் பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் மீது, பல்வேறு வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டன. அந்த வழக்குகள் உண்மைக்கு மாறானவை. நம்முடைய, முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நேரத்திலே, அந்த அவதூறான வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறுவோம் பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது இருக்கக்கூடிய வழக்குகளை எல்லாம் ....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அவர் இப்போது பேசும் சப்ஜெக்ட் வேறு. என்னுடைய பெயரைச் சொல்லிச் சொன்னார், அதற்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன் ....

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம், ஒரு நிமிடம், பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறுவதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நாங்களும் நன்றி சொல்லிக்கொண்டிருக்கின்றோம். ஒருசில வழக்குகளை மட்டும் வாபஸ் பெற்றுவிட்டு, இன்னும் பல்வேறு வழக்குகள் நிலுவையிலே இருந்துகொண்டிருக்கின்றன. பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் சமூக நீதிப் போராட்டத்திலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்கள். அந்த உயர்ந்த நோக்கத்திற்காக போராடியவர்கள்மீது இருக்கக்கூடிய வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறுவதற்கு மேலும் ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தமிழ்நாட்டிலே பூரண மதுவிலக்கு என்பது, அரசியல் கட்சிகள் எல்லாம் ஏற்றுக்கொண்ட ஒரு நிலைமை. இருந்தாலும்கூட, இன்றைய நிலையிலே, கள்ளச்சாராயம் இப்போது அதிக அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. அப்படியும் முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். காவல் துறை அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டாலும்கூட, அது தொடர்ந்து இருக்கின்ற காரணத்தாலேதான், ஒரு வழியாக அதை ஒழிப்பதற்கு, அந்தக் கிராமத்திலே பணியாற்றக்கூடிய கிராம நிருவாக அதிகாரி, அந்த வட்டராத்திற்குட்பட்ட காவல் துறை உதவி ஆய்வாளர், அந்த ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோரை எல்லாம் உள்ளடக்கி, ஒரு குழு அமைத்து, அங்கே கள்ளச்சாராயம் இருக்கக்கூடாது, அப்புறப்படுத்த வேண்டும், இதற்கு இந்தக் குழுவினர் பொறுப்பு ஏற்க வேண்டுமென்ற ஒரு நிலையை அறிவிப்போம் என்று சொன்னால், நிச்சயமாக, வி.ஏ.ஓ./எஸ்.ஐ./ஊராட்சி மன்ற பிரசிடெண்ட்கள் எல்லாம், நிச்சயமாக அதை ஒழிக்க முற்படுவார்கள் என்ற நிலையை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, மதுவிலக்கு. மது குடிப்பதனாலே, இந்த நாட்டிலே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிக அளவிலே பாதிக்கப்படுகின்றார்கள். ஆகையினாலே, அந்த வகையிலே, பூரண மது விலக்கை நிச்சயமாக நாம் அமலாக்க வேண்டும். அப்படி, இன்றைய காலத்திற்கு ஏற்ப அது முடியவில்லை என்று சொன்னால்,



அண்டை மாநிலங்களுடைய நெருக்கடிகள் எல்லாம் இருப்பதாகச் சொல்வோம் என்று சொன்னால், இப்பொழுது மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தி, கள்ளுக்கடை, சாராயக் கடையைக்கூட இங்கே திறந்துவிடலாம் என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் சொல்வதனாலே, பூரண மதுவிலக்குக் கொள்கையிலேயிருந்து பின்வாங்கி விட்டதான, நிலையில்லை. இருந்தாலும் காலத்திற்கு ஏற்ப, அதையும்கூடச் செய்யலாம் என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய காவல் துறையிலே அதிகாரிகள் எல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இன்று மத்திய அரசிலே பணியாற்றக்கூடிய ஒரு செவிலியருடைய ஊதியம் 12000 ரூபாய். அவர்களுக்கு வாரத்திலே இரண்டு நாட்கள் விடுமுறை இருக்கிறது. காவல் துறையிலே 24 மணிநேரமும் பணியாற்றக்கூடியவர்கள். இவர்களுக்கு ஊதியம் குறைவாக இருக்கிறது. விடுமுறை நாட்களும் இல்லை. ஆகவே, குறைந்தது 10000 ரூபாயாவது இவர்களுக்கு ஊதிய விகிதம் இருக்க வேண்டும். அதைப்போலவே 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வு வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே, முதல் நிலை பெண் காவலர்களாக சிலர் 1981-லே பணியமர்த்தப்பட்டார்கள். அவர்களில் பட்டதாரிகள் இருக்கிறார்கள். சிறந்த விளையாட்டு வீராங்கனைகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு, உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வேண்டுமென்று சொல்லி கடந்த ஆண்டு இந்த மாமன்றத்திலே பேசிய நேரத்திலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆனால், கடந்த ஆண்டு தேர்வின் மூலமாகத் தேர்வு செய்யப்படுவதாகச் சொல்லி, அந்தத் தேர்விலே 40 வயது, 42 வயது கடந்த பெண்கள் என்ற காரணத்தாலே அவர்களுக்கு எல்லாம் குழந்தைபெறும் பாக்கியம் இருக்கின்ற காரணத்தாலே, அந்த விளையாட்டுப் போட்டி, அல்லது ஓட்டம், உயரம் தாண்டுதல் போன்ற அந்தப் போட்டிகளிலே வெற்றி பெற முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய பணிக் காலத்தைக் கருத்திலே கொண்டு (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு 20 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்குவதாகச் சொல்கிறீர்கள், அதையாவது கருத்திலே கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, 1986-லே முதல் நிலை பெண் காவலராகப் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு இதுவரையிலே பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அதையும், கருத்திலே கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இப்போது காவலர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் ரூ.50 வழங்கப்படுகிறது. இது குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, அதை 100 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று சொல்லி இங்கே அன்போடு கேட்டுககொள்கிறேன்.

அதைப்போலவே, 20 ஆண்டு காலம் ஏட்டாகப் பணியாற்றினாலும்கூட அவர்களுக்கு எஸ்.ஐ.ஆகப் பதவி உயர்வு வரவில்லை. அதையும் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12.00

தீயணைப்புத் துறையிலே பணியாற்றுகிறவர்களுடைய ஊதியம் மிகக் குறைவு. அவர்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே அது மிகவும் பின்தங்கிய தொகுதி. அது கர்நாடகாவினுடைய எல்லையோரப் பகுதி. அந்தப் பகுதியிலே வாழக்கூடிய, அங்கே இருக்கக் கூடிய காவலர்களுக்கு, அதுவும் குறிப்பாக ஒகேனக்கல், இண்டூர், ஏரியூர் ஆகிய காவல் நிலையங்களிலே பணியாற்றக் கூடிய அந்தக் காவலர்களுக்கு காவலர் குடியிருப்பு கட்டித் தரவேண்டும் என்றும், அதைப்போலவே இண்டூர், பெரும்பாளை காவல் நிலையங்களுக்கு காவல் நிலைய அலுவலகக் கட்டடம் கட்டித்தர வேண்டும் என்றும், அதே நேரத்தில் ஒகேனக்கல், பாப்பாரப்பட்டி, ஏரியூர், இண்டூர் ஆகிய காவல் நிலையங்களுக்கு ஈப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வற்புறுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் இப்படிக் கேட்டால் எப்படி? திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்தமட்டில் தமிழ் ஈழ மக்களுக்கு அவரைத் தவிர வேறு யாராவது ஆதரவு தெரிவித்தோ, கடந்த பல நூற்றாண்டுகளாக (குறுக்கீடு) பல ஆண்டுகளாக அங்கே நடந்து கொண்டிருக்கிற அந்த ஈழ விடுதலைப்



போராட்டத்திலே, இதுவரையில் முதலமைச்சரைத் தவிர வேறு யாரும் உன்னதமான கருத்துகளைச் சொன்னதாகவோ எனக்குத் தெரியவில்லை. தற்போதும்கூட, இலங்கை அரசினுடைய 40,000 இலங்கை இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து விட்டனர், ஆதரவு வேண்டும் என்று அவர்கள் கேட்டபோதுகூட மாண்புமிகு முதலமைச்சரை அழைத்து, பாரதப் பிரதமர் அவர்கள் ஆலோசனை கேட்டபோது, ஒரு அற்புதமான யோசனையை, தமிழகத்திலே இருக்கிற அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவரைப் பார்த்துக் கேட்கின்றேன். அந்தக் கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளுக்கு அவர் அறிவித்திருக்கிற அந்தக் கொள்கைகளுக்கு இசைவு அளிக்கப் போகிறார்களா அல்லது மறுக்கப் போகிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஏன் என்றால், விடுதலைப் புலி விஷயத்தில் அவர்கள் ஒரு குழப்பமான நிலையை எடுத்துப் பேசிக் கொண்டிருக்கிற காரணத்தினால், அந்தக் கட்சியினுடைய தலைவர் என்கிற முறையில், பொறுப்பான முறையிலே அவர் பதில் அளிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன். அவர் பதில் அளிப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவிலே தடை செய்யப்பட்ட ஒரு இயக்கம். ஒரு தடை செய்யப்பட்ட இயக்கத்தைப் பற்றி வெளியிலே பேசுவதே தவறு. ஒரு தடை செய்யப்பட்ட இயக்கத்தைப் பற்றி வெளியிலே பேசுவதே தவறு என்று சொல்கின்றபோது, இந்த மாமன்றத்திலே அந்த இயக்கத்தை ஆதரித்துப் பேசுகிறார்கள். அதை முதலமைச்சர் அவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது எந்த விதத்திலே நியாயமாக இருக்கும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள்தானே ஆரம்பித்து வைத்தீர்கள்! (குறுக்கீடுகள்) திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தியாவிலேகூட, இன்றைக்கு காஷ்மீரிலே தீவிரவாத இயக்கங்கள் தடை செய்யப்பட்டிருந்தாலும் கூட ஒரு அமைதியான சூழ்நிலை உருவாவதற்காக அவர்களோடு கூட பேச்சு

வார்த்தை நடத்துவதற்குத் தயார் என்று உள் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினையிலே தமிழ் ஈழப் பிரச்சினையிலே, அது டாக்டர் ராமதாஸ் அவர்களாக இருந்தாலும் சரி, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாக இருந்தாலும் சரி, எந்தவொரு போராளிக் குழுவும் தமிழகத்திலே வந்து சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்பதிலே உறுதியாக இருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது, இங்கே தடை செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிற விடுதலைப் புலிகள் இயக்கத்தை இவர்கள் ஆதரிக்கிறார்களா என்று கேட்பது ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை நிலைப்பாடு இருக்கிறது. எனவே, அந்த வகையிலே விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதற்கு, பாட்டாளி மக்கள் கட்சிக்கும் அந்த உரிமை இருக்கிறது. அதேபோல, நான் இன்னொரு கேள்வியை இங்கு கேட்க விரும்புகிறேன். இன்றைக்குச் சொல்கிற மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களைக் கேட்கிறேன். ம.தி.மு.க.வோடு மார்க்சிஸ்டுகள் ஒரு காலத்திலே உறவு கொண்டிருந்தார்கள். அன்றைக்கு தமிழ் ஈழப் பிரச்சினையை ம.தி.மு.க. கைவிட்டு விட்டதா? அந்தத் தமிழ் ஈழப் பிரச்சினையிலே அன்றைக்கு உறுதியாக இருந்தவர்களோடு அவர்கள் கூட்டணி வைத்திருந்ததைபோலத்தான் இன்றைக்கு தமிழ் ஈழப் பிரச்சினையிலே உறுதியாக இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி, அவர்களுடைய கருத்திலே உறுதியாக இருக்கிறார்கள் என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தேர்தலிலே கூட்டு வைத்தபோது, விடுதலைப் புலிகள் இயக்கம் சமபந்தமாக எந்த ஒரு பிரகாரங்களோ, அறிக்கைகளோ, தேர்தல் அறிக்கைகளோ வெளியிடக் கூடாது என்ற ஒப்பந்த அடிப்படையிலேதான் மார்க்சிஸ்டு கட்சி கூட்டு வைத்தது. நாங்கள்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உடன்பாடு வைத்தபோதுகூட அந்தப் பிரச்சினையை ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் உடன்பாடு வைத்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**THIRU M. ABDUL LATHEEF:** Mr. Deputy Speaker, the matter has got. . . . . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப், உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது பேசுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்திலே விவாதமா அல்லது விடுதலைப் புலிகள் மானியத்திலே விவாதமா என்று தெரியாத அளவிற்கு எல்லோரும் அதைப்பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் பேசும்போது சொன்ன அந்த வார்த்தைகளுக்கு உடனடியாக நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் எழுந்து பதில் சொல்ல ஆரம்பித்தார்கள்.

அவர் பேசி முடித்த பிறகு கூறலாம் என்றதும், பிறகு ஜி.கே. மணி அவருடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார். அப்போது செல்லக்குமாருடைய பெயரை அவர் சொல்லிவிட்ட காரணத்தால் மீண்டும் செல்லக்குமார் எழுந்து, அதற்கு விளக்கம் அளித்தார். அதோடு பிரச்சினை முடிந்துவிட்டது. இப்படி ஒவ்வொருவரும் பேசிக்கொண்டேயிருந்தால் 1-30 மணிக்கு விவாதம் முடியாது. இது காவல் துறை விவாதமாக இருக்காது, விடுதலைப் புலிகளின் விவாதமாக இருக்கும்.

பிற்பகல் 12-05

இதில் தமிழக அரசின் நிலை என்ன என்று பழனிசாமி கேட்டார். தமிழக அரசின் நிலை மிகத் தெளிவானது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தமிழ் ஈழம் பெற்றால், இன்றல்ல, என்றைக்கும் நான் சொல்லி வருவது, அவர்களுடைய போரட்டத்திலே இலங்கை அரசை எதிர்த்து அவர்கள் தமிழ் ஈழம் பெறுவார்களேயானால், அது போராட்டத்தின் மூலமோ அல்லது பேச்சுவார்த்தையின் மூலமோ, தமிழ் ஈழம் பெறுவார்களேயானால் மகிழ்ச்சியடைவோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆனால், தமிழ் ஈழத்தைப் பெறுவதற்காக தமிழகத்திலேயிருந்து வன்முறைச் செயல்களில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைகளோ, அதற்கான பிரச்சாரத்தைச் செய்வதற்கோ, திராவிட முன்னேற்றக் கழக அரசு நிச்சயமாக அனுமதி தராது என்பதுதான் எங்களுடைய நிலை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, இப்போது நடைபெறுகின்ற இந்தப் பிரச்சினையிலேகூட பிரதமர் வாஜ்பாயி அவர்கள் என்னை அழைத்துப் பேசுவதற்கு முன்பும்கூட, இதே சட்டமன்றத்தில் நம்முடைய ஞானசேகரன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதைத்

தொடர்ந்து பல கட்சித் தலைவர்களும் இங்கே பேசியிருக்கிறீர்கள். எல்லோருடைய கருத்துமே-அன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சி தன்னுடைய கருத்தைத் தரவில்லை. காரணம், அந்தக் குறிப்பு தரவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுவதற்காக பெயரைத் தரவில்லை. மற்ற கட்சிகள் எல்லாமே இந்திய இராணுவத்தை இந்த நேரத்திலே அனுப்பக் கூடாது என்ற கருத்தைத்தான் சொன்னார்கள். இப்போதும்கூட சொல்கிறார், கே. சுப்பராயன் அவர்கள், அதே கருத்தைத்தான் உடன்பாடான கருத்து என்று, தமிழ் மாநில காங்கிரஸ் உட்பட காங்கிரஸ் கட்சியும் இப்படித்தான் கருதும் என்று கருதுகின்றேன். எல்லா கட்சிகளுமே இந்த நேரத்திலே இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பக் கூடாது; முன்பு செய்த தவறை இப்பொழுதும் செய்யக் கூடாது என்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் தங்களுடைய எண்ணங்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதைத்தான் நான் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதும் வலியுறுத்தி வந்திருக்கின்றேன்.

அதற்கு மேல் அவர்கள அங்கே மனிதாபிமான ரீதியில் சில உதவிகளைச் செய்ய வேண்டியிருந்தால், அதை மத்திய அரசு தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும், அதைப்பற்றி கலந்து ஆலோசிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். பிறகு பிரதமரும் எல்லா எதிர்க் கட்சிகளையும் அழைத்துப் பேசி, தோழமைக் கட்சிகளையும் அழைத்துப் பேசி, ஒரு மகாநாடு-வட்டமேஜை மகாநாடு போல எல்லா கட்சிகளைச் சார்ந்தவர்களுடைய கருத்துகளை எல்லாம் கேட்டு, எல்லா கட்சிகளும் சொன்ன கருத்தின் அடிப்படையிலே ஒரு முடிவை எடுத்திருக்கிறார். இங்கே விடுதலைப் புலிகளின் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதிலும் மறு பேச்சுக்கு இடமில்லை. தடை செய்யப்பட்ட இயக்கத்தினுடைய நடவடிக்கைகள் இங்கே நடைபெறுவதற்கு இந்த அரசு இடம் தராது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை, ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இதைச்



சொன்னார்கள். பட்ஜெட் கூட்டத் தொடரிலே சொன்னார்கள். காவல் துறையின் ஈரல் கெட்டுவிட்டது. அதைச் சரி செய்வதுதான் எங்களது முதல் கடமை என்று சொன்னார்கள். அந்த வகையிலே இன்றைக்கு தமிழகத்தின் காவல்துறை சீரமைக்கப்பட்டு, சீர்திருத்தப்பட்டு, நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் ஈரல் முழுவதுமாகக் கெட்டு இருந்தது ஓரளவிற்கு சரி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 70 சதவீதம் அளவிற்குச் சரி செய்யப்பட்டிருந்தாலும், 30 சதவீதம் இன்னும் கெட்டுத்தான் இருக்கிறது என்ற உண்மையை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்று சொன்னால், மதுரையிலே ஒரு பள்ளிவாசலைச் சேர்ந்த காவலாளி, மோதிலால் என்று சொல்லக் கூடிய பள்ளிவாசல் காவலாளி ஒருவர் கொல்லப்பட்டார். ஆனால், இதுவரையில் அந்த வழக்கின்மீது உரிய நடவடிக்கைகள், முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. அதற்காக அன்றைக்கு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அங்கேயிருந்த காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அவர்களைப் பார்த்து * * உங்களுக்கு இன்னும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டாம்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** அவர் சொன்ன வார்த்தைகளைத்தான் இங்கே பயன்படுத்தினேனே ஒழிய, அது என்னுடையது அல்ல. "உங்களுக்கு இன்னும் புத்திவரவில்லையா? அதேபோன்ற நிலைமை ஏற்பட்டால் கோயம்புத்தூரில் ஏற்பட்ட நிலை இங்கும் ஏற்படும்" என்று அவர் மிரட்டுகிறார், அங்கேயிருக்கின்ற காவல் துறை அதிகாரி. எனவே இப்படிப்பட்ட கெட்டுப்போன ஈரல்களையும் சரிசெய்வதற்கு அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோவை வெடிகுண்டு வழக்கில் S.I.T. என்ற துறை மிகவும் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது வயல்களில் களை எடுக்கும்போது அங்கே சில பயிர்களும் நாசம் அடையத்தான் செய்யும். ஆனால் அந்த வகையிலே பார்க்க வேண்டுமென்று சொன்னால், இந்த 'S.I.T' மேற்கொண்டிருக்கக் கூடிய மிகச் சிறப்பான வழக்குகள்-புலன் ஆய்வுத்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துறை மிகவும் சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும், அதிலும் சில பயிர்கள் நாசமாவது போல் குறிப்பிட்ட 69 பேருக்கு மேலாக அதிலே அப்பாவிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே விவசாயி தனது பயிரைப் பாதுகாப்பதுபோல், எடுத்து வைத்து மீண்டும் பாதுகாப்பதுபோல் அவர்களுக்கு விடுதலை அளிக்க அரசு ஆவன செய்ய வேண்டும். அந்த வழக்கை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மதுரையைச் சேர்ந்த திலாவர் உசேன் என்பவர்மீது அவர் 'அல்-உம்மாவில் இருந்தார்; அல்-உம்மாவிற்கு ஆதரவு அளித்தார்' என்று ஒரு வழக்கு போடப்பட்டு அந்த வழக்கு சம்பந்தமாக (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான செய்திகள் பேச வேண்டும். அவர்மீது வழக்கு தொடுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் அவருக்கும் அல்-உம்மாவிற்கும் சம்பந்தம் இல்லை என்ற ஒரு தீர்ப்பு வந்தபிறகும்கூட அவருடைய கடையை சீல் வைத்து இன்னும் திறக்கப்படவில்லை. இன்றுவரை அவருடைய கார்மென்ட் ஷாப் திறக்கப்படவில்லை. அரசு அவருடைய கடையைத் திறப்பதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

Rural பகுதியை பொறுத்தவரை இன்றைக்கு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு எஸ்.பி.கூட இல்லை என்பதை நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, நீங்கள் அவசியம் தமிழகத்திலே Rural பகுதியிலே முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு எஸ்.பி.யை நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு (மணியடிக்கப்பெற்றது) 2 நிமிடம் கொடுங்கள். நான் பேச வேண்டும்.

எஸ்.எஸ்.ஐ. என்று சொல்லக் கூடிய அந்த எஸ்.ஐ.களுக்கு உரிய சம்பள விகிதம் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய சலுகைகளும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு தீவிரவாதிகளை ஒடுக்குகின்ற வேலையிலே தீவிரவாதிகள் கொடுக்கின்ற வாக்குமூலத்தின் அடிப்படையிலே பல பேர்களை நம்முடைய காவல் துறை கைது செய்து இருக்கிறது. ஆனால்,



அந்த வாக்குமூலங்களிலே ஒரு இயக்கத்தைப் பற்றி இன்றைக்கு அந்தக் குற்றவாளிகள் எல்லாம் வாக்குமூலங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒரு இயக்கத்தின்-இன்றைக்கும் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒரு இயக்கத்தின் தலைவர், அந்தத் தலைவர்தான் எங்களுக்கு இந்த நாட்டிலே வெடிகுண்டு வைப்பது இஸ்லாமிய சட்டத்திற்கு உட்பட்டது ஆகும் என்ற ஒரு பொய்யான அறிவுரையை அவர்களுக்குக் கூறி, அதன் வாயிலாக இன்றைக்கு இளைஞர்கள் வழிகெடுக்கப்பட்டு அந்த இளைஞர்கள் வெடிகுண்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தையும் வழிநடத்தி இருக்கின்றார்கள். இந்த தமிழ்நாட்டையும் அவர்கள் பேரழிவிற்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். எனவே அரசு உரிய நடவடிக்கைகளை இதிலே எடுத்து-எந்த காரணத்தினாலோ அவர்கள் தவறவிடப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து-இப்படிப்பட்ட இயக்கத்தை தடை செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான காவல் துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்த எனக்கு அனுமதி அளித்த தங்களுக்கும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். எனது அரசியல் ஆசானும், வழிகாட்டியும், நம் முதல்வரின் சிறந்த நம்பிக்கைக்குரிய கழகத்தவர்களில் ஒருவராகத் திகழ்ந்து நம் நெஞ்சில் நீங்கா இடம்பெற்று என்றும் நம்மை வாழ்த்திக் கொண்டிருக்கும் அமரர் மறைந்த மாண்புமிகு அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களின் பூவுடல் உறங்கும் திசை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

1996-97 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தமிழக காவல் துறை எந்த அளவிற்கு சீர்கெட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு இதைச் சரி செய்யும் மருத்துவனாகச் செயல்படுவேன் என்று கூறினார்கள். இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 4 ஆண்டுகள்

நிறைவுறுகின்றன. இந்த 4 ஆண்டு காலத்திலே தமிழக காவல் துறையைச் சீர்படுத்தி, மிகச் சிறப்பான ஒரு காவல் துறையாக இங்கிலாந்திலே இருக்கின்ற ஸ்காட்லாண்டு யார்டு காவல் துறைக்கு ஈடாக, இணையாக தமிழகக் காவல் துறையை ஆக்கியிருக்கிறார்கள். கெட்டுப்போய் இருந்ததை மாற்றி மீண்டும் பழைய நிலையை ஏற்படுத்தித் தந்தமைக்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே வண்டலூருக்கு அருகில் உள்ள ஊனமாஞ்சேரி கிராமத்திலே 132 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்திலே ரூ.37 கோடி செலவிலே காவலர் பயிற்சிக் கழகம் ஒன்றை அமைத்திட அரசு முடிவு எடுத்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, காவல் துறையிலே மது விலக்கு காவல் துறை எனது தொகுதியிலே சிறப்பாகச் செயலாற்றி, சாத்தூர் என்றாலே கள்ளச்சாராயம் என்ற நிலையை மாற்றி, இன்றையதினம் சாத்தூரிலே முழுமையாக கள்ளச்சாராயத்தை ஒழித்து நம்முடைய முதல்வரிடம் பாராட்டும் பெற்றிருக்கிறது என்பதை எண்ணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் 12-15

டாக்டர் கலைஞர் அவர்களின்கீழ் இயங்கி வருகின்ற அனைத்துத் துறைகளும் சிறப்பாக இயங்கி வருகின்ற நிலையிலே, அருப்புக்கோட்டை நகரில் சென்ற நிதியாண்டிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து 50 விழுக்காடு ஒதுக்கீடு செய்து தரக் கோரியபடி, அப்படி ஒதுக்கீடு செய்ததன் காரணமாக இன்று அருப்புக்கோட்டை நகரிலே சிறப்பானதொரு தீயணைப்பு நிலையம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி 50 சதவீத நிதி அரசு நிதியிலேயிருந்து ஒதுக்கீடு தந்ததற்கு தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், சாத்தூர் நகரிலே, நகரின் மையப் பகுதியிலேயிருந்த காவல் துறை காவல் நிலையக் கட்டடம், இடிபாடுகள் அடைந்திருந்தது மாற்றப்பட்டு வேறு வாடகைக் கட்டடத்திலே இயங்கியதை, சாத்தூர் நகருக்கு, காவல் நிலையத்திற்குக் காவல் நிலையக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கைக்கு அனுமதி அளித்து அங்கே காவல் நிலையக் கட்டடம் கட்டி முடிவுறும் தருவாயில் இருக்கிறது.



அதற்கும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சாத்தூர் நகரம், தொழிற்சாலைகள் நிறைந்த, அதாவது தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நிறைந்த நகரம். சாத்தூர் நகரிலே ஒரேயொரு காவல் நிலையம்தான் இருக்கிறது. சாத்தூர் ஒன்றியப் பகுதிக்கும், சாத்தூர் நகரத்திற்கும் சேர்த்து, ஏறக்குறைய 1.5 இலட்சம் மக்கள் வசிக்கும் அந்தப் பகுதிக்கு ஒரேயொரு காவல் நிலையம்தான் இருக்கின்றது. குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும், குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் போதிய காவலாளர்கள் இல்லாத காரணத்தினால், அங்கே தாமதம் ஏற்படுகிறது. அதை நீக்கும் வகையிலே, சாத்தூர் பகுதிக்கு, சாத்தூர் தாலுகா காவல் நிலையம் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று சாத்தூர் நகர மக்களின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆயத்தீர்வையிலே, முந்தைய ஆட்சியில் எங்கோ போய்க்கொண்டிருந்ததை அரசு கஜானாவிற்குத் திருப்பிவிட்டு, இன்று வருவாய் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அப்படிப்பட்ட நம்முடைய தலைவர் அவர்கள் மதுபானக் கடைகளிலே சட்டவிரோதமாக பார் வைத்து நடத்தப்படுவதைக் கண்டித்து நேற்றையதினம் அவையிலே அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் சில பகுதிகளிலே, என்னுடைய தொகுதியிலேகூட அருப்புக்கோட்டை நகரிலேயும், சாத்தூர் நகரிலேயும் அவ்விதம் பார் வைத்து நடத்தப்படுகிறது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அருப்புக்கோட்டை நகரம் வளர்ந்து வருகின்ற நகரம். ஏறக்குறைய 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருக்கின்ற நகரிலே, பெண் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும் (மணியடிக்கப்பெற்றது) பெண் குற்றவாளிகளை கோர்ட்டுக்கு அழைத்துச் செல்வதற்கும், நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதற்கும் போதிய பெண் காவலர்கள் இல்லை என்ற நிலையை மாற்றி, அங்கே அருப்புக்கோட்டை நகரக் காவல் நிலையத்திற்கு பெண் காவலர்களை நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டை நகரிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைச் சீர்படுத்துவதற்கு அருப்புக்கோட்டை நகரத்திலே போக்குவரத்து காவல் நிலையம் ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு,

எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டில் ஜாதிகள் இருக்கின்ற வரையில், மதங்கள் இருக்கின்ற வரையில், மத அடிப்படையிலேயும் ஜாதி அடிப்படையிலேயும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஜாதிகளை ஒழிக்க வேண்டிய நாம், மத வெறித் தனத்தை அழிக்க வேண்டிய நாம், நம்மையும் அறியாமல் இன்றைக்கு ஜாதிகளையும் மத உணர்வுகளையும் நிலைநிறுத்தக்கூடிய வகையில் நம்முடைய கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம்; அதற்காகச் செயல்பட்டுக்கொண்டும் இருக்கிறோம் என்பது ஒரு வேதனையான, விசித்திரமான உண்மை ஆகும்.

பிற்பகல் 12-20

அந்த அடிப்படையிலே காவல் துறை நாட்டு மக்களுக்குப் பொதுவான துறை. அந்தத் துறை தனக்கென்று ஒரு உணர்வை வைத்துக்கொள்ளக்கூடாது. காவல் துறைக்கு சாதி இல்லை, மதம் இல்லை. அது ஒரு பொதுத் துறை. அந்தத் துறையில் இருப்பவர்கள் சாதாரணமாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் துணை நிற்க வேண்டும். சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகளைப் பாதுகாக்க வேண்டும். அரசுகள் சட்டத்தால் உருவாக்கப்படுகின்றன. அரசு என்பது நான் முக்கியமானதே தவிர அந்த அரசை நடத்துபவர்கள் யார் என்பது முக்கியமானது அல்ல. எனவே, சட்டபூர்வமாக நடைபெறுகின்ற ஆட்சி சட்டபூர்வமாகவே இருக்க வேண்டும். தனிப்பட்டவன் சட்டத்திற்கு மாறாக நடந்தால் தண்டிக்கின்ற உரிமை காவல் துறைக்கும், அதேநேரத்தில் நீதிமன்றத்திற்கும் உண்டு. இவர்களைக் கண்காணிக்கின்ற பொறுப்பு ஆட்சித் துறைக்கும் உண்டு. ஆனால், இன்றைக்கு நாட்டில் இதற்கு மாறான சில நிலைகள் சாதியின் அடிப்படையிலே, மதத்தின் அடிப்படையிலே மற்றவர்களுக்கு அதனுடைய தாக்கம் ஏற்பட்டிருந்தால் பரவாயில்லை. —காவல் துறையிலேயே அந்தத் தாக்கம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் தான் இன்றைக்கு இந்தத் துறையிலே இருந்து தனக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், மத அடிப்படையிலே, சாதியின் அடிப்படையிலே வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தொடருகிறது. அதற்கு நானும் விதி விலக்கு அல்ல. காவல் துறையைப் பொறுத்தவரையில், எல்லோருக்கும் தெரியும், மாண்புமிகு இன்றைய



முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குத்தான் அவர் முதலமைச்சர் ஆனவரும் அல்ல, இந்தத் துறைக்கு இன்றைக்குத்தான் பொறுப்பு வகிப்பவரும் அல்ல. நீண்ட காலமாக அவர்கள் இந்தத் துறையை நிர்வகித்துக் கொண்டு வருகிறார்கள். எனவே அவருக்கு நன்கு தெரியும். எந்தெந்த அடிப்படையிலே யார் யார் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள், யார் யார் கட்டுப்படுத்தப்படுகிறார்கள், அல்லது யார் யார் விலக்கி வைக்கப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட-நான் காங்கிரஸ்காரர்கள் காலத்திற்குப் போகவில்லை. அந்தக் காலத்தினுடைய கதை எல்லாம்கூட எனக்குத் தெரியும். அந்தக் காலத்திற்கு நான் போகவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு- இந்தத் துறை வளர்ந்திருக்கிறது. இன்றைக்கு ஏறக்குறைய 98,000 போலீஸ்காரர்கள் இதிலே பல்வேறு பணிகளைச் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எண்ணிக்கை போதிய அளவிற்கு உயரவே இல்லை. ஆனால் உயர்ந்திருக்கிறது. இப்படி உயர்ந்திருக்கின்ற இந்த எண்ணிக்கையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டுமென்று வாழ்க்கை முழுவதும் போராடுகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு குறிப்பிட்ட சாராருக்கு எந்த அளவுக்கு நீதி செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு அவர்தான் விளக்கம் அளிக்க வேண்டும். நான் குற்றச்சாட்டாக எதையும் சொல்ல விரும்பவில்லை. ஒன்று, எண்ணிக்கையில் உரியவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இன்னொன்று, சிறப்புத் துறைகள். இந்த போலீஸ் துறையிலே இருக்கின்ற சிறப்புத் துறைகள், இந்தத் துறைகளிலே எல்லாம், குறிப்பாக சுதந்திரத்திற்குப் பிறகு அதுவும் அண்மைக் காலத்தில் இஸ்லாமிய சமுதாயத்தினர் திட்டமிடப்பட்டு, அந்தத் துறைகளிலேயிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன். குற்றச்சாட்டாகவும் சொல்லவில்லை. அதற்கு மாறுபட்ட நிலை இருந்தால் தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் எனக்கு விளக்கம் அளிக்கட்டும். அதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றேன். ஆனால் நான் தெளிவாகச் சொல்கின்றேன்.

Consistent— தொடர்ந்து திட்டமிடப்பட்டு குறிப்பாக இரகசியத் துறை போன்ற துறைகள், இந்தத் துறைகளிலிருந்து எல்லாம் இருக்கிற இஸ்லாமியர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கக்கூடியவர்கள், இன்றைக்கு இருக்கின்ற

பிரச்சினையே நாட்டில் எது என்றால் ஒரு குறிப்பிட்ட எண்ணம் தான் ஏற்றம் பெற வேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள் டெல்லியை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அதிலேதான் நாம் மாறுபடுகிறோம். டெல்லியிலே இருப்பவர்களுக்கு நாம் ஒன்றும் விரோதிகள் அல்ல. ஆனால், ஒரு குறிப்பிட்ட எண்ணம் தான் ஏற்றம் பெற வேண்டும், மற்ற எண்ணங்கள் எல்லாம் தாழ்த்தப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற அந்தக் கருத்தைத்தான் நாங்கள் எதிர்க்கிறோமே தவிர இன்றைக்கு டெல்லியிலே ஆட்சி செய்பவர்கள் மீது விரோதம், தேவையில்லாத விரோதம் எல்லாம் எங்களிடத்திலே இல்லை.

அந்த வகையில் அவர்களுடைய எண்ணம் அது; நம்முடைய உள்ளம் இது என்று சொன்னால், தயவுசெய்து எண்ணங்கள் அங்கேயே இருக்கட்டும். அது இந்த உள்ளங்களிலே வந்து தாக்கத்தை ஏற்படுத்தக்கூடாது என்றுதான் நான் பெரிதும் மதிக்கின்ற என் அருமை அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். நியாயம் வழங்குங்கள், அவ்வளவுதான் சொல்வேன்.

பிற்பகல் 12-25

குற்றவாளியைத் தண்டியுங்கள். எந்தக் குற்றவாளியும் தப்பித்துவிடக்கூடாது. ஆனால், குற்றவாளி என்று அவன் எப்போது முடிவு செய்யப்படுகிறான் என்பதையும் நீங்கள் உள்ளத்திலே, எண்ணத்திலே வைத்துச் செயல்படுங்கள். ஏறக்குறைய பல நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான அப்பாவிகள், சிறைச்சாலையிலே அடைக்கப்படலாமா? ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது சட்டத்தினுடைய தேவையாகும். நான் தெரிந்து சொல்கிறேன். ஒரு குற்றவாளியும், நிரூபிக்கப்பட்டால் தயவு செய்து விடாதீர்கள். அதற்கு நானே எதிரி. ஆனால் ஆயிரக்கணக்கான இளைஞர்களை அப்பாவிகளை (மணியடிக்கப்பெற்றது) சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்தவகையில் நியாயம்? அவர்களையும் நீங்கள் குற்றம் புரிவதற்காகத் தூண்டுகிறீர்கள்; மறைமுகத் தூண்டுதல் என்ற அளவிற்கு இது பாரதூரமான விளைவுகளை, தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கும் தொடர்கிறது. இங்கேகூட இப்போது பேசப்பட்டது.

மதுரையில் காலையில் தொழுகைக்கு அழைப்பதற்கு எழுந்த ஒரு பெரியவர், 60 வயது பெரியவர் திலானி என்பவர் படுகொலை செய்யப்பட்டார். மசூதிக்குள் நுழைந்து படுகொலை செய்யப்பட்டார்.



இதுவரையிலே யார் அந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்று-பல குற்றங்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கிவிட்டோம் என்று இந்த அவையிலேயே விளக்கம் தரப்படுகிறது - எங்களுக்கு விளக்கம் கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள் சார், நான் இந்தமாதிரி போலீஸ் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, நீங்கள் கட்டுப்படுத்த அதுவும் முக்கியமான ஒரு துறையில், தயவு செய்து எண்ணிக்கை எண்ணிக்கையைப் பார்க்க வேண்டாம். யார் எந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்பதற்கு போதிய பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அதுதான் சட்டமன்றம். எனவே, தயவு செய்து என் குரல்வளையை நெரிக்காதீர்கள். இல்லாவிட்டால் நான் இப்போதே பேச்சை முடித்துவிட்டுப் போய்விடுகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான், உங்களுக்கு ஒரு நிமிடம் இருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அதைவிட்டு விடுங்கள். ஆகையினாலே, நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை?

தருமபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளிக்குப் பக்கத்தில் அகரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் மசூதி கட்டி சிறுபான்மையின மக்கள், எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அந்த மசூதியையே இடித்து, எரித்துவிட்டிருக்கிறார்கள்.

போலீஸ் துறையிலே சென்று, அங்கே அவர்களிடத்திலே மனு கொடுத்தால் வாங்க மறுக்கிறார்கள். 'போயா, வேலையைப் பார்த்துக்கிட்டுவிட்டு' என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் சொல்லலாமா? நாங்களும் இந்த நாட்டுக் குடிமக்கள் என்ற உணர்வு எங்களுக்கு வேண்டாமா? அந்த உணர்வை காப்பாற்றித் தருவது உங்களுடைய பொறுப்பு அல்லவா? அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'எந்த நாட்டில் சிறுபான்மையின மக்கள் பாதுகாப்பு உணர்வோடு இருப்பதற்கு பெரும்பான்மை மக்கள் முயற்சி எடுத்துக்கொள்கிறார்களோ, அந்த நாடுதான் உண்மையான ஜனநாயக நாடு' என்பதை என்னைவிட, அண்ணா சொன்ன அந்த வாசகங்களை கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் நன்றாக உணர்வார்கள். எனவே, அந்த உணர்வை தயவு செய்து ஏற்படுத்தித்தாருங்கள். இந்த அப்பாவிகளை எல்லாம் விடுதலை செய்யுங்கள். அவன் போய் குற்றவாளிகளோடு, வழக்கமான

குற்றவாளிகளோடு அங்கே இருந்தால், அவனும் குற்றவாளியாக மாறித்தான் வருவான். தயவுசெய்து விடுவிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று நான் உங்களிடத்திலே மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; கேட்டுக்கொண்டேயிருக்கிறேன். ஒரு நாளைக்கு இல்லாவிட்டாலும், மற்றொரு நாள் கலைஞருடைய கனிவுப் பார்வை...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் பேசும்போது ஆயிரக்கணக்கான முஸ்லீம் இளைஞர்களை, அப்பாவிகளை சிறையிலே அடைத்து வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார். அதுவே ஒரு சமுதாய மக்களிடத்திலே ஒரு பெரிய வெறுப்பை இந்த அரசுமீது ஏற்படுத்தக்கூடியது. அப்பாவி இளைஞர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி நம்முடைய லத்தீப் அவர்களால் இங்கே சொல்லப்படும்போது, நான் அவரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்த இளைஞர்கள் யார் யார் என்கின்ற அந்தப் பெயர்களை, பட்டியலை எனக்குத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அது பற்றி நான் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன். பொத்தாம் பொதுவாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள், அப்பாவி முஸ்லீம் இளைஞர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுவது சரியல்ல. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் என்றுகூட இருக்கலாம், அவர் சொன்னதைப் போல. அப்படியிருந்தாலும், அந்தப் பட்டியலை எனக்குத் தரவேண்டும்; பெயர் வாரியாக, விவரமாக அவர்களுடைய முகவரியோடு என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம் எனக்குத் தெரியும். தண்டிக்க வேண்டும் என்று தண்டிக்கக்கூடியவர்கள் அல்ல அவர்கள். நான் பட்டியல் தர வேண்டுமென்று சொல்கிறார். ஆயிரக்கணக்கில் என்று நான் பேசுகிறேன் என்று சொல்கிறார். ஒரு உண்மையைச் சொன்னார். மகிழ்ச்சி. பல தடவை இப்படி நான் சொல்கிறேன் என்பதை முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பல தடவை சொல்லியிருக்கிறேனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, ஒரு தடவையாவது இதுகுறித்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை ஏற்கக்கூடாதா?



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கில் என்பது உண்மையா அல்லது உண்மைக்கு மாறானதா என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையாக இருந்தால் நான் அதைக் குறை சொல்லவில்லை. லத்தீப் அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால், நான் அவர்களை பாராட்டுகிறேன், உண்மையை எடுத்துச் சொன்னதற்காக. நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், அந்தப் பட்டியலை எனக்கு விவரமாகத் தந்தால், நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணை தலைவர் அவர்களே, இதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், அந்தத் துறையை நான் நிர்வகிக்கவில்லை. நிர்வகிப்பவர்கள்தான் அந்தப் பட்டியலைத் தரவேண்டும். சில பட்டியல்கள்— நான் இன்னொன்றையும் சொல்கிறேன்— சில பட்டியல்கள்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இதுபோல் தப்பித்துக்கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளக்கூடாது. ஏனென்றால், ஓர் அபாண்டமான பழியைப் போட்டுவிட்டதாக ஆகிவிடக்கூடாது. நான் இன்னமும் நம்புகிறேன், அப்துல் லத்தீப் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம் என்று. அவர் சொல்கிறார். ஆயிரக்கணக்கான, அப்பாவி முஸ்லீம் இளைஞர்களை, சிறையிலே போட்டு வதைக்கிறோம் என்று சொல்கிறார். அந்த முஸ்லீம் இளைஞர்களுடைய பெயர்களைப் பட்டியலிட்டுத் தரவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் கேள்விப்படுபவர்களைப் பற்றியெல்லாம், அந்தப் பெயர்களை எல்லாம், என்னால் திரட்ட முடியும், பட்டியலைத் தரமுடியும். பட்டியலில் ஏறாத பல பெயர்கள் துறையினருக்குத் தெரிந்ததாகச் சொல்கிறார்கள். நான் கேட்டதை உங்களுக்குச் சொல்கிறேன். பட்டியலைத் தயார் செய்து தங்களிடத்திலே தருவதற்கு நான் தயார். ஆசையினாலே ஆயிரக்கணக்கிலே என்று சொன்னால், எதிலேயும் உயர்வு நவிற்சி என்று முதல்வர் அவர்கள் சொன்னால், வேறு என்ன செய்யமுடியும்? (சிரிப்பு) என்னுடைய ஆதங்கத்தை அப்படிச் சொல்கிறேன். அதை உயர்வு நவிற்சி என்று நீங்கள் கருதினால்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** உயர்வு நவிற்சி என்று கருதினால், கோடிக்கணக்கான என்றுகூடச் சொல்லுங்கள். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. (சிரிப்பு).

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எப்படியிருந்தாலும், ஆயிரமாக இருந்தாலும், ஒன்றாக இருந்தாலும், ஆயிரம் பேர் இன்னலுக்கு ஆளாக்கப்பட்டாலும், ஒருவர் இன்னலுக்கு ஆளாக்கப்பட்டாலும், முதல்வர் அவர்கள் ஒருவருக்கும் அதே கவனத்தைச் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, தயவுசெய்து அது எவ்வளவு பேர் என்பது முக்கியமானதல்ல, நிலைதான் முக்கியம். ஆகவே, நீங்கள் இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய மாவட்டத்தின் சார்பாக கோரிக்கைகள். ஓர் ஊராட்சி மன்றத் தலைவரும் நாங்களும் அந்த நகரத்திற்கு, பல ஆண்டுகளாக, ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று கேட்டுவருகிறோம். ஏன் கொடுக்கவில்லை? மாதனூருக்கு போலீஸ் ஸ்டேஷன் இல்லையென்று சொன்னால், நான் அண்மைக் காலத்தில் ஆச்சரியப்பட்டேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தன் அவர்களுடைய தொகுதி அது. அவர்களும் பல ஆண்டுகளாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையிலும் வரவில்லை என்று சொல்லப்படுகிறது. மாதனூர் ஒன்றும் கலைஞருக்குத் தெரியாத ஊர் அல்ல. தயவுசெய்து அந்த மாதனூருக்கு இந்த ஆண்டாவது ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் என்னுடைய தொகுதிக்கு மட்டும் பேசவில்லை. பகுதிக்காகவும் பேசுகிறேன். தம்பி கோவிந்தன அவர்கள் அடிக்கடி.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாதனூருக்கு போலீஸ் ஸ்டேஷன் தருவதிலே தடையில்லை. அங்கே ஒரு ஸ்டேஷன் கொடுத்து, அந்த போலீஸ்காரர்கள் யாரையாவது கைது செய்ய, ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கைது செய்து விட்டார்கள் என்று திரு. லத்தீப் அவர்கள் சொல்லாமல் இருக்கவேண்டும். (சிரிப்பு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் அடிக்கடி சொல்வேன். போலீஸ் துறை என்பது நெருப்பைப் போன்றது. நெருப்பைத் தொட்டால் சுட்டுவிடும். ஆனால் தொடாமல் இருக்கமுடியுமா? நெருப்பு இல்லாமல் சமைக்க முடியுமா? குளிர் வந்தால் குளிர் காயமுடியுமா? It is an inevitable evil, necessary evil, என்று சொல்வார்கள். ஆகையினாலே, நான் உங்கள் துறையையே evil என்று சொல்வதற்குத் தயாராக இல்லை. அதில் நல்லவர்களும் இருக்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னேன். முதல்முறையாகச் சொன்னேன். உணர்வுகள், மத உணர்வுகள், ஜாதி உணர்வுகள் அழிக்கபபடும் அளவுக்கு நாம் நடவடிக்கையை மேற்கொள்ள



வேண்டும். அதை அழிக்க வேண்டுமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீதி வழங்குங்கள். நாங்கள் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறோம்? ஐந்தா? பத்தா? எவ்வளவு இருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு எங்களுக்கு சமூக நீதி வழங்குங்கள். குறிப்பாக போலீஸ் துறையிலே வழங்குங்கள். பொதுத் துறையிலே வழங்குங்கள்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த அவையிலே நான் பலமுறை சொல்லிவிட்டேன். இன்னும் இட ஒதுக்கீடு பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டில் தீரவில்லை. அறுபத்தி ஒன்பதா, ஐம்பதா என்று அந்த எண்ணிக்கையும் இன்னும் தீரவில்லை. அந்த எண்ணிக்கை எவ்வளவு என்று தீர்க்கமாகத் தெரிந்த பிறகுதான், அதை வைத்துக்கொண்டுதான் யார் யாருக்கு எவ்வளவு என்று பிரித்துக் கொடுக்க முடியும். இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு தருவதற்கு நான் எங்களுடைய தோழமைக் கட்சித் தலைவர்களிடத்திலே எல்லாம்கூட பேசியிருக்கிறேன். குறிப்பாக, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களிடம் பேசியிருக்கிறோம். அவர்கள்கூட எந்த ஆட்சேபணையும் இல்லை, தரலாம் என்றுதான் என்னிடத்திலே கூறியிருக்கிறார்கள். எனவே, அந்தக் கருத்தை நாங்கள் விட்டுவிடவில்லை, அதை வைத்து பரிசீலிக்கிறோம். அதற்கு இடையிலே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்து எவ்வளவு இடங்கள் நமக்கு உறுதியாகக் கிடைக்கும் என்று ஒரு நிலை ஏற்பட்ட பிறகுதான் அதை நிர்ணயிக்க முடியும். அதுவரையிலே அது சிரமமான காரியம். ஆனாலும்கூட, கொடுத்த உறுதி, உறுதிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன். (குறுக்கீடு) ஏற்கெனவே ஏகப்பட்ட நேரம் ஆகிவிட்டது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேச்சை முடித்து விடுகிறேன். துணைத் தலைவரவர்களே, அதனால்தான், கடந்த தடவை, பலதடவை சொன்னேன். கொள்கை அளவுக்காவது ஓர் அறிவிப்பு செய்யுங்கள். 1% அறிவியுங்கள் போதும். அதை நாங்கள் பெரிதும் மதிப்போம். கொள்கை அளவிலே ஸ்லாப் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான், கோர்ட்டிலே தீர்ப்பு வந்த பிறகு அறிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, நமககு classification-லே எந்தெந்த classification-ல் நமக்கு எவ்வளவு விகிதாச்சாரம், நம்முடைய percentage என்ன என்று நிர்ணயிக்கப்பட்டு தெரிந்த பிறகுதான், ஒன்றா, இரண்டா, மூன்றா என்று கொடுக்க முடியும். அதனால்தான் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வரட்டும் என்று காத்திருக்கிறோம் என்று கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய காவல் துறை, தீயணைப்புத் துறை. மற்றும் ஆயத் தீர்வை குறித்த மானியக் கோரிக்கைகளமீது என்னுடைய கருத்துகளைப் பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

பொதுவாக, ஒரு காலத்திலே கிராமத்தில் பேசிக் கொள்வார்கள். 'வக்கற்றவனுக்கு வாத்தியார் வேலை, போக்கற்றவனுக்கு போலீஸ் வேலை' என்று. ஆனால், இப்போது அந்த இரண்டு துறைகளும் மிகச் சிறபபான முறையில் செயல்படச் செய்து, கலைஞருடைய ஆட்சியிலே அவரவர்களுக்கு உரிய நேரத்திலே வாய்ப்பு அளிக்கப்பட்டு, சமுதாயத்திலும் சமூகத்திலும் ஒரு பெரிய அந்தஸ்தை உருவாக்கிக் கொடுத்தவர் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

நான் என்னுடைய கருத்துகளைப் பேசுவதற்கு முன்னால், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அகரம் என்ற கிராமத்திலே நடந்த சம்பவத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அகரம் கிராமம் என்னுடைய தொகுதிக்குட்பட்ட கிராமம். அந்தக் கிராமத்திலே, அந்த இடத்திலே அவர்களுடைய பள்ளிவாசல் எரிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஓலைக் குடிசையிலே, அந்தப் பள்ளிவாசல் இருந்தது. அதேநேரத்தில் அங்கே சுற்றிலும் சிறுபான்மை சமுதாய மக்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். ஓர் இரவு நேரத்திலே, சினிமா பார்த்துவிட்டுச் சென்றவர்கள், சமூக விரோதிகள் பீடி குடித்துவிட்டு எறிந்துவிட்டுப் போன சம்பவத்தினாலே அது எரிந்துபோனது. உடனடியாக எனக்குத் தகவல் கிடைத்து, உரிய நடவடிக்கை காவல் துறை மூலமாக எடுக்கப்பட்டு, அங்கேயிருக்கின்ற பலதரப்பட்ட சமுதாய மக்களையும் அழைத்து, இதற்கு யார் யார்



பொறுப்பானவர்கள் என்று ஊர் கூடி பேசிய பின்னால், யாரும் பொறுப்பல்ல, ஏதோ அசம்பாவித சம்பவமாக இது எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே நியாயம் எல்லாம் பேசப்பட்டு இனி மேற்கொண்டு எந்தவிதமான அசம்பாவித சம்பவங்களும் நடக்கக்கூடாது என்று பேசி முடிக்கப்பட்டது. கடந்த ரம்ஜான் பண்டிகையின் போதுகூட அங்கிருக்கின்ற முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதை மிக அமைதியாகக் கொண்டாடினார்கள். அங்கே இருக்கின்ற நாவரசம்பட்டி காவல் துறையினரும், போச்சம்பள்ளியிலே இருக்கின்ற இன்ஸ்பெக்டரும் நல்ல பாதுகாப்பு கொடுத்து, அந்த நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போது, இந்தத் துறை பழுதடைந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்குப் பழுது நீக்கப்பட்டது, முழுமையாக இல்லாவிட்டாலும், மனிதனாக வாழக்கூடிய அளவிற்கு, அந்தச் சமுதாயத்தை உருவாக்கக்கூடிய அளவிற்கு இந்தத் துறையை சீர்படுத்தியிருக்கின்றார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

பிற்பகல் 12-40

இதற்கு ஓர் உதாரணம் நான் சொல்லவேண்டுமென்று சொன்னால், 'ஸ்காட்லாண்டு யார்டு'க்கு நிகரான போலீஸ் நம்முடைய தமிழகப் போலீஸ் என்பதற்கு ஓர் உதாரணம், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் தேனி மாவட்டத்திலே நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவம். போலீசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அடுத்த இரண்டு மணி நேரத்திலேயே சுமார் 12 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளைக் கைப்பற்றி, காவல் துறையில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் குற்றவாளிகளையும் கைது செய்து, உரியவரிடத்திலே அந்தப் பொருட்களை ஒப்படைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், சிறப்பான போலீஸ் இந்தத் துறையில் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே ஓர் உதாரணம்.

அதேபோன்று மூன்று மாதங்களுக்கு முன்னாலே எங்களுடைய மாவட்டத்திலே ஒரு துயரச் சம்பவம், ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து, அன்றைக்கு தருமபுரியில் மிகக் கொடுமையான

சம்பவம், பஸ் எரிக்கப்பட்டது. பஸ் எரிக்கப்பட்டது என்று சொன்ன அடுத்த சில மணி நேரங்களிலேயே குற்றவாளிகள் யார் யார் என்று கண்டுபிடித்து, அன்றைக்கு அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளராக இருந்த இராசேந்திரன் தலைமையிலே செயல்பட்ட கிட்டத்தட்ட 35 பேர் கைது செய்யப்பட்டு, வழக்கு போட்டு, மிகக் குறுகிய காலத்தில், 2 மாதங்கள் 25 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்தக் காவல் துறை எந்த அளவுக்கு சுறுசுறுப்பாக கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நம்முடைய காவல் துறை, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, காவல் துறையின் பாதுகாப்பில் ஏற்பட்ட குற்றங்களின் இழப்புகள் இன்றைக்கு 45 தான். இதே, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே 78. அதேபோல ஏராளமான அதிசயச் சம்பவங்கள் காவல் துறையில் நடைபெற்றிருப்பதை நான் சுட்டிக்காட்டினால், அது மிகையாகாது.

தீயணைப்புத் துறையை எடுத்துக்கொண்டால், மிகச் சிறந்தமுறையில் தீயணைப்புத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு தீயணைப்புத் துறை மக்கள் சாசனத்திலே 50 ஆயிரம் மக்கள்தொகை இருக்கின்ற ஓர் ஊரில், 25 கி.மீ. தொலைவு இருக்கின்ற இடத்தில்தான் தீயணைப்பு நிலையம் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது வளர்ந்து வரும் மக்கள் சமுதாயத்திலே, மக்கள் தொகையின் அடிப்படையில் போடப்பட்ட கருத்தாக இருந்தாலும்கூட, இன்றைக்கு இந்த நிலையைக் குறைத்து, குறைந்தது, 15 ஆயிரம் மக்கள் தொகைக்கு, 10 கி.மீ. தொலைவில் ஓர் இடத்திலே தீயணைப்பு நிலையங்கள் இருக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் கடந்த ஆண்டில், என்னுடைய தொகுதியில் மகேந்திரமங்கலத்திலும், பெண்ணாகரம் தொகுதி, இந்தூரிலும் காவல் நிலையங்களை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைக் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தருமபுரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய்க்கு புதிய காவலர் கட்டடங்களையும் காவல் துறைக்குப் புதிய குடியிருப்புகளையும் கட்டிக் கொடுத்ததற்கு நான் நன்றி கூறுகிறேன். என்னுடைய காவேரிப்பட்டணம் தொகுதியில் நீண்டகாலமாக காவலர் குடியிருப்பு கட்டப்படாமல் பழுதடைந்திருக்கிறது. காவல் துறையைச் சார்ந்த அந்தக் காவலர்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய சொந்த தொகுதியின் பிரச்சனையாக என்னுடைய காவிரிப்பட்டணம் தொகுதி நீர்நிலைகள் நிறைந்த தொகுதி. விவசாயம் நிறைந்த தொகுதி. அந்தத் தொகுதியில் எதிர்காலத்திலே கல்வித் துறையைச் சார்ந்த கல்லூரிகளோ அல்லது தொழிற்சாலைகளோ இடம் பிடிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய மாவட்டங்களில், மாவட்டத்தினுடைய பொறுப்புக்கு எஸ்பி. போன்ற பதவிகளுக்கு ஐபி.எஸ். படித்தவர்களை அதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது தமிழகத்தைப் பொறுத்தமட்டில், தமிழக அரசு கடைபிடிக்கும் மதுவிலக்குக் கொள்கை வேடிக்கையாக உள்ளது. பிராந்தி, விஸ்கி போன்றவற்றை எல்லாம் நாம் அனுமதித்து இருக்கிறோம். ஆனால், கள், சாராயத்தை நாம் தடை செய்து இருக்கிறோம். எல்லாவற்றையும் தடை செய்ய வேண்டும் என்பது எங்களது கோரிக்கை. அதை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அடுத்தபடியாக, கள்ளச் சாராய பானைகள் மீது துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்தில் இந்த அவையில் அறிவித்தார்கள். ஆனால், இப்போது அகில இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமலாக்க வேண்டும், அவ்வாறு செய்தால்தான் தமிழகத்திலே கள்ளச் சாராயத்தை ஒழிக்க இயலும் என்று கூறுகிறார்கள். இந்தப் போக்கு ஏன் இவ்வாறு ஏற்பட்டிருக்கிறது என்பது எங்களுக்குப் புரியாத ஒன்றாக இருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு நல்ல காவலர்களும் இங்கே இருக்கிறார்கள். கள்ளச் சாராயம் என்பது நிச்சயமாக காவல் துறைக்குத் தெரியாமல் இருப்பதல்ல. நிச்சயமாக பல இடங்களிலே காவல் துறையைச் சார்ந்தவர்கள் மாமூல் பெற்றுக்கொண்டுதான் இந்தத் தொழில் நடத்த அனுமதிக்கப்படுகிறது

என்பதை நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இன்று இது தடுத்து நிறுத்த முடியாத ஒரு பிரச்சினையல்ல.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்திலே 80, 90 சதவீதம் இந்தத் தொழில் இல்லாத நிலை இருக்கிறது. இதற்கு அங்கே இருக்கக்கூடிய ஒரு போலீஸ் அதிகாரி, உயர்மட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு போலீஸ் அதிகாரியே இதுபோன்ற நல்ல காரியங்களை இப்போது செய்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதுபோன்று எல்லா மாவட்டங்களிலும் நல்ல போலீஸ் அதிகாரிகளை நியமனம் செய்து இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலே அக்டோபர் மாதம் 18 ஆம் தேதி தேவகோட்டையைச் சேர்ந்த பட்டு குருக்கள் என்பவர் கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை நடந்து ஏறத்தாழ 7 மாதங்கள் ஆகின்றன. நமது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த வழக்குகூட சி.பி.சி.ஐ.டி-யிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 7 மாதங்கள் ஆகியும் இன்னும் அந்தக் குற்றவாளி யார் என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. நானும், நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முதலமைச்சரைச் சந்தித்து இதைப் பற்றி கூறும்போது, முதலமைச்சர் அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், 7 மாதங்கள் வரையில் அந்தக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத ஒரு நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் மூன்று ஆண்டுகளிலே ஏறத்தாழ 12, 13 கொலைகள் நடந்திருக்கின்றன. இந்தக் கொலைகளிலே இன்னும் குற்றவாளிகள் யார் என்பதைக் (மணியடிக்கப்பெற்றது) கண்டுபிடிக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. மீண்டும் நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே அரசியல் தலையீடோ, அரசியல் கட்சிகளுடைய தலையீடோ நிச்சயமாக இல்லை. அங்கே நடப்பது ரவுடிகளுடைய சாம்ராஜ்யமாக இருக்கிறது. இந்த நிலை நீடித்தால், இன்றைக்கு தமிழகத்திலே நாம் எதிர்பார்க்கக்கூடிய அமைதிப் பூங்கா அந்தப் பகுதியிலே ஏற்படாத ஒரு நிலை ஏற்பட்டு விடும் என்று நாங்கள் எல்லாம் அஞ்சுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முதலமைச்சர் அவர்கள் சரியான ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்தத் தரப்பினர் (மணியடிக்கப்பெற்றது) என்று நான் கூற விரும்பவில்லை. ஆனால், அங்கே இருக்கக்கூடிய அரசியலுக்கு அப்பாற்பட்டு ரவுடிகளை ஒடுக்குகின்ற நிலையை நமது அரசு நிச்சயமாக



செய்து தர வேண்டும். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் பயமின்றி வாழக்கூடிய நிலையை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. துரை.

பிற்பகல் 12-50

**திரு. கே. துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், எங்கள் கழகத் தலைவர் அவர்களுக்கும் எனக்கு இந்த காவல் துறை மானியத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் தலைமையில் கழக அரசு பொறுப்பு ஏற்ற பின்புதான் தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் தேவைகளை அறிந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. காவல் துறை என்றாலே பொதுமக்கள் அஞ்சிய காலம் போய், இன்று கலைஞர் அரசில் காவல் துறை பொதுமக்களிடம் நல்ல அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது என்பது மக்களிடம் காண முடிகிறது. காவலர் குடியிருப்புகள் மிகவும் பழமையாக இருந்ததை மாற்றி இப்போது புதிதாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக எனது தொகுதிக்குட்பட்ட திருச்சி-புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் காவலர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக்கொடுத்து இருப்பதால் காவலர்கள் மத்தியில் மகிழ்ச்சி இருப்பதை அறிய முடிகிறது.

எனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட காட்டூர், பாப்பாகுறிச்சியில் மக்கள் தொகை அதிகம். அந்தப் பகுதி திருவெறும்பூர் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியாகும். காட்டூரிலிருந்து திருவெறும்பூர் காவல் நிலையம் சுமார் 6 கிலோமீட்டர் தூரம் உள்ளது. திருவெறும்பூர் காவல் நிலையத்தில் காவலர்கள் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகிறது. காட்டூர்-பாப்பாகுறிச்சியில் ஒரு காவல் நிலையம் அமைக்க திருச்சி காவல் துறை அதிகாரி மூலம் சென்னை காவல் துறை இயக்குநர் அலுவலகத்திற்குக் கடிதம் அனுப்பி உள்ளார். ஆகவே, நீண்டநாள் கோரிக்கையான திருவெறும்பூர் தொகுதியில், காட்டூர் காவல் நிலையம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் உத்திரவிடுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல எனது தொகுதி, மாநகர தொகுதிக்கு அருகில் சுப்பிரமணியபுரம், நஞ்சுண்டபுரம், சுந்தர் நகர், கே.கே. நகர் காவல் நிலையங்களுக்குட்பட்ட பகுதியாகும். அங்குள்ள மக்கள் காவல் நிலையம் செல்ல வேண்டுமானால் சுமார் 8 கிலோமீட்டர் தூரம், இரண்டு

[திரு. கே. துரை] [2000 மே 12

பேருந்துகள் மாறி செல்ல வேண்டியுள்ளது. ஆகவே சுப்பிரமணியபுரம், நஞ்சுண்டபுரம், சுந்தர் நகர் ஆகிய பகுதிகளை ஒன்றாக இணைத்து, சுப்பிரமணியபுரத்தில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திருவெறும்பூர் தொகுதியை மையமாக வைத்து, அதைச் சுற்றி 24 ஊராட்சிகளும், பல குக்கிராமங்களும் உள்ளன. அங்கேயுள்ளவர்கள் அனைவரும் விவசாய மக்கள். அந்தப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டால், திருச்சியிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தூரத்திலிருந்துதான் தீயணைப்பு வண்டிகள் வரவேண்டும். எனவே, எனது நீண்டநாள் கோரிக்கையாகவும், திருவெறும்பூர் மக்களின் கோரிக்கையாகவும் உள்ள திருவெறும்பூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 17½ கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்து இப்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் மின் பற்றாக்குறையைப் போக்க 5 கோடி ரூபாயில் துணை மின்நிலையம் அமைக்க உத்தரவிட்டு இப்போது வேலைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. எனது தொகுதியில் பல இடங்களில் புதிதாக நியாய விலைக் கடை, அங்காடிகள் அமைத்து, 4 மண்ணெண்ணெய் பங்குகளும் அமைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்குள்ளே செல்கின்ற நேரத்தில் மக்களிடம் மகிழ்ச்சியையும் வரவேற்பையும் காண முடிகிறது. அதற்காக தலைவர் கலைஞர் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள் என்பதைக் காண முடிகிறது. எனது தொகுதியில் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் அனைத்து வேலைகளும் நடைபெற்று வருகின்றன. எனக்கு வாய்ப்பளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.



2000 மே 12]

பிற்பகல் 12-55

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I thank you for giving me an opportunity to speak on behalf of BJP regarding the Tamilnadu Police, Tamil Nadu Fire Service and State Excise Department brought by the Hon. Chief Minister of Tamil Nadu in this House.

In early years, Tamil Nadu Police was compared to Scotlandyard Police and it was considered equal to British Police. Subsequently, the standard has come down. I am very happy to note that at present Hon. Chief Minister is trying to improve the efficiency of Police by introducing series of dynamic, modem and vibrant methods in Police Service. For example, modernisation of Police Force by utilising Central assistance in addition to the State funds 10th Finance Commission allotment of Rs.12.09 crores to construct 36 Police Stations, construction of quarters, providing nearly 6973 vehicles, supply of weaponry equipments, Walkie-talkies for about 1.35 crores, computerisation to do the work efficiently by the police, introducing more than 2000 computers within a period of 5 years for improving the efficiency of Police.

Coming to the next point Sir, law and order situation in the last 2, 3 years is far better. For example, during the last 2, 3 years, the communal clashes in southern districts have been completely brought down by convening all party leaders meeting and at present there is no trouble in the south.

Police Custody deaths have also come down, when compared to last year. Recovery in property crimes is about 76%. The recovery percentage in murder for gain and decoity cases is 75.8%. Crime against women reported and detected is 87%. There is no interference in the administration.

All these things have happened only because our Hon. Chief Minister is very strict in these matters.

I want to tell one incident in this House Sir. I came to understand that an important man has told the Hon. Chief Minister to transfer one big Police Officer. It seems that he asked what fault he has committed. `` He is not hearing my words", the man said. ``Because he is not hearing your words, have I to transfer him? What crime he has done? Has he taken

any bribe? No. Then I will not transfer him. Let him do his work." the Hon. Chief Minister said. He is a real straight forward Chief Minister. I would request the Hon. Chief Minister to keep it up. Then only, Police administration will be very good. Some important people may ask you to transfer some officers. There must be proper reason to transfer them. I am really very happy that our Hon. Chief Minister has done it. The efficiency of Police has increased because of that. Police are doing good work, because there is no interference.

Coming to the next point Sir, in Hosur, the Police Station has been constructed. I am very happy that Uddanapalli Police Station was sanctioned by our Hon. Chief Minister on my request. The Police station has to be constructed.

I request you to sanction the Puliyurkurichy Fire Service Station at Padmanabapuram Constituency where 25 cents of P.W.D. land is available.

Last year, I was talking about Law and Order situation at Hosur. This year, I have already told that the Law and Order situation has actually been improved. But last year, I was telling about 3 murder cases and other things, but now we are very happy that good Officers, D.S.P., Inspectors have been posted. They are able to maintain the Law and Order situation well. Because it is the border area of Bangalore, lot of criminals from Bangalore came and caused disturbances. But, this year I am very happy to note that this kind of incidents have not taken place, because good officers are there.

Coming to the next point, regarding illicit liquor, I am very happy that it is being controlled very much and at the same time there are some black-sheeps in the Police Department. They are encouraging the boot-leggers by getting money. That should be very well watched and such officers should be punished. Then only they would be able to achieve the goal that you have expected Sir.

Coming to the next point, some police officers are doing mistake Sir. I want to cite one example. People in Bagalur area are going to Karnataka to hull the paddy because there is a good machine. The police caught those people who were taking the paddy for hulling and they have arrested and they have filed non-bailable cases. Then I came to know that the



Hon. Chief Minister who was at Salem gave instructions not to do like that and they have been released. I request you to see that the concerned officers should be punished because they have asked some bribes from the agriculturists. Since, they have not given they had taken them into custody. So, such officers should be punished very severely Sir.

பிற்பகல் 1-00

I came to know that Grade-I Constables were appointed in 1972. Seniority was fixed as per G.O.No.2401, Home Department, dt. 10-10-1974. This was not followed by the Coimbatore Urban District. 10 people were given promotion in 1985. (The gong was sounded) I will finish Sir. Due to the administrative lapse it seems that about 15 people have not been given that promotion. I request the Hon'ble Chief Minister to see that it is rectified and given promotion to improve efficiency.

I came to understand that upto 1984, Tamil Nadu Police Department Ministerial Staff were drawing same salary as the Police Personnel. I came to understand afterwards there was a difference between them. The National Police Commission's recommendations should be implemented, Sir. Then only they will do better work. I would like to endorse the recommendations of the Conference of the I.G.Ps. of 1968 and 1972 and strongly recommend that the Ministerial Staff in Police Department should be brought under the Police Act. This will ensure that they are brought under the same discipline as required from all the Policemen and at the same time ensure that similar facilities are extended to them and their prospects and status are also improved. I request you to examine all these things and see that necessary action be taken.

One more thing regarding Hosur Sir. One more Police Station is required at Onnalavadi because of the industrialisation in that area, Lot of Police stations are required. The staff and other things are not sufficient. I request you to see that one police station at Onnalavadi is opened this year. The police people in the lower level - in the Inspector and the Sub-Inspector level the remuneration is alright. Down below that police level, we must have to give some more remuneration Sir. The police people are really suffering a lot.

I request you to consider their case and see some increase in their salary is given.

Thank you very much for giving me this opportunity.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்த தங்களுக்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் முதல்வர் அவர்களுக்கும் நன்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருகாலத்தில் 'போக்கற்றவர்களுக்கு போலீஸ் வேலை, வக்கற்றவர்களுக்கு வாத்தியார் வேலை' என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு அந்த இரு சமுதாயத்தையும் உயர்த்தி, காவலர்கள் என்று சொன்னால் நாட்டிலே மதிக்கப்படக்கூடிய அளவுக்கு அவர்களுடைய தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். தமிழகப் போலீஸ் உலகத் தரம் வாய்ந்த ஸ்காட்லாந்து போலீசுக்கு அடுத்தபடியாக உள்ள ஒரு நிலையை நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த காலங்களில் உருவாக்கி வைத்தார்கள். ஆனால் இடையிலே ஏற்பட்ட ஆட்சி, அப்படிப்பட்ட உன்னதமான காவல் துறையை 'கட் அவுட்களை' காவல் காக்க ஒரு நிர்பந்தத்தை உருவாக்கி, அந்தக் காவல் துறைக்கு ஒரு கெட்ட பெயரைத் தேடித் தந்தார்கள். ஆனால் மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழக காவல் துறை இப்போது உலகத் தரம் வாய்ந்த ஒரு துறையாக, எப்படிப்பட்ட குற்றங்களாக இருந்தாலும் உடனடியாகக் கண்டுபிடிக்கக்கூடிய அளவிற்கு அந்தத் துறையை மீண்டும் நிலைநிறுத்தியிருக்கக்கூடிய பெருமை நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களையே சாரும்.

2000-2001 ஆம் ஆண்டில் காவல் துறைக்கு என 1,116 கோடி ரூபாயை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழகத்தையே கணினிமயமாக்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையிலே கணினியைப் புகுத்தி இதுவரை 4.16 கோடி ரூபாய் செலவிலே 484 கணினிகளை வாங்கியிருக்கிறார்கள். மேலும் 53 இலட்சம் ரூபாய் செலவில் 83 கணினிகள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.



கடந்த 1998, அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத நல்லிணக்கத்தைப் போற்றி, ஜாதிக் கலவரங்கள், சமுதாய பேதங்கள் வரக்கூடாது என்கிற அடிப்படையில் சமூக சீர்திருத்தத் துறை ஒன்றை நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்படுத்தியிருப்பது அனைவரும் பாராட்டத்தக்க அம்சமாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1-05

சுவரொட்டிகள் மற்றும் வாசகங்களில் வன்முறை இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படையிலே நம்முடைய காவல் துறை முனைப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது காவல் துறை லாக்-அப் மரணங்கள் பெருமளவு குறைந்திருக்கின்றன என்பதை நான் எடுத்துக் காட்டிட விரும்புகிறேன். காவல் துறைக்கு ஏற்கெனவே நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு காவலர்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்ல போனால், கடந்த ஆட்சிக் காலத்தில், அம்மையார் ஆட்சிக் காலத்திலே தேர்வு செய்யப்பட்டவர்களைக்கூட பெருந்தன்மையாக ஏற்றுக்கொண்டு, கடந்த காலத்திலே தேர்விலே தவறு நடந்திருந்தாலும்கூட, பாதிக்கப்படக்கூடியவர்கள் தமிழர்கள் என்கின்ற அடிப்படையில் அவர்களையும் ஏற்றுக்கொண்டு, தற்போது 1000 பெண் காவலர்கள் உட்பட 5 ஆயிரம் காவலர்களை நியமிப்பதற்கு நம்முடைய ஒப்பற்ற முதல்வர் அவர்கள் ஆவன செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, தீயணைப்புத் துறையிலே 1057 பேரை நியமிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். காவல் துறையிலே இருக்கின்ற தடய அறிவியல் துறையை எடுத்துக்கொண்டால், மிகச் சிறப்பான முறையில் அந்தத் துறை செயல்பட்டிருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக, அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவன் நாவரசு கொலை செய்யப்பட்ட சம்பவத்திலே மிக வேகமாகச் செயல்பட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அந்தத் துறை செயல்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் எந்த அளவுக்கு Eve-teasing இருந்தது என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இப்போது Eve-teasing என்றால், என்னவென்று கேட்கின்ற அளவுக்கு ஒரு நல்ல நிலையை நம்முடைய ஒப்பற்ற முதல்வர் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்காலிகக் காவலர் பயிற்சிப் பள்ளிகள், ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாட்டில் இருந்தாலும்கூட மேலும் 11 பள்ளிகளை நம்முடைய முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆயத்தீர்வை வருவாயைப் பொறுத்தவரையில் 1996-97-ல் 935 கோடி ரூபாயாக இருந்த வருவாயை இன்று 1834 கோடி ரூபாயாக உயர்த்தி அரசுக்கு வருமானத்தைப் பெருக்கியிருக்கிறார்கள். இப்படி சிறப்பான முறையிலே, காவல் துறையை தன்னிடத்திலே வைத்துக்கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று ஒரு காலத்திலே சொல்லப்பட்டது. இப்போது இந்தியாவிலேயே ஓர் அமைதிப் பூங்காவாக விளங்கக்கூடிய ஒரே மாநிலம், ஒப்பற்ற மாநிலம் தமிழ்நாடு என்று சொன்னால் அது மிகையாகாது என்கிற அளவுக்கு, இந்தத் துறை சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. கடந்த கால வரலாறுகளை நாம் மறந்திருக்க முடியாது. சுப்பிரமணியசாமி எவ்வளவு அலைக்கழிக்கப்பட்டார், நீதிமன்றத்திலே அவமானப்படுத்தப்பட்டார், டி.என். சேஷன் இங்கே வந்தபோதெல்லாம் தாக்கப்பட்டார். தமிழ்நாட்டினுடைய ஆளுநராக இருந்த மேதகு சென்னா ரெட்டி அவர்கள் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற வரலாறுகளை எல்லாம் மறந்திருக்க முடியாது. ஆட்சியிலே இருக்கின்ற காலத்தில்தான் அவர்கள் வரலாறு படைத்தார்கள் என்று சொன்னால், ஆட்சியிலே இல்லாத காலத்திலேகூட எவ்வளவு வன்முறையிலே ஈடுபட்டார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஒரு நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்த காரணத்தாலே, தருமபுரியிலே 3 மாணவிகளை மிகக் கொடூரமாக எரித்து சாகடித்தார்கள் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. சட்டம் ஒழுங்கு, சட்டம் ஒழுங்கு என்று பேசுகின்ற அவர்கள்தான் எந்த காலகட்டத்திலும் சட்டம் ஒழுங்கு கெடுவதற்குக் காரணமாக இருந்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. உங்களுக்கெல்லாம் தெரியும், சமீபத்திலே அந்த அம்மையார் நடராஜன்



அவர்களைப் பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசியலுக்காகச் சொல்லவில்லை (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். காவல் துறை அறிக்கை பற்றி நீங்கள் பேசவேண்டாம். வேண்டாம், அந்தப் பிரச்சினையை நீங்கள் விட்டுவிடுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** இப்போது காவல் துறைக்குச் சவால் விடுகின்ற விதத்திலே ஆட்டின் இரத்தத்தைக் குடிக்கின்ற ஓனாயைப்போல வன்முறையைத் தூண்டிவிட அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது தமிழ்நாட்டில் ஏதாவது வன்முறை ஏற்படாதா, அதை வைத்து நாம் அரசியல் செய்ய முடியுமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற வரையில் இந்தத் துறையிலே வன்முறை தலைதூக்க விடமாட்டார்கள் என்பதை சரித்திரங்கள் நிரூபித்து இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே, கொற்கை கிராமத்திலே ஒரு காவல் நிலையம் வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதுபோலவே, தூசி காவல் நிலையத்தின் எல்லை அதிகமாக இருக்கிற காரணத்தால் அதைப் பிரித்து சிப்காட் வளாகத்திலே ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதைப்போல, மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கக்கூடிய திருவண்ணாமலையிலே, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியின்போது கிரிவலம் செல்லக்கூடிய பக்தர்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு நகரக் காவல் நிலையம்தான் இருக்கிறது. அங்கே இன்னும் ஒரு நகரக் காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். எங்களுடைய மாவட்டத்திலே காவலர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். செய்யாறு காவல் நிலையம் மிகவும் பழமையான காவல் நிலையம். அதற்கு ஒரு கட்டடத்தையும், அதைப்போல மோரணம் காவல் நிலையத்திற்கு ஒரு கட்டடத்தையும் இந்த நிதியாண்டில் நம்முடைய ஒப்பற்ற முதல்வர் அவர்கள் வழங்க வேண்டும். அதைப்போல பிரம்மதேசம் கிராமத்திலே ஒரு தீயணைப்பு நிலையத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று காவல் துறை சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது தமிழகத்தில் நல்ல முறையிலே சட்டம் ஒழுங்கெல்லாம் நிலைநாட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைக்கிறார்கள். அதற்கான முயற்சிகளையும் எடுக்கிறார். ஆனால், நிலைமை என்னவென்றால், ஜனநாயக உரிமைகள் இப்போது பறிக்கப்படுகிற துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரத்திலே நாமெல்லாம் ஜனநாயக அஸ்திவாரத்திலே விஷயங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கு ஏராளமான குறைகள் இருக்கின்றன. மக்கள் அந்தக் குறைகளைத் தெரிவிப்பதற்கு பல்வேறு முறைகளிலே போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கட்சியிலே இருந்த காலத்திலே இதேமாதிரி போராட்டங்களை நடத்தியிருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். இன்று சென்னை நகரத்திலே ஒரு தர்ணா நடத்த வேண்டுமென்றால், அல்லது ஓர் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமென்றால், அல்லது ஒரு ஊர்வலம் நடத்த வேண்டுமென்றால், அதற்கு அனுமதிக்க மனு கொடுத்தால், 7 நாட்களுக்கு முன்பு கொடுத்தால், மறுக்கப்படுகிற அந்தத் தகவல், அதாவது 10 ஆம் தேதி காலையில் நடத்த வேண்டுமென்றால், 9 ஆம் தேதி நள்ளிரவு கொண்டுபோய் கொடுக்கப்படுகிறது, உங்களுக்கு மறுக்கப்படுகிறது என்று. அதற்குப் பிறகு போய் கேட்டால், "நீங்கள் Triplicane-லே நடத்தக்கூடாது; நீங்கள் அண்ணா நகரிலே நடத்தலாம்; அல்லது நீங்கள் வள்ளுவர் கோட்டத்திலே நடத்தலாம்" என்கிறார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், இன்று ஒரு ஜனநாயக இயக்கம் போராடுவது எப்படி என்று போலீசார்தான் நிர்ணயிப்பதா? எங்கு போராட வேண்டும்; என்ன போராட்டம் நடத்த வேண்டும்; நீங்கள் ஆர்ப்பாட்டம் பண்ணக்கூடாது; நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டும்; இப்படியெல்லாம் காவல் துறை direct பண்ணுவதற்கு அவர்களுக்கு எப்படி இந்த உரிமை கிடைக்கிறது; அதிகாரம் கிடைக்கிறது? இன்று ஜனநாயக இயக்கங்களைப் பொறுத்த அளவிலே போராடுவதற்கான அடிப்படையான உரிமைகூட இல்லையா? சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்பதைப் பற்றி; அது பராமரிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி இரண்டு கருத்துகள் இல்லை. ஆகவே, . . . .



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு இயக்கத்திற்கும் அனுமதி மறுக்கப்படுவதில்லை. ஆனால், அது பொதுமக்களினுடைய நன்மையைக் கருதி, சில நேரங்களில் எதிர்க்கட்சிகள் எந்த இடத்தைக் கேட்கிறார்களோ அந்த இடத்திலே போக்குவரத்து மற்றும் பொதுநலனுக்குத் தொல்லை இல்லாமல், எந்த இடத்திலே அந்த ஆர்ப்பாட்டம் நடத்தினால் அமைதி காக்கப்படுமோ அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அவர்கள் அறிவிக்கிறார்கள். எனவே, ஜனநாயகத்திலே யாருக்கும் உரிமைகள் மறுக்கப்படுவதில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அனுமதி மறுக்கப்பட்ட விஷயத்தையும் சுட்டிக்காட்ட முடியும். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், இன்று. . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எதிர்க்கட்சிகள் கேட்ட இடம், நான் சொன்ன காரணத்தினாலே கொடுக்க முடியவில்லை என்று மறுக்கப்பட்டிருக்குமே தவிர, வேறு இடங்களிலே அனுமதி கேட்டால் அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நகரிலே, அரும்பாக்கத்திலே போய் உண்ணாவிரதம் இருப்பதற்கு யார் அனுமதி கேட்டார்கள்? காவல் துறை சொல்கிறது; நீங்கள் அங்கே போய் நடத்திக் கொள்ளுங்கள் என்று. அதேபோல, Triplicane-லே கேட்டால், நீங்கள் . . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். அவரைப் பேசவிடுங்கள். முதலமைச்சர் கடைசியாகப் பதில் சொல்லிக் கொள்வார்கள். நீங்கள் ஏன் இடையிடையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. அரும்பாக்கம் ஏதோ, அருகதையற்ற இடம் என்று மாண்புமிகு உறுப்பினர் நினைத்துவிடக் கூடாது. அங்கேதான் கடந்த கால ஆட்சியிலே அம்பேத்கருக்கே சிலை வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சில இடங்களிலே சிலை வைக்கப்பட்டிருக்கும். பல இடங்களிலே பலபேருக்கு வைக்கப்பட்டிருக்கும். அதுவல்ல பிரச்சினை. அதாவது, கோட்டைக்கு முன்னாலே ஒரு போராட்டம் நடத்துவது என்று வந்தால், அதை காவல் துறைதான் நிர்ணயிப்பதா நீங்கள் இந்த இடத்திலே போய் நடத்திக் கொள்ளுங்கள் என்று? ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை. . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கோட்டைக்கு முன்னால் போராட்டம் என்றால், கோட்டையிலிருந்து கொஞ்ச தூரம், ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி அந்த இடம் வரையிலே வாருங்கள் என்று போலீசார் சொல்லி, அப்படிப்பட்ட போராட்டங்கள் பேரணிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அண்மைக்காலமாக ஆளுங்கட்சியினுடைய பேரணிகளுக்குக்கூட, ஊர்வலத்திற்குக்கூட அண்ணா சாலையில் அனுமதி அளிப்பதில்லை. எந்தக் கட்சிக்கும் அனுமதிப்பதில்லை. ஆளுங்கட்சிகூட, பல தடவை கேட்டும்கூட அண்ணா சாலைப் பகுதியில் அனுமதிக்கப்படவில்லை. எனவே, கோட்டையிலே போராட்டம் என்றால், கோட்டை வாசல் வரையிலே விட்டுவிட்டால், உங்களைப் போல நல்ல தலைவர்களையும் மீறி, யாராவது சமூக விரோதிகள் கோட்டைக்குள்ளே நுழைந்து அசம்பாவிதம் ஏற்பட்டால், அதற்கு உங்களால் பொறுப்பேற்கவும் முடியாது; இயலாது. பொறுப்பேற்றுக் கொள்ள சொல்லக்கூடிய நிலையும் எங்களுக்கு ஏற்படக்கூடாது. எனவேதான், கோட்டைக்குள்ளே போராட்டம்; கோட்டை வாசலிலே போராட்டம் என்பதையெல்லாம் அனுமதிப்பதில்லை.

பிற்பகல் 1-15

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், 7 நாட்களுக்கு முன்னால் மனு கொடுக்கிற நேரத்தில், 4 நாட்களுக்கு முன்னால் கூப்பிட்டு நீங்கள் இன்ன இடத்திலே நடத்துவதற்கு உங்களுக்கு அனுமதி தர முடியாது; வேறு ஏதாவது இடம் சொல்லுங்கள் என்று சொன்னால், அவர்களோடு பேசி முடிவு செய்யலாம். ஆனால், போலீஸ் கடைசி நேரத்திலே last 23rd hour-லே உங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று சொல்கிற அந்த நிலை மாற்றப்பட வேண்டும். இன்று, ஜனநாயக இயக்கத்திலே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கோ, தர்ணா போராட்டம் நடத்துவதற்கோ



இருக்கிற உரிமையைக் கட்டுப்படுத்துவதைப் பொறுத்த அளவில் நான் சொல்லவில்லை. ஆனால், அடியோடு, அதை நடத்துவதற்கு முடியாத ஒரு நிலையை உருவாக்குவது சரியல்ல. எனவே, அதற்குண்டான முறையிலே உள்ள நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அதேபோல நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்று போராட்டம் என்று வந்தால், காவல் துறை அத்துமீறி நடக்கின்ற நிலைகூட ஏற்படுகிறது. உதாரணமாக, மானாமதுரையிலே 30-3-2000 அன்று மக்கள் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று சொல்லி, மண்ணெண்ணெய் விநியோகம் செய்யக்கூடிய கடைக்கு முன்னாலே ஓர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதற்காக போலீஸ் அங்கே போய், ஆட்களை வைத்து விரட்டி, அங்கே கூடிய ஆட்கள் மீது கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. நான் என்ன சொல்கிறேன் என்றால், மண்ணெண்ணெய் சரியான முறையிலே கிடைக்காமல் இருக்கக்கூடிய நேரத்திலே மக்களுக்கு ஆவேசம் வரும்; சில ஆர்ப்பாட்டங்கள் நடக்கும். இதற்கெல்லாம் காவல் துறை அத்துமீறி நடப்பது என்பது சரியல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தவறான தகவல் தந்திருக்கிறார்கள். மண்ணெண்ணெய் விலை மத்திய அரசால் ஏற்றப்பட்டது. அந்த மண்ணெண்ணெய் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறபோது,. அந்த விலைக்கே விநியோகிக்கிறார்கள். அதைத்தான் மக்களுக்கும் சங்கத் தலைவர்கள், சங்க நிர்வாகிகள், விற்பனையாளர்கள் விநியோகிக்கிறார்கள். அதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், இந்த விலைக்கு விற்கக் கூடாது; இந்தச் சங்கத் தலைவர்கள் கொள்ளையடிக்கிறார்கள்; பழைய விலைக்கேதான் கொடுக்க வேண்டும் என்று தகராறு செய்திருக்கிறார்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்கூட கேட்கவில்லை. பஸ் மறியல் என்று சொல்லியிருக்கிறார்கள். பஸ் மறியல் என்று சொன்னதும் போலீஸ் அழைத்துப் போய் இருக்கிறார்கள். மறுபடியும் அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆனால், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், எங்களுடைய தோழர்கள் மீது உடனடியாக ஒரு P.C.R. Case கொடுத்து விட்டார்கள். அதுதான் நடந்த உண்மை.

[2000 மே 12

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல், அமைச்சருக்குக் கிடைத்த தகவல். அல்ல. அமைச்சர் சொல்லியிருக்கிற விஷயத்தை நான் மீண்டும் விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தூத்துக்குடியிலே ஒரு தொழிற்சங்கத் தலைவர். அவர் தொழிற்சங்க வேலைகளிலே ஈடுபடுகிறார் என்பதற்காக நிர்வாகத்திற்கு வேண்டி, அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிற போக்கு — அதாவது, அமிர்தகணேசன் என்ற ஒருவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குக் காவல் துறை முயற்சிக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படியெல்லாம் தொழிற்சங்க ஜனநாயகத்திலே எல்லாம் காவல் துறை தலையிடுவது என்பது சரியல்ல.

இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல நடவடிக்கைகளைப் பொறுத்த அளவிலே காவல் துறை ஒருதலைப்பட்சமாக நடக்கின்றது என்பதற்காக நான் குமரி மாவட்டம் சம்பந்தமாக ஒரு பட்டியலை, ஏற்கெனவே இங்கே ஆளுநர் உரையிலே பேசிய நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதன் அடிப்படையில், அந்தப் பட்டியலைப் போட்டு முதலமைச்சருக்குக் கொடுத்தேன். நான் என்ன சொல்கிறேன் என்றால், அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களிலே, காவல் துறை காலா காலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல; இன்றுவரை அது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உதாரணமாக, 14-9-1999 அன்று கொலை செய்யப்பட்ட பெல்லார்மின் என்ற அந்தக் கொலை வழக்கிலே ஒரு F.I.R. போடப்பட்டிருக்கிறது. அந்த accused-உடைய பெயரும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றுவரை அந்த ஆட்களை கைது செய்யவே இல்லை. சரியான முறையிலே விசாரித்து, charge sheet-ம் கொடுக்கப்படவில்லை. இப்படி ஏராளமான குறைபாடுகள் இருக்கின்றன.

எங்களுடைய கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் என். சங்கரய்யா அவர்கள், 13-9-1999இலே குலசேகரத்திலே பேசிய நேரத்திலே, அந்தக் கூட்டத்திலே கல் எறியப்பட்டது. அது சம்பந்தமாக புகார்



2000 மே 12] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றுவரை அது சம்பந்தமாக யாரும் கைது செய்யப்படவோ, நடவடிக்கை எடுக்கப்படவோ இல்லை. இப்படி காவல் துறை பாரபட்சமான முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோன்று, கள்ளச்சாராயம் இன்றைக்கு எல்லாப் பகுதிகளிலும் கிடைக்கின்ற நிலை . . . (மணியடிக்கப்பெற்றது) எனக்கு 3, 4 நிமிடங்கள் குறுக்கீடு இருந்தது.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் 2 நிமிடங்கள் கொடுக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கள்ளச்சாராயத்தினைப் பொறுத்தவரை, இப்போது பெரிய தொல்லைகள் பல இடங்களிலே வந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, நாகப்பட்டினம் தொகுதியிலே உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தம்புசாமி அவர்கள் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுப்பதற்காக வைத்திருக்கிறேன். அதாவது கள்ளச் சாராயத்தைக் கடத்தக்கூடியவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கீழ்வேலூர் ஒன்றியச் செயலாளர் அவர்களையே மிரட்டுகிற அளவிற்கு விஷயங்கள் சென்று இருக்கின்றன. அதேபோன்று, திரு. தம்புசாமி போன்றவர்களையும் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், காவல் துறையிலே சொன்னால், அவர்கள் இதை கண்டுகொள்வதாகவே இல்லை.

அதேபோன்று இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல இடங்களிலே கொள்ளை என்பது அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய பேருந்து நிலையங்களிலேயெல்லாம், பல ஆட்கள் சுற்றிலும் நின்று கொண்டு பிக்பாக்கெட் அடிப்பது என்பது இப்போது பெரிய நிகழ்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த போலீஸ் போதுமான அளவிற்கு கவனிக்கவில்லை என்பது மட்டுமல்ல, பல இடங்களிலே போலீஸ்காரர்கள்கூட அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்கிற அளவிற்கு புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, போலீஸ்காரர்களை பணியில் சேர்க்கிற நேரத்திலே, அதாவது அவர்களை enrolment செய்கிற நேரத்திலேயும் சரி, அவர்களுக்கு டிரெயினிங் கொடுக்கப்படும் நேரத்திலேயும் சரி, இப்படிப்பட்ட elements-ஐ கண்டறிந்து, அவர்களை காவல் துறையிலேயிருந்து வெளியேற்றுவதற்கும், நல்ல முறையிலே மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களை கொண்டிருக்கிற காவல் துறையாக, அல்லது காவல் படையாக மாற்றுவதற்கு தகுந்த அளவிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு லாக்-அப் மரணங்கள்கூட நடந்து கொண்டிருக்கின்றன. அதையும் நாம் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மற்ற எல்லா இலாக்காக்களிலேயும் மக்களுடைய குறைகளைக் கேட்பதற்காக பல கூட்டங்களை அந்தந்த இலாகாவினுடைய அதிகாரிகள் கூட்டுகிறார்கள். ஏன் காவல் துறை சம்பந்தமான புகார்களை மக்களுடைய பிரதிநிதிகளை, அந்த புகார்களில் இருக்கக்கூடிய ஆட்களை அழைத்துப் பேசுவதற்கு மாவட்டத்திலே இருக்கிற Superintendent of Police-களோ, அல்லது அதேபோன்று, அதிகாரிகள் சில கூட்டங்களை நடத்தி மக்களுக்கு இருக்கின்ற குறைகளைக் கேட்டு, அந்தந்த மட்டத்திலேயே எல்லா விஷயங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வந்து முறையிட்டுக் கொண்டிருப்பது என்பது நடைமுறையில் சாத்தியம் அல்ல. கிராமப்புற மக்கள் எல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வந்து சொல்வது என்பது மிகவும் கஷ்டம். அப்படிப்பட்ட ஒரு set-up உருவாக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, (மணியடிக்கப்பெற்றது) பல வருடங்களான கேஸ்கள் இன்றைக்கும் முடிவடையாமல் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக "வாசாத்தி" வழக்கு 1996-லேயிருந்து இன்றுவரை நடந்து முடியவில்லை. அதனால், அதற்கு ஒரு Special Court ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெண்கள் சம்பந்தமாக, வரதட்சணை கொடுமை, பாலியல் பலாத்காரம், இதுபோன்ற நிகழ்ச்சிகள் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கின்றன



என்பதற்கான விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் நான் அதைப் படிக்கவில்லை. அது சம்பந்தமாக மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற நம்முடைய பஞ்சாயத்து தலைவர்கள், உதாரணமாக, என்னுடைய மாவட்டத்திலே 'எடைக்கோடு' பஞ்சாயத்துத் தலைவர் மேரி ஜோசபின், அதேபோன்று புலியூர்க்குறிச்சி பஞ்சாயத்து தலைவர் சாரதா போன்றவர்கள், காவல் நிலையத்திற்குப் போய் விசாரிக்கப் போனால், காவல் துறை அதிகாரிகள் மிருகத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற முறையிலே புகார்கள் வந்து இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே, நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, இப்போது கற்பழிப்புகள் சம்பந்தமாக புகார்கள் வந்தால், அதைக் கண்டு கொள்ளவில்லை என்ற முறையிலே அரசு நடந்து கொள்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மன்னிக்கவும், உதாரணமாக ஐ.ஏ.எஸ்., அதிகாரி, கலைவாணன் சம்பந்தமாக ஒரு புகார் வந்தது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட விஷயங்களைப் பொறுத்த அளவிலே, என்ன உண்மை என்று தெரிந்துகொள்வதற்கு மக்கள் ஆவலோடு இருக்கிறார்கள். இன்று இது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மக்களுக்குச் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) அவ்வளவுதான், நான் ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று உங்களுக்குக் கொடுக்க முடியாது. . . .

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** காவல் துறையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 24 மணி நேரமும் காவல் துறையினர் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். 8 மணி நேரம் வேலை என்று இந்த காவல் துறையிலே அமல்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், காவல் துறையைச் சார்ந்தவர்கள், பல நேரங்களிலே 24 மணி நேரமும் அவர்கள் வேலை செய்து கொண்டிருப்பதன் காரணமாக, சில நேரங்களிலே அவர்களை அணுகுகிறபோது மக்களிடம் அந்த கோபதாபங்களை காட்டுகிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது அவர்களுக்கு மூன்று . . . .

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சொல்லியாகிவிட்டது திரு. சி. ஞானசேகரன்.

**THIRU J. HEMACHANDRAN:** I will finish in one minute.

**HON. SPEAKER:** You have been saying `one minute' for the past five minutes. I cannot allow you. Thiru C. Gnanasekaran.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், அவர்களுக்கு சங்கம் அமைப்பதற்கான உரிமை இருக்கிறது. அதற்கு அனுமதிக்க வேண்டும். . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை, ஆயத் தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடைசியிலே பேசக்கூடிய நேரத்தில் காவல் துறையினர்களுடைய கோரிக்கையை விட்டுவிடக் கூடாது என்பதற்காக முதலிலே கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேன்.

1996 ஆம் ஆண்டு காவலர்களாக 34 ஆண்டுகளுக்கு முன்னாலே, இந்தப் பணியிலே சேர்ந்தவர்களுக்கு, இன்னும் பதவி உயர்வு அளிக்கப்படவில்லை என்கிற நிகழ்வை, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஹெட் கான்ஸ்டேபிளாக 1987 ஆம் ஆண்டு அவர்களுக்கு பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. 25 ஆண்டு காலம் முடித்துவிட்ட காரணத்தால், அவர்களை உதவி ஆய்வாளராக, உடன் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவையிலே 1972 ஆம் ஆண்டு பணியிலே சேர்ந்தவர்கள், இப்பொழுது ஹெட் கான்ஸ்டேபிளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இன்னும் சப்-இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு கொடுக்கவில்லை. அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சென்னை மற்றும் பல மாவட்டங்களில் இருக்கக்கூடிய ஸ்பெஷல் சப்-இன்ஸ்பெக்டர் என்று புரமோஷன் கொடுக்கப்பட்டவர்கள், 1-6-1998 ஆம் தேதி அவர்களுக்கு, அந்தப் புரமோஷன் கொடுக்கப்பட்டாலும்கூட, இன்னும் அவர்களுக்கு ஹெட் கான்ஸ்டேபிள் சம்பளமே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டருக்கான சம்பளத்தை இன்னும் ஏனோ கொடுக்காமல் காலம் தாழ்த்தப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு உடனே சப்-இன்ஸ்பெக்டருக்கான சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அவர்கள் சிவப்பு கயிறை தோளிலே அணிவது என்பது, ஏதோ ஆந்திர போலீசா என்று பலபேர் சந்தேகப்படக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினாலே, காக்கிக் கயிறையே அவர்கள் தோளில் போடுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆயுதப் படையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஹெட் கான்ஸ்டேபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு பெற வேண்டுமென்று சொன்னால் 10% அவர்களுக்கு எப்பொழுதுமே கொடுத்து, அவர்களை தாலுகா காவல் நிலையம் போன்ற எல் & ஓ.க்கு எல்லாம் அனுப்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், 1991 ஆம் ஆண்டே அதற்கான தேர்வுகள் எல்லாம் நடத்தக்கூடிய ஒரு நிகழ்வு நிறுத்தப்பட்ட காரணத்தாலே, அவர்களுக்கு அந்தப் பதவி கிடைக்காமல் இருக்கிறது. அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு ரிஸ்க் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே 50 ரூபாய் கொடுத்துக் கொண்டிருப்பதைவிட, அவர்களுக்கு ஒரு ஆளுக்கு 1000 ரூபாய் என்றுகூட ரிஸ்க் அலவன்ஸ் கொடுத்து, அவர்களை நீங்கள் மகிழ்விக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சுப் பணியாளர்களுக்கு, எப்படி களப் பணியாளர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்து நீங்கள் செய்கிறீர்களோ, அதைப் போலவே, அமைச்சுப் பணியாளர்களுக்கும் சாதாரண களப் பணியாளர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளத்தைக் கொடுத்து, நீங்கள் அதற்கான அரசாணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் பொதுவாக இருக்கக்கூடிய குறைகளை நான் சொல்கிறபோது, அது இந்த அரசையோ, முதல்வர் அவர்களுடைய

உள்ளத்தையோ புண்படுத்த, சொல்லக்கூடிய கூற்றாக நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. காவல் துறையைப் பண்படுத்துவதற்காகவும், அங்கே குறை இருப்பதைக் களைந்து, நிறைவாக அதை மாற்றுவதற்காகவும் சொல்லப்படக்கூடிய கருத்துக்களாக நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையிலே, எதிர்க்கட்சி என்ற முறையில் நாங்கள் சொல்ல வேண்டிய பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினாலே, சிலவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இலஞ்சம் இல்லாத ஒரு சமுதாயத்தைப் படைக்க நாம் எல்லோருமே முற்பட்டோம். அதேபோல 1996 ஆம் ஆண்டு நாம் வாக்கு கேட்கிறபோது, இலஞ்சலாவண்யம் அதிகமாக தாண்டவம் ஆடிய காரணத்தினாலே, இலஞ்சலாவண்யத்தை பெருக்கியவர்களை உடனடியாக நீக்கிவிட்டு நல்லாட்சியை படைத்து இலஞ்சமற்ற ஒரு சமுதாயத்தைப் படைப்போம் என்ற வாக்குறுதியைத் தந்துதான் இங்கே ஆட்சிப்பீடத்திற்கு வந்திருக்கிறீர்கள். ஆனால், இன்று இலஞ்சத்தை, இந்த அரசு ஒழித்து இருக்கிறதா என்று சொன்னால், 10 சதவிகிதம்தான் நீங்கள் ஒழித்திருப்பீர்கள். இன்னும் 90 சதவிகிதம், எந்த டிபார்ட்மெண்ட்டுக்குப் போனாலும்— மேல்மட்ட அளவில் நான் சொல்லவில்லை. பொதுவாக அது தாலுகா ஆபீசாக இருந்தாலும் சரி, காவல் நிலையமாக இருந்தாலும் சரி, ஆர்.டி.ஓ. ஆபீசாக இருந்தாலும் சரி, சேல்ஸ் டாக்ஸ் ஆபீசாக இருந்தாலும் சரி, இலஞ்சமே இல்லாத ஒரே ஒரு துறை, எங்களுக்குத் தென்படுவது, எது என்று சொன்னால் நம்முடைய பேரவைத் தலைவருடைய ஆளுகைக்கு உட்பட்ட இந்த அசெம்பிளி செக்ரட்டிரியேட் ஒன்றில்தான் இலஞ்சம் இல்லாமல் இருக்கிறதேயொழிய, மற்ற எல்லாத் துறைகளை எடுத்துக்கொண்டாலும்— இலஞ்சம் தமிழ்நாட்டில் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றது.

நான்கு முறை முதலமைச்சராக வந்து, பழுத்த அனுபவம் இருக்கக்கூடிய, நம்முடைய முதல்வர் அவர்கள், இந்த இலஞ்சத்தை ஒழிப்பதற்கு, நீங்கள் ஏதாவது ஒரு ஸ்கீமை எவால்வ் செய்யவில்லையென்று சொன்னால், நிச்சயமாக தமிழ்நாடு நம்மை மன்னிக்காது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இலஞ்சத்தை எல்லா துறைகளிலும்— நாம்கூட விஜிலென்ஸ் & ஆண்டி கரெப்ஷன் டிபார்ட்மெண்டை போடுகிறோம். வேலியே பயிரை மேய்வதைப்போல, இவர்களே ஆர்.டி.ஓ. ஆபீசிலே மாதா மாதம் மாமூல் வாங்கிவிடுகிறார்கள். அல்லது ஒரு சேல்ஸ் டாக்ஸ் ஆபீஸுக்குப் போய் மாமூல் வாங்கிவிட்டு வந்துவிடுகிறார்கள்.



விஜிலென்ஸ் & ஆண்டி கரெப்ஷன் நாம் எதற்காகப் போடுகிறோமோ, அந்த நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றாமல், அவர்களே இப்படி இலஞ்சத்தை வாங்கி, தமிழகத்தை இன்று இலஞ்சலாவண்யத்திலே மூழ்கடித்துக் கொண்டிருப்பது மிகவும் கேவலமாக இருக்கிறது. மங்கை சூதகம் ஆனால் கங்கையிலே போய்க் குளிக்கலாம். ஆனால், கங்கையே சூதகம் ஆனால் எங்கே போய்க் குளிப்பது?

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, இந்த இலஞ்சத்தை ஒழிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஏதாவது ஒரு திட்டத்தை வகுத்து, நாங்கள் இந்த ஆபீசுக்குப் போனோம், இலஞ்சம் கொடுக்காமல் நாங்கள் காரியத்தை சாதித்துவிட்டு வந்தோம்; இப்படி ஆஸ்பத்திரிக்குப் போய் ஒரு Wound Certificate-ஐ காசு கொடுக்காமல் வாங்கினோம். அதேபோல, தாலுகா ஆபீசுக்குப் போய் ஜாதி சான்றிதழை காசு இல்லாமல் வாங்கினோம் என்ற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கித் தந்தால்தான், தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும். ஆகவே, இலஞ்சத்தை ஒழிப்பதற்கு ஒரு நல்லத் திட்டத்தை உருவாக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல டிராபிக் போலீஸ். டிராபிக் போலீசைப் பார்த்தால், எங்கு பார்த்தாலும் திடீர் திடீர் என்று காரை நிறுத்திவிடுகிறார்கள் அல்லது லாரியை நிறுத்தி விடுகிறார்கள். சில நேரங்களிலே வண்டி மாடு போகிறபோது நீர் குடிப்பதற்காக மாடு அங்கஙகே நின்று விடும். அதைப்போல ஆங்காங்கே வண்டிகள் இலஞ்சத்திற்காக நிற்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதையும் தடுத்து நிறுத்துங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாராயம். சாராயப் பானைகள் மீது துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என்று சொன்னார் முதல்வர் அவர்கள். ஆனால், சாராயம் ஊர்தோறும், தெருத் தெருவாக— டீக்கடைகூட திறந்து இருக்கிறதோ, இல்லையோ— சாராயக்கடை உடனடியாக, காலங்காலையிலே திறந்துவிடுகிறது. எங்கு பார்த்தாலும் இப்படி சாராயம் தமிழகம் எங்கும் இருந்து கொண்டிருக்கிறது. இத்தனை கோடி ரூபாயை செலவழித்துத் துறையைப் போட்டு நாம் வைத்திருக்கிறோம். ஆனால், சாராயத்தை

ஒழித்திருக்கிறோமா என்று சொன்னால், அதிலே நாம் 90 சதவிகிதம் தோற்றிருக்கிறோம் என்பதை நாம் வெளிப்படையாக ஒத்துக்கொண்டாக வேண்டும். 10 சதவிகிதம் ரெய்டுக்கு ஒரு நாளைக்குப் போகிறார்கள். அன்றைக்கு மட்டும் வேக, வேகமாகப் பிடிக்கிறார்கள். ஆனால் ரெய்டுக்குப் போய் பிடித்தவுடனே compound என்று அந்த offence-ஐ வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால் compound-ஐ முடித்து உடனடியாக fine கட்டிவிட்டு, அடுத்த நிமிடம் வந்து சாராயம் விற்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கொடுமை. ஆகவேதான், நீங்கள் உடனடியாக, சாராயம் வைத்திருந்தால் அதை non-bailable என்று சாராயச் சட்டத்திலே வைத்து, compounding offence ஆக வைத்துக் கொள்ளாமல் அவர்களைக் குறைந்தபட்சம் 6 மாத காலம் சிறையிலேத் தள்ளுவதற்குக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்து, சாராயத்தை தமிழகத்திலிருந்து நீங்கள் அறவே விரட்ட வேண்டும்.

அதேபோல பூரண மதுவிலக்கு. பூரண மதுவிலக்கை நீங்கள் படிப்படியாக கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வீரப்பன் இஷ்யூ. நான் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே பேசியிருக்கிறேன். அப்போது அவர்கள் சொல்வார்கள். அவன் இங்கில்லை, கர்நாடக எல்லைக்குப் போய்விட்டான் என்று. அதையேதான் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், நான் ஒருமுறை 1996 ஆம் ஆண்டு இந்த அவையிலே பேசுகின்றபோது, அவன் நம்முடைய தமிழ்நாட்டு எல்லையில் இருந்தால் அவனை எப்போதோ பிடித்திருப்போம். அவன் கர்நாடகாவுடைய எல்லையிலே இருக்கிறான் என்று சொன்னார்கள். இதே தமிழ்நாட்டு எல்லையிலே வீரப்பன் இன்னும் இருந்துகொண்டு, எவ்வளவோ அட்டகாசங்களைச் செய்து கொண்டிருக்கிறான். அவனுக்கு விடுதலைப் புலிகளுடைய ஆதரவு இருக்கிறது என்று சொல்கிறார்கள்; நக்சலைட்டுகள் அவனைச் சுற்றி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். Campaign அங்கே நடத்திக் கொண்டிருக்கிறான் என்று சொல்கிறார்கள். இப்படி அரசுக்குச் சவாலாக இருந்து கொண்டிருக்கிற வீரப்பனை நீங்கள் என்றுதான் பிடிக்கப் போகிறீர்கள்? நக்கீரன் எடிட்டர் கோபால்கூட போய் அவர்களோடு எல்லாம் பேசி, பேட்டி எடுத்து, டி.வி.யிலே எல்லாம் போடக்கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னால், இன்று டி.ஜி.பி.யாக, நாம் ஐ.பி.எஸ். படித்தவர்களை வைத்துக்கொண்டு இருப்பதைவிட அந்த நக்கீரன் கோபாலையே டி.ஜி.பி.யாக போட்டுவிடலாம் என்று அல்லவா நமக்குச் சொல்லத் தோன்றுகிறது? ஏன் இத்தனை டி.ஜி.பி.களை வைத்துக்கொண்டிருந்தும்கூட, இத்தனை அதிகாரிகளை வைத்திருந்தும்கூட ஒரு வீரப்பனை இன்னும் உங்களாலே பிடிக்க முடியவில்லை? சவாலாக இருந்து கொண்டிருக்கிற வீரப்பனை நீங்கள் என்றுதான் பிடிக்கப்போகிறீர்கள்? எப்போதுதான் அவனுடைய அட்டகாசத்தை ஒடுக்கி மீண்டும் ஒரு சமூக நிலையை உருவாக்கப் போகிறீர்கள்? முதுமலைக் காட்டுக்குப் போனால், எம்.எல்.ஏ-க்களோடு ஒரு கமிட்டியிலே போனபோது, மசனகுடியிலே, அந்த guest house-லே திடீரென்று உடனடியாக நீங்கள் மூட்டை கட்டுங்கள் என்று துரத்தியடித்து விட்டார்கள். காரணம், அவனுடைய நடமாட்டம் இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். இப்படி பயந்து, பயந்து செத்துக் கொண்டிருப்பதைவிட வீரப்பனுக்கு நீங்கள் உடனடியாக ஒரு முடிவு கட்டி, நீங்கள் அவனை கைது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



Finance Companies. நிறைய இடத்தில் அவர்கள் கோடி கோடியாக பணத்தை டெபாசிட் என்று வாங்கி ஏமாற்றியிருக்கிறார்கள். சில பொருளாதாரக் குற்றங்கள் மீது வழக்கு பதிவு செய்ய இப்போது சட்டத்தை இயற்றி இருக்கிறோம். ஆனால், அந்தச் சட்டத்தை நாம் இயற்றி இருந்தாலும்கூட, அதிலே குறிப்பாக, ஆரணி என்கிற இடத்திலே சீனன் என்பவர் 20 கோடி ரூபாய்க்கு மேலே ஏப்பம் விட்டிருக்கிறார். கிரைம் நெம்பர் 1/2000 என்று வழக்கை புத்தகத்திலே பதிவு செய்கிறார்கள். ஆனால், அவரை கைது செய்யவில்லை. நீங்கள் நெடுநாட்களாக அவரை கைது செய்யாமல் விட்டதன் விளைவு அவர் anticipatory bail வாங்கிக் கொண்டு வந்து விடுகிறார். நீங்கள் சட்டத்தைப் போட்டு, கோடிகோடியாக கொள்ளை அடித்தவர்களைக்கூட பிடிக்க மறுக்கிற காவல் துறை எதற்காக தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது? இதற்காகவா நாம் கோடிக் கோடியாக பணத்தைச் செலவழித்து பல காவலர்களை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்து, போர்க்கால அடிப்படையில் கைது செய்தால்தான் ஏதாவது பணத்தை ரெக்கவர் செய்ய முடியும். உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்க முடியும்.

அதேபோல, வேலூரிலே, குடியாத்தத்திலே பல நிதி நிறுவனங்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கிலே கொள்ளை அடித்து இருக்கிறார்கள்.

தமிழ்நாடு பூராவும் இப்படி நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. உடனே அதை என்ன சொல்கிறார்கள் என்றால் சிவில் என்கிறார்கள். Deposit-ல் bond என்று கொடுத்துவிட்டிருக்கிற காரணத்தினாலே சிவில் என்கிற காரணத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று காவல் துறை dodge செய்து கொண்டிருக்கிறது. காவல் துறைக்குத் தேவைப்பட்டால் அதை சிவில் என்பார்கள். யாராவது அவர்களுக்கு வேண்டியவனாக இருந்தால் உடனடியாக சிலவற்றை சிவிலாக இருப்பதையும் கிரிமினலாக மாற்றுகிறார்கள். ஆகவே இந்த கிரிமினல், சிவில் என்று சொல்லி காலத்தைக் கடத்தி, தமிழ்நாட்டு மக்களை மொட்டையடிப்பதைவிட காவல் துறையில் சட்டப்படி ஒழுங்காக நடவடிக்கைகள் எடுத்து, ஒரு நியாயத்தை வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

'எப்.ஐ.ஆர்.' காவல் நிலையத்தில் போய் போடுகிறபோது 'எப்.ஐ.ஆர்.' போடுவதற்கே சில நேரங்களில் காசு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. 'எப்.ஐ.ஆரே' போடாமல் சில நேரங்களில் வெறும் ஒரு பி.ஆர். - பெட்டிஷனாக மட்டும் ரிஜிஸ்டர் பண்ணி கீழே கையெழுத்துப் போட்டு கையில் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். 'எப்.ஐ.ஆர்.' போடாமல் சில நேரங்களில் 'ப்ராபர்டி அஃபன்ஸ்' என்று வந்துவிட்டால் காவல் துறை நாங்கள் உடனே கேஸ் ரிஜிஸ்டர் பண்ணினால் ரெக்கவரி காட்ட வேண்டும். ரெக்கவரி கிடைக்குமோ, கிடைக்காதோ, நாங்கள் 'எப்.ஐ.ஆர்.' போட மாட்டோம். அதிலே ரெக்கவரி கிடைத்தவுடன் பார்த்துக்கொள்ளலாம், போங்கள் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே நீங்கள் இப்படி 'எப்.ஐ.ஆர்.' போடாமல் இருப்பவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, எந்த ஒரு குற்றமாக இருந்தாலும், பிராபர்டி கிடைத்தால் கிடைத்தது என்று சொல்லப் போகிறார்கள். இல்லையென்று சொன்னால், இல்லை என்றுதான் சொல்லப் போகிறீர்கள். அதற்காக முதலிலேயே நீங்கள் ரெக்கவரி செய்தாக வேண்டுமென்ற ஒரு கண்டிப்பு இருக்கிற காரணத்தாலே 'இன்ஸ்பெக்ஷனில்' நாளைக்கு அதிகாரிகள் பிடித்துக்கொள்வார்கள். அதனால் நாங்கள் ரெக்கவரி ஆன பிறகுதான் 'எப்.ஐ.ஆர்.' போடுவோம் என்று சொல்வது சரியல்ல. அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



தமிழ்நாடு முழுவதும் இப்போது நிறைய கட்ட பஞ்சாயத்துக்கள், ரௌடி ராஜ்யம் நிறைய வளர்ந்து போய்விட்டது. அதற்குச் சில பேர் கட்சி மாச்சரியம் இல்லாமல், ஆளும் கட்சி மற்ற கட்சிகள் எல்லாம் சேர்ந்துகொண்டு இப்போது காவல் நிலையத்தை தங்களுடைய கட்டுக்கோப்பிற்குள் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை பல இடங்களிலே இருந்து கொண்டிருக்கிறது. சில நேரங்களில் வீடு காலி பண்ணுகிறவர்களிடமிருந்து இலட்சம் இலட்சமாகப் பணத்தை வாங்குகிறார்கள். இலட்சம் இலட்சமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு, வீடு காலி செய்கிறவர்களை இன்று காவல் துறை கண்டுகொள்ளாமல் இருந்துகொண்டிருக்கிறது.

அதேபோல் சென்னையை எடுத்துக்கொண்டால், இப்போது நிறைய கடத்தல்கள். அதாவது சுமோ, சஃபாரி போன்ற வண்டிகளில் ஆளைத் தூக்கிக் கொண்டுபோய், பணத்தைப் பறித்துக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் ஆயில் டாங்கர்கள்.

**HON. SPEAKER:** I gave you time to speak from 1-25. I give you two more minutes.

**திரு. சி. ஞானசேகரன்:** கொஞ்சம் எக்ஸ்டெண்டு பண்ணுங்கள். சென்னையிலேயிருந்து வாலாஜாபேட்டைக்குச் சென்று கொண்டிருந்த ஒரு ஆயில் டாங்கரிலிருந்த டிரைவர், கிளீனரைக் கொன்றுவிட்டு, பிறகு வாலாஜாபேட்டையிலே வண்டியை கொண்டுபோய் விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அதேபோல் கும்மிடிப்பூண்டி அருகிலே ஒரு இடத்தில் ஆயில் டாங்கரில் இருந்தவர்களை எல்லாம் கொண்டு போனார்கள். அதையும் கண்டுபிடிக்கவில்லை. என்னுடைய தொகுதியில் காட்பாடி தாலுக்கா ஆபீசிலிருந்த ஜீப்பையே கடத்திக்கொண்டு போனார்கள். இன்றுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படி எத்தனையோ - அரசாங்கப் பொருள்களாக இருந்தாலும் கண்டுபிடிக்க மாட்டேன் என்கிறார்கள், பிரைவேட் கார், வண்டி என்றாலும் கண்டுபிடிக்க மாட்டேன் என்கிறார்கள். காவல் துறையை எதற்காக நாம் வைத்திருக்கிறோம்? ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஒரு 'டெட் லைன்' கொடுத்து, நீங்கள் உடனே இவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டு, அந்த வகையில் இந்த கட்ட

பஞ்சாயத்திலிருந்து ரௌடி ராஜ்யத்திலிருந்து தமிழ்நாட்டு மக்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 'ஈவ் டீசிங்'. 'ஈவ் டீசிங்' குறைந்துவிட்டதாக அருமை நண்பர் அன்பழகன் சொன்னார்கள். 'ஈவ் டீசிங்' இப்போது பஸ்களில் நிறைய இடங்களிலே இருந்துகொண்டிருக்கிறது. அதேபோல் கல்லூரி ஆரம்பித்தவுடன் 'ராக்கிங்' என்று பார்த்தால், நிறைய அபென்ஸ் இருந்துகொண்டிருக்கிறது. அதிலே காவல் துறை கண்டிப்போடு நடந்துகொண்டு, 'ஈவ் டீசிங்' 'ராக்கிங்' போன்றவற்றை அவர்கள் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அருமை நண்பர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்கிறபோதுகூடச் சொன்னார்கள். அவர் சொல்ல வந்தது, ஏற்கெனவே நாங்கள் முன்பெல்லாம் போராட்டம் நடத்துகிறபோது கவர்ன்மென்ட் கெஸ்ட் ஹவுஸ் அருகிலே எல்லோரையும் - பேரணி நடந்தாலும் சரி, உண்ணாவிரதம் இருந்தாலும் சரி, அங்குள்ள எம்.எல்.ஏ.க்களை வாழ்த்தக் கூப்பிடுவார்கள். போய் வாழ்த்திவிட்டு நாங்கள் வந்துவிடுவோம். நீங்கள் இப்போது அண்ணா ஆர்ச், இல்லாவிட்டால் வள்ளுவர் கோட்டம் என்று சொனனால், போய் வருவதற்குள் டிராஃபிக்கில் இரண்டு மணி நேரம் அதற்கு ஆகிவிடுகிறது. எம்.எல்.ஏ.க்கள் அங்கு போகமுடிவதில்லை. அவர்களும் பாவம் எந்த இடம் என்று தெரியாமல் அலைகிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கெஸ்ட் ஹவுஸ் அருகே, இதுபோன்ற போராட்டங்கள் நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, இந்தக் காவல் நிலையச் சாவுகள். Custodial death - ஏற்கெனவே நேற்றுகூட விவாதம் வந்தது. இந்த ஆட்சி 1996-ல் ஏற்பட்ட பிறகு 1996-ஆம் ஆண்டு 13 Custodial deaths; 1997-ஆம் ஆண்டு 16 Custodial deaths; 1998 ஆம் ஆண்டு 8 Custodial deaths; 1999-ஆம் ஆண்டு 8 Custodial deaths. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பலமுறை எச்சரித்தும்கூட, மனித உரிமைகள் மீறப்பட்டு, இன்று காவல் நிலைய மரணங்கள் என்று ஏற்படுவது இந்த ஆட்சிக்கு விழக்கூடிய ஒரு அடியாகத்தான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். யாரோ ஒருவன் அடிபட்டு இறந்தான் என்பதைவிட அந்த ஒவ்வொரு அடியும் இந்த ஆட்சியின்மீது விழுந்த அடி என்று கணக்கில் எடுத்துக்கொண்டு, நீங்கள் காவல் நிலைய மரணங்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்ததாக துப்பாக்கிச் சூடு. இந்த ஆண்டு மட்டும் 35 இடங்களில் நடந்திருக்கிறது. இந்தத் துப்பாக்கிச் சூடு நடக்கக்கூடிய அளவிற்குப் பல கலவரங்கள் வருகிறபோது, உளவுத் துறை இதையெல்லாம் கண்டுபிடித்து, ஓரளவிற்கு சாதிக் கலவரங்கள் வருகின்றன என்று சொன்னால், உளவுத் துறையிலே உள்ளவர்கள் உடனடியாகக் கண்டுபிடித்து, தடுத்து நிறுத்துவதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுத்து, அவற்றைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் உளவுத் துறை என்பதை இன்று ஏதோ நாம்கேவாஸ்தே - சும்மா அப்படியே வைத்திருக்கிறோமே ஒழிய, அவர்கள் சரியாகக் கடமையைச் செய்து, இந்த நேரத்திலே இது நடக்கும் என்று கணிக்கக்கூடிய துறையாக இல்லை. சில நேரங்களில், பத்திரிகையாளர்களிடம் கேட்டு, அந்தக் கதைகளைத்தான் சொல்கிறார்கள். இதுதான் விளக்கமாக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்தாகிவிட்டது. (குறுக்கீடு) நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் ஒன்றே ஒன்று என்று சொல்லிக்கொண்டு, 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் அந்த ஒன்றை நாளைக்கு எதிர்க்கட்சித் தலைவர் மூலமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் இதோ முடித்துவிடுகிறேன். குற்றங்களைப் பொறுத்த அளவில், குறைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். சில நேரங்களில் ஆதாயக் கொலையாக எடுத்துக் கொண்டாலும் சரி, கூட்டுக் கொள்ளையாக இருந்தாலும் சரி, கொள்ளையாக இருந்தாலும் சரி, பூட்டை உடைத்தல், பெரும் களவு, சிறு களவு என்ற வகையில், நீங்கள் பர்சன்டேஜ் கணக்கைப் பார்த்து, நாங்கள் 60 சதவீதம் பிடித்துவிட்டோம், அல்லது 70 சதவீதம் பிடித்துவிட்டோம் என்று சொன்னாலும்கூட, இன்று இதுபோன்ற குற்றங்கள் நிறைய கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன.

பிற்பகல் 1-40

வரதட்சணைக் கொடுமையிலேகூட சில வழக்குகள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. வரதட்சணை மரணமாக இருந்தாலும் சரி, வரதட்சணைக் கொடுமையாக இருந்தாலும் சரி, யார் குற்றவாளி என்பது தெரிந்திருக்கிறது. அப்படி தெரிந்திருந்த குற்றவாளிகளைக்கூடப் பிடிக்க முடியாமல் ஒரு காவல் துறை இருப்பது மிகவும் மிகவும் வேதனை அளிக்கின்றது என்பதை . . .

[2000 மே 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (15-5-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

163. தமிழ்நாடு மாநிலம் அல்லாத இன்னொரு மாநிலத்தில் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி ஒன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளதும், 1998 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தையொட்டி (மத்தியச் சட்டம் 59/1988) வழங்கப்பட்ட தேசிய அனுமதி ஒன்றின்கீழ் தமிழ்நாடு மாநிலத்தில் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டதுமான சரக்குகள் ஏற்றிச் செல்லும் ஒரு வண்டியைப் பொறுத்தவரையில் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியை மாற்றியமைப்பது தொடர்பாக உள் (போ.3) துறையின் 24-12-1999 ஆம் நாளிட்ட 1695 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

164. இருங்காட்டுக்கோட்டை, திருவாளர்கள் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியை 1-10-1998 ஆம் நாளிலிருந்து 30-9-2012 ஆம் நாள் வரையிலான பதினான்கு ஆண்டு காலத்திற்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு தள்ளிவைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 15-12-1999 ஆம் நாளிட்ட 260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) (53) (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

165. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-1-2000 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



2000 மே 12]

[1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

166. 1996-97 ஆம் ஆண்டு மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளுக்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

167. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

260. மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

261. மானியக் கோரிக்கை எண் 15 - தமிழ்நாடு காவல் துறையின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

262. மானியக் கோரிக்கை எண் 16 - தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

263. தமிழ்நாடு காவல் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறு வெளியீடு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

264. தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறு வெளியீடு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

265. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை (1999-2000).

266. மதிப்பீட்டுக் குழுவின் முப்பதாவது அறிக்கை (1999-2000).

267. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து எட்டாவது அறிக்கை (1999-2000).

268. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஒன்பதாவது அறிக்கை (1999-2000).

[2000 மே 12

269. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபதாவது அறிக்கை, (1999-2000).

270. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து ஒன்றாவது அறிக்கை (1999-2000).

271. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை (1999-2000).

272. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை (1999-2000).

273. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை (1999-2000).

274. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை (1999-2000).

275. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பதாவது அறிக்கை (1999-2000).

276. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை (1999-2000).

277. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை (1999-2000).

278. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை (1999-2000).

279. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை (1999-2000).

280. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை (1999-2000).

281. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை (1999-2000).

282. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை (1999-2000).



2000 மே 12]

283. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை (1999-2000).

284. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை (1999-2000).

285. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை (1999-2000).

286. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து எட்டாவது அறிக்கை (1999-2000).

287. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை (1999-2000).

288. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை (1999-2000).

# இணைப்பு I

*(66 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 2

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மாநில ஆயத்தீர்வை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

### முன்னுரை

1.1. தமிழ்நாட்டின் மதுவிலக்குக் கொள்கை காலப்போக்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை ஒட்டியும், மக்களின் மன ஓட்டத்தில் நிகழ்ந்துவரும் மாற்றங்களின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டு வருகிறது. அண்டை மாநிலங்கள் தங்களது மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்திவிட்ட நிலையில், தமிழ்நாடு மட்டும் முழு மதுவிலக்குக் கொள்கையை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. தற்போது நிலவி வரும் சூழலில், பூரண மதுவிலக்கைப் பின்பற்றுவதோ அல்லது தற்போது நடைமுறையில் உள்ள மதுவிலக்குக் கொள்கையை தளர்த்துவதோ பொருத்தம் இல்லாதது மட்டுமின்றி, அதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் இழப்பேற்படும். எனவேதான், இந்த அரசு இடைப்பட்டதொரு கொள்கையைப் பின்பற்றி வருகிறது. மதுவிலக்குச் சட்டத்தினை தீவிரமாக அமல்படுத்தி வரும் அதேநேரத்தில், மேம்பட்ட ஆய நிர்வாகத்தை உறுதி செய்துகொள்வதும் அரசின் குறிக்கோளாகும்.

### ஆயத்தீர்வை வருவாயின் வளர்ச்சி

1.2. அரசுக்கு வருவாய் என்ற கோணத்தில் பார்த்தால், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறை, பெருமளவில் வருவாய் ஈட்டித்தரும் ஒரு துறையாகும். மக்களுக்குத் தேவையான நலத்திட்டப் பணிகளை மேற்கொள்ள கூடுதல் வருவாய் திரட்டும் நோக்கத்துடன், தற்போதைய அரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த நான்காண்டுகளில், ஆயத்தீர்வை வருவாய் வெகுவாக அதிகரித்துள்ளது. தற்போதைய அரசு பதவியேற்பதற்கு முன்னர், 1995-96 ஆம் ஆண்டில் மொத்த ஆயத்தீர்வை வருவாய் ரூ. 935 கோடியாக இருந்தது. இது, 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 1834 கோடியாக இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை சில்லறைக் கடைகளை ஏலம்

விடுவதற்குரிய நடைமுறைகளை மாற்றியமைத்தது. குழு அமைத்துக்கொண்டு ஏலமுறையைக் குலைக்கும் முயற்சியைத் தடுத்தது மற்றும் அரசுக்கு வருவாய் இழப்பைத் தவிர்த்திட ஏலக் குறும விலையை அறிவியல் ரீதியாக நிர்ணயித்தது, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள்/பீர் தயாரிப்பாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் செலுத்த வேண்டிய விற்பனைக் கட்டணத்தை அதிகரித்தது, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் மீதான ஆயத்தீர்வையை உயர்த்தியது, உரிமக் கட்டணங்கள், விண்ணப்பக் கட்டணங்கள், உரிமைக் கட்டணங்கள் முதலியவற்றை உயர்த்தியது போன்று கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளினாலேயே ஆயத்தீர்வை வருவாய் பெரும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

1.3. ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதற்காக 1999-2000 ஆம் ஆண்டில் அரசு கொண்டு வந்த சில முக்கிய கொள்கை மாற்றங்கள் குறித்த விவரம் வருமாறு:

* அரசு, 17-3-1999 ஆம் நாளிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வையை, 100 மி.லி. அளவு பாட்டில்கள் தவிர, ஏனையவைகளுக்கு புருப் லிட்டர் ஒன்றிற்கு ரூ. 10 உயர்த்தியுள்ளது. இதனால் 1999-2000 ஆம் ஆண்டில் அரசுக்கு ஏறத்தாழ ரூ. 142 கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

* 1999 ஜூலைத் திங்களில், அரசு, 'டாஸ்மாக்' நிறுவனம் செலுத்தத்தக்க கூடுதல் விற்பனைக் கட்டண வீதத்தை உயர்த்தியது. கூடுதல் விற்பனைக் கட்டண வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் 1999-2000 ஆம் ஆண்டில், அரசு கூடுதலாக ரூ. 25 கோடி (தோராயமாக) வசூலித்துள்ளது.

* 12-11-1999 ஆம் நாளிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர் மற்றும் ஸ்காட்ச் விஸ்கி ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி உரிமக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த உயர்வினால், அரசுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் கூடுதலாக (தோராயமாக) ரூ. 4 கோடி வருவாய் கிடைத்தது.

* 12-11-1999-லிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றின் மீதான விற்பனை வரியை அரசு 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இந்த உயர்வினால், 1999-2000 ஆம் ஆண்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு





மதுவகைகளிலிருந்து விற்பனை வரி வருவாயாக அரசுக்குக் கூடுதலாக ரூ. 129 கோடி (தோராயமாக) கிடைத்தது.

1.4. ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், மாநிலத்தில் சிறந்த ஆயத்தீர்வை நிர்வாகத்திற்கு வகை செய்யவும், மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக செயல்படுத்தவும் அரசு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இந்த வகையில் அரசால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் குறித்த விவரங்களின் சுருக்கம் வருமாறு:

* அனைத்து வகையான கள்ளச்சாராயம்/போலிச் சாராயம்/இரண்டாம் தர மதுவகைகள் ஆகியவற்றை மாநிலத்திலிருந்து முற்றிலுமாக ஒழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. கள்ளச்சாராயம் காய்ச்சுவது, கள்ள மதுவைக் கொண்டு செல்லுவது, வைத்திருப்பது, விற்பனை செய்வது, ஆகியவற்றை ஒழிக்கவும் பிற மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாக மதுவை கடத்திவருவதைத் தடுப்பது ஆகியவற்றிற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

* கள்ள மதுவினால் ஏற்படும் துயர சம்பவங்களை உடனடியாக நிறுத்தும் நோக்கத்துடன், மெத்தனாலை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 1998 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 7 கள்ளச்சாராய விபத்துகளில் 69 பேர் இறந்துவிட்டனர். 1999 ஆம் ஆண்டில் இந்த விபத்துகளின் எண்ணிக்கை 4 ஆகக் குறைந்தது. இதில் 25 பேர் இறந்தனர். 2000 ஆம் ஆண்டில் இதுவரை கள்ளச்சாராய விபத்து ஒன்று மட்டுமே நிகழ்ந்துள்ளது. இதில் மூவர் இறந்துள்ளனர்.

* மதுவிலக்கு சட்டத்தைச் செயல்படுத்துவதில் கவனக்குறைவாக இருந்த காவல்/மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அதிகாரிகளுக்கெதிராக அரசு கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது. 1998 ஆம் ஆண்டில், ஒரு காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர், ஐந்து காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட எழுபது காவல் துறை அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டில், காவல் துறைப் பணியாளர்கள் 27 பேர் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில், இதுவரை ஏழு காவல் துறைப் பணியாளர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கள்ளச் சாராயம் காய்ச்சப்படும் கரும்புள்ளி கிராமங்களைக் கண்டறிந்து, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு

கிராமங்களில், கள்ளச் சாராயத்தை வேருடன் அழித்து மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

* தெளிந்த சாராவியைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கத்துடன், தெளிந்த சாராவியை இரசாயனத் தொழிற்சாலைகள் பயன்படுத்துவது கடுமையான ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, தவறிழைக்கும் தொழிற்சாலைகளுக்கெதிராக, தீவிர நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

* கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதற்கெதிரான நடவடிக்கையில், பொதுமக்களின் ஒத்துழைப்பு முக்கிய அம்சமாகும். சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து பொதுமக்களின் ஒத்துழைப்புடன், மதுவிலக்கு சட்டத்தைத் தீவிரமாகச் செயற்படுத்துவதற்கு பன்னோக்கு கோட்பாடு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

## 2. மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பும் செயல்பாடும்

2.1 உள்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் அரசுச் செயலர், தலைமைச் செயலகத்திலுள்ள மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் தலைவராவார். செயலருக்கு உதவியாக சிறப்புச் செயலர் ஒருவர் (இந்திய ஆட்சிப் பணியாளர் பதவித் தரத்தில்), துணைச் செயலர் ஒருவர் மற்றும பிற உதவிப் பணியாளர்கள் உள்ளனர்.

### *மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர்*

2.2. மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர், இத்துறையின் தலைவர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவியாக, இணை ஆணையாளர்கள் இருவர் (இந்திய ஆட்சிப் பணியாளர் பதவித் தரத்தில் ஒருவர். மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் மற்றொருவர்), நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவர் (நிதித் துறையின் அரசு இணைச் செயலாளர் பதவித் தரத்தில்), உதவி ஆணையாளர்கள் நால்வர் ஆகியோர் உள்ளனர். மதுவிலக்கு-ஆயத்துறை ஆணையாளர் அலுவலகத்தின் அமைப்பு குறித்த வரைபடம் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.3. மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர், மதுவிலக்கு குறித்த கொள்கைகளை உருவாக்குவதிலும், அவற்றைச் செயல்படுத்துவதிலும் அரசுக்கு உதவுகிறார். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மேற்படி சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பு அவரிடமே உள்ளது.



2.4. விதிகளுக்கிணங்க அரசின் முன் அனுமதியுடன் மது தயாரிப்பதற்கான உரிமை வழங்கும் அதிகாரமும், வடிசாலை/பீர் வடிப்பாலை அமைக்க உரிமம் வழங்கும் அதிகாரமும் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் உரிமை வழங்கும் அதிகாரமும் ஆணையருக்குத் தரப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் அவ்வாறு நிறுவப்பட்ட தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் விதிகளின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### *மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு*

2.5. கள்ளச்சாராயத்தை வடித்தல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல், கள்ள மது/இரண்டாம் தர மதுவகைகளை விற்பனை செய்தல் ஆகியவற்றை முற்றிலுமாக ஒழிப்பதையும், ஏனைய மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாக அவற்றைக் கொண்டுவருவதைத் தடுப்பதையும் உறுதியான நோக்கமாக கருத்திற்கொண்டு, அரசு, 1998 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை மீண்டும் ஏற்படுத்தியது.

2.6. இந்த மாநிலத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளை, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சிறப்புப் பணிகள்) மேற்பார்வையிடுகிறார். மாநிலத்திலுள்ள மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைவராக காவல் துறைத் தலைவர் (அமலாக்கம்) செயல்படுகிறார். மாநிலம் முழுவதிலும் மொத்தம் 86 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் இயங்குகிறது. அனைத்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளும் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு குறித்த வரைபடம் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.7. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி மற்றும் கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவை கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் கண்காணித்துத் தடுக்கும் பொருட்டு, நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 21 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளன.

[2000 மே 12

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

2.8. 23-5-1983 அன்று, 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மாநிலம் முழுவதும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை, தனியார் துறையிடமிருந்து எடுத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 17(C) (1-A) (a) பிரிவின்படி தமிழ்நாடு மாநிலம் முழுவதும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை மொத்த விற்பனை மூலம் வழங்கும் தனியுரிமை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் அரசு செயலாளர் 'டாஸ்மாக்கின்' தலைவராவார். இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர், இக்கழகத்தின் மேலாண்மை இயக்குநராவார். 'டாஸ்மாக்' நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. 'டாஸ்மாக்' நிறுவனத்தின் நிருவாக அமைப்பு பற்றிய வரைபடம் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.9. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ரூ. 15 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. மாநில அரசு 1983இல் ரூ. 5 கோடியும், 1998 இல் ரூ. 2 கோடியும் ஆக மொத்தம் ரூ. 7 கோடி முதலீடு செய்துள்ளது. இதைத் தவிர தேவைப்படும்போது, அரசு, இக்கழகத்திற்கு வழிவகை முன்பணங்களையும் அனுமதித்து வந்துள்ளது. பாரத ஸ்டேட் வங்கியின் வணிகக்கிளை உயரளவாக ரூ. 35.00 கோடி வரை ரொக்கக் கடன் அனுமதித்துள்ளது.

2.10. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை, இம்மாநிலத்திலுள்ள ஐந்து தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்தும், பீர் வகைகளை இரண்டு தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்தும் பெறுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளில் சிலவும், பீர் மற்றும் ஸ்காட்சும் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பெறப்படுகின்றன.

2.11. 'டாஸ்மாக்' நிறுவனம் 1998-99 ஆம் ஆண்டும் தொடர்ந்து உபரியை ஈட்டியது. மேலும், ரூ. 84 இலட்சத்தை ஆதாயப் பங்குத் தொகையாக அரசுக்கு செலுத்தியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் அரசுக்கு ஆதாயப் பங்காக 10 சதவீதம் செலுத்தியதற்கு மாறாக 1998-99 ஆம் ஆண்டில் 12 சதவீதம் செலுத்தியது.



2000 மே 12]

### தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)

2.12. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) துணை நிறுவனமாக, தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ), இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர், நாட்டு மது ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக 1989 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் 31-12-1989-லிருந்து பீர் உற்பத்தியையும், 21-7-1990 ஆம் நாளிலிருந்து நாட்டு மது உற்பத்தியையும் தொடங்கியது. எனினும், 16-7-1991 முதல், நாட்டு மது உற்பத்தியை இக்கழகம் நிறுத்திவிட்டது. (தற்போது 'டாஸ்கோ' நிறுவனத்தை 'டாஸ்மாக்' நிறுவனத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது).

### போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

2.13. மாநில அளவில் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவிற்கு, காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், 13 காவல் துறை ஆய்வாளர்கள், 14 உதவி ஆய்வாளர்கள், ஏனைய பதவித் தரங்களில் 91 பேர், ஆகியோர் உள்ளனர். இம்மாநிலத்தில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், விழுப்புரம், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, வேலூர், கோயம்புத்தூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகிய 12 இடங்களில் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுகள் உள்ளன. அவை காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## 3. 1999-2000-ன் சிறப்புக் கூறுகள்

3.1. 1999-2000 ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில் ஆயத்தீர்வை நிருவாகத்தை மேம்படுத்தவும், மதுவிலக்குச் சட்டங்களைச் செயலாக்கவும் எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகளில் சில சுருக்கமாக பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன:

### கருப்பஞ்சாற்றுக் கசண்டு

3.2. இம்மாநிலத்திலுள்ள 35 சர்க்கரை ஆலைகளில், கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு, கருப்பஞ்சாற்றுக் கசண்டை உபரியாகத் தயாரிக்கும் மாநிலமாக இருப்பதால், இம்மாநிலத்திற்கு வெளியே கருப்பஞ்சாற்றுக் கசண்டை எடுத்துச் செல்வதற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 200 நிருவாகப் பணிக்கட்டணம் வசூல் செய்வதன்

[2000 மே 12

பேரில் கருப்பஞ்சாற்றுக் கசண்டை எடுத்துச் செல்வதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

3.3. 1998-99 கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை) இம் மாநிலத்தில், 5.90 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி உபரியாக இருந்தது. சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டுகளின் சேமிப்பு தேக்க நிலையினைக் குறைக்கும் நோக்குடன், கூட்டுறவு/பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், பிற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் 2.50 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்வதற்கு அரசு அனுமதியளித்தது. தனியார் சர்க்கரை ஆலைகளும் 1.50 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட அளவில் சர்க்கரை ஆலைகள் இதுவரை 3.86 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்துள்ள வகையில் இம் மாநிலத்திற்கு நிருவாகச் சேவைக் கட்டணமாக ரூ. 7.72 கோடி கிடைத்துள்ளது.

*ஆல்கஹால்:*

3.4. கருப்பஞ்சாற்றுக் கசண்டை மூலப் பொருளாகக் கொண்டு 15 வடிசாலைகள், இம் மாநிலத்தில் ஆல்கஹால் தயாரித்து வருகின்றன. தனியார் துறையில் 13 வடிசாலைகளும், கூட்டுறவுத் துறையில் 2 வடிசாலைகளும் உள்ளன. 1998-99-ஆம் ஆல்கஹால் ஆண்டில், இம் மாநிலத்தில் ஆல்கஹால் உற்பத்தி உபரியாக இருந்தது. எனவே, ஆல்கஹாலை மதுபான தயாரிப்பிற்குப் பயன்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்றுமதி செய்ய அரசு அனுமதியளித்தது. தனியார் துறைக்குச் சொந்தமான வடிசாலைகள் 75 இலட்சம் லிட்டர் ஆல்கஹாலை ஏற்றுமதி செய்யவும், கூட்டுறவுத் துறை வடிசாலைகள் 25 இலட்சம் லிட்டர் ஆல்கஹாலை ஏற்றுமதி செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு பல்க் லிட்டர் சாராவிக்கு, விதிக்கத்தக்க ஏற்றுமதி அனுமதிக் கட்டணம் ரூ. 6 ஆகும். அனுமதிக்கப்பட்ட அளவில், ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தம் 42 இலட்சம் லிட்டர் சாராவி மூலமாக கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ. 2.52 கோடியாகும்.

3.5. ஆல்கஹால் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதியில், ஏற்றுமதி என்ற பெயரில் இவை மாற்று வழியில் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய உரிய கவனம் செலுத்தப்படுகிறது. இறக்குமதி செய்யும் மாநிலங்கள் வழங்கும் மறுப்பின்மைச் சான்றிதழ் மற்றும் ஏனைய



2000 மே 12]

ஆவணங்கள், ஏற்றுமதி அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர், நுணுக்கமான பரிசீலனைக்கும் குறுக்கு சரிபார்ப்பிற்கும் உட்படுத்தப்படுகின்றன.

**ஆயத்தீர்வை வருமானத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்:**

3.6. ஆயத்தீர்வை வருமானத்தை உயர்த்த வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு, ஆயத்தீர்வை அமைப்பு முறைகளை அரசு மாற்றியமைத்துள்ளது. சாராவி, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றின் மீதான பல்வேறு தீர்வைகள், உரிமக் கட்டணங்கள், விற்பனைக் கட்டணங்கள் ஆகியவற்றைப் பொருத்தமாக அரசு திருத்தியமைத்துள்ளது. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அனைத்து அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வை, 100 மி.லி. சிப்ப (pack) அளவுகள் நீங்கலாக, புருப் லிட்டர் ஒன்றுக்கு ரூ.10 அதிகரிக்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் மீதான விற்பனை வரி 12-11-1999-ஆம் நாள் முதல் 40 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

3.7. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள், பீர் மற்றும் ஸ்காட்ச் விஸ்கி ஆகியவற்றின் இறக்குமதி மீதான இறக்குமதி உரிமக் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 12-11-1999-ஆம் நாளிலிருந்து இவற்றின் நடப்பு வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| சாதாரணம் | ரூ. 210 |
| நடுத்தரம் | ரூ. 252 |
| பிரிமியம் | ரூ. 376 |
| ஸ்காட்ச் விஸ்கி | ரூ. 376 |
| பீர் | ரூ. 43 |

3.8. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள்மீது, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) செலுத்தத்தக்க கூடுதல் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ.14.46-லிருந்து ரூ.15.84-ஆக அதிகரிக்கப்பட்டது. பீர் மீதான கூடுதல் விற்பனைக் கட்டணம் 11-8-1999-ஆம் நாள் முதல் ரூ.4.30-லிருந்து ரூ.5.27-ஆக உயர்த்தப்பட்டது.

[2000 மே 12

**இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைக் கடைகளின் உரிமங்களை 1999-2000-ஆம் ஆண்டில் புதுப்பித்தல்:**

3.9. 1998-99-ஆம் ஆண்டில் 4,675 கடைகள் செயல்பட்டு வந்தன. அரசு, மாவட்ட மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள், நுகர்பொருள் குறித்த விற்பனையில் ஈடுபட்டுள்ள சங்கங்கள், போன்ற சில கூட்டுறவுச் சங்கங்களைத் தெரிந்தெடுத்து, உரிமங்கள் புதுப்பிக்கப்படாமல் இருந்த இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைக் கடைகளை நியமன அடிப்படையில் ஒதுக்கீடு பெற அனுமதியளித்துள்ளது. இந் நடவடிக்கை போட்டியைத் தூண்டி கடைகளைப் புதுப்பித்துக்கொள்ள உந்துதல் ஏற்படுத்தி பெரிதும் உதவியது.

3.10. விற்பனை செய்யப்படாமல் உள்ள கடைகள், எத்தனை மாதங்களுக்கு விற்கப்படாமல் இருந்ததோ, அந்தக் கால அளவிற்குரிய விகிதாச்சாரத்தில் உரிமைத் தொகையைக் குறைக்க அரசு மேற்கொண்டும் அனுமதி அளித்துள்ளது. அப்போதுதான், புதுப்பிக்க வேண்டிய நடப்பு ஆண்டில் எஞ்சியுள்ள காலஅளவிற்கு இணையான விகிதாச்சாரத்தில், ஏலத்தில் கடைகளை வாங்குபவர்களால் உரிமைத் தொகையைச் செலுத்த இயலும்.

3.11. ஆகவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான நெகிழ்வுத் தன்மையுடைய கொள்கையைப் பின்பற்றுவதன் மூலம், 4,066 கடைகளின் உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மற்றும், இவ்வாறு புதுப்பித்ததன் மூலம், உரிமத் தொகை வசூல் வகையில் ரூ. 471 கோடி பெறப்பட்டது.

**உரிமக் கட்டணங்களை அதிகரித்தல்:**

3.12. பல்வேறு வகையான உரிமங்களுக்குரிய உரிமக் கட்டணங்கள் பல ஆண்டுகளாக குறைவாகவே இருந்து வந்தன. 1998-99-ஆம் ஆண்டில், அரசு மனமகிழ் மன்றங்கள், ஓட்டல்களின் மதுபான விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் உரிமைக் கட்டணம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஆலைகள் முதலியவற்றைப் பொறுத்தமட்டில், அவற்றின் உரிமைக் கட்டணம் மற்றும் உரிமக் கட்டணம் ஆகியவற்றை உயர்த்தியுள்ளது. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் விதிகளின்கீழ் வழங்கப்பட்ட டி.எல். வகை உரிமங்களுக்கான உரிமக் கட்டணங்களை, அரசு, 1-4-1999-ஆம் நாள் முதற்கொண்டு உயர்த்தியுள்ளது. டி.எல்.1, டி.எல்.2, டி.எல்.5, டி.எல்.6 மற்றும் டி.எல் 7 வகை உரிமக் கட்டணங்களும்



2000 மே 12]

உயர்த்தப்பட்டுள்ளன. டி.எல்.2 வகை உரிமங்களைப் பொறுத்தவரையில் படிநிலை வீதங்களில் (slab rates) அமைக்கப்பட்டுள்ள, இந்த உரிமங்களுக்கான உரிமக் கட்டணங்கள் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயல்பு மாற்றப்பட்ட சாராவியின் அளவைப் பொறுத்து ரூ.175 முதல் ரூ.23,500 வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

**மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்களின்கீழ் வரும் இனங்களுக்கு (M&TP) உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலை அடிப்படையில் (MRP) விதிக்கப்படவேண்டிய தீர்வை:**

3.13. மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் மீதான ஆயத்தீர்வை, இதுவரையில், மொத்த விற்பனை விலையின் விகிதாச்சார அளவில் விதிக்கப்பட்டு வருகின்றது. உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலை, அளவுக்கு மீறி உயர் வீதத்தில் நிர்ணயிக்கப்படும்போது, ஆயத்தீர்வை அதிகமாக விதிக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன், சில நிறுவனங்கள் மொத்த விற்பனை விலையை மிகவும் குறைவாகக் காட்டியதாகத் தெரியவந்தது. உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலையின் அடிப்படையில், ஆயத்தீர்வை விதிக்க ஏதுவான வகையில், மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் விதித் துறைகளைத் திருத்தம் செய்வதற்கு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இப் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு, நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், மேற்சொன்ன திருத்தத்தைக் கொண்டுவர அறிவித்துள்ளது. இந்த இனங்களின்கீழ் வசூலிக்கப்படும் ஆயத்தீர்வையானது, மாநில அரசுக்கும் உரிய அளவில் சேரவேண்டிய தொகை என்பதால், இது மாநில வருவாயை அதிகரிக்க உதவும்.

**சாராவி வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்தல்:**

3.14. இரசாயனத் தொழிற்சாலைகள் எடுக்கும் சாராவி, கள்ளத்தனமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று புகார்கள் வந்துள்ளன. இரசாயனத் தொழிற்சாலைகள் அனைத்தும் தங்களின் இறுதி உற்பத்திப் பொருட்களை அனுப்புவதற்கு முன்னர் ஆய்வுக்காக அனுப்ப வேண்டும் என்று சென்ற ஆண்டு புதிய நிபந்தனை விதிக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட இறுதி உற்பத்திப் பொருட்களின்மீது, தொகுதி எண் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நாள் பற்றிய விவரங்கள் அச்சிடப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. கண்டிப்பான இந்த நிபந்தனையினால், போலியான இரசாயனத்

[2000 மே 12

தொழிற்சாலைகள் தங்கள் தொழிற்சாலைகளை மூடிவிட்டன. 1-4-1999 ஆம் நாளிலிருந்து இதுநாள் வரையில் இத்தொழிற்சாலைகள் தெளிந்த சாராவியை எடுக்கவில்லை. இதனால், கடந்த ஆண்டுகளில் இந்த இரசாயனத் தொழிற்சாலைகள் வழக்கமாக எடுத்துச் சென்று சுமார் 400 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவி, தவறான வழியில் பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

3.15. இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், இதே போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, இறுதி உற்பத்திப் பொருள்களைச் சரிபார்ப்பதற்காக அனுப்பிவைக்குமாறு தயாரிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இரசாயனத் தொழிற் பிரிவுகளுக்கு இயல்பு மாற்றப்பட்ட சாராவியை விற்பனை செய்யும் வடிசாலைகள், இயல்பு மாற்றப்பட்ட சாராவிக்காக தனி சேமிப்புத் தொட்டிகளை நிறுவ வேண்டுமென்றும், டேங்கர் லாரிகளில் ஏற்றுவதற்கு முன் குடிக்கத் தகாததாக்கும் பொருளைத் தெளிந்த சாராவியுடன் முதலில் கலக்க வேண்டுமென்றும் அவற்றுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. நேரடியாக டேங்கர் லாரிகளில் குடிக்கத் தகாததாக்கும் பொருளைச் சேர்க்கும் முந்தைய நடைமுறை கைவிடப்பட்டது. தெளிந்த சாராவி, இயல்பு மாற்றப்பட்ட சாராவி என்ற பெயரில் அனுப்பப்படுவதைத் தடுப்பதற்கு இப்புதிய நிபந்தனை பெரிதும் உதவியுள்ளது.

**அதிக ஆல்கஹால் கலந்த பொருள்களின் தயாரிப்பைக் கட்டுப்படுத்துதல்**

3.16. டிங்சுரா ஜிஞ்சர் பெரிஸ்மிடிஸ் (Tinctura Ginger Berismitis), ஓபியம் டிஞ்சர், கேம்பரேட்டட் ஓபியம், ஆரஞ்சு டிஞ்சர் போன்ற ஆல்கஹால் கலந்த சில பொருட்களில் ஆல்கஹாலின் அளவு 80 முதல் 90 சதவீதம் வரையிலுள்ளது என்றும், ஆனால், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளிலேயே அனுமதிக்கத்தக்க ஆல்கஹாலின் அளவு 42.86 சதவீதம் தான் என்றும் கண்டறியப்பட்டது. எனவே, இத்தயாரிப்புகளை ஆல்கஹால் கலந்த மதுவாக தவறாகப் பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சாராவி தயாரிப்புகள் (கட்டுப்பாடு) விதிகளின்கீழ் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஆலோசனையின் பேரில், மேற்சொன்ன 4 பொருட்களும் ஆட்சேபத்திற்குரிய தயாரிப்புகள் (Objectionable Preparations) என்று அறிவிக்கையிடப்பட்டுள்ளது. உள்ளூரில் அவை தயாரிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.



2000 மே 12]

**ஹோலோகிராம்: இரண்டாம்தர/போலி மதுவைத் தடுப்பதற்கான பயனுள்ள கருவி**

3.17. போலி ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகளைத் தடுக்கும் பொருட்டும், அதன் மூலம் போலி/இரண்டாம்தர மது புழக்கத்தில் இருப்பதைத் தடுக்கும் பொருட்டும் 1-5-1999 ஆம் நாளிலிருந்து ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகளின் மீது பாதுகாப்பு ஹோலோகிராமை ஒட்டவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி 'டாஸ்மாக்' நிறுவனம் மூலம் வழங்கப்படும் அனைத்து மதுவகை பாட்டில்களின் மீதும் ஹோலோகிராம் லேமினேட் செய்யப்பட்ட ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகள் ஒட்டப்படுகின்றன. போலி ஹோலோகிராமை எளிதில், தயாரிக்க முடியாது என்பதால், ஹோலோகிராம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து போலி மற்றும் இரண்டாம்தர மது வகைகளைக் கண்டுபிடிப்பது மிக எளிதாகியுள்ளது. மேலும், ஹோலோகிராம் இருப்பதால் 'டாஸ்மாக்' நிறுவனம் மூலம் வழங்கப்படும் அசல் மதுவை நுகர்வோர் எளிதில் அடையாளம் கண்டறியலாம். முடிவாக, இது போலி, இரண்டாம் தர மது புழக்கத்தைப் பெரிதும் குறைக்கும். ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகள் மீது ஹோலோகிராம் பதிக்கப்பட்டிருப்பதால் போலி மற்றும் இரண்டாம்தர மதுவைக் கண்டுபிடிப்பது காவல் துறையினருக்கு எளிதாக உள்ளது.

**கள்ளச் சாராயத் துயரச் சம்பவங்களைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

3.18. கள்ள மது அருந்தியதன் காரணமாக ஏற்பட்ட உயிர் இழப்புகள் பெரும்பாலானவற்றில், மெத்தனால் (மெதில் ஆல்கஹால்) என்ற பொருளே மரணத்திற்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவ்வேதியல் பொருள், எத்தில் ஆல்கஹால் போன்றே இருப்பதால், அப்பாவி மக்கள் இதனை அருந்தத்தக்க மது என்று தவறாகக் கருதுகின்றனர். மெத்தனால் அருந்துவதால் பார்வை பாதிக்கப்படுகிறது. மெத்தனாலை 30 மில்லி லிட்டருக்கு மேல் அருந்தினால் பெரும்பான்மையான நேர்வுகளில் இறப்பு ஏற்படுகிறது. மெத்தனால் எடுத்துச் செல்வதைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்நடவடிக்கைகளில் பின்வருபவைகளும் அடங்கும்:

(1). இயன்றவரை மெத்தனால் பயன்பாட்டை ஒழிக்க இயலும் வகையில் சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் மெத்தனாலுக்குப் பதிலாக மாற்றுப் பொருள் கண்டுபிடித்தல்.

[2000 மே 12

(2) மெத்தனாலை எளிதில் கண்டறிந்து அதனை மக்கள் அருந்துவதைத் தவிர்க்க இயலும் வகையில் மெத்தனாலுடன் கலக்கத்தக்க வண்ணப்பொருள் மற்றும் கசப்புத் தன்மை கொடுக்கும் பொருள் ஒன்றைக் கண்டறிய முயற்சி செய்தல்.

3.19. மெத்தனாலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன. சர்க்கரை தயாரிப்பில் நீர்மக் கலவை (Slurry) தயாரிப்புக்காக சர்க்கரை ஆலைகள் மெத்தனாலைப் பயன்படுத்தி வருகின்றன. மெத்தனால், தெளிந்த சாராவியுடன் சேர்ப்பதற்காக இயல்பு மாற்றும் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மேற்சொன்ன நீர்மக் கலவை தயாரிக்கும் நோக்கத்திற்காக சர்க்கரை ஆலைகள் ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் சாராவியின் அளவு 500 முதல் 1000 லிட்டர் வரை மட்டுமே என்று கண்டறியப்பட்டது. எனவே, சர்க்கரை ஆலைகளில் மெத்தனாலைப் பயன்படுத்துவதைக் கைவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மெத்தனால் கலக்கப்பட்ட மெத்தலேட்டட் சாராவிக்குப் பதிலாக, தெளிந்த சாராவி அல்லது இயல்பு மாற்றப்பட்ட சாராவியை மட்டுமே பயன்படுத்துமாறு அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன.

3.20. அறுவை சிகிச்சை சாராவி (Surgical Spirit) தயாரிப்பில் இயல்பு மாற்றும் பொருளாக மெத்தனால் பயன்படுத்தப்படுகிறது. தற்போது அறுவை சிகிச்சை சாராவி தயாரிப்பில் மெத்தனாலுக்குப் பதிலாக டைஈதைல்தாலேட்-ஐ (Diethylphthalate) பயன்படுத்த இயலும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, அறுவை சிகிச்சை சாராவி தயாரிக்கும் அனைத்து நிறுவனங்களும், டைஈதைல்தாலேட் பயன்படுத்துமாறும், அதன்மூலம் மெத்தனால் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

3.21. மெத்தனாலை தவறாகப் பயன்படுத்தாமலிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, மெத்தனாலைக் கையாளுவது தொடர்பாக செய்ய வேண்டியன மற்றும் செய்யக் கூடாதன பற்றிய விரிவான பட்டியல் ஒன்று குறித்துரைக்கப்பட்டுள்ளது. மெத்தனாலை எடுத்துச் செல்லும் டேங்கர்கள் மீது தெளிவாகத் தெரியும் படி 'விஷம்' என்று வண்ணத்தால் எழுதப்பட வேண்டும் என்றும் எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு மெத்தனாலை 'விஷம்' என்று அடையாளம் கண்டறிந்து கொள்ள இயலும்



2000 மே 12]

வகையில் டேங்கர்கள்மீது மண்டையோடு-எலும்பு அடங்கிய சின்னம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

*மதுவிலக்கு வழக்குகளைக் கண்டுபிடித்தல்*

3.22. உள்ளூர் காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் மத்திய புலனாய்வுப் பிரிவுகள் ஆகியவை எடுத்த நடவடிக்கைகளினால் கள்ளச்சாராயம் காய்ச்சுவோரின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்கு எதிராக எடுக்கப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகளால் 4,20,878 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 94,760 பெண்கள் உட்பட 3,91,306 மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறித்த ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் வருமாறு:-

(i) 31-12-1999 ஆம் நாள் நிலவரப்படி, 4.21 இலட்சம் வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், 1998 ஆம் ஆண்டில் 3.65 இலட்சம் வழக்குகளும், 1997 ஆம் ஆண்டில் 3.05 இலட்சம் வழக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

(ii) 31-12-1999 வரை 3.91 இலட்சம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் 1998 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் பேர்களும், 1997 ஆம் ஆண்டில் 2.97 இலட்சம் பேர்களுமே கைது செய்யப்பட்டனர்.

(iii) 31-12-1999 ஆம் நாள் வரை 46.37 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், 1998 ஆம் ஆண்டில் 34.29 இலட்சம் லிட்டர் மற்றும் 1997 ஆம் ஆண்டில் 27.33 இலட்சம் லிட்டர் பறிமுதல் செய்யப்பட்டது.

(iv) 31-12-1999 ஆம் நாள் நிலவரப்படி 2.89 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1998 ஆம் ஆண்டில் 2.21 இலட்சம் லிட்டரும், 1997 ஆம் ஆண்டில் 2.33 இலட்சம் லிட்டரும் பறிமுதல் செய்யப்பட்டது.

(v) 31-12-1999 ஆம் நாள் வரை மதுவிலக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட 4,521 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டில் 3,743 வாகனங்களும், 1997 ஆம் ஆண்டில் 3,127 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

(vi) 31-12-1999 ஆம் நாள் நிலவரப்படி, தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் 1,419 பேர் (1,081 ஆண்கள், 338 பெண்கள்) தடுப்புக்காவலில்

வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், 1998 ஆம் ஆண்டில் 795 பேர்களும், 1997 ஆம் ஆண்டில் 669 பேர்கள் மட்டுமே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

(vii) மதுவிலக்குக் குற்றங்களை இணக்கம் செய்ததன்மூலம் அபராதத் தொகையாக 31-12-1999 ஆம் நாள் நிலவரப்படி ரூ.9.23 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1998 ஆம் ஆண்டில் ரூ.5.36 கோடியும், 1997 ஆம் ஆண்டில் ரூ.3.29 கோடியும் வசூலிக்கப்பட்டது. நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அபராதத் தொகையாக ரூ. 6.59 கோடி நீதிமன்றங்கள் மூலமாக வசூலிக்கப்பட்டுள்ளது. கருவூலத்தில் மொத்தம் ரூ.15.82 கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

3.23 1999 ஆம் ஆண்டில் குற்றப் புலனாய்வுத் துறையின் போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு 1,277 வழக்குகளைப் பதிவு செய்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மொத்தம் 1,262 பேர் கைது செய்யப்பட்டனர். ஹெராயின் போன்ற வீரியமுள்ள போதைப் பொருள்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தது. உலகச் சந்தையில் ரூ.15.2 கோடி மதிப்புள்ள மொத்தம் 15.202 கிலோ கிராம் ஹெராயின் போதை மருந்துகளைப் புலனாய்வுப் பிரிவு கைப்பற்றியுள்ளது; ஆனால் 1998 ஆம் ஆண்டில், 4.805 கிலோ கிராம் மட்டுமே கைப்பற்றப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் ஹஷீஷ் எண்ணெய், டைடிஜெசிக் ஊசி மருந்துகள், (Tidigesic Injections) அபின், டயாசிபாம் (Diazepam) போன்ற போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு, குண்டர்கள் சட்டத்தின்கீழ் முந்தைய ஆண்டுகளில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்ற நிலைக்கு மாறாக 1999 ஆம் ஆண்டில் 3 நபர்களுக்கெதிராக வழக்குப் பதிவு செய்தது.

3.24 2000 ஆம் ஆண்டிலும் குற்றப்புலனாய்வுத் துறையின் போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு, குறிப்பிடத்தக்க வகையில் தொடர்ந்து நன்முறையில் செயலாற்றி, போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தின்கீழ் 293 வழக்குகளைப் பதிவு செய்து, குற்றஞ்சாட்டப்பட்ட 276 நபர்களைக் கைது செய்துள்ளது. 35.100 கிலோ கிராம் எபிடிரின் ஹைடிரோகுளோரைடு, 13 கிலோ கிராம் பாப்பி காப்சூல்கள், 1.900 கிலோ கிராம் டயாசிபாம் (Diazepam) கைப்பற்றப்பட்டதுடன், குற்றஞ்சாட்டப்பட்ட 11 நபர்களுக்கு எதிரான



வழக்குகளில் 4.885 கிலோ கிராம் ஹெராயினும் (உலகச் சந்தையில் இதன் மதிப்பு ரூபாய் 4.885 கோடி ஆகும்) கைப்பற்றப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் இதுவரை போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவுச் சட்டத்தின்கீழ் ஒரு நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 'டாஸ்மாக்' நிறுவனத்தைக் கணினிமயமாக்குதல்

3.25 விரைவாக விற்பனையாகும் இனங்கள் இருப்பில் இல்லாமல் போவதைத் தடுக்கவும், இரண்டாம்தர/போலி மதுவகைகளின் விற்பனையில் ஈடுபட வாய்ப்புள்ள வணிகர்களைக் கண்கா[illegible]வடிக்கை எடுக்கவும் ஏதுவாக மாவட்ட வாரியாக மற்றும் சில்லறைக் கடைக்காரர்கள் வாரியாக விற்பனை செய்யப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றின் அளவை முறையாகக் கண்காணிக்கவும் நிறுவனத் தலைமை அலுவலகத்திற்கு/அரசுக்கு அனுப்பப்படும் பல்வேறு அறிக்கைகள்/கணக்கு விவர அறிக்கைகள்/கோரிக்கைகள் ஆகியவை உடனுக்குடனும் துல்லியமாகவும் அனுப்பப்படுவதை உறுதி செய்யவும் வேண்டி, இருப்பு நிலை தொடர்பான நாளது வரையிலான தகவலைப் பெற்று, பொருள் இருப்புகளை நன்கு நிருவகிக்க ஏதுவாக 'டாஸ்மாக்' நிறுவனத்தின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தின் 39 கிடங்குகள் மற்றும் நிறுவனத் தலைமை அலுவலகம் ஆகியவற்றின் அன்றாட செயல்பாடுகள், 1-9-1998 ஆம் நாள் முதற்கொண்டு கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக, கிடங்குகளில் பொருள் இருப்பு நிருவாகம் செம்மையாக நடைபெற்றதோடு நிருவாகச் செலவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 24.00 இலட்சம் வரை குறைந்தது.

3.26 நிருவாகத் தகவல் ஏற்பாடு கனினிமயமாக்கப்பட்டதையடுத்து கொள்முதல், விற்பனை மற்றும் இருப்பு நிலை தொடர்பான நாளது வரையிலான தகவல்களைப் பெறுவதன்மூலம் இந்நிறுவனத்தின் பொருள் இருப்பு நிருவாகம் தற்போது சிறப்பாக நடைபெற்று வருகிறது. விரைவாக விற்பனையாகும் இனங்கள் இருப்பில் இல்லாமல் போகும் நிகழ்வுகளைக் குறைக்கவும் மாவட்ட வாரியாகவும், சில்லறை விற்பனை வாரியாகவும் கூடிய விற்பனையை சரியானவாறு கண்காணிக்கவும் இந்நிறுவனத்தால் தற்போது முடிகிறது. நிறுவனத் தலைமை அலுவலகத்திற்கு /அரசுக்கு அனுப்பப்படும் பல்வேறு விவர அறிக்கைகள்/கணக்கு விவரங்கள்/ கோரிக்கைகள் சரியாகவும் துல்லியமாகவும் இருப்பது இந்த நிருவாகத் தகவல் ஏற்பாட்டால் உறுதிப்படுத்தப்படுகிறது. கிடங்கு நிலையில் பணி எளிமைப்படுத்துவதுடன் மனித ஆற்றலைச் சார்ந்திருப்பதும் குறைகிறது.

## 'டாஸ்மாக்' நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகள்

3.27 கடந்த 15 ஆண்டுகளாக 'டாஸ்மாக்' நிறுவனத்தின் அனைத்துக் கிடங்குகளும் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. பொதுவாக, அவை போதுமான அளவிற்கு இல்லை. 'டாஸ்மாக்' நிறுவனத்தின் வணிகம், 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு 10 மடங்குக்கு மேல் பெருகியுள்ளது. ஆனால் கிடங்கு வசதி ஓரளவிற்குத்தான் அதிகரித்துள்ளது. இதனால் பல லாரிகள் வெளியே காத்திருக்க வேண்டிய நிலையும், இன்றியமையாத இனங்கள் இருப்பில் இல்லாத நிலையும் ஏற்பட்டது. எனவே, 'டாஸ்மாக்' நிறுவனத்திற்கென்று போதிய சேமிப்பு திறன் கொண்ட கிடங்குகள் சொந்தமாக இருக்க வேண்டிது அவசியம் என்று உணரப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டிலும், 1999-2000 ஆம் ஆண்டிலும் 'டாஸ்மாக்' நிறுவனம், திருமழிசை (சென்னை), அம்பத்தூர் (சென்னை) கடலூர், தூவாக்குடி, திருபுவனம், திண்டுக்கல், திருநெல்வேலி, சேலம், சூரியம்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள 'டாஸ்கோ' (சாராவிக் கழகம்) நிறுவனத்தின் முன்னாள் கலவை தொழிற்பிரிவுகளைத் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டது. இந்த முன்னாள் கலவைப் பிரிவுகள் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவற்றுக்கு சேலம் நீங்கலாக பிற நகரங்களில் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த 'டாஸ்மாக்' நிறுவனத்தின் கிடங்குகள் மாற்றப்பட்டுள்ளன.

3.28 தூத்துக்குடி மற்றும் புதுக்கோட்டை 'சிப்காட்' தொழிற்பேட்டைகளில், 99 ஆண்டு குத்தகை அடிப்படையில், மனைகள் 'டாஸ்மாக்' நிறுவனத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, கிடங்குகள் கட்டும் பணி, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதேபோன்று, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் 'சிட்கோ' தொழிற்பேட்டைகளில் மனைகளும், இராமநாதபுரம், நாமக்கல் ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து நிலமும், 'டாஸ்மாக்' நிறுவனத்திற்கான கிடங்குகள் கட்டுவதற்காக, தொகை முழுவதும் கொடுத்து வாங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் கிடங்குகள் கட்டும் பணி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடமும், திருவள்ளூர், அம்பத்தூர்-III ஆகிய இடங்களின் கிடங்குகள் கட்டும் பணி, தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஏனைய கிடங்குகளுக்காக படிப்படியாகச் சொந்தமாகக் கிடங்குகள் கட்டுவதற்காக தகுந்த இடங்களைக் கண்டறியவும், அங்கு சொந்தக் கிடங்குகளைக் கட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## 'டாஸ்மாக்' நிறுவனத்தில் மதுவகைகளைக் கொண்டு வருகையில் ஏற்படும் இழப்பைக் குறைத்தல்

3.29 'டாஸ்மாக்' கிடங்குகளுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் 'பீர்' வகைகள் ஆகியவற்றை கொண்டு வருகையில் திறம்பட கண்காணித்து, மேற்பார்வையிட்டு, இறக்கும் பணிகளால் ஏற்படுகின்ற இழப்புகள் 1997-98 ஆம் ஆண்டில் 0.31 சதவீதமாகவும், 1998-99 ஆம் ஆண்டில் 0.29 சதவீதமாகவும் இருந்ததை ஒப்புநோக்குகையில், 1999-2000 ஆம் ஆண்டில் 0.18 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக, மதுவகைகளைக் கொண்டு வரும்போது ஏற்படும் இழப்புகளுக்கான காப்பீட்டு பிரிமியத் தொகை வீதங்கள் 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டில் 80 கி.மீ.-க்கு அதிகமான தொலைவில் எடுத்து வருகையில் 0.26 சதவீதமாகவும், 80 கி.மீ.-க்குக் குறைவான தொலைவிலிருந்து வருகையில் 0.13 சதவீதமாகவும் இருந்தவை முறையே 0.18 சதவீதமாகவும் 0.09 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. இதன் பயனாக 1999-2000 ஆம் ஆண்டில் பிரிமியத் தொகை வகையில் ரூ.1.59 கோடி சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

## புதிய ரக மதுவகைகளை அறிமுகப்படுத்துதல்

3.30 மாநிலத்திலுள்ள நுகர்வோருக்கு, அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு புதியரக மதுவகைகளை அதிகமாகக் கொண்டு வருவதைக் கருத்திற்கொண்டும், இதன் மூலமாக சரக்கு எடுப்பினை அதிகரிப்பதற்கும் மற்றும் அரசுக்கு ஆயத்தீர்வை வருவாய் அதிகரிப்பதற்கும், அரசு 1999-2000 ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளில் 32 புதிய மதுவகைகளையும் 'பீர்' வகை ஒன்றையும் தயாரிக்க அனுமதியளித்துள்ளது.

## விளம்பரத் திரைப்படம் தயாரித்தல்

3.31 மக்களிடையே கள்ள மதுவின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'டாஸ்மாக்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூ.25 இலட்சம் செலவில் விளம்பரத் திரைப்படமும், தொலைக்காட்சி செய்திப் படங்களும் தயாரிப்பதற்காக அரசு அனுமதியளித்துள்ளது. "வேண்டவே வேண்டாம் இந்தச் சாராயச் சாவு" என்ற பெயரில் விளம்பரத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படமும், தொலைக்காட்சிச் செய்திப் படங்களும் முறையே திரையரங்கங்களிலும், தனியார் தொலைக்காட்சி சேனல்களிலும் காட்டப்பட்டு வருகின்றன.

[2000 மே 12

## 4. 2000-2001 ஆம் ஆண்டில் சாதனையை மேம்படுத்துதல்

4.1 கடந்த ஆண்டுகளில் ஆயத்துறை நிருவாகத்தின் பல்வேறு நிலைகளில் அடைந்த சாதனையின் அடிப்படையில் இந்த அரசு வரும் ஆண்டுகளில் எய்த வேண்டிய பல இலக்குகளை நிர்ணயித்துள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் குறித்த விவரம் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

### *மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையைக் கணினிமயமாக்குதல்*

4.2 மாநில அரசின் நிருவாகத்தில் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கணினிமயமாக்கல் பணியின் வளர்ச்சிக்கு இணையாக மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையும் இயன்ற அளவிற்குக் கணினிமயமாக்கப்படும். அப்போதுதான், நிருவாகச் செயல் திறன் அதிகரிக்கும். ஏற்கெனவே அனைத்து வடிசாலைகள், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பெரிய அளவிலான இரசாயன தொழிற்சாலைகள், ஆகியவை "மோடம்" கணினி வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளன. சாராவியின் பயன்பாடு நுகர்வ குறித்த தகவல் தொகுப்பு விவரங்கள் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளரால் நேரடியாக பெறப்படுகின்றன. அதன்மூலம் அவர் மாநிலத்தில் சாராவி உற்பத்தி செய்யப்படுவதையும், பயன்படுத்தப் படுவதையும் உன்னிப்பாக கண்காணிக்க இயலுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் சாராவி ஏற்றுமதி குறித்த விவரங்களும், ஏற்றுமதி அனுமதி வழங்கும் பணியும் கணினி மூலம் செய்யப்படுகின்றன. ஆயத்தீர்வை, நிருவாகப் பணிக்கட்டணங்கள் ஏனைய வகையில் செலுத்தப்படும் தொகைகள் ஆகியவற்றின் வசூல் தொடர்பான விவரக் குறிப்புகளும் கணினிகள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

4.3 வேறு நோக்கங்களுக்காக சாராவியை அனுப்புதல் அல்லது தவறாக பயன்படுத்துதல் ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கத்தில் சாராவி, இரசாயனப் பொருட்கள், இந்தியத் தயாரிப்பு அய்ல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றின் உற்பத்தி, நடமாட்டம் மற்றும் பயனீட்டு அளவு ஆகியவற்றைக் கண்காணிக்க ஒரு கணினி மென்பொருளை (எம்.ஐ.எஸ். சாப்ட்வேர்) நிறுவ துறை திட்டமிட்டுள்ளது. படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் உரிமங்கள் வழங்குவதும் அவற்றைப் புதுப்பிப்பதும் கணினிகள் மூலம் செய்யப்படும். இதனால் காலதாமதம் தவிர்க்கப்படும்.



2000 மே 12]

### *சிறப்பான ஒருங்கிணைப்பிற்கு வகை செய்யும் தகவல் பரிமாற்றம்*

4.4 இம்மாநிலம் முழுவதும் அமைந்துள்ள 4000-க்கு மேற்பட்ட கடைகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் விவரங்கள் வாராந்திர அடிப்படையில் கணினி மூலமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை நிர்ணயிக்கப்பட்ட விற்பனை இலக்கிற்கு, 50 சதவீதத்திற்கும் குறைவாக விற்பனை செய்யும் கடைகள் மற்றும் விற்பனை வகையில் குறைவான வளர்ச்சி வீதத்தில் இருக்கும் கடைகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர அடிப்படையில் தனியாக பட்டியல் இடப்படுகின்றன. விற்பனைக்காக குறைவாக மதுவகைகளைப் பெற்றுச் செல்கின்ற இடங்கள் மற்றும் விற்பனைக்காக இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை வழக்கத்திற்கு மாறாக குறைவாகப் பெற்றுச் செல்கின்ற கடைகள் ஆகியவை குறித்த தகவல், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் மற்றும் மதுவிலக்குப் பிரிவு காவல் துறைத் தலைவர் ஆகியோர் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இந்தத் தகவல் பரிமாற்ற முறை மேலும் வலுவூட்டப்படும். அப்போதுதான், அந்த பகுதிகளில் கள்ள மது அல்லது இரண்டாம் தர மதுவகைகள் புழக்கத்தில் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து அத்தகைய இடங்களை/கடைகளைத் தீவிரமாக கண்காணிக்க இயலும். இவ்வாறாக, ஆயத்தீர்வைத் துறை நிர்வாகத்தின் ஏனைய பகுதிகளுக்குக் கணினி பயன்பாட்டை நீட்டிப்பதன் மூலம் தகவல் புள்ளி விவரங்களைப் பரிமாற்றம் செய்வதை வலுப்படுத்துவதன் மூலம் தொடர்புடைய பிரிவுகளுக்கிடையேயான சிறப்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்த இயலும், அதன் மூலம் திறம்பட்ட முறையில் நிருவகிக்க இயலும்.

### சோதனைச் சாவடிகளை வலுப்படுத்தலும் வாகனங்களை சோதனை இடுதலும்

4.5 அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள்/பீர் மீதான ஆயத்தீர்வை அதிகமாகவுள்ளது. எனவே, அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படச்செய்யும் வகையில், அண்டை மாநிலங்களிலிருந்து இரண்டாம் தர மதுவகைகள் நமது மாநிலத்திற்குள் கொண்டு வரப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே, ஏனைய மாநிலங்களிலிருந்து மதுவகைகள் கள்ளத்தனமாக நமது மாநிலத்திற்கு கடத்தப்படுவதைக் குறைக்கும் நோக்குடன், மாநில எல்லையோரப் பகுதிகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகள் வலுப்படுத்தப்படும்; வாகனங்களைத் தீவிரமாக சோதனையிடும் பணி மேற்கொள்ளப்படும். இந்தச் சோதனைச் சாவடிகள் வழியாக

வருகின்ற வாகனங்களை அடிக்கடி சோதனை இடுவதற்கு ஆயத்தீர்வைத் துறை அதிகாரிகளும் பொறுப்பாக்கப்படுவர்.

4.6 பிரதான வழித்தடங்கள் மட்டுமல்லாமல் புதிய வழித்தடங்களிலும் ஏனைய நுழைவு வழிகளிலும் மதுவகைகள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதைத் தடுக்க நிரந்தரமான சோதனைச் சாவடிகளை நடமாடும் சோதனைப் படைகளாக மாற்ற அரசு கருதியுள்ளது. இந்த நடமாடும் சோதனைப் படைகள் தங்களின் சோதனையிடும் பணியை ஒரு வழித்தடத்திலிருந்து பிறிதோர் வழித்தடத்திற்கு மாற்ற இயலும். இவ்வாறு செய்வதால் எல்லைப் பகுதிகள் வழியாகப் போலி மதுவகைகள் நம் மாநிலத்திற்குள் கொண்டு வரப்படுவதைத் திறம்படத் தடுக்க இயலும். அனைத்து எல்லைப் பகுதி மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களும் இத்தகைய நடமாடும் சோதனைப் படைப் பிரிவுகளை அமைத்து மாவட்டங்களில் பல்வேறு நுழைவு முனைகள் வழியாக வருகின்ற வாகனங்கள் அனைத்தையும் திறம்பட சோதனையிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கான (டாஸ்மாக்) கணினி இணையதளம் (வெப்சைட்)**

4.7 கடந்த இரண்டு ஆண்டுகளாக, டாஸ்மாக் கழகம் கணினிமயமாக்கல் திட்டத்தை முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. சென்னையிலுள்ள தலைமை அலுவலகம், 5 மண்டல அலுவலகங்கள் மற்றும் 39 கிடங்குகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மதுவகைகளின் இருப்பு நிலை, கிடைக்கக் கூடிய மதுவகைகள், நுகர்வோர் தொடர்பான ஏனைய தகவல்கள் ஆகிய தகவல்களை கணினி இணைய வளாகத்தில் கிடைக்கச் செய்வதற்காக டாஸ்மாக் கழகத்திற்கென்று தனியானதோர் கணினி இணையதளம் (வெப்சைட்) தற்போது உருவாக்கக் கருதப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கணினி இணையதளம் வாயிலாக கணினி விசையை இயக்கி எளிய வர்த்தக நடைமுறையைக் கொண்டு வரவும் கருதப்பட்டுள்ளது; இந்த வசதி முதற்கண், சென்னை மாநகரிலுள்ள அனைத்து உரிமதாரர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படும்; பின்னர் இத்திட்டம் மாநிலம் முழுவதற்கும் படிப்படியாக நீட்டிக்கப்படும். இந்த வசதியை நுகர்வோருக்கும் உரிய நேரத்தில் செய்து கொடுப்பது குறித்தும் அரசு கருதிப்பார்க்கும்.

**2000-2001 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள்**

4.8 2000-2001 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் ரூபாய் 14.61 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன:-





| தொடர் எண் | திட்டப்பணிகளின் விவரம் | 2000-2001 இல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் இணை ஆணையருக்கு எஸ்டிடி தொலைபோசி இணைப்புடன் கூடிய பேக்ஸ் இயந்திரம் வாங்குதல் | 0.55 |
| 2. | மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் அலுவலகத்திற்காக புகைப்பட நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 1.30 |
| 3. | தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையை கணினிமயமாக்குதல் | 10.00 |
| 4. | தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறைக்கு புகைப்பட நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 1.76 |
| 5. | தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறைக்கு படி பெருக்கு இயந்திரம் இரண்டினை வாங்குதல் | 1.00 |
| | மொத்தம் | **14.61** |


**5. முடிவுரை**

ஆயத்தீர்வை வகையிலான வருவாயை உயர்த்துவதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதே வேளையில், சிறந்த முறையில் ஆயத்தீர்வை நிருவாகத்திற்கு வகை செய்வதன்மூலம் அரசின் செயல் திறனை மேம்படுத்துவதற்காக உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கள்ளச்சாராய துயரச் சம்பவங்களால் உயிரிழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. சாராவியைத் தடுப்பதற்கு அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. சாராவியைத் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுப்பதன் வாயிலாகவும், இரண்டாம் தர/போலி மதுவகைகளை விற்பனை செய்வதைத் தடுப்பதன் வாயிலாகவும் இதை எய்துவதில் அரசு வெற்றிபெற்றுள்ளது.

[2000 மே 12

## இணைப்பு-1

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பணியமைப்பு விவரம்





| | | |
|---|---|---|
| இ.ஆ. | — | இணை ஆணையர் |
| து.அ (ம) உ.ஆ. | — | துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் |
| உ.ஆ. (பப) | — | உதவி ஆணையர் (பறக்கும் படை) |
| உ.க.அ. | — | உதவிக் கணக்கு அலுவலர் |
| கோ.ஆ.அ. | — | கோட்ட ஆய அலுவலர் |
| ஆ.மே.பா.அ. | — | ஆய மேற்பார்வை அலுவலர் |
| இ.த.அ.ம.அ. | — | இந்தியத் தயாரிட்ட அயல்நாட்டு மதுவகை அலகுகள் |



2000 மே 12]


## இணைப்பு-2

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு பணியமைப்பு விவரம்




ம.அ.பி.—மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

## இணைப்பு-3






## இணைப்பு-4

*இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்*

| தொ.எண். | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **திருவாளர்கள்** | |
| 1. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2. | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3. | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4. | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5. | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6. | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7. | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 2,000 |
| 9. | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 10. | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 11. | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 12. | சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 18,000 |
| 13. | சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 14. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 15. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு-1 | 12,600 |
| 16. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு-2 | 10,000 |

| தொ.எண். | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| 17. | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 18. | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், அலகு-1 | 15,000 |
| 19. | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், | 12,000 |
| 20. | ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம் | 18,600 |
| 21. | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 22. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், | 19,000 |
| 23. | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 24. | என்.பி.கே.ஆர் ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், | 18,000 |
| 25. | அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், | 14,000 |
| 26. | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 14,500 |
| 27. | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 28. | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 29. | காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 30. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 31. | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 32. | எஸ்.வி. சுகர் மில்ஸ் நிறுவனம் | 9,200 |
| 33. | டெக்கான் சுகர்ஸ் (ஈ.ஐ.டி. புகளூர்) | 14,700 |
| 34. | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, அலகு-2 | 12,000 |
| 35. | அருணா சுகர்ஸ் அண்டு என்டர்பிரைசஸ் நிறுவனம் | 25,000 |
| | மொத்தம் | 4,73,800 |





## இணைப்பு-5

### வடிசாலைகள் - சாராவி உற்பத்தி

(சாராவி ஆண்டு: டிசம்பர் முதல் நவம்பர் வரை)

| தொடர் எண் | வடிசாலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 1998-99 ஆம் சாராவி ஆண்டின் சாராவி உற்பத்தி அளவு (இலட்சம் லிட்டர்களில்) |
|---|---|---|---|---|
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள் :** | | | |
| | திருவாளர்கள் | | | |
| 1. | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 50,000 | 15,040 | 106.83 |
| 2 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 102.24 |
| 3. | கெம்பளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு-1 | 65,000 | 15,000 | — |
| 4. | கெம்பளாஸ்ட் சன்மார் நிறுவனம், (காடம்புலியூர்), அலகு-2 | 1,19,000 | 26,468 | 116.05 |
| 5. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,500 | 58.61 |
| 6. | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் | 45,000 | 14,077 | 97.32 |
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 10,000 | 65.76 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,000 | 70.40 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 25,500 | 2,250 | 31.58 |
| 10. | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 23,950 | 179.83 |
| 11. | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 26,200 | 123.53 |
| 12. | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,788 | 102.12 |
| 13. | பவானி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 20,000 | 5,000 | 17.44 |
| | **கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| 14. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 77.75 |
| 15. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 11,000 | 38.67 |
| | மொத்தம் | 8,46,110 | 2,20,073 | 1188.13 |

[2000 மே 12

## இணைப்பு-6

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) பல்வேறு தலைப்புகளின் கீழ் செய்த விற்பனை அளவு, விற்று முதல் மற்றும் அரசுக்குச் செலுத்திய வருவாய் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை**

| ஆண்டு | விற்பனை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகை | பீர் | விற்று முதல்- இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகை மற்றும் பீர் | ஆயத் தீர்வை | விற்பனைக் கட்டணம் | கூடுதல் விற்பனைக் கட்டணம் | விற்பனை வரி | இறக்குமதி உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (பெட்டிகளின் எண்ணிக்கை கோடிகளில்) | | | (ரூபாய் கோடிகளில்) | | | | |
| 1994-95 | 0.93 | 0.68 | 1173.74 | 35.83 | 20.53 | 109.14 | 148.33 | 5.36 |
| 1995-96 | 1.15 | 0.95 | 1518.71 | 42.75 | 25.34 | 144.97 | 193.13 | 6.79 |
| 1996-97 | 1.39 | 1.00 | 1825.39 | 60.42 | 28.10 | 181.74 | 245.83 | 10.33 |
| 1997-98 | 1.30 | 1.02 | 1999.53 | 69.22 | 49.15 | 198.25 | 277.48 | 23.05 |
| 1998-99 | 1.40 | 1.09 | 2352.81 | 51.41 | 43.31 | 239.58 | 442.28 | 32.49 |
| 1999-2000 | 1.41 | 1.05 | 2520.02 | 61.35 | 44.03 | 239.52 | 531.54 | 39.63 |



2000 மே 12]

## இணைப்பு-7

### ஆயத்தீர்வை வருவாய்

| தொடர் எண் | வருவாய்த் தலைப்பு | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (துறைக் கணக்குகள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிகளில்) | | | | | |
| 1 | நாட்டுச் சாராவி (சாராயம்) | 0.88 | 1.01 | 4.02 | 4.81 | 19.61 | 10.71 |
| 2. | புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) | 0.20 | 0.14 | 0.39 | 4.04 | 15.48 | 9.14 |
| 3 | மால்ட் வகை (பீர்) | 40.09 | 70.88 | 72.59 | 74.43 | 92.12 | 103.98 |
| 4 | அயல்நாட்டு மது மற்றும் சாராவி | 490.06 | 807.51 | 940.31 | 1171.03 | 1509.70 | 1636.76 |
| 5 | வணிக ரீதியாக இயல்பு மாற்றப்பட்ட சாராவி | 0.11 | 2.36 | 0.26 | 2.01 | 4.69 | 4.59 |
| 6 | மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு | 4.60 | 5.81 | 5.32 | 6.03 | 6.91 | 5.96 |
| 7 | அபினி, ஹெம்ப் ஏனைய மருந்துப் பொருட்கள் | 0.01 | 0.01 | 0.02 | 0.35 | (-)0.66 | 0.41 |
| 8 | அபராதங்களும் பறிமுதல்களும் | 13.57 | 13.27 | 8.76 | 8.77 | 10.52 | 14.16 |
| 9 | பணியம், பணிக் கட்டணங்களும் | 3.85 | 5.86 | 8.70 | 6.03 | 14.73 | 18.31 |
| 10 | ஏனைய வரவினங்கள் | 61.37 | 27.81 | 22.70 | 22.35 | 36.72 | 29.72 |
| | மொத்தம் | 614.74 | 934.56 | 1063.07 | 1299.85 | 1709.82 | 1833.74 |

## இணைப்பு-II

### (98 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு காவல் துறை

### 2000-2001-ம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**1. முகவுரை**

சட்டம் ஒழுங்கைப் பேணிக் காப்பதிலும், சமுதாய நல்லிணக்கம் மற்றும் நல்லுறவு போற்றி, நலிந்த பிரிவினர், மகளிர் ஆகியோரின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், தமிழகக் காவல் துறை தொடர்ந்து பெரும் பங்காற்றி வருகிறது. குற்ற நிகழ்வுகளில் நவீன தொழில் நுட்பங்கள் கையாளப்படுவதால், இந்த நவீன குற்ற நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்திட தமிழகக் காவல் துறை தன்னைத் தொடர்ந்து தயார்படுத்திக் கொண்டும் உத்திகளையும், தொழில் நுட்பங்களையும் மேம்படுத்திக் கொண்டும் வருகின்றது. தமிழகம் ஓர் அமைதிப் பூங்கா என்ற நற்பெயருக்கு மேலும் பெருமை சேர்த்திடும் வகையில் தமிழகக் காவல் துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. பொதுமக்களோடு உறவாடுவதிலும் பிரச்சினைகளை அணுகுவதிலும் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு காவல் துறை செயலாற்றி வருகிறது.

*பணியமைப்பு*

தமிழ்நாடு காவல் துறை தேவைக்கேற்ற மனித ஆற்றலைக் கொண்டதொரு பேரமைப்பாகும்.

களப் பணிப் பிரிவு, அமைச்சுப் பணிப் பிரிவு, தொலைத் தொடர்புப் பிரிவு ஆகியவற்றைக் கொண்ட இத்துறையின் பணியாளர்கள் எண்ணிக்கை 1-3-2000 அன்றைய நிலையில் 97,821 ஆகும். இதில் இந்தியக் காவல் பணியைச் சார்ந்த 189 அலுவலர்களும் அடங்குவர். காவல் துறைத் தலைமை இயக்குநர் இத்துறை நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளார். பயிற்சி, நியமனம், காவலர் வீட்டுவசதி ஆகிய பிரிவுகள் காவல் துறை இயக்குநர் நிலையிலுள்ள அலுவலர்களால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

காவல் துறையின் பணியமைப்பு பற்றிய முழு விவரங்களும் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

*நிதி ஒதுக்கீடு*

2000-2001 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு காவல் துறைக்கு ரூ.1116 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**2. காவல் துறையை நவீனமயமாக்குதல்**

காவல் துறையை நவீனமயமாக்குவதற்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. அவ்வப்போது தோன்றும் பிரச்சனைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் காவல் துறையின் ஆற்றலை மேம்படுத்தவும், நவீன சாதனங்களை வழங்கவும் அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

காவல் துறையை நவீனமயப்படுத்துவதற்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:—

**(1) மாநில அரசு அளிக்கும் நிதி**

நவீனமயமாக்கலுக்கு ஆண்டுதோறும் மாநில அரசு ரூ.10 கோடி நிதி அளிக்கிறது. இதைத் தவிர மைய அரசு தரும் நிதிக்குச் சமமாகவும் மாநில அரசால் ஏறத்தாழ ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**(2) மைய அரசு அளிக்கும் மானியம் மற்றும் கடன்**

நவீனமயமாக்கலுக்கு ஆண்டுதோறும் மைய அரசு மானியம் மற்றும் கடனாக ஏறத்தாழ ரூ.2 கோடி அளிக்கிறது.

**(3) மைய அரசு அளிக்கும் 100 விழுக்காடு உதவி**

கடலோரக் காவல் படையை வலுப்படுத்த மைய அரசு நூறு விழுக்காடு உதவியாக சிறப்பு நிதி ரூ.5 கோடி அளித்துள்ளது.

**(4) பத்தாவது நிதி ஆணையத்தின் ஒதுக்கீடு**

காவல் துறையிலுள்ள வசதிகளை மேம்படுத்த பத்தாவது நிதி ஆணையம் பின்வரும் பணிகளுக்காக ரூ.12.09 கோடி அளித்துள்ளது:—

(அ) 36 காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட ரூ.2.16 கோடி


(ஆ) காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட ரூ.3.70 கோடி

(இ) காவல் இணையம் (POLNET) திட்டத்தைச் செயல்படுத்திட ரூ.6.23 கோடி

**(5) ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்ட உதவி (UNDP)**

ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ், முன்னோடித் திட்டமாக சேலம் மாவட்டத்தில் உள்ள அன்னதானப்பட்டி, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள விழுப்புரம் (மேற்கு), உளுந்தூர்பேட்டை ஆகிய மூன்று காவல் நிலையங்கள் ரூ.18 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு உள்ளன.

காவல் துறை நவீனமயமாக்குதலுக்கு கடந்த நான்காண்டுகளில் மாநில அரசு நிதி மட்டுமின்றி பிற வகைகளில் கிடைத்த உதவிகள் பற்றிய விவரங்களைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் அறியலாம்:—




கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த வெளி உதவிகள் பற்றிய விவரங்களைக் காட்டும் படம்





(1) போக்குவரத்து


குற்றங்களைக் கண்டுபிடித்துக் களைந்திடவும், கலவரங்களை அடக்கி அமைதியை நிலைநாட்டவும், இதர காவல் பணிகளை ஆற்றவும் சம்பவ இடங்களுக்கு விரைந்து செல்லுதல் மிகமிக முக்கியமானது. எனவே, நவீனமயமாக்கலுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 35 விழுக்காட்டினை வேகமான போக்குவரத்திற்கென அரசு ஒதுக்கீடு செய்கிறது. காவல் துறையில் தற்போது 6973 வாகனங்கள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| கனரக வாகனங்கள் | - | - | 561 |
| நடுத்தர வாகனங்கள் | - | - | 1195 |
| ஈப்புகள் | - | - | 2444 |
| மகிழ்வுந்துகள் | - | - | 333 |
| மோட்டார் சைக்கிள்கள் | - | - | 2361 |
| மற்றவை | - | - | 79 |
| மொத்தம் | - | - | 6973 |

காவல் துறையிலுள்ள பல்வேறு வாகனங்களின் எண்ணிக்கையைப் பின்வரும் படம் விளக்குகிறது:—

[2000 மே 12

காவல் துறையிலுள்ள பல்வேறு வாகனங்களின் எண்ணிக்கையைக் காட்டும் படம்






2000 மே 12]

(2) ஆயுதங்கள்

கலவரங்களை அடக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் மனிதர்களுக்கு ஊறு விளைவிக்காதவையாக இருக்க வேண்டும் என்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆயுதங்களால் தாக்குதலுக்கு உட்படுபவர்களைச் செயலிழக்கச் செய்து சட்டத்தின் பிடியில் கொணர வேண்டும் என்ற குறிக்கோளுக்கிணங்க, வாயுத் துப்பாக்கிகள், நீரை விசையுடன் செலுத்தும் துப்பாக்கிகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள், ரப்பர் குண்டுகள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

(3) கருவிகள்

காவல் துறையின் உபயோகத்திற்கென பல நவீன கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. அனைத்து மண்டலங்கள், ஆணையங்கள், தனிப் பிரிவு ஒற்றாய்வுத் துறை ஆகியவற்றுக்கு கண்காணிப்புப் பணிக்கென வீடியோ டேப் கேமராக்களும், துணைக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டக் காவல் அலுவலகங்கள், மாநகரக் காவல் அலுவலகங்கள், இருப்புப்பாதை சந்திப்புக் காவல் அலுவலகங்கள், ஒற்றாய்வுத் துறை ஆகியவற்றிற்கு வெடி குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பெண் காவலர்களுக்கு மெய்க்காப்புக் கவசங்கள், தலைக் கவசம், கண் காக்கும் கருவிகள், பாலி கார்பனேட் கேடயங்கள், தடிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. குற்றவாளிகளை விரைந்து அடையாளம் காண விரல் ரேகைப் பகுப்பாய்வு மற்றும் உருவம் அறியும் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. குற்ற வழக்குகளில் சரியான சாட்சியங்களை வழங்கும் பொருட்டு துணைக் கருவிகளுடன் கூடிய, தானே உட்கிரகிக்கும் நிறப்பிரிகைமானி மற்றும் கணினியுடன் இணைந்த உருவமறியும் கருவிகள் ரூ.17 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு தடய அறிவியல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

(4) தகவல் தொடர்பு

கணினிகள், நுண்ணலைத் தொலைபேசிகள் ஆகியவற்றோடு இணைக்கும் வகையில் உயர் நுண்ணலைச் சாதனங்கள், வாக்கி டாக்கிகள் மற்றும் இதர தகவல் தொடர்புச் சாதனங்கள் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. காவல் துறை, சிறப்புக் காவல் படை, அதிரடிப்படை ஆகியவற்றிற்கு வி.எச்.எப்.கள் மற்றும் கையில் எடுத்துச்செல்லும் வி.எச்.எப்.களை வழங்க வேண்டி நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டில் ரூ.1.35 கோடி வழங்கப்பட்டுள்ளது.

[2000 மே 12

பெரு நகரங்களில் குறுகிய தூரத் தகவல் தொடர்புக்குக் கம்பியில்லா உள்ளூர் வளையம் [Wireless in Local Loop (WILL)] என்ற தொழில் நுட்பத்தினை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனைத் தற்போதுள்ள நுண்ணலை இணைப்புகளுடனும், காவல் இணையத்துடனும் (POLNET) இணைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த தொழில் நுட்பம் செயல்முறைக்கு வரும்போது பிற்காலத்தில் ஒலி, ஒளித் தொடர்பின் வழியாகத் தொலை மாநாடுகள் நடத்தவும், மின்னஞ்சல் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

### (5) கணினிமயமாக்கல்

காவல் துறையில் கணினிமயமாக்கல் பெருமளவில் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.4.16 கோடி செலவில் 484 கணினிகளை இத்துறை வாங்கியுள்ளது. விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ.53 இலட்சத்தில் இன்னும் 83 கணினிகள் வாங்கப்படவுள்ளன. கணினிகளைக் கையாளவும் அவற்றைப் பயன்படுத்தவும் இதுவரை தோராயமாக 3000 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### தற்போதுள்ள ஏற்பாடுகள

பணியாளர் மேலாண்மைத் திட்டம் முதல், குற்ற ஆய்வு வரை உள்ள பல்வேறு பணிகளுக்கென காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்திலுள்ள பல்வேறு பிரிவுகள், மாவட்டக் காவல் அலுவலகங்கள், மண்டலக் காவல் தலைமை அலுவலகங்கள், ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு அடிப்படை மேலாண்மை முதல் குற்றப் பகுப்பாய்வு வரையான பணிகளுக்குப் பயன்படும் கணினிகளும், அவற்றுக்குத் தேவையான மென் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்களால் பெறப்படும் தகவல்களை விரைந்தும் தொடர்ந்தும் கண்காணிக்கும் பொருட்டு காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கும் மாவட்டக் காவல் அலுவலகங்களுக்கும் இடையிலான தகவல் தொடர்நிலை இணைப்பு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விரைந்து முடிவுகள் எடுக்கவும், உடனடித் தீர்வுகள் காணவும் பல்வேறு அலுவலகங்களில் கணினிகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. சம்பளப் பட்டிகள், அறிக்கைகள் தயாரிப்பு, வரவு செலவுக் கணக்கீடு முறை, பணியாளர் பற்றிய தகவல் ஆகியவை கணினியில் அலுவலகத் தானியங்கு நிர்வாக நடைமுறைகட்குச் சில சான்றுகளாகும். காவல்



2000 மே 12]

பணியாளர் மேலாண்மை முறை, காவல் போக்குவரத்துத் தகவல் முறை, காவல் பண்டகசாலை தகவல் முறை, கணினி மூலம் நுண்ணலையில் செய்தி அனுப்பும் முறை, படம் வரையும் முறை, விரல் ரேகையைப் பகுப்பாய்ந்து குற்றவாளியைக் கண்டறியும் முறை (Finger Print Analysis and Criminal Tracing System) போக்குவரத்துப் பகுப்பாய்வு முறை, குற்றம்-குற்றவாளிகள் தகவல் முறை, காவல்நிலையப் பதிவுருக்களைக் கணினிப்படுத்துதல் ஆகிய பெரிய அளவிலான திட்டங்களைச் செயல்படுத்தவும் கணினியைக் காவல் துறை பயன்படுத்துகிறது.

### எதிர்காலத் திட்டங்கள்

- அடுத்த ஐந்தாண்டு காலத்தில் 2000 கணினிகளை வாங்கி அவற்றை ஆணையங்களின் கீழுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும், கோட்டக் காவல் அலுவலகங்களுக்கும் வழங்குதல்.
- பல்வேறு பணிகளுக்கென உருவாக்கப்பட்ட திட்டங்களைத் திறமையுடன் பயன்படுத்திட வேண்டி எல்லாப் பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் கணினியில் பயிற்சி அளித்தல்.
- மின்னஞ்சல் முறையில் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் எந்நேரத்திலும் தகவல் அளித்திட தகவல் பரிமாற்றச் சேவையை மேம்படுத்துதல்.
- சிறந்த ஒருங்கிணைப்புக்காக (Internet) மாநகரத்திலுள்ள எல்லாப் பிரிவுகளுக்கும் இணைய வசதி அளித்தல்.
- கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திட காவல் துறை ஆதாரங்கள் மற்றும் திட்டமிடல் முறையை ஏற்படுத்துதல்.

### (6) நாய்ப்படைப் பிரிவினைப் பலப்படுத்தி மேம்படுத்துதல்

குற்றங்களைக் கையாளவும், அபாயகரமான வெடிபொருட்களைத் திறமையாகக் கண்டுபிடிக்கவும் நாய்கள் மிகமிக அவசியமாகும். எனவே, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் நாய்ப்படையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன், 103 நாய்க்குட்டிகளை வாங்கவும், நாய்களுக்கான 91 குடில்கள் அமைக்கவும் ரூ.16.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[2000 மே 12

### (7) 2000-2001-க்கான புதிய திட்டங்கள்

ரூ.1.28 கோடி செலவில் பின்வரும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

| வ. எண் | திட்டங்களின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிறப்புப் பிரிவுகளுக்கு முக்கிய அறைகலன்கள் வழங்குதல் | 40.00 |
| 2. | வரதட்சணை ஒழிப்புப் பிரிவிற்கென ஏற்படுத்தப்பட்ட 26 காவல் துறைப் பெண் துணைக் கண்காணிப்பாளர். அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வழங்குதல் | 5.07 |
| 3. | வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 60.00 |
| 4. | லெய்க்கா ஒப்புகை நுண்நோக்காடிக்காக புகைப்பட இணைப்பும், வீடியோ டிஸ்பிளே துணைப் பாகங்களும் வாங்குதல் | 10.00 |
| 5. | பத்து பாட்டரிகளைக் கொண்ட, கையில் எடுத்துச் செல்லத் தக்க மின் உற்பத்தி இயந்திரம் (5000 வாட்) வாங்குதல் | 12.00 |

## 3. சட்டம் ஒழுங்கு

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்ந்து நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. குறுகிய கால அளவிலும், நீண்ட கால அளவிலும் பயன் தரும் வகையில் அரசால் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகள் சமுதாயத்தின் பலதரப்பட்ட பிரிவினர்களிடையே நல்லிணக்கத்தை வளர்க்கப் பயன்பட்டுள்ளன. பொதுமக்களின் ஒத்துழைப்புடன், அரசின் உறுதியான நடவடிக்கைகளின் பயனாக அமைதியும் சமுதாய நல்லிணக்கமும் நன்முறையில் பேணப்பட்டு வருகின்றன.

### மதக் கலவரங்கள்

1999-ஆம் ஆண்டில் குறிப்பிடும்படியான மதக் கலவர நிகழ்வு ஏதும் ஏற்படவில்லை. இந்துக்களுக்கும், கிறித்துவர்களுக்குமிடையே நிலவி வரும் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க சில சமூக விரோத சக்திகள் மேற்கொண்ட ஒரு சில முயற்சிகள் அவ்வப்போது முறியடிக்கப்பட்டு அமைதி



2000 மே 12]

நிலை நாட்டப்பட்டது. அமைதியைச் சீர்குலைக்கும் மத அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒடுக்கி, மத நல்லிணக்கதைப் பேணிக்காக்கும்பொருட்டு அரசு தொடர்ந்து விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் செயல்பட்டு வருகிறது.

### சாதிக் கலவரங்கள்

அரசால் எடுக்கப்பட்டுவரும் உறுதியான தொடர் நடவடிக்கைகளின் பயனாக சாதிக் கலவரங்கள் நிகழாமல், மாநிலத்தில் முழு அமைதி நிலவுகிறது. அரசால் எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளும், அரசு துன்புற்றோர் மீது காட்டும் பரிவும், துயருற்றோருக்கு வழங்கிய நிவாரண உதவிகளும் தென்மாவட்டங்களில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் பேணிக்காத்திடப் பெரிதும் உதவின. எனினும், 5-9-1999 அன்று நாடாளுமன்றத்திற்கான ஓட்டுப்பதிவு முடிந்தபின், கடலூர் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான மோதல்கள் ஏற்பட்டன. அம்மோதல்களின்போது சில வீடுகள் சேதமடைந்தன. மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் தக்க தருணத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக உடனடியாக நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இயல்பு நிலை திரும்பியதுடன், உயிரிழப்பு ஏதும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது. இந்த வன்முறைச் செயல்களால் ஏற்பட்ட சொத்துக்களின் இழப்பிற்கு ரூ.9,15,790 உடனடியாக நிவாரணம் வழங்கப்பட்டது.

வெவ்வேறு பிரிவு மக்களிடையே எழும மோதலுக்குக் காரணமான பதட்ட நிலைமைகளைத் தணித்திட தொடர்ச்சியான பல்வேறு நடவடிக்கைகளை அரசு உறுதியுடன் எடுத்துள்ளது. அவ்வாறு அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் ஒரு சில பின்வருமாறு:

(1) இம்மாநிலத்தில், மத நல்லிணக்கத்தைக் காக்கவும், சாதி மோதலைத் தவிர்க்கவும், சமுதாய ஒற்றுமையை மேம்படுத்தவும் உரிய வழி வகைகள் குறித்து விவாதிக்கும் பொருட்டு, அரசு மே 1997, ஜூன் 1997 மற்றும் அக்டோபர் 1998 ஆகிய காலங்களில் மூன்று முறை அனைத்துக் கட்சிக் கூட்டங்களை கூட்டியது. இக்கூட்டங்களின் வாயிலாக, அமைதியை நிலைநாட்டவும் மத நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கவும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், சமுதாயத் தலைவர்களுக்கும் அரசு வேண்டுகோள் விடுத்ததுடன், அவர்களின் கருத்தறிந்து கவனமாகச் செயல்பட்டது. 14-5-1997 அன்று நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்கள் மாவட்டத்தில், மாவட்ட அளவில் அமைதிக் குழுக்களை ஏற்படுத்த வேண்டுமென்றும், பலதரப்பட்ட மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகள் குறித்துப் பரிசிலித்து முடிவு காண, மாதந்தோறும் அமைதிக் குழுக் கூட்டத்தினை நடத்த வேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

1998 அக்டோபர் மாதத்தில் அரசால் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கிராமங்கள் தோறும் பஞ்சாயத்துத் தலைவரைத் தலைவராகக் கொண்ட அமைதிக் குழுக்களை ஏற்படுத்தவும் அரசு ஆணைகள் பிறப்பித்தது. அக்குழுக்கள் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடும். இதற்கென அதிகாரங்கள் இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(2) 1997 ஜூன் மாதத்தில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் சாதி மோதல் உருவாவதைத் தடுத்திடவும், தவிர்த்திடவும் சாதி, மத மற்றும் அரசியல் தலைவர்களின் பெயர்களை மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களிலிருந்து நீக்க 1-7-1997 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

(3) சாதிக் கலவரங்கள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறியவும், இனி, சாதிக் கலவரங்கள் நிகழாமல் தடுக்க தக்க வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கவும், உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. எஸ். மோகன் தலைமையில் 16-7-1997 அன்று உயர்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழு, 31-1-1998 அன்று தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்தது. இக்குழு தெரிவித்த ஆலோசனைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் பெரும்பாலானவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உயர்நிலைக் குழுவின் அறிக்கை, இக்குழு தெரிவித்த ஆலோசனைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்கள் ஆகியவை சட்டப் பேரவையில் 23-11-1998 அன்று வைக்கப்பட்டன.

(4) தென் மாவட்டங்களில் சாதி மற்றும் மதக் கலவரங்களைத் தடுக்கவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும் காவல் துறைத் தலைவர் நிலையில் உள்ள ஒரு மூத்த, அனுபவம் மிக்க காவல் துறை அதிகாரி மதுரையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(5) தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த, மதுரையில் சிறப்பு நீதிமன்றம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(6) சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் இன்றி பலதரப்பட்ட மக்களும் சேர்ந்து வாழும் பொருட்டு "பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டத்தின் கீழ் போதுமான அளவு அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. சமுதாய நல்லிணக்கத்தை வளர்ப்பதில் இத்திட்டம் நல்ல வெற்றியைக் கண்டுள்ளது.

(7) தென் மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றைக் கண்டறியவும், அவர்களின் கல்வி, சமூகப் பொருளாதார



மேம்பாடு, வேலைவாய்ப்புக்கான வழிவகைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும், தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டம் ஒன்றை வகுத்தளிக்கவும் உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு இரத்தினவேல் பாண்டியன் தலைமையில் உயர்நிலை ஆணையம் ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. அவ்வாணையம் தனது இறுதி அறிக்கையை 30-4-2000 அன்று அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(8) 1998 அக்டோபர் மாதம் அரசால் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், சமத்துவத்தையும், சமூக மறுமலர்ச்சியையும் உருவாக்கவும், சமூகச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தி அதன்மூலம் சாதி மோதல்களைத் தடுக்கவும், சாதிக் கலவரங்களுக்கு நிரந்தரத் தீர்வு காணவும் "சமூகச் சீர்திருத்தத் துறை" என்ற ஒரு துறையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்துறை தற்போது தலைமைச் செயலகத்தில் இயங்கி வருகிறது.

(9) சுவரொட்டி மற்றும் வாசகங்கள் மூலம் வன்முறையைத் தூண்டும் சாதி மற்றும் மத அமைப்புகளைச் சார்ந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துக் காவல் துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வன்முறையைத் தூண்டும் நோக்கத்துடன் நடத்தப்படும் பேரணி மற்றும் ஊர்வலங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும், அத்தகைய பேரணி, ஊர்வலங்கள் உரிய அனுமதி இல்லாமல் நடத்தப்பட்டால், அவற்றின் அமைப்பாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(10) 23-12-1999 மற்றும் 24-12-1999 ஆகிய தினங்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கத் தொடர்ந்து தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதன் பொருட்டு, காவல் துறை அதிகாரிகளுடன் அடிக்கடி கலந்து பேசி கருத்துகளையும், கிடைக்கும் துப்புகளையும் பரிமாறிக்கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் மேற்கொள்ள வேண்டும் எனவும், அரசால் கொண்டு வரப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் முழுப் பயனையும் மக்கள் துய்த்திடும் வண்ணம் தொடர்ந்து விழிப்புடன் செயல்பட்டு, சமுதாயத்தில் பதட்டத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்தத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட மக்களிடையே உள்ள சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், எவ்விதப் பூசல்களுக்கும் இடமளிக்காமல்,

சமுதாய நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கவும் அரசு உறுதி பூண்டுள்ளதால், இந்த தொலைநோக்கு நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் நல்ல பலன்களைத் தந்துள்ளன. மக்களின் மனமார்ந்த பாராட்டுகளையும் பெற்றுள்ளன. அரசின் தீவிர முயற்சியாலும், உறுதியான நடவடிக்கைகளாலும், மக்களின் ஒத்துழைப்பாலும், முக்கிய நிகழ்வுகளான பொதுத் தேர்தல், தேவர் குரு பூஜை, விநாயக சதுர்த்தி ஊர்வலங்கள், பாபர் மசூதி இடிப்பு நினைவு நாள் முதலானவை அமைதியாகவும், எந்தவித அசம்பாவிதமும் இன்றி நடந்தேறி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து விழிப்புடன் இருந்துவரும் அரசின் முயற்சிகளையும் மீறி ஒருசில அசம்பாவிதங்கள் நடந்து விடுகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாஞ்சோலைத் தோட்டத் தொழில் தகராறு காரணமாக 23-7-1999 அன்று திருநெல்வேலியில் நடத்தப்பட்ட பேரணியில் சிலர் வன்முறையில் ஈடுபட்டபோது காவல் துறையினர் நடத்திய தடியடிப் பிரயோகத்திலிருந்து தப்பிக்க தாமிரபரணி ஆற்றில் இறங்கியவர்களில் 17 பேர் நீரில் மூழ்கி இறந்துவிட்டனர். இது தொடர்பாக பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு 37 பேர் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தை ஆய்வு செய்ய, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்களை ஒரு நபர் ஆணையமாக அரசு நியமனம் செய்துள்ளது.

17-11-1999 அன்று சிறைக் கைதி ஒருவரது இறப்பில் சந்தேகம் கொண்டு சென்னை மத்திய சிறையில் சிறைவாசிகள் சிலர் வன்முறையிலும் தீவைப்பிலும் ஈடுபட்டனர். அவர்கள் சிறையின் பல பகுதிகளுக்கும் சென்று சிறை அதிகாரிகளைத் தாக்கியதோடு சொத்துக்களுக்கும் சேதமேற்படுத்தினர். அவர்களில் சிலர் சிறையிலிருந்து தப்பிக்கவும் முயற்சி செய்தனர். வன்முறைக் கும்பலொன்று துணை ஜெயிலரைத் தாக்கி எரித்துக் கொன்றது. அதன் பின்னர் கலவரத்தை அடக்க காவல் துறையின் உதவி நாடப்பட்டது. கூரைகள் மற்றும் மரங்களின் மீது ஏறியிருந்த கைதிகள் அங்கிருந்து கற்களையும் பிற பொருட்களையும் எறிந்து காவலர்களையும் சிறை அலுவலர்களையும் தாக்கினர். எனவே, காவலர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர். தடியடிப் பிரயோகம் செய்தனர். பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் 9 கைதிகள் இறந்துவிட்டனர். கைதிகள் தாக்கியதில் 35 சிறைப் பணியாளர்களும் 44 காவல் துறையினரும் காயமுற்றனர். காவல் துறை நடவடிக்கையில் 93 கைதிகள் காயமுற்றனர். இச்சம்பவத்தை ஆராய உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஐ. டேவிட் கிறிஸ்டியன் தலைமையில் நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது. துணை ஜெயிலரைக் கொன்றதற்காக 9 சிறைவாசிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



*தருமபுரி மாவட்டத்தில் மூன்று கல்லூரி மாணவிகள் உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவம்*

கொடைக்கானலில் பிளஸன்ட் ஸ்டே ஹோட்டல் சம்பந்தமான வழக்கில், 2-2-2000 அன்று தனி நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து, சில மாவட்டங்களில் அங்குமிங்குமாக சமூக விரோதிகள் பேருந்துகளுக்குச் சேதமேற்படுத்தினர். தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டியில், கோவை வேளாண் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான பேருந்தில் மாணவ மாணவிகள் வந்து கொண்டிருந்தபோது சமூக விரோதிகள் அதைத் தீக்கிரையாக்கினர். அப்பேருந்தில் பயணம் செய்த மூன்று கல்லூரி மாணவிகள் அந்த இடத்திலேயே தீயில் கருகி உயிரிழந்தனர். இந்நிகழ்வை அரசு மிகவும் கடுமையாகவும், கவலையுடனும் எடுத்துக் கொண்டு இதுகுறித்து வழக்கின் விசாரணையை குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இவ்வழக்கின் புலனாய்வு குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டு 28-4-2000 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சில கொடுமையான நிகழ்வுகளை விசாரணை செய்ய, விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் கீழ் இரண்டு விசாரணை ஆணையங்களை 1999 ஆம் ஆண்டு அரசு நியமித்தது.

*கா்வல் நிலையத்தில் மரணங்கள்*

காவல் துறையினரின் பாதுகாப்பிலிருக்கும்போது ஏற்படும் மரணங்களைத் தடுப்பது அரசின் தலையாயக் கடமைகளில் ஒன்றாகும். தலைமைச் செயலரால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இத்தகைய மரணங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படுகிறது. காவல் துறையினரின் பாதுகாப்பிலிருக்கும்போது ஏற்படும் வன்செயல்களைக் கட்டாயம் தவிர்த்திடுமாறு காவல் துறையினருக்குக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த உத்தரவுகளை மீறும் காவல் துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 1991-ஆம் ஆண்டிலிருந்து காவல் துறையினரின் பாதுகாப்பிலிருக்கும்போது ஏற்பட்ட மரணங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

காவல் துறையினரின் பாதுகாப்பிலிருப்போர் உட்பட அனைத்துத் தரப்பினரின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசு தீவிரமாக இருந்து வருகிறது. இதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

[2000 மே 12

**காவல் துறையினரின் துப்பாக்கிச் சூடு**

சட்ட விரோதமான கும்பலைக் கலைக்கவும், வன்முறையை அடக்கவும், பொதுமக்களின் உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்கவும் இறுதி ஆயுதமாக காவல் துறையினர் துப்பாகிச் சூடு செய்ய நேரிடுகிறது. துப்பாக்கிச் சூடு நிகழ்வுகளைக் குறைக்க அரசு முயற்சிகள் எடுத்துவருகிறது. 1999 ஆம் ஆண்டில் 35 முறை காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

**4. குற்றம்**

மாநிலத்தில் குற்ற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் காவல் துறை மேற்கொண்டு வருகிறது. குற்றப் புலனாய்வில் அறிவியல் பூர்வமான வழிகளும், விரல் ரேகைப் பதிவுக் கூடம், தடய அறிவியல் ஆய்வகம், நாய்ப் படை, கணினிப் பிரிவு ஆகியவற்றின் சேவைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளின் விளைவாக குற்ற நிகழ்வுகள் குறிப்பாக, வன்குற்ற நிகழ்வுகள் குறைந்தும் களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதில் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன.

சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள்

1999 ஆம் ஆண்டு சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 23,680 ஆகும். இவற்றில் 17,946 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது புகார் செய்யப்பட்ட மொத்த வழக்குகளில் 76 விழுக்காடு ஆகும்.

1997 முதல் 1999 வரை சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட புகார்களில் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் பின்வரும் வரைபடம் விளக்குகிறது:

ஆதாயக் கொலை, கூட்டுக்கொள்ளை, பெருங்களவு, சிறு களவு முதலான குற்றங்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:



2000 மே 12]

| வருடம் | 1997 | | 1998 | | 1999 | |
|---|---|---|---|---|---|---|
| குற்றத் தலைப்புகள் | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடித்தவை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடித்தவை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடித்தவை |
| ஆதாயக் கொலை | 99 | 48 | 77 | 56 | 77 | 59 |
| கூட்டுக்கொள்ளை | 197 | 101 | 181 | 118 | 168 | 107 |
| கொள்ளை | 723 | 433 | 692 | 506 | 610 | 460 |
| பூட்டு உடைத்தல் | 6615 | 3474 | 6206 | 3102 | 5694 | 3266 |
| பெருங் களவு | 18511 | 15420 | 17153 | 12745 | 15984 | 12963 |
| சிறு களவு | 1023 | 1014 | 743 | 739 | 656 | 641 |
| கால்நடைக் களவு | 450 | 431 | 446 | 402 | 491 | 450 |
| மொத்தம் | 27618 | 20921 | 25498 | 17668 | 23680 | 17946 |
| கண்டுபிடிப்பின் விழுக்காடு | 75.8% | | 69.3% | | 75.8% | |

ஆதாயக் கொலை, கூட்டுக்கொள்ளை, கொள்ளை, பெருங் களவு ஆகியவற்றில் கொடுமையான, பரபரப்பான பல வழக்குகள் குறுகிய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, களவுபோன சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. குற்ற நிகழ்வுகள் மிகுந்த இடங்களில் சோதனைச் சாவடிகளை அமைத்து குற்றவாளிகளின் நடமாட்டத்தைப் பெருமளவில் கட்டுப்படுத்தியதாலும், தீவிரமான ரோந்துகள் மேற்கொண்டதாலும், நியாயமான தடுப்புப் பணிகள் மேற்கொண்டதாலும் இது சாத்தியமாயிற்று.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, 1999-ல் மீட்கப்பட்ட சொத்துக்களின் அளவு கூடியுள்ளது. 1998-1999 ஆண்டுகளில் களவுபோன சொத்துக்களின் மதிப்பு, மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு மற்றும் கண்டுபிடிப்பு விழுக்காடு ஆகியவை பின்வருமாறு:

| ஆண்டு | சொத்து இழப்பு (ரூபாய் கோடியில்) | கண்டுபிடிக்கப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய் கோடியில்) | கண்டுபிடிப்பு விழுக்காடு |
|---|---|---|---|
| 1998 | 38.5 | 25.2 | 65.4% |
| 1999 | 36.9 | 24.8 | 67% |

[2000 மே 12

## பெண்களுக்கெதிரான குற்றங்கள்

பெண்களின் நலன்களைப் பாதுகாத்திட மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பெண்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய அரசுக்குப் பரிந்துரை செய்யும். மேலும், மாவட்ட ஆட்சியர், மாவட்ட சமூக நல அலுவலர், ஒரு முன்னணிப் பெண் வழக்குரைஞர், பிரபலமான ஒரு சமூகப் பணியாளர் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. வரதட்சணைக் கொடுமைகளை எதிர்க்கவும், அவற்றால் ஏற்படும் மரணங்களைத் தடுக்கவும் இதன் தொடர்பாக தொடுக்கப்படும் வழக்குகளை தீவிரமாகவும், சரியாகவும் கவனித்து வரவேண்டுமென இந்தியப் பேரரசும், தமிழக அரசும் அறிவுரைகள் வழங்கியுள்ளன. இந்த வழக்குகளின் முன்னேற்றத்தையும், முடிவையும் அவை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. இவ்வழக்குகளின் புலனாய்வில் உதவிடவும், பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுக்க வழிவகைகள் காணவும் ஆலோசனைக் கூறவும் ஒரு குழுவை ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட எல்லா குழு அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டு பெண்களுக்கெதிரான பல்வேறு குற்ற நிகழ்வுகள் பற்றிய புகார்களின் பதிவு, கண்டுபிடிக்கப்பட்டவை, கண்டுபிடிப்பு விழுக்காடு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

| குற்றம் | புகார் செய்யப் பட்டவை | கண்டுபிடிக்கப் பட்டவை | கண்டுபிடிப்பு விழுக்காடு |
|---|---|---|---|
| கற்பழிப்பு | 400 | 303 | 76 |
| கற்பழிப்பு முயற்சி | 35 | 24 | 69 |
| மானபங்கம் | 1880 | 1687 | 90 |
| கடத்தல் | 813 | 508 | 62 |
| கேலி செய்தல் | 2034 | 2025 | 99 |
| வரதட்சணை மரணங்கள் | 199 | 161 | 81 |
| வரதட்சணைக் கொடுமை | 661 | 558 | 84 |
| பெண் சிசுக் கொலை | 2 | 1 | 50 |
| மொத்தம் | 6024 | 5267 | 87 |



2000 மே 12]

1999 ஆம் ஆண்டில் பெண்களுக்கெதிரான குற்ற நிகழ்வுகளில் புகார் செய்யப்பட்டவை, கண்டுபிடிக்கப்பட்டவை ஆகியவற்றை பின்வரும் விளக்க வரைப்படம் ஒப்பிட்டுக் காட்டும்:

1999 ஆம் ஆண்டில் பெண்களை கேலி செய்தது சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்குகளில் தண்டனை பெற்றோர் தொகை பெருமளவில் உள்ளது. இவ்வாண்டில் புகார் செய்யப்பட்ட 2034 வழக்குகளில் 2025 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1671 வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை தரப்பட்டுள்ளது.

### குறிப்பிடத்தக்க குற்றத் தடுப்புகள்

### வீடியோ மற்றும் கணினி மென்பொருள் திருட்டு

தயாரிப்பாளரின் பதிப்பு உரிமைகளை மீறும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்க வேண்டி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1995 ஆம் ஆண்டு வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1952 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1957 ஆம் ஆண்டு தயாரிப்பாளரின் பதிப்பு உரிமைச் சட்டம், 1984 ஆம் ஆண்டு வி.சி.ஆர், கேபிள் வலை மூலம் சின்னத் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், வியாபாரம், வணிகக் குறியீடுகள் சட்டம் ஆகியவை வீடியோ, கணினி மென்பொருள் திருட்டைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் ஆகும்.

1999 ஆம் ஆண்டு புகார் செய்யப்பட்ட 123 வழக்குகளில் 68 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகின்றன. 10 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மற்ற வழக்குகள் புலனாய்வில் உள்ளன.

1999 ஆம் ஆண்டு பெரிய அளவில், திருட்டுக்குட்பட்ட பிரபல திரைப்படங்களின் வீடியோ கேசட்டுகளும், பிளாப்பிகளும், வீடியோ கையடக்கத் தட்டுகள் பறிமுதல் கையடக்கத் தட்டுகளும், மென்பொருள் கையடக்கத் தட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. திருட்டு மென்பொருள்களையும் அதற்குத் தேவையான இதர உபகரணங்களையும் கொண்ட கணினிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 24-1-2000 அன்று சென்னையில் நான்கு வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.2.3 கோடி மதிப்புள்ள கணினி மென்பொருள் திருட்டு கையடக்கத் தட்டுகள், கணினிகள் மற்றும் அதற்கான வன்தட்டுகள் (Hard discs) ஆகியவை கைப்பற்றப்பட்டது குறிப்பிடத் தக்கதொன்றாகும். கடந்த இரண்டாண்டுகளில் புகார்

[2000 மே 12

செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் வழக்கு தொடர்பான சொத்துக்களின் மதிப்பும் பின்வருமாறு:

| ஆண்டு | புகார் செய்யப்பட்ட வழக்குகள் | மதிப்பு |
|---|---|---|
| 1998 | 170 | ரூ.8.00 இலட்சம் |
| 1999-2000 | 148 | ரூ.240 இலட்சம் |

சிலைத் திருட்டு

பொருளாதாரக் குற்றப் பிரிவில் உள்ள சிலைப் பிரிவு சிலைத்திருட்டு வழக்குகளைப் புலனாய்வு செய்வதுடன், கடத்தல்காரர்கள், கலைப்பொருள் வியாபாரிகளின் சந்தேகமான நடவடிக்கைகள் குறித்து முன் தகவல்களையும் சேகரிக்கிறது. பல பரபரப்பான வழக்குகள் இப்பிரிவினால் கையாளப்படுகின்றன.

1998-ல் இப்பிரிவு 15 வழக்குகளைக் கண்டுபிடித்துள்ளது. மேலும், ரூ.1 கோடி மதிப்புள்ள 37 பழமையான உலோகச் சிலைகளையும் இரண்டு கற்சிலைகளையும் இப்பிரிவு மீட்டு 29 சிலைத் திருடர்களைக் கைது செய்துள்ளது. 1999 ஆம் ஆண்டில் இப்பிரிவு 19 வழக்குகளைக் கண்டு பிடித்துள்ளது. இவற்றில் ரூ.3 கோடி மதிப்புள்ள 16 பழமையான உலோகச் சிலைகளையும், 25 கற்சிலைகளையும் 6 ஓவியங்களையும் மீட்டதுடன், 30 சிலைத் திருடர்களையும் கைது செய்துள்ளது. மீட்கப்பட்ட கற்சிலைகள் அனைத்தும் பல்லவர், சோழர் காலத்தைச் சேர்ந்த மதிப்புமிக்க பழம்பெருமை வாய்ந்த கலைப் பொருட்களாகும்.

1998-1999 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட சிலைத் திருட்டு வழக்குகள், எண்ணிக்கை, சிலைகளின் மதிப்பினைக் காட்டும் வரைபடங்கள் விவரம் பின்வருமாறு:

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில் காவல் துறையின் சிறப்பான செயல்பாடு

புதுதில்லியிலுள்ள தேசிய குற்ற ஆவணக்காப்பகம், "இந்தியாவில் குற்ற நிகழ்வுகள்" என்ற தலைப்பில் தயாரித்துள்ள புள்ளி விவரங்களின்படி 1997, 1998 ஆம் ஆண்டுகளில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ்



2000 மே 12]

தமிழ்நாட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட இனங்களில் தண்டனை பெற்றோர் விழுக்காடு குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. இது 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் 64 சதவீதம் ஆக உள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது இச்செயல்பாடு மிக அதிகமாகும். தேசிய அளவில் தண்டனை பெற்றோர் விழுக்காடு 1997-ல் 38.2 சதவீதம் ஆகவும் 1998-ல் 37.39 சதவீதம் ஆகவும் உள்ளது. எனவே, தமிழ்நாட்டில்தான், காவல் துறையினரின் தீவிர முயற்சிகளின் காரணமாக வழக்குகளை நடத்துவதிலும், குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தருவதிலும் சிறப்பான செயல்பாடு காணப்படுகிறது.

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் சிறப்பான நிலை

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதிலும் தமிழ்நாடு உயர் நிலையிலுள்ளது. 1997-ல் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 91.06 விழுக்காடு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து நாட்டின் முதலாவது இடத்திலும், 1998-ல் 90.39 விழுக்காடு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து நாட்டின் இரண்டாவது இடத்திலும் தமிழ்நாடு உள்ளது. தேசிய அளவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட விழுக்காடு 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் 77.47 ஆகும். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் பெருங் குற்றங்களான கொலை, கூட்டுக்கொள்ளை, கொள்ளை, கற்பழிப்பு, வரதட்சணை மரணம் ஆகியவை மிகக் குறைவாகவே நிகழ்ந்துள்ளன.

1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததில் தேசிய சராசரியையும், தமிழ்நாட்டின் செயல்பாட்டினையும் காட்டும் வரைபடம் பின்வருமாறு:

குற்றக்கண்டுபிடிப்பில் உதவும் பிற சேவைகள்

விரல்ரேகைப் பிரிவு

குற்றங்களை நிரூபிப்பதில் விரல்ரேகைகளுக்குள்ள முக்கியத்துவம் உணரப்பட்டதால் ஒரு முன்னோடி முயற்சியாக சென்னையில் 1895-ஆம் ஆண்டில், நாட்டிலேயே முதல் "விரல்ரேகை பதிவுக்கூடம்" நிறுவப்பட்டது. விரல்ரேகைகளைக் கொண்டு குற்றவாளிகள் சரியாக அடையாளம் காணப்பட்டதன் விளைவாக அதிக மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் விரல் ரேகைகளைக் கொண்டு அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

விரல்ரேகைப் பதிவுக்கூடங்களுக்கு நவீன கருவிகளையும் சாதனங்களையும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரல் ரேகையைப் பகுப்பாய்ந்து குற்றவாளிகளை அறியும் முறையானது (Finger Print Analysis and Criminal Tracing System) விரல்ரேகையை அறியும் முறைகளில் புதுமையானதாகும். இது விரல்ரேகைகளை வகைப்படுத்தியும், பதிவுருக்களை சீர் செய்தும், ரேகைகளை ஒப்பிட்டுப்பார்த்தும் குற்றவாளிகளைக் கண்டறிகிறது. இச்சாதனம் விரல்ரேகைப் பதிவுக்கூடத்தில் தற்போது நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள தொலை வினாப் பணி நிலையங்கள் (Remote Query Work Stations) மேற்சொன்ன சாதனத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக அடையாளம் காணவேண்டிய குற்றம் சாட்டப்பட்டோர்/ சந்தேகத்திற்குரியோரது விரல்ரேகைகள் உடனுக்குடன் இச்சாதனத்திற்கு அனுப்பப்பட்டு ஏற்கெனவே உள்ள விரல்ரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன.

*தடய அறிவியல் துறை*

150 ஆண்டுகளைக் கடந்து பணியாற்றிவரும் தடய அறிவியல் துறை, மாநிலத்தில் குற்ற நீதி முறையை விரைவுபடுத்த வேண்டிய தடய அறிவியலில் புதிய பகுதிகளைக் கண்டறியும் உறுதியோடு புத்தாயிரமாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. தற்போதுள்ள முறைகளை நெறிப்படுத்தி வலுப்படுத்துவதோடு ரூ.175 கோடி செலவில் வரும் பத்தாண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்திட அது திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டமானது தடய அறிவியல் துறையின் பின்வரும் துறைகளை மேம்படுத்தி சிறந்த சேவை அளிக்க வழிவகுக்கும்:

1. கணினி முறை தடயவியல்
2. தடயவியல் பொறியியல், சான்றுபொருள் அறிவியல்
3. டிஜிட்டல் உருவ செயல்முறை
4. தடயவியல் உருவகக் காட்சிகள்
5. தடயவியல் ரோபோட்டிக்ஸ்
6. மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்புக் குற்றங்கள்
7. குரல் அடையாளம் காணுதல்
8. ஒலி-ஒளி வகையிலான குற்றங்கள்
9. தடய மருந்தாக்கியல்
10. தாவர, முதுகெலும்புள்ள மற்றும் நுண்ணுயிர் உயிரியல்
11. வனவிலங்கு தடய அறிவியல்
12. தடய பாலிகிராபி



சென்னை மைய ஆய்வகத்திலுள்ள 15 பிரிவுகள், 9 மண்டல தடய அறிவியல் ஆய்வகங்கள், 32 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள், சென்னையிலுள்ள 24 மணி நேர நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் ஆகியவற்றைக் கொண்டு சட்டத்தை அமல்படுத்தும் பல்வேறு துறைகளுக்கு தடய அறிவியல் துறை சேவை செய்து வருகிறது. நஞ்சுண்ட அறிகுறிகளோடு சென்னையிலும் அதன் புறநகர்களிலுமுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளுக்கு அவர்கள் அருந்திய நஞ்சினைக் கண்டறிந்து அவர்களுக்கு அளிக்க வேண்டிய நஞ்சு முறிவு மருந்துகள் பற்றிய ஆலோசனைகளையும் இத்துறை நல்கி வருகிறது. சர்ச்சைக்குரிய குழந்தையின் தந்தை யார் என்பதை மரபணுச் சோதனை மூலம் அறியும் மையத்தினையும் இத்துறை வெற்றிகரமாக இயக்கி வருகிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்திவரும் ஒரே அரசுத் துறை என்ற பெருமையையும் இத்துறை பெற்றிருக்கிறது. 1999 மே மாதம் முதல் இத்துறை தனித்து இயங்கி வருகிறது. 1999, அக்டோபர் மாதத்திலிருந்து சென்னையிலுள்ள மைய ஆய்வகத்தில் டி.என்.ஏ. விரல்ரேகைப் பிரிவு இயங்கி வருகிறது. உண்மையை வெளிக்கொணருவதில் இப்பிரிவு ஆற்றிவரும் பணி மகத்தானதாகும்.

30-12-99 முதல் http:/www.tn.gov.in/tamilforensic என்ற விலாசத்தில் கணினி இணைய தளம் (web site) ஒன்றினை இத்துறை நிறுவியுள்ளது. இதன் மூலம் சட்டத்தை அமல்படுத்தும் துறைகள், மருத்துவ அதிகாரிகள், பொது மக்கள் ஆகியோர் இத்துறையினைப் பற்றியும் இது அளித்து வரும் சேவைகள் பற்றியும் நேரடியாக அறிந்திடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**5. காவல் துறையிலுள்ள சிறப்புப் பிரிவுகள்**

*கடலோரப் பாதுகாப்புப் படை*

தீவிரவாதிகள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கவும், கடல் வழியாக எரிபொருள், மருந்துகள், போதைப்பொருட்கள், ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்ற அத்தியாவசியப் பண்டங்கள் ஆகியவை அண்டை நாடுகளுக்கு கடத்தப்படுவதைத் தடை செய்யவும் 1-9-1994 முதல் கடலோரக் காவல்படை இயங்கி வருகிறது. 22-7-1999 நாளிட்ட உள்துறையின் அரசாணை நிலை எண் 1038-ல், இப்படைக்குத் தலைமை தாங்க ஒரு கூடுதல் காவல் தலைமை இயக்குநர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டுள்ள இப்படை, நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களைக் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள கடலோரப் பகுதிகளில் அறுபது சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன.

[2000 மே 12

### தமிழ்நாடு கமாண்டோ படை

அசாதாரணமான இனக்கலவரங்களின்போதும் உணர்வுப் பூர்வமானதும் மற்றும் அவசரமானதுமான பிற சூழ்நிலைகளின் போதும் தமிழ்நாடு கமாண்டோ படை உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும் இப்படை முன்கூட்டியே கிடைக்கும் சரியான தகவல்களின் அடிப்படையில் களப்பணி ஆற்றவும், தீவிரவாதிகளை ஒடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

### அதிவிரைவுப் படை

இனக் கலவரங்களையும் வன்முறைகளையும் ஒடுக்குவதற்காக அதிவிரைவுப்படை 1997 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இப்படையில் பணிபுரிவோருக்கு கலவரத்தை ஒடுக்குதல், தீயணைப்பு மீட்புப்பணிகள், முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. வீராபுரம் (சென்னை), வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இப்படையின் ஐந்து குழுமங்கள் உள்ளன.

### திருக்கோயில் பாதுகாப்புப் படை

இப்படையில் இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆயிரம் பேரும், முன்னாள் இராணுவத்தினர் மூவாயிரம் பேரும் உள்ளனர். மண்டல காவல் துணைத் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களது நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் இப்படை கோயில்களையும் அவற்றின் சொத்துகளையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

### விமான நிலையப் பாதுகாப்பு

விமானங்கள், விமான நிலைய வளாகம் மற்றும் அதன் உள் கட்டமைப்புகள் ஆகியவற்றை பாதுகாப்பதும், விமான நிலையங்களில் நாச வேலை நடக்காமல் தடுப்பதும், விமானக் கடத்தலைத் தடுப்பதும் விமான நிலையப் பாதுகாப்புப் படையினரது வேலையாகும். புது தில்லியிலுள்ள இந்திய அரசின் விமானப் போக்குவரத்துத் தலைமை இயக்குநர் வழங்கும் அறிவுரைகளின்படி இப்படை இயங்கி வருகிறது. திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒரு காவல் துறை ஆய்வாளரின் கீழ் இப்படை இயங்கி வருகிறது.

விமான நிலையத்தில் சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து, குற்றம் ஆகியவற்றைக் கவனித்து வரும் காவல் துணை ஆணையரின் கட்டுப்பாட்டில் சென்னை மீனம்பாக்கத்தில் தனி காவல் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. விமான நிலையப் பாதுகாப்பை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(1) அனுமதி பெறாத நபர்கள் விமான நிலையத்திற்குள் நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது.



2000 மே 12]

(2) விமான நிலையத்திற்கு வரும் அனைத்து வாகனங்களும் சோதனை செய்யப்படுகின்றன.

(3) கைப்பைகள் அனைத்தும் முழுமையாக 100 விழுக்காடு சோதனை செய்யப்படுகின்றன.

(4) விமானத்திற்குள் ஏறும் ஏணியுள்ள இடத்திலும் சோதனை செய்யப்படுகின்றது.

(5) வெடிபொருட்களைக் கண்டறிய வெடிகுண்டுப் பிரிவும் மோப்ப நாய்ப் படையும் பயன்படுத்தப்படுகின்றன.

### இருப்புப்பாதைக் காவல் படை

இப்படையில் 32 இருப்புப்பாதை காவல் நிலையங்களும், 25 புறக்காவல் நிலையங்களும் இயங்கி வருகின்றன. இப்படைக்குக் காவல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஓடும் புகை வண்டியிலும், புகை வண்டி நிலையங்களிலும் நடைபெறும் சங்கிலிப் பறிப்பு, பைத் திருட்டு, கொள்ளை, ஆதாயக் கொலை ஆகியவற்றைத் தடுக்கவும் கண்டுபிடிக்கவும், இப்படை பயன்படுத்தப்படுகிறது. மேலும் அது இரயில் நிலையங்களிலும், இரயில் பயணத்தின் போதும் பயணிகளுக்கும், அவர்களது உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதில் உறுதுணையாக உள்ளது. இப்படைக்கான செலவுத் தொகையைத் தமிழ்நாடு அரசும், இருப்புப் பாதை நிருவாகமும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

### ஒற்றாய்வுப் பிரிவு

காவல் துறைத் தலைவர் ஒருவரின் கீழ் இயக்கிவரும் ஒற்றாய்வுப் பிரிவில், தனிப்பிரிவு ஒற்றாய்வு, பாதுகாப்புப் பிரிவு ஒற்றாய்வு, கியூ பிரிவு ஒற்றாய்வு மற்றும் தனிப்பிரிவு ஆகியன உள்ளடங்கியுள்ளன. மதம், சாதி தொடர்பான பதட்டம், இதர சட்ட ஒழுங்கு தொடர்பான நிகழ்வுகள், மிக முக்கியமானவர்கள் பாதுகாப்பு, தீவிரவாதி நடவடிக்கைகள், இலங்கையைச் சேர்ந்த தமிழ்த் தீவிரவாதிகள், மத அடிப்படைவாதிகள் ஆகியோரைப் பற்றி இப்பிரிவு முன் தகவல்களைச் சேகரிக்கிறது.

### தனிப்பிரிவு ஒற்றாய்வுத் துறை

இப்படை, ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் துறை ஆய்வாளரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வருகிறது. சாதி, மதப் பூசல்கள், சட்டம் ஒழுங்கு நிலை ஆகியவற்றை நெருக்கமாகக் கண்காணித்து சட்டம் ஒழுங்கு சீர்குலையும் நிலை ஏற்படுமெனத் தெரியவந்தால் சம்பந்தப்பட்டக் காவல் கண்காணிப்பாளர்/ ஆணையாளருக்கு முன்தகவல் தந்து அவரை ஆயத்தப்படுத்தும் பணியை இப்பிரிவு செய்து வருகிறது.

[2000 மே 12

### பாதுகாப்புப் பிரிவு ஒற்றாய்வுத் துறை

மிக முக்கியமானவர்களின் வருகையின்போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், முக்கிய சாதனங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் இப்பிரிவு உதவி செய்கிறது. முதலமைச்சருக்குப் பாதுகாப்பு அளிக்கவும் உயர்நிலைப் பதவிகளில் உள்ளோர் வருகைதரும்போது வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பணிக்காகவும் "உள்மையப் பிரிவு" என்ற சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கமாண்டோ பிரிவிலிருந்து பெறப்பட்ட காவலர்களைக் கொண்டு பெருமளவில் அச்சுறுத்தல்களுக்கு ஆளாவோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியையும் இப்பிரிவு செய்து வருகிறது. இப்பிரிவின் கீழுள்ள பயிற்சிப் பள்ளியானது, 1999 ஆம் ஆண்டில் ஒற்றாய்வு, பாதுகாப்பு ஆகியவற்றிற்கான 17 பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது.

### கியூ பிரிவு ஒற்றாய்வுத் துறை

தீவிரவாதிகள் பற்றி முன் தகவல் சேகரிக்கும் பணியை இப்பிரிவு செய்து வருகிறது. மேலும், அவர்கள் மீதுள்ள வழக்குகளின் புலனாய்வையும் இப்பிரிவு மேற்கொண்டுள்ளது. இப்பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது.

### மனித உரிமைகள்

மனித உரிமைகள் மீறல் என்பது கடுங்குற்றமாகக் கருதப்படுவதால் அதனைத் தவிர்க்க அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

(1) எந்த நிலையிலும் தனி மனித உரிமைகளை மீறலாகாது எனக் காவல் துறைக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

(2) காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளிப்பவர்களுக்கு, அவர்களது புகாரைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைசீட்டு அளிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் விளைவாகக் காவல் நிலையத்தில் வழக்குகள் பதியப்படுவதில்லை என்ற புகார் கணிசமாகக் குறைந்துள்ளது.

(3) மாவட்ட அளவில் பணிபுரியும் காவல் துறையினருக்கு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்குகளை நடத்த வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இக்கருத்தரங்குகளை நடத்த அரசு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது.

(4) அனைத்து நிலைகளிலும் உள்ள அதிகாரிகளுக்கான பயிற்சிப் பாட திட்டத்தில் மனித உரிமைகள் ஒரு பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது. காவலர்கள், தலைமைக் காவலர்கள், சார் ஆய்வாளர்கள், காவல் துறை ஆய்வாளர்கள், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள்



2000 மே 12]

ஆகியோர்களுக்கான ஆரம்பப் பயிற்சியின்போதும், பணியிடைப் பயிற்சியின்போதும் மனித உரிமைகளின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்படுகிறது.

மனித உரிமைகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்துள்ள அரசு, மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு உதவிட காவல் துறைத் தலைவர் ஒருவரையும், காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவரையும் மாற்றுப்பணி முறையில் அனுப்பியுள்ளது.

## 6. நலத் திட்டங்கள்

### மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கும் திட்டம்

இத்திட்டம் காவலர் நிலையிலிருந்து காவல் துறை ஆய்வாளர் நிலைவரையிலுள்ள பணியாளர்களுக்குப் பயனளிக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 46,000 காவல் துறை பணியாளர்கள் பயன் பெறுகின்றனர். 1998-1999 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.3.40 கோடியை அரசு செலவிட்டுள்ளது.

காவல் துறையினரது நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி, தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டம், குழுக் காப்பீட்டுத் திட்டம், கருணைத்தொகை வழங்கும் திட்டம், காவலரின் குழந்தைகளுக்கு தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டுத் திட்டம், தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவுப் படிப்பு உதவித்தொகை, சிறப்புப் படிப்பு உதவி நிதி ஆகியவை இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன.

### கருணை அடிப்படையில் பணி நியமனங்கள்

பணியிலிருக்கும்போது இறக்க நேரிடும் காவல் துறைப் பணியாளர்களது வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது. 50 வயதைக் கடக்காது, மருத்துவ அடிப்படையில் ஓய்வுபெறும் பணியாளர்களது வாரிசுகளுக்கும் இச்சலுகை அளிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் 20-2-2000 வரை 194 பேர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### காவல் துறை மருத்துவமனைகள்

காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றில் பணியிலுள்ளவர்களுக்கும் இத்துறைகளிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மருத்துவ உதவி அளித்திட வேண்டி சென்னை மாநகர காவல் துறை மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றில் பணியாற்றிவரும் ஓய்வு பெற்ற பணியாளர்கள், அத்துறைகளின் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும்

[2000 மே 12

அவர்களது குடும்பத்தினைச் சேர்ந்த ஏறத்தாழ ஒரு இலட்சம் பேரின் மருத்துவத் தேவையை நிறைவு செய்து வருகிறது. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், ஆவடி, வேலூர், புனிததோமையர் மலை ஆகிய இடங்களிலும் காவல் மருத்துவமனைகள் உள்ளன. நாள்தோறும் சுமார் 600 உள்நோயாளிகளும், 8000 வெளி நோயாளிகளும் 1999-2000 ஆம் ஆண்டில் இம்மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

**7. நியமனம் மற்றும் பயிற்சி**

*காவலர்கள் பணி நியமனம்*

காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை ஆகியவற்றிற்குப் பணியாளர்களைத் தேர்வு செய்ய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையக் குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவல் துறைக்கான சார் ஆய்வாளர்கள், சார் ஆய்வாளர்கள் (தொழில் நுட்பம்), காவலர்கள், தீயணைப்புத் துறைக்கான தீயணைப்போர்கள், சிறைத் துறைக்கான சிறைக் காவலர்கள் ஆகிய பணிகளுக்குத் தகுதியான நபர்களை இக்குழுமம் தேர்வு செய்கிறது.

1999-2000 ஆம் ஆண்டில் 1000 பெண் காவலர்கள் உள்ளிட்ட 5000 இரண்டாம் நிலைக் காவலர்கள தேர்வு செய்யப்பட்டு விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர். 1000 பெண் காவலர்களின் தேர்வு முடிவடைந்துள்ளது. விரைவில் அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள். 4000 இரண்டாம் நிலைக் காவலர்களது நியமனத்தைப் பொறுத்தவரையில் அவர்களது தேர்வுப் பணி நடந்துகொண்டுள்ளது. இப்பணியை வரும் ஜூன் மாதத்திற்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1057 தீயணைப்போர்களைத் தேர்வு செய்ய ஏற்கெனவே அறிவிக்கைகள் செய்யப்பட்டு தேர்வுப் பணி நடைபெற்று வருகிறது. மே மாத முடிவிற்குள் இப்பணி முடிக்கப்படும். சிறைக் காவலர்கள் பணிக்கும், சார் ஆய்வாளர்கள் (தொழில் நுட்பம்) பணிக்கும் ஆட்களைத் தேர்வு செய்ய அண்மையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

*காவல் துறை சார் ஆய்வாளர்களுக்கான நியமனமும் பயிற்சியும்*

1997-98 ஆம் ஆண்டில் 1000 சார் ஆய்வாளர்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட்டு இரண்டு குழுக்களாகப் பயிற்சி பெற்று வருகின்றனர். 20 விழுக்காடு ஒதுக்கீட்டில் வரும் ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த துறைப் பணியாளர்கள் நேரடி நியமனம் பெற்ற



2000 மே 12]

சார் ஆய்வாளர்கள் உள்ளிட்ட 558 பேர் முதல் குழுவில் உள்ளனர். இவர்கள் 16-4-1999 முதல் நிறுவனப் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் விரைவில் பயிற்சியை முடிக்கவுள்ளனர். இரண்டாவது குழுவைச் சேர்ந்த சார் ஆய்வாளர்கள் மே மாதத்தில் தங்களது பயிற்சியைத் தொடங்க உள்ளனர். இவர்களுடன் 1994-95-ல் தேர்வு செய்யப்பட்ட 98 சார் ஆய்வாளர்களும், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 9 பெண்கள் உட்பட 41 சார் ஆய்வாளர்களும் பயிற்சிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

*பயிற்சி*

பயிற்சிப் பிரிவில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளன:—

1. காவலர் பயிற்சிக் கல்லூரி, சென்னை
2. தற்காலிகக் காவலர் பயிற்சிக் கல்லூரி, வீராபுரம்
3. தற்காலிகக் காவலர் பயிற்சிக் கல்லூரி, வேலூர்
4. காவலர் பயிற்சிப் பள்ளி, கோயம்புத்தூர்
5. காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூர்.

புதிதாக நியமனம் செய்யப்படும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி மேற்சொன்னவைகளோடு மேலும் 11 தற்காலிகக் காவலர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

*பயிற்சி நிறுவனங்களின் பணிகள்*

சென்னையில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் சார் ஆய்வாளர்களுக்கும், நேரடி நியமனம் பெற்ற காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியும், தகுதிகாண் பருவத்தில் இருக்கும் இந்தியக் காவல் பணியைச் சேர்ந்தோருக்கு நிறுவனப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

நேரடி நியமனம் பெற்ற சார் ஆய்வாளர்களுக்கு வீராபுரத்தில் உள்ள தற்காலிகக் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. காவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென வேலூரிலும், கோயம்புத்தூரிலும் இரண்டு காவலர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன.

பயிற்சிக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இரண்டு நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பணியில் சேரும்போது அடிப்படைப் பயிற்சியும்,

பணியில் உள்ளபோது அளிக்கப்படும் புத்தாக்கப் பயிற்சியும் மேற்சொன்ன இருநிலைப் பயிற்சிகளாகும்.

**காவலர் பயிற்சியில் மனித உரிமைகள் குறித்த வகுப்புகள்**

காவல் அதிகாரிகளுக்கு மூன்று கட்டங்களில் பயிற்சி அளிக்க 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.10 இலட்சம் அரசு அளித்துள்ளது. காவல் துறையினர் மனித உரிமைகள் குறித்து நன்கு அறிந்துகொள்ள சென்னையில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் பின்வரும் வகுப்புகள் நடத்தப்பட்டன:—

1. மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதில் காவல் துறையினரின் பங்கு என்ற பொருளின்மீது கருத்தரங்கம்.

2. போக்குவரத்து விதிகள் மீறல்/மனித உரிமைகள் மீறல் பற்றிய கருத்தரங்கம்.

3. பத்மஸ்ரீ டாக்டர் சுப்ரமணியம் (இ.கா.ப.ஓய்வு) அவர்களால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி.

4. சர்வதேச மனித நேயச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் சட்டங்கள் பற்றிக் காவல் துறை அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டங்கள்.

5. சென்னை அசோக் நகரில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளியில் காவலர்களுக்கான ஐநா. முன்னேற்றத் திட்ட உதவியில் மூன்று நாட்களுக்கு மண்டலப் பயிலரங்கு.

6. பாட்டியாலாவில் உள்ள தேசிய விளையாட்டு நிறுவனம் நடத்தும் மனப்பான்மை (attitude) பற்றிய மூத்த காவல் அதிகாரிகளுக்கான முன்னோடித் திட்டம்.

தேவைகளைப் பொறுத்தும், பயிற்சி நிறுவனங்களில் ஒதுக்கப்படும் இருக்கைகளைப் பொறுத்தும், இப்பயிற்சிகளுக்கு அனுப்பப்படும் அலுவலர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகிறது. ஆண், பெண் அலுவலர்கள் ஆண்டு முழுவதும் இப்பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர்.

**காவலர் பயிற்சிக் கழகம்**

வண்டலூருக்கு அருகிலுள்ள ஊனமாஞ்சேரி கிராமத்தில் 132.92 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் ரூ.37 கோடி செலவில் காவலர் பயிற்சிக் கழகம் ஒன்றை அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. வருவாய்த்





துறையினர் நிலத்தை காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளனர். இதில் முழுமையாகக் கட்டடம் கட்டும் வழிவகைகளை (Turnkey Basis) அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**8. சிறந்த சேவையைப் போற்றுதல்**

வீரதீரச் செயல்களுக்கான 1999 ஆம் ஆண்டிற்கான பதக்கங்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவருக்கும், காவல் துறை ஆய்வாளர்கள் இருவருக்கும் வழங்கப்பட்டன.

ஈடுபாட்டுடன் பணி புரிந்தமைக்கான தமிழக முதலமைச்சரின் 1999 ஆம் ஆண்டிற்கான, பதக்கங்கள் இரண்டாம் நிலைக் காவலர் முதல் காவல் துறைக் கண்காணிப்பாளர் வரையிலுள்ளவர்கள் உள்ளிட்ட 97 நபர்களுக்கு வழங்கப்பட்டன.

சிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கங்கள், காவல் துறைத் தலைவர்கள் மூவருக்கும், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் ஒருவருக்கும் 1999 ஆம் ஆண்டு விடுதலை நாள் விழாவில் வழங்கப்பட்டன.

மெச்சத்தக்க சேவைக்கான குடியரசுத் தலைவரின் பதக்கங்கள், கூடுதல் காவல் துறைத் தலைமை இயக்குநர் ஒருவருக்கும், காவல் துறைத் தலைவர் ஒருவருக்கும், காவல் துறைத் துணைத் தலைவர்கள் இருவருக்கும், காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவருக்கும், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் மூவருக்கும், காவல் துறை ஆய்வாளர்கள் மூவருக்கும், சார்-ஆய்வாளர் ஒருவருக்கும், தலைமைக் காவலர்கள் இருவருக்கும் 1999 ஆம் ஆண்டு விடுதலை நாள் விழாவில் வழங்கப்பட்டன.

ஊர்க் காவல் படையினருக்கான தமிழக முதல்வரின் பதக்கங்கள், கோட்ட கமாண்டர் ஒருவருக்கும், பிளட்டூன் கமாண்டர்கள் இருவருக்கும், பிரிவுத் தலைவர் ஒருவருக்கும் 15-9-1999 அன்று வழங்கப்பட்டன.

உயிர் காப்புக்கான இந்திய பிரதமரின் பதக்கம் காவல் துறைத் துணைத் தலைவர் ஒருவருக்கு 30-11-1999 அன்று வழங்கப்பட்டது.

மெச்சத்தக்க சேவைக்கான குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கங்கள், காவல் துறைத் தலைவர்கள் இருவருக்கும், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் ஒருவருக்கும் 26-1-2000 அன்று வழங்கப்பட்டன.

[2000 மே 12

மெச்சத்தக்க சேவைக்கான காவல் பதக்கங்கள், காவல் துறைத் தலைவர் ஒருவருக்கும், காவல் துறைத் துணைத் தலைவர்கள் இருவருக்கும், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் மூவருக்கும், காவல் துறை ஆய்வாளர்கள் மூவருக்கும், சார் ஆய்வாளர் ஒருவருக்கும், தலைமைக் காவலர் ஒருவருக்கும் 26-1-2000 அன்று வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள், 210 தலைமைக் காவலர்கள், 222 பெண் தலைமைக் காவலர்கள், 1061 காவலர்கள் (முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை) ஆக மொத்தம் 1493 காவல் பணியாளர்களுக்கு 2000 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் வழங்கப்பட்டன.

வீரதீரச் செயல்களுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் காவல் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

2000 ஆண்டுக்கான அண்ணா பதக்கம், ஊர்க்காவலர் படை கம்பெனியின் கமாண்டர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

**9. வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்**

*தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்*

காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறைகளின் பணியாளர்களது வீட்டு வசதித் தேவைகளைக் கவனிக்கும்பொருட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் நிறுவப்பட்டது. சென்னை மாநகரம் மற்றும் மாவட்டங்களில் ஆண்டுதோறும் 2500 குடியிருப்புகளைக் கட்டும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்கழகம் 1996-97 ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 1500 குடியிருப்புகளை மட்டுமே கட்டி வந்தது. சென்னை மாநகரில் 500 குடியிருப்புகளும், மாவட்டங்களில் 20000 குடியிருப்புகளும் 1999-2000 ஆம் ஆண்டில் கட்டுவதற்கென ரூ.89.69 கோடி நிதி அளிக்க அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 2500 குடியிருப்புகளையும் விஞ்சி 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 2,542 குடியிருப்புகளை இக்கழகம் கட்டி முடித்துள்ளது.

வேலூர், கடலூர், சேலம் ஆகிய இடங்களில் சிறைத் துறைப் பணியாளர்களுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் 100 குடியிருப்புகளைக் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கென ரூ.2.98 கோடி நிதி வழங்கவும் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.



2000 மே 12]

தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கென ரூ. 3.30 கோடி செலவில் 100 குடியிருப்புகளைக் கட்டவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள், சென்னையில் தேனாம்பேட்டை, நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களிலும், பிற மாவட்டங்களில், விழுப்புரம், பெரியகுளம், கோயம்புத்தூர் (தெற்கு) ஆகிய இடங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன. காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டும் பணியை 2000-2001 ஆம் ஆண்டில் இக்கழகம் மேற்கொள்ளவிருக்கிறது. காவல் துறைப் பணியாளர்களுக்கான 12603 வாடகைக் குடியிருப்புகளையும், சிறைத் தீயணைப்புத் துறையினருக்கான 437 வாடகைக் குடியிருப்புகளையும் கட்டும் பணி துறையினருக்கான 200 வாடகைக் குடியிருப்புகளையும் கட்டும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சொந்த வீடு திட்டத்தின்கீழ் இக்கழகம் 1818 வீடுகளைக் கட்டியுள்ளது. காவல் துறையினருக்கான வீட்டுத் தேவையில் இதுவரை 30 விழுக்காட்டை இக்கழகம் நிறைவு செய்துள்ளது. இத்தேவையின் 100 விழுக்காட்டை நிறைவு செய்வதே அரசின் குறிக்கோளாகும்.

இதுவரை இக்கழகம் மாவட்ட வாரியாகக் கட்டிமுடித்துள்ள மற்றும் கட்டிக்கொண்டிருக்கும் குடியிருப்புகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

*சிறப்புப் பழுதுபார்ப்புப் பணியும் பராமரிப்பும்*

வாடகைக் குடியிருப்புகளில் உள்ள பழுதுநீக்கும் பணி 1-4-1998 முதல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணி முன்பு மாநில பொதுப் பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 1999-2000 ஆம் ஆண்டில் இப்பணிக்கென ரூ. 5.00 கோடி ஒதுக்கப்பட்டது. வாடகைக் குடியிருப்புகளுக்கான அன்றாடப் பராமரிப்புப் பணி, அலகு அதிகாரிகளான மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களாலும், ஆணையர்களாலும் கவனிக்கப்பட்டு வருகிறது.

## கட்டடங்கள்

[2000 மே 12

காவல் நிலையங்களுக்கும் காவல் துறையின் இதர அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரும் பணிக்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளித்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 149 காவல் நிலையங்களுக்கும், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டக் காவல் அலுவலகங்களுக்கும், கோயம்புத்தூரில் ஆணையகத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. இதுவரை 103 காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மற்றவற்றிற்கான கட்டடங்கள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

சொந்தக் கட்டடம்/வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் காவல் நிலையங்கள், புறக்காவல் நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| காவல் நிலையங்கள் | சொந்தக் கட்டடம் | வாடகைக் கட்டடம் | மொத்தம் |
|---|---|---|---|
| சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்கள் | 819 | 353 | 1172 |
| மகளிர் காவல் நிலையங்கள் | 33 | 25 | 58 |
| இருப்புப் பாதை காவல் நிலையங்கள் | 32 | — | 32 |
| புறக்காவல் நிலையங்கள் (சட்டம் ஒழுங்கு-90) (இருப்புப் பாதை - 25) | 78 | 37 | 115 |
| மொத்தம் | 962 | 415 | 1377 |

இன்றைய நிலையில் 37 புறக்காவல் நிலையங்கள் உட்பட 415 காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டியுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் போக்குவரத்துக் காவல் நிலையங்களும் மற்ற சிறப்புப் பிரிவுகளுக்கான காவல் நிலையங்களும் சேர்க்கப்படவில்லை.

சொந்தக் கட்டடங்களிலும் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கிவரும் இதர காவல் துறை அலுவலகங்களின் விவரம் பின்வருமாறு:—



2000 மே 12]

| வ.எண். | அலுவலகத்தின் பெயர் | சொந்தக் கட்டடம் | வாடகைக் கட்டடம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கோட்டக் காவல் அலுவலகங்கள் | 99 | 90 | 189 |
| 2 | மாவட்டக் காவல் அலுவலகங்கள் | 21 | 8 | 29 |
| 3 | பட்டாலியின் அலுவலகங்கள் | 9 | 2 | 11 |
| 4 | மண்டலக் காவல் அலுவலகங்கள் | 10 | 1 | 11 |
| 5 | காவல் துறைத் தலைவர் அலுவலகங்கள் | 8 | 5 | 13 |
| 6 | ஆணையகங்கள் | 5 | 1 | 6 |
| 7 | கூடுதல் காவல் துறை இயக்குநர் அலுவலகங்கள் | 2 | 3 | 5 |
| 8 | காவல் துறை இயக்குநர் அலுவலகங்கள் | 2 | 2 | 4 |
| | மொத்தம் .. | 156 | 112 | 268 |

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து அலுவலகங்களுக்கும் சொந்த கட்டடங்களைப் பல கட்டங்களாக கட்டித் தரத் திட்டமிட்டு முயற்சி மேற்கொள்வது அரசின் எண்ணம் ஆகும். இதைத் தவிர அரசு பின்வரும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

## கடலோரக் காவல் படைக்கான கட்டடங்கள்

ரூ. 3.25 கோடி மதிப்பீட்டில் கடலோரக் காவல் படைக்கு சென்னையில் தலைமை அலுவலகக் கட்டடம், தூத்துக்குடி, வேதாரண்யம், நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஐந்து மண்டல அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றைக் கட்டவும், வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ள 60 சோதனைச் சாவடிகளை வலுப்படுத்திடவும் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது. தலைமை அலுவலகக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. மண்டல அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 60 சோதனைச் சாவடிக் கட்டடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

## காவலர் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்துதல்

மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், திருச்சி, வேலூர், சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக் கட்டடங்களில் கூடுதலாக ஒரு தளம் அமைக்கவும், அவற்றிலுள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு ரூ. 8 கோடி வழங்கியுள்ளது. தற்போது நடைபெற்றுவரும் இப்பணி வரும் ஜூலை மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் நிர்வாக அலுவலகத்திற்கான கட்டடம்**

சென்னை கீழ்ப்பாக்கத்தில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் நிர்வாக அலுவலகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 10. விளையாட்டுகளும் விளையாட்டுப் போட்டிகளும்

விளையாட்டுகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் தானடைந்துள்ள உயர்தரத்தினைத் தமிழ்நாடு காவல் துறை பேணிக்காத்து வருகிறது. 25-11-1999 முதல் 30-11-1999 வரை லக்னோவில் நடைபெற்ற 43-வது அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்று 4 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்று தமிழ்நாடு காவல் துறை நாட்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. அண்மையில் நடைபெற்ற நாசவேலை தடுப்புப் போட்டியில் தமிழ்நாடு காவல் துறை, தனியருக்கான தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றதுடன் குழுவுக்கான சிறப்புப் பரிசையும் வென்றுள்ளது.

துப்பாக்கிச் சுடும் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் ஆகிய பதக்கங்களை இத்துறை வென்றுள்ளது. புலனாய்வில் விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்தும் போட்டிகளில் இரண்டு தங்கம், மூன்று வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்று தமிழ்நாடு காவல் துறை விளையாட்டுக் குழு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. கணினி அறிவு பற்றிய போட்டிகளில் இக்குழு வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது. துப்பறியும் காவல் நாய்ப் படைக்கான போட்டிகளில் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

### 11. முடிவுரை

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சரிவின்றி பராமரித்து, மக்களின் பாதுகாப்பான, அமைதியான வாழ்வுக்காக தமிழ்நாடு காவல் துறை அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறது.

காவல் துறைப் பணியாளர்களின் செயல் திறன் நன்முறையில் மேம்படுத்தப்பட்டு, அவ்வப்பொழுது ஏற்படும் அறைகூவல்களை சாதுர்யத்துடன் எதிர்கொள்ளும் ஆயத்த நிலையில் இத்துறை உள்ளது.





## இணைப்பு-III

*(66 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**மானியக் கோரிக்கை எண் 16**
**தமிழ்நாடு தீயணைப்புத் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001**

### I. தீயணைப்புப் பணி - ஒரு கண்ணோட்டம்

தீயணைப்பு மற்றும் தீத்தடுப்பு ஆகிய பணிகளில் தீயணைப்புத் துறை மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. தீயணைபபுத துறையின் உடனடி செயல்பாட்டினால், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள உடைமைகள் தீயின் அழிவிலிருந்து காப்பாற்றப்படுகின்றன. எண்ணற்ற மக்களும் தீயிலிருந்து காப்பாற்றப்படுகின்றனர். இத்துறை தீயணைப்புப் பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமின்றி, மீட்புப் பணிகளையும் மேற்கொண்டு வெள்ளத்தில் மூழ்கிய மக்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், சாலை மற்றும் இரயில் விபத்தில் பாதிக்கப்பட்டோர், இயற்கைச் சீற்றம் மற்றும் மனிதர்களால் உண்டாக்கப்படும் அழிவுகள் ஆகியவைகளால் பாதிக்கப்படும் நூற்றுக்கணக்கான மக்களைக் காப்பாற்றுகிறது. சமீபத்தில் சென்னை மறைமலை அடிகள் பாலத்திலிருந்து பெருநகர்ப் பேருந்து ஒன்று கீழே விழுந்தபொழுது, மீட்புப் பணி மேற்கொள்வதில் முன்னின்று செயலாற்றியது தீயணைப்புப் பணியாளர்கள்தான். கிணறு, ஆழமான பள்ளம் அல்லது பூட்டிய வீடு ஆகியவைகளில் சிறு குழந்தைகள் அல்லது வளர்ப்புப் பிராணிகள் சிக்கித் தவிக்கும்போது, அவைகளைக் காப்பாற்றுவதும் தீயணைப்புப் பணியாளர்கள்தான். சென்னை பெரவள்ளூரில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்று சரிந்து விழுந்தபொழுது, கட்டட இடிபாடுகளில் சிக்குண்டு தவித்த 65 வயதான திருமதி கனகம்மாள் என்பவரைத் தீயணைப்புத் துறை பணியாளர்கள்தான் காப்பாற்றினர். சமீபத்தில் திருச்சியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் மூழ்கிய மக்கள் தீயணைப்புத் துறை பணியாளர்களால் காப்பாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

### II. துறையின் நோக்கங்கள்

தீயணைப்புத் துறையின் முக்கிய பணிகள் எனக் கருதப்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆகியவை தவிர, தீத்தடுப்புக் குறித்த சட்டரீதியான பணிகள் மற்றும் ஆலோசனை நல்குதல் போன்ற பணிகளையும் இத்துறை ஆற்றுகிறது. இத்துறையின் ஆலோசனை நல்கும் பணி, பொதுமக்களுக்கு தீத்தடுப்பு முறைகளைக் கற்பித்தல் மற்றும்

அவைகளைச் செயல்படுத்துவதில் உதவி புரிவதாகும். பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் கண்டுள்ளவாறு தீத்தடுப்பு முறைகள் கையாளப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யும் வகையில், பலதரப்பட்ட கட்டடங்களையும் ஆய்வு செய்வது துறையின் சட்ட ரீதியான பணியாகும். இவ்வகையில் 1999 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பெற்ற கட்டடங்களின் எண்ணிக்கை இணைப்பு VI-ல் தரப்பட்டுள்ளது.

### III. நிருவாக அமைப்பு

தீயணைப்புத் துறை, தமிழ்நாடு அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. கூடுதல் காவல் துறைத் தலைவர் பதவித் தரத்தில் இந்திய காவல் பணியைச் சார்ந்த (IPS) அலுவலர் தற்பொழுது இத்துறையின் இயக்குநராகச் செயல்பட்டு வருகிறார். நான்கு மண்டலங்களின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் நான்கு தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் இவருக்கு உதவியாக உள்ளனர். கோட்டத் தீயணைப்பு அலுவலர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மாநிலப் பயிற்சிப் பள்ளி மற்றும் மாநிலப் பணிமனை உள்பட 29 கோட்டங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 11 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. 13 கோட்டங்களில் நடமாடும் பழுதுபார்க்கும் குழுக்களும், 12 கோட்டங்களில் தீத்தடுப்பு குழுக்களும் அமைந்துள்ளன. தீயணைப்புத் துறையின் நிருவாக அமைப்பை விளக்கும் வரைபடம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### IV. ஒருங்கிணைக்கப்பெற்ற செயல்பாடு அணுகுமுறைகள்

இத்துறையின் அடிப்படை அமைப்பு தீயணைப்பு நிலையமாகும். மாநிலத்தில் தற்பொழுது 279 தீயணைப்பு நிலையங்கள் இணைப்பு-IV-ல் குறிப்பிட்டுள்ளவாறு செயல்பட்டு வருகின்றன. தீயழைப்புகளுக்கு உடனே செவிசாய்ப்பது, தீத்தடுப்பு நடவடிக்கைகள் வெற்றிபெற வழிகோலும் என்பதால், கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு 49 புதிய தீயணைப்பு நிலையங்களைத் திறக்க ஆணையிட்டுள்ளது. புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் திறக்க கடைபிடிக்கப்பட்டுவரும் அளவுகோல்கள் பின்வருமாறு:-

(அ) ஓரிடத்தில் புதிதாகத் தீயணைப்பு நிலையம் திறக்கப்பட வேண்டுமானால் பொதுவாக அந்த இடத்திலிருந்து 25 கிலோமீட்டருக்குள் வேறெந்த தீயணைப்பு நிலையமும் இருக்கக்கூடாது;





(ஆ) அப்பகுதியின் மக்கள் தொகை குறைந்தது 50,000-ஆக இருக்க வேண்டும்;

(இ) கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டிற்குக் குறைந்தது ஒரு பெருந்தீ விபத்தாவது நிகழ்ந்திருக்க வேண்டும். அதில் சேதமான உடைமைகளின் மதிப்பு ரூ. 50,000-க்கு அதிகமாக இருக்க வேண்டும் அல்லது மனித உயிரிழப்பு ஏதேனும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

### V. துறையில் உள்ள அடிப்படை வசதிகள்

#### (அ) மனித ஆற்றல்

துறையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 6627 ஆகும். நிருவாக மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் குறித்த தனித்தனி விவரங்கள் அட்டவணை-II மற்றும்-III-ல் தரப்பட்டுள்ளன. தீயணைப்போர்கள் பணியிடங்களுக்கான நியமனம் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் செய்யப்படுகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள், உந்தூர்திப் பொறியாளர் (மாநிலப் பணிமனை), நிலையத் தீயணைப்பு அலுவலர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செய்யப்படுகின்றது.

#### (ஆ) இயந்திர ஆற்றல்

அவசர நிலைமைகளைச் சமாளிக்கும் வகையில் இத்துறை ஏராளமான அதிநவீன கருவிகளைக் கொண்டுள்ளது. பின்வரும் எண்ணிக்கையில் இத்துறையின் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன:-

| | | |
|---|---|---|
| நீர்தாங்கி வண்டிகள் | - | 321 |
| நோயாளர் ஊர்திகள் | - | 78 |
| சிறிய நுரை தகர்வு ஊர்திகள் | - | 12 |
| அவசரகால மீட்பு ஊர்திகள் | - | 5 |
| ஹைட்ராலிக் ப்ளாட்பார்ம் (இங்கிலாந்து நாடு சைமன் ஸ்நார்கல்) ஊர்தி | - | 1 |
| சுழல்மேசை ஏணி ஊர்தி (இசுசு மோரிடோ ஜப்பான் தயாரிப்பு) | - | 1 |

[2000 மே 12

| | |
|---|---|
| 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய ஹைட்ராலிக் ப்ளாட்பார்ம் மற்றும் சுழல்மேசை ஏணி ஊர்திகள் | - 2 |
| நீர்விடுகுழாய் ஊர்தி | - 1 |
| தண்ணீர் லாரிகள் | - 38 |
| மீட்பு ஊர்தி (wrecker) | - 1 |
| நடமாடும் மீட்பு ஊர்திகள் | - 2 |
| எளிதில் தூக்கிச் செல்லும் அதிக திறனுள்ள பம்புகள் | - 228 |
| மிதவைப் பம்புகள் | - 93 |
| பேருந்து, விசைமிதி வண்டிகள், கம்பியில்லாத் தந்திக் கருவிகள் பொருத்தப்பெற்ற கார் மற்றும் ஜீப்கள் | - 55 |

இவையன்றி சில முக்கியமான தீயணைப்பு நிலையங்களுக்கு மனித உழைப்பைக் குறைக்க பயன்படும் நீர்த்தெளிப்பான்கள், உயர்த்தும் பைகள், புகை வெளியேற்றும் கருவி, நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், ஜெனரேட்டர் போன்ற நவீன கருவிகள் மீட்புப் பணிகளுக்கென வழங்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன. மேலும் இத்துறை பின்வரும் உபகரணங்களையும் கொண்டுள்ளது:-

| | |
|---|---|
| பைபர் படகுகள் | - 3 |
| தலைக்கவசமாக அணிந்து பயன்படுத்தக் கூடிய வெப்பதத்துவ நிழற்படக் கருவி | - 1 |
| கையில் எடுத்து பயன்படுத்தக்கூடிய வெப்பதத்துவ நிழற்படக் கருவிகள் | - 2 |
| உயிர் கண்டுபிடிப்புக் கருவிகள் | - 2 |
| பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள் | - 2 |

## VI. தகவல் தொடர்பு

விரைவான செய்தித் தொடர்பு தீயணைப்புப் பணிகளின் வெற்றியை உறுதி செய்யும். தீ விபத்திடத்தை விரைவில் அடைந்திட உடனடித் தகவல் தொடர்பு இன்றியமையாததாகும். இதற்கு உதவும் வகையில் அனைத்துத் தீயணைப்பு நிலையங்களுக்கும் தொலைபேசி வசதிகள் வழங்கப்படுவதோடு, கம்பியில்லாத் தந்திக் கருவிகளும்



2000 மே 12]

வழங்கப்பட்டுள்ளன. சென்னை நகருக்கு வாக்கிடாக்கிகள், ரிபீட்டர் செட்கள் உள்பட 122 கம்பியில்லாத் தந்திக் கருவிகள் மற்றும் ஒரு அதி நுண் அலைவரிசைக் கருவி ஆகியவைகளும் வழங்கப்பட்டுள்ளன. தவிர 12 அதிநுண் அலைவரிசைக் கருவிகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு அவை செயல்பாட்டில் உள்ளன. தகவல் தொடர்புப் பணிகளை வலுப்படுத்தும் வகையில் 60 அதிநுண் அலைவரிசைக் கருவிகள் வாங்க அரசு முடிவு செய்துள்ளது. தீயணைப்பு நிலையங்களுக்கு குறைந்த அலைவரிசை கம்பியில்லாத் தந்திக் கருவிகள் வழங்குவதும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### (அ) பிரதிபலிப்பு நேரம்

தீ விபத்து அழைப்பு பெறப்பெற்றதும் தீயணைப்பு ஊர்தி தீ விபத்து இடத்தை அடைய எடுத்துக் கொள்ளும் நேரம் பிரதிபலிப்பு நேரமாகும். பொதுவாக இது சென்னை நகரில் 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் செய்திப் பரிமாற்றம் பெற்றிடவும், பிரதிபலிப்பு நேரத்தைக் குறைக்கவும் உதவும் வகையில், தனியாக தகவல் தொடர்பு மையம் ஒன்றினை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னை நகரில் பிரதிபலிப்பு நேரத்தைக் குறைக்கும் வகையில், அண்ணாசாலையில் தற்போதுள்ள சேவைப்பாதையை மாற்றியமைத்தல், தீயணைப்பு ஊர்திகள் எளிதில் செல்வதற்கு உதவும் வகையில் சாலைத் தடுப்புகளில் வழி ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல முறைகள் உள்ளன. தீயணைப்பு நிலையங்களுக்குக் குறைந்த அலைவரிசை கம்பியில்லாத் தந்திக் கருவிகள் வழங்குதல், தீயணைப்பு ஊர்திகள் அடிக்கடி பயன்படுத்தக்கூடிய சில முக்கிய சாலைகளின் பழுதுகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றின் மூலம் ஊர்திகள் விரைவாகச் சென்று பிரதிபலிப்பு நேரத்தைக் குறைக்க முடியும்.

## VII. பயிற்சி வசதிகள்

தற்பொழுது சென்னை தங்கசாலையில் செயல்பட்டுவரும் தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளியினை, நாகபுரி தேசிய தீயணைப்புப் பயிற்சிக் கல்லூரிக்கு இணையாக தரம் உயர்த்த ஆணையிடப்பெற்றுள்ளது. பத்தாம் நிதிக் குழுவின் நிதி உதவியாக ஒப்பளிக்கப்பெற்ற ரூ. 4.00 கோடி நிதி உதவி இதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தாம்பரத்திற்கு அருகில் ரூ. 1.00 கோடி செலவில் கட்டடம் ஒன்று பொதுப் பணித் துறையால் கட்டி முடிக்கப்பெற்றது. அது 28-08-99-ல் தீயணைப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கென

[2000 மே 12

பயிற்றுவிப்பு உபகரணங்கள், அவசர கால மீட்பு ஊர்தி, ஜெனரேட்டருடன் இழுத்துச் செல்லக்கூடிய கம்பத்தில் அமைக்கப்படும் விளக்கு (ட்ரேலி டைப் லைட் டவர் மாஸ்ட்), கணினிகள், வாயுபுகா ரசாயன் அங்கிகள், உபரி வாயு உருளையுடன் கூடிய மூச்சுக் கருவிகள், நீர்மூழ்கி கவச உடைகள், மல்டி மீடியா புரஜெக்டருடன் கூடிய கணினி, நடமாடும் பழுது பார்க்கும் ஊர்தி மற்றும் உடற்பயிற்சிக் கருவிகள் போன்றவை இந்நிலையத்திற்கென வாங்கப்பட்டுள்ளன. இவையன்றி 'V' வடிவத் தொட்டி, புகைப்பிடிக்கும் அறை, நீர்விடுகுழாய் சுத்தம் செய்து உலரவைக்கும் கோபுரம் போன்ற சிறப்புக் கட்டுமானங்கள் பொதுப் பணித் துறையால் செய்யப்பட்டு வருகின்றன. பணியாளர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் அணிவகுப்பு மைதானம் ஒன்றும் தயாராகி வருகிறது. முழுமையாக தரம் உயர்த்தப்படும் பயிற்சி நிலையம் விரைவில் செயல்படத் தொடங்கும். பயிற்சி நிலையங்களில் மட்டுமில்லாமல், வெளியில் பயிற்சியளிப்பது பணியாளர்களின் மனவளம் மற்றும் பணித்தரம் ஆகியவைகளை மேம்படுத்த உதவும் என்பதால், தீயணைப்புத் துறை அல்லாத வெளியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பணியாளர்களை அனுப்பி பயிற்சி பெற கருதப்பட்டுள்ளது. மாநிலப் பயிற்சிப் பள்ளியில் ஓர் ஆண்டிற்கான சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட தீயணைப்புத் துறை அல்லாத பிற துறைகளின் பணியாளர்கள் மற்றும் தனியார்களுக்கும் தீத்தடுப்புப் பயிற்சியினை இப்பயிற்சி மையம் அளிக்கும்.

## VIII. தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்டுதல்

மாநிலத்தில் தற்பொழுது செயல்பட்டுவரும் 279 தீயணைப்பு நிலையங்களில், 91 தீயணைப்பு நிலையங்கள் அரசுக் கட்டடங்களிலும், 42 நிலையங்கள் அரை நிரந்தரக் கட்டடங்களிலும், 146 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் 146 தீயணைப்பு நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு கணிசமான செலவினம் ஏற்படக்கூடும் என்பதால், 1999-2000 ஆம் ஆண்டு தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்திற்குப் பதிலளிக்கும் போது, சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்ட ஆகும் செலவினத்தில் 50 விழுக்காடு தொகையினை வழங்க முன்வருமாறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனடிப்படையில் 16 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி



2000 மே 12]

மேம்பாட்டு நிதியிலிருந்து 50 விழுக்காடு தொகையினை, அதாவது ரூ. 9.35 இலட்சத்தை வழங்க முன்வந்தனர். அதற்கேற்ப உள் துறையின் 26-10-1999 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1430-ல், 16 தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்பெற்றது. எஞ்சிய 50 விழுக்காடு தொகை 1998-99 ஆம் ஆண்டில் பொது ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம் வழங்கிய கடன் தொகையிலிருந்து பயன்படுத்தப்பட்டது. கட்டுமானச் செலவினத்திற்கு ஆகும் தொகையில் 50 விழுக்காடு தொகை வழங்க சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வந்தால், இந்தத் திட்டம் இந்த ஆண்டிலும் தொடரும். சமுதாயத்திற்குத் தொண்டாற்ற பொதுத் துறை நிறுவனங்களும் கடமைப்பட்டுள்ளதால், தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதியுதவி பெற அந்நிறுவனங்களை அணுகவும் அரசு பரிசீலித்து வருகிறது.

## IX. ஆற்றிய பணிகள்

### (அ) தீத்தடுப்பு

தீயணைப்புத் துறையின் அடிப்படைப் பணிகளில் தீத்தடுப்பு ஒன்றாகும். தீத்தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்கென இரண்டு கட்டமாக 12 தீத்தடுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தீ விபத்தின் இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கு ஏதுவாக ஊரக மற்றும் நகர்ப்புற மக்களுக்குத் தீ பாதுகாப்பு முறைகளைப் பரப்புதல் மற்றும் பயிற்றுவித்தல் போன்ற பணிகளை இக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. சமுதாயம் வளர்ச்சியடைந்துள்ளதின் விளைவாகத் தீயின் இடர்ப்பாடுகளும் பெருகியுள்ளன. எனவே, மேலும் தீத்தடுப்புக் குழுக்கள் உருவாக்குவது அவசியமாகும். தொழில் மற்றும் வர்த்தக துறைகளுடன் இணைந்து தீ பாதுகாப்பு முறைகளைப் பரப்பும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. கோடைக்காலம், தீபாவளி போன்ற காலங்களில் தீ விபத்துகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இக்காலங்களில் தீ விபத்துகளால் பாதிக்கக்கூடிய மக்களிடையே சிறப்புப் பிரச்சார பணி மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தீ பாதுகாப்பு முறைகள் குறித்த செய்திகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் ஒலி, ஒளி தொடர்புக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### (ஆ) புறத் தீயணைப்பு நிலையங்கள்

தீத்தடுப்புப் பணியை விரைவாகச் செயல்படுத்துவதற்கென சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளில் புறத் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில், உயர் கொள்ளளவு கொண்ட

[2000 மே 12

நீர்த்தொட்டிகள் அல்லது சுருங்கும் நீர்த்தொட்டிகள், எளிதில் தூக்கிச் செல்லத்தக்க பம்புகள், வான் தந்திக் கருவிகள் ஆகியவை வைக்கப்பெற்றுள்ளன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள், தீயணைப்புப் பணியாளர்களால் எந்நேரமும் விழிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் செயல்படுவதற்கென மற்ற கோட்டங்களிலிருந்து மாற்றுப் பணியில் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவை வழங்குவதற்கென இந்த ஆண்டில் ரூ. 28.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புறத் தீயணைப்பு நிலையங்கள் 17-1-2000 முதல் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் குடிநீர் வடிகால் வாரியத்தின் தண்ணீர் லாரிகளைப் பயன்படுத்தி தீயணைப்புப் பணிகளை முனைப்புடன் செயலாற்றியதால், 1998 ஆம் ஆண்டில் ரூ. 4.21 கோடியாக இருந்த உடைமைகளின் சேதம், 1999-ல் ரூ. 1.20 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### (இ) திரையரங்குகளில் தீ பாதுகாப்பு

டெல்லியிலுள்ள ஒரு திரையரங்கில் பெருந் தீ விபத்து நிகழ்ந்ததைத் தொடர்ந்து, திரையரங்குகளில் ஏற்படும் தீ விபத்துகளைத் தடுப்பதில் அரசின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. பல்துறைகளைச் சார்ந்த அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து திரைப்பட அரங்குகளில் ஆய்வுகளை மேற்கொள்ளும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. தீத்தடுப்பு குறித்த நவீன தொழில் நுட்பத்தை அறிந்து, அவற்றை அறிமுகப்படுத்தி பொது மக்கள் கூடும் இடங்களில் தீ விபத்துகளைக் குறைக்கும் வகையில் திரைப்பட விதிகள் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகள் போன்ற விதிகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. திரைப்படங்களுக்கு செல்லும் மக்களிடம் திரையரங்குகளில் தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்றுவிப்பதில் நற்பெயர் கொண்ட அரசுத் துறையல்லாத பிற நிறுவனங்களை ஈடுபடுத்தவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### (ஈ) தீயணைப்புப் பணிச் சட்டம்

தீத்தடுப்புப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்த, விபத்தினை ஏற்படுத்தக்கூடிய பொருள்களைக் கையாளும் நபர்கள் அஜாக்கிரதையாக இருக்கும்பட்சத்தில் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக தீயணைப்புத் துறையை வலுப்படுத்த



2000 மே 12]

வேண்டியுள்ளது. எனவே தீயணைப்புப் பணிச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர அரசு சிந்தித்து வருகிறது.

### (உ) தீ விபத்து குறித்த அழைப்புகள்

அட்டவணை V-ல் தரப்பட்டுள்ள விவரங்கள் 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் பெறப்பெற்ற தீ விபத்து குறித்த அழைப்புகளாகும். அதில் தரப்பட்டுள்ள எண்ணிக்கையிலிருந்து 1998-ல் 15,146 தீ விபத்து குறித்த அழைப்புகளும் மற்றும் 1999-ல் 16,367 அழைப்புகளும் பெறப் பெற்றதைக் காணலாம். 1998-ல் உயிரிழந்தவர்கள் 90 பேர்; காப்பாற்றப்பெற்றவர்களின் எண்ணிக்கை 155. 1999-ல் தீ விபத்தில் 72 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 78 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 1998-ல் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு ரூ. 21.78 கோடியாகும், 1999-ல் ஏற்பட்ட தீ விபத்துகளில் உடைமைகளின் இழப்பு மதிப்பு ரூ. 13.64 கோடியும், மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு ரூ. 131.49 கோடியாகும். 1998 ஆம் ஆண்டில் 280 குடிசைப் பகுதிகளில் தீ விபத்துகள் ஏற்பட்டன. அது 1999 ஆம் ஆண்டில் 255 ஆகக் குறைந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு சென்னை மாநகரில் நிகழ்ந்த தீ விபத்துகளின் எண்ணிக்கை 1772 ஆக இருந்தது. 1999 ஆம் ஆண்டில் அது 1603 ஆகக் குறைந்துள்ளது.

### (ஊ) மீட்பு அழைப்புகள்

1999 ஆம் ஆண்டில் 3509 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும், சாலை விபத்து மற்றும் இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், ஆழமான கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சு வாயுக்களை சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், வெள்ளம் மற்றும் புயலில் சிக்குண்டவர்களைக் காப்பாற்றக்கோரும் அழைப்புகளாகும். இத்தகு மீட்பு அழைப்புகளினால் 1998 ஆம் ஆண்டில் 4505 நபர்கள் காப்பாற்றப்பட்டனர். 1999 ஆம் ஆண்டில் 3509 மீட்பு அழைப்புகள் பெறப்பெற்று, 4633 நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

### (எ) நோயாளர் ஊர்தி அழைப்புகளும், கட்டண அழைப்புகளும்

மாநிலத்தில் 78 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. நியாயமான கட்டணத்தில் பொதுமக்களும் நோயாளர் ஊர்திகளை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். 1999 ஆம் ஆண்டில், 1490 அழைப்புகளை ஏற்று, நோயாளர் ஊர்திகள் செயல்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டணமாக ரூ.1,68,450 பெறப்பெற்றுள்ளது.

[2000 மே 12

(ஏ) பொது நலன் கருதி ஆயத்த நிலை நிறுத்தப் பணி

முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்களின்போதும், 1999 ஆம் ஆண்டில் மொத்தம் 743 பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஆயத்த நிலை நிறுத்தப் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. நிலை நிறுத்தப் பணி தவிர தனியார்களின் விழாக்களுக்கென 742 ஆயத்தநிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கென ரூ.20,28,043 கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

X. துறையின் செயல் நோக்கத்துடன் பணியாளர்களின் செயல்திறன் ஒருங்கிணைத்தல்

(1) இத்துறையின் நோக்கங்களை அடைவதற்கு ஏதுவாகவும், இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்பட பணிபுரிய ஊக்குவிப்பதற்காகவும், பின்வரும் ஊக்கத்தொகைகள் அளிக்கப்படுவதுடன், நலத் திட்டங்களின்கீழ் உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன.

(2) ஊக்கத் தொகைகள்

(அ) விருதுகளும், வெகுமதிகளும்

தீயணைப்புத் துறையினர் போற்றத்தக்க வகையில், கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினைப் பாராட்டும் வகையில், மாநில அரசு ஏற்படுத்திய, பின்வரும் விருதுகள், தமிழ்நாடு தீயணைப்புத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன:-

(1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்):

| பதவித் தரம் | 1999-ல் வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| நிலையத் தீயணைப்பு அலுவலர் | 2 |
| முன்னணித் தீயணைப்போர் | 2 |



2000 மே 12]

| | |
|---|---|
| யந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 2 |
| தீயணைப்போர் ஓட்டுநர் | 2 |

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2000 முதல் ரூ.5000 வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள்.

**2. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம் (பொங்கல்-2000):**

| | |
|---|---|
| முன்னணி தீயணைப்போர் | 34 |
| யந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 5 |
| தீயணைப்போர் ஓட்டுநர் | 27 |
| தீயணைப்போர் | 14 |

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளோர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கப்படியாக ரூ.40-ம், முன்னணித் தீயணைப்போர்/யந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்-யந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ.50-ம் வழங்கப்படுகிறது.

3. மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட விருதுகளும் வழங்கப்படுகின்றன. அவை விவரம் பின்வருமாறு:

(அ) 1999 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:-

| | |
|---|---|
| உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| நிலையத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| முன்னணித் தீயணைப்போர் | 1 |
| யந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 1 |
| தீயணைப்போர் ஓட்டுநர் | 1 |
| தீயணைப்போர் | 1 |

[2000 மே 12

(ஆ) தகைசால் பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:-

| | |
|---|---|
| முன்னணித் தீயணைப்போர் | 1 |
| தீயணைப்போர் | 1 |

(ஆ) நலத் திட்டங்கள்:

(1) தீயணைப்புத் துறை நல நிதி

தீயணைப்புத் துறையில் துயருக்கு ஆளான நிலையிலுள்ள பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கான 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி அவர்களது நலனையும் மேம்படுத்துகிறது. இதன் உறுப்பினர்களுக்குப் பின்வரும் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது:-

(அ) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் சத்துணவு வழங்க;

(ஆ) அவர்களின் குழந்தைகளது உயர் கல்விச் செலவிற்கு;

(இ) மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க;

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவிற்கு;

இத்திட்டத்தில் 5,387 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இதற்கென்று ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வரும் மானியத் தொகை ரூ.1,50,000/- லிருந்து, ரூ. 3,00,000 ஆக உயர்த்தி 1999-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனைத் தவிர உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.1,68,837/- வசூலிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ.3,14,107.50 ஆகும்.

2. குடும்ப நல நிதித் திட்டம் :

பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் அரசு அளிக்கும் ரூ. 1,00,000/- தவிர,



2000 மே 12]

பின்வரும் நிவாரணம் வழங்கவும் அரசு ஆணை எண் 1696, உள் துறை, நாள் 16-12-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| (அ) பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் தீயணைப்புப் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.2,00,000/- |
| (ஆ) பணியிலிருக்கும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு | ரூ.50,000/- |
| (இ) பணியிலிருக்கும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு | ரூ.10,000/- |
| (ஈ) பணியிலிருக்கும்போது சிறு காயமடைந்தவர்களுக்கு | ரூ.5,000/- |

3. தொகுதிக் காப்புறுதித் திட்டம்:

பணியிலிருக்கும்போது உயிர்துறக்கும் தீயணைப்புத் துறை பணியாளரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக, தீயணைப்புத் துறை இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும், தொகுதிக் காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயிர் துறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.1,00,000/- அளவிற்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

4. உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ், உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவித் தரம் வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை, மைதா, பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ.68 இலட்சம் அரசு மானியமாகச் செலவிடுகிறது.

5. குடியிருப்புகள் கட்டுதல் :

தீயணைப்புப் பணியாளர்களின் செயல் திறன் குறையாமல் இருக்கவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், அவர்களுக்குத் தீயணைப்பு நிலையங்களின் அருகிலேயே குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தற்போது அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக்நகர்,

வண்ணாரப்பேட்டை, நத்தனம், பெரம்பலூர், நாகப்பட்டினம், அண்ணாநகர் (மேற்கு), மயிலாப்பூர், தாம்பரம், தர்மபுரி, மதுரை மற்றும் மணலி ஆகிய இடங்களில் குடியிருப்புகள் உள்ளன. மேலும் ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் கட்டித்தர வேண்டுமென அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. 1998-99-ல் முதல் கட்டமாக தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு ரூ.3.30 கோடி செலவினத்தில் துங்கம்பாக்கம், விழுப்புரம், திருவல்லிக்கேணி, பெரியகுளம், கோயம்புத்தூர் தெற்கு மற்றும் தேனாம்பேட்டை ஆகிய 6 இடங்களில் 100 குடியிருப்புகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.3.12 கோடி செலவினத்தில் ஜெயங்கொண்ட சோழபுரம், பாளையங்கோட்டை, ஈரோடு, செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் ஆத்தூர் ஆகிய 6 இடங்களில் 100 குடியிருப்புகள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**XI. 1996-ல் இவ்வரசு பொறுப்பேற்ற பின் வழங்கியுள்ள வசதிகளும் பயன்களும் :**

பொது மக்களின் நலன்கருதி பணியின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இத்துறையின் பணித்தரத்தை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1. ஓரூர்தி கொண்ட 49 புதிய தீயணைப்பு நிலையங்கள் சென்னை மற்றும் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு அவை முழு அளவில் செயல்பட்டு வருகின்றன.

2. பின்வரும் மாவட்டங்களில் ஆறு புதிய கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன:-

(அ) கரூர் மாவட்டம்

(ஆ) பெரம்பலூர் மாவட்டம்

(இ) திருவள்ளூர் மாவட்டம்

(ஈ) திருவாரூர் மாவட்டம்

(உ) தேனி மாவட்டம்

(ஊ) நாமக்கல் மாவட்டம்



3. 1070 தீயணைப்புப் பணியாளர்கள் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் தமிழ்நாடு சீருடை பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் காலியாக உள்ள 1057 இடங்களுக்கு தீயணைப்போர்கள் தேர்வு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

4. மறைமலை நகரில் செயல்பட்டு வந்த தீயணைப்பு நிலையம் ரூ. 46.00 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

5. ரூ. 4.6 கோடி செலவில் புதிதாக 18 நீர்தாங்கி வண்டிகளும், நுரை பீச்சும் சிறு ஊர்தி ஒன்றும் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

6. 1997-1998 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட புதிய தீயணைப்பு நிலையங்களுக்காக ரூ. 6.52 கோடி செலவில் 28 நீர்தாங்கி வண்டிகளை வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

7. பல மாடிகள் கொண்ட உயரமான கட்டடங்களில் தீயை அணைக்கவும், அவ்வாறு ஏற்படும் தீ விபத்தின்போது கட்டடத்தின் உள்ளே சிக்கிக் கொண்டவர்களை மீட்கவும், இரண்டு அதி நவீன ஹைட்ராலிக் பிளாட்பார்ம் மற்றும் சுழல் மேஜை ஏணி வண்டிகளை ரூ. 4.76 கோடி ரூபாயில் வாங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

8. வாணியம்பாடி தீயணைப்பு நிலையத்திற்கு ரூ.18.70 இலட்சம் செலவில் நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

9. சென்னையில் தற்போதுள்ள பயிற்சிப் பள்ளி மத்திய அரசின் பத்தாம் நிதிக்குழு உதவி மானியத் திட்டத்தின்கீழ் ரூ.4.00 கோடி செலவில், மண்டலப் பயிற்சி மையமாக நிலை உயர்த்தப்பட்டு, தாம்பரத்திற்கு மாற்றப்படவுள்ளது. மேற்படி தரம் உயர்த்தப்பட்ட மாநிலப் பயிற்சிப் பள்ளி மையம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

10. முன்பு அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள தீயணைப்புச் சாதனங்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தன. இவ்வகையில் ஒரு தீயணைப்புச் சாதனத்திற்கு ஆகும் பராமரிப்புச் செலவு ரூ.850/- வரை இருந்தது. தீயணைப்புச் சாதனங்களை உரியவாறு பராமரிக்க, அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் அனைத்திலுமுள்ள தீயணைப்புச் சாதனங்களைப் பராமரிக்கும் பணியினை சாதனம் ஒன்றுக்கான செலவு ரூ.300/- என்ற வீதத்தில், தீயணைப்புத் துறை பணியாளர்களைக் கொண்டே மாநிலம் முழுவதும் செய்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வகையில் கிடைக்கும் வருவாயில் 90 சதவீதம் அரசின் கணக்கில் செலுத்தப்படும், மீதமுள்ள 10 சதவீதம் இப்பணியில் ஈடுபடும் தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு உழைப்பூதியமாக வழங்கப்படும். இது, தீயணைப்புத் துறையின் செயல்திறனை மேம்படுத்தவும் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும்.

11. தகவல் தொடர்பினை மேம்படுத்தும் நோக்கத்தோடு மாநில அளவில் 13 உயர் நுண் அலைவரிசை கம்பியில்லாத் தந்திக் கருவிகளை ரூ.20.61 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்படி தகவல் தொடர்பு கருவிகள் வாங்கப்பட்டு தேவையான இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

12. சென்னை மாநகரில் இயங்கிவரும் தீத்தடுப்புக் குழுக்கள் இரண்டிற்கு ரூ.5.00 இலட்சம் செலவில் இரு புகைப்படப் பிரிவுகளை உருவாக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது [காண்க அரசாணை எண் 690, உள் (காவல்-17) துறை, நாள் 4-6-1998].

13. திருச்சிராப்பள்ளி, வேலூர், தர்மபுரி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் ஆகிய ஆறு கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்களைப் புதிதாக ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது [காண்க அரசாணை எண் 686, உள் (காவல்-17) துறை நாள் 4-6-1998].

14. வில்லிவாக்கம் தீயணைப்பு நிலையத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மேனிலை நீர்த் தொட்டியுடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறு ரூ.2.93 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. [காண்க அரசாணை எண் 688, உள் (காவல்-17) துறை, நாள் 4-6-1998]. இதன் கட்டுமானப் பணி முடிக்கப்பெற்றது.

15. தண்டையார்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு ரூ.1.71 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. [காண்க அரசாணை எண். 687, உள் (காவல்-17) துறை, நாள் 4-6-1998]. இதன் கட்டுமானப் பணி முடிக்கப்பெற்றது.

16. வீட்டு வசதி நிதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினால் கட்டி வழங்க அரசு கொள்கை முடிவு மேற்கொண்டு உள்ளது. இதன்படி 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் மொத்தம் ரூ.6.42 கோடி செலவில் 12 இடங்களில் 200 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது.





17. வ.உ.சி. நகர், கள்ளக்குறிச்சி, வேலூர், திருச்சி மற்றும் சிதம்பரம் ஆகிய 5 தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் ரூ.150.17 இலட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவைகளின் கட்டுமானப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. [காண்க அரசாணை எண். 1028, உள்(காவல்-17) துறை, நாள் 31-7-1998].

18. திருவான்மியூர் மற்றும் கொருக்குப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் தலா ரூ.35.00 இலட்சம் செலவினத்தில் ஓரூர்தி கொண்ட தீயணைப்பு நிலையங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்தீயணைப்பு நிலையங்கள் 18-8-1999 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.

19. தீயணைப்பு ஊர்திகளை எந்த நேரத்திலும் நல்ல நிலையில் வைத்து பராமரிக்க அக்டோபர் 1999 முதல் தீயணைப்பு ஊர்திகளை பழுதுபார்க்கவும், ஊர்திகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள் வாங்கவும் தீயணைப்புத் துறை இயக்குநருக்கு உள்ள அதிகாரத்தினை ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- ஆகவும், துணை இயக்குநருக்கு ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/- ஆகவும், கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு உள்ள அதிகாரத்தை ரூ.2,000-லிருந்து ரூ.4,000/- ஆகவும் உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

20. மேலும், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை உந்தூர்திப் பொறியாளருக்கு ரூ.2,500/-க்கு மேற்பட்ட செலவினத்திற்கு ஊர்திகளின் பழுதுகளை மேற்கொள்வதற்காக தொழில் நுட்பச் சான்று வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுபோல் தீயணைப்புத் துறை மாநிலப் பணிமனையில் உள்ள உந்தூர்திப் பொறியாளருக்கும் 31-5-2000 வரை தீயணைப்புத் துறை ஊர்திகளுக்கு பழுதுகள் செப்பனிட தொழில் நுட்பச் சான்று வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

21. 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 விழுக்காடு பங்குத் தொகை கொண்டு 24 தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. எனினும் 16 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அவர்களது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு

[2000 மே 12

நிதியிலிருந்து தொகை வழங்க முன்வந்தமையால், வேடசந்தூர், சங்ககிரி, மேட்டூர், பல்லடம், சத்தியமங்கலம், ஒரத்தநாடு, ஸ்ரீபெரும்புதூர், வேதாரண்யம், இராமேஸ்வரம், அருப்புக்கோட்டை, வந்தவாசி, மேட்டுப்பாளையம், சோழவந்தான், தென்காசி, ஆலங்காயம் மற்றும் நன்னிலம் ஆகிய 16 தீயணைப்பு நிலையங்களுக்கு ரூ.299.20 இலட்சத்தில் (பொதுக் காப்பீட்டுறுதி கழக கடன் உட்பட) கட்டடம் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

22. தீயணைப்புத் துறை பணியாளர்களின் நலன் கருதி அரசு 1999-2000 ஆண்டுகளில் தீயணைப்புத் துறை நல நிதியினை ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சத்திற்கு உயர்த்தியுள்ளது.

23. சென்னை மாநகரில் கோடைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள புறத் தீயணைப்பு நிலையங்களின் பயன்பாட்டிற்கென ரூ.9.35 இலட்சத்தில் நீர் சேமிப்பு தொட்டிகள் வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

24. அரசு ஆணை எண். 112, உள்(காவல்-17)துறை, நாள் 1-2-2000-ல் தகவல் தொடர்பு மையத்தினை மேம்படுத்த மேலும் 20 அதிநுண் அலைவரிசை தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்குவதற்கென ரூ.32.00 இலட்சம் அரசு ஒப்பளித்துள்ளது.

**XII. 2000-2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பெற்ற திட்டங்கள்**

1996-97 ஆம் ஆண்டில் திறக்கப்பெற்ற 21 தீயணைப்பு நிலையங்களுக்கும், 1999-2000 ஆம் ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட 2 தீயணைப்பு நிலையங்களுக்கும் ரூ.7.49 இலட்சம் செலவினத்தில் அறைகலன்கள் வாங்குதல்.

எந்தவொரு கோணத்தில் நோக்கினாலும், இத்துறை ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தகுந்த ஒன்றாம். துறையின் பணித் தரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் மாநிலம் முழுவதும் தற்பொழுது பரந்து விரிந்து செயல்பட்டு வரும் 279 தீயணைப்பு நிலையங்களுக்கும் நவீன தளவாடங்களை வழங்குவதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.



**இணைப்பு-1**

**நிருவாக அமைப்பு**

தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர்

துணை இயக்குநர், வடமண்டலம், சென்னை
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்

| | தீநி | நபகு | தீதகு | பிற |
|---|---|---|---|---|
| 1. வடசென்னை | 14 | - | 1 | 1* |
| 2. தென்சென்னை | 11 | 1 | 1 | 1* |
| 3. காஞ்சிபுரம் | 9 | - | 1 | - |
| 4. திருவள்ளூர் | 13 | - | - | - |
| 5. ம.ப.ப. | - | 1 | - | - |
| 6. வடமண்டலம் | | 4 | | 2** |
| மொத்தம் | 47 | 6 | 3 | 4 |

துணை இயக்குநர், மத்தியமண்டலம், திருச்சி
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்

| | தீநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | 8 | - | 1 |
| 2. புதுக்கோட்டை | 11 | 1 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | - | - |
| 4. நாகப்பட்டினம் | 9 | - | - |
| 5. கடலூர் | 14 | 1 | - |
| 6. விழுப்புரம் | 11 | 1 | - |
| 7. கரூர் | 4 | - | - |
| 8. பெரம்பலூர் | 6 | - | - |
| 9. திருவள்ளூர் | 10 | - | - |
| மொத்தம் | 82 | 3 | 2 |

துணை இயக்குநர், தென்மண்டலம், மதுரை
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்

| | தீநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. மதுரை | 9 | - | - |
| 2. திருநெல்வேலி | 13 | - | - |
| 3. கன்னியாகுமரி | 7 | 1 | - |
| 4. தூத்துக்குடி | 9 | 1 | - |
| 5. விருதுநகர் | 8 | - | 1 |
| 6. இராமநாதபுரம் | 16 | | |
| 7. தேனி | 8 | - | - |
| மொத்தம் | 70 | 2 | 1 |

துணை இயக்குநர், மேற்குமண்டலம், கோயம்புத்தூர்
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்

| | தீநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 13 | 1 | 1 |
| 2. ஈரோடு | 10 | - | 1 |
| 3. சேலம் | 8 | - | 1 |
| 4. தர்மபுரி | 10 | - | 1 |
| 5. திண்டுக்கல் | 8 | 1 | 1 |
| 6. வேலூர் | 15 | - | 1 |
| 7. திருவண்ணாமலை | 12 | - | - |
| 8. நாமக்கல் | 4 | - | - |
| மொத்தம் | 80 | 2 | 6 |

இயக்குநர் அலுவலகம்
1. துணை இயக்குநர் (நிருவாகம்)
2. நேர்முக உதவியாளர் (நிருவாகம்)
3. நேர்முக உதவியாளர் (பண்டகசாலை)
4. பணியாளர் அமைப்புப் பிரிவு
5. கணக்குப் பிரிவு
6. பொதுப் பிரிவு
7. தணிக்கைப்பிரிவு
8. பண்டகசாலைப் பிரிவு

மாநிலத்தின் மொத்தத் தீயணைப்பு நிலையங்கள் 279

மற்ற அலுவலகம்

| | |
|---|---|
| மாநிலப் பயிற்சி பள்ளி | 1 |
| மாநிலப் பணிமனை | 1 |
| இசைக் கருவிக் குழு | 1 |

குறிப்பு:-
தீநி - தீயணைப்பு நிலையம்
நபகு - நடமாடும் பழுது பார்க்கும் குழு
தீதகு - தீத்தடுப்புக் குழு
பிற - * = புகைப்படப் பிரிவு
** - தீக்கட்டுப்பாட்டு அறை மற்றும் கம்பியில்லாத் தந்தி பிரிவு.

2000 மே 12]

## இணைப்பு-2

### நிருவாகப் பதவிகளின் விவரங்கள்

| தொடர் எண். | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தீயணைப்புத் துறை இயக்குநர் (இ.கா.ப.) | 1 |
| 2. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர் | 4 |
| 3. | கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 29 |
| 4. | உதவிப் பொறியாளர் (உந்தூர்தி) | 1 |
| 5. | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 43 |
| 6. | நிலையத் தீயணைப்பு அலுவலர் | 307 |
| 7. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 13 |
| 8. | உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர் | 16 |
| 9. | முன்னணித் தீயணைப்போர் | 719 |
| 10. | எந்திரக் கம்மியர் ஓட்டுநர் (Driver Mechanic) | 246 |
| 11. | தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் எந்திரக் கம்மியர் (Fireman Mechanic) | 1031 |
| 12. | தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவிகள் | 3911 |
| | மொத்தம் | **6321** |

## இணைப்பு-3

### அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

| தொடர் எண். | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | தீயணைப்புத் துறை இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | 2 |
| 3. | கண்காணிப்பாளர் | 32 |
| 4. | உதவியாளர் | 90 |
| 5. | இளநிலை உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் தட்டச்சர் | 61 |
| 6. | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 5 |

| | |
|---|---|
| 7. தட்டச்சர் | 33 |
| 8. பதிவுரு உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் | 31 |
| 9. அலுவலக உதவியாளர் | 51 |
| மொத்தம் | 306 |

**இணைப்பு - 4**

**இம்மாநிலத்தில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்**

| கோட்டத்தின் பெயர் (1) | தீயணைப்பு நிலையம் (2) |
|---|---|
| **1. வடமண்டலம், சென்னை** | |
| வடசென்னை | 1. எஸ்பிளனேடு |
| | 2. வண்ணாரப்பேட்டை |
| | 3. இராயபுரம் |
| | 4. தண்டையார்பேட்டை |
| | 5. செம்பியம் |
| | 6. வியாசர்பாடி |
| | 7. வ.உ.சி. நகர் |
| | 8. வேப்பேரி |
| | 9. கீழ்ப்பாக்கம் |
| | 10. எண்ணூர் |
| | 11. மணலி |
| | 12. தலைமைச் செயலகம் |
| | 13. அத்திப்பட்டு |
| | 14. கொருக்குப்பேட்டை |
| தென்சென்னை | 1. எழும்பூர் |
| | 2. திருவல்லிக்கேணி |
| | 3. மைலாப்பூர் |
| | 4. தேனாம்பேட்டை |
| | 5. சைதாப்பேட்டை |
| | 6. கிண்டி |
| | 7. அசோக்நகர் |
| | 8. கோயம்பேடு |
| | 9. ஜெ. ஜெ. நகர் |



| | |
|---|---|
| தென்சென்னை—தொடர்ச்சி. | 10. ராஜ்பவன் |
| | 11. திருவான்மியூர் |
| காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் |
| | 2. திருபெரும்புதூர் |
| | 3. மதுராந்தகம் |
| | 4. செங்கல்பட்டு |
| | 5. மறைமலைநகர் |
| | 6. உத்திரமேரூர் |
| | 7. தாம்பரம் |
| | 8. அச்சிறுப்பாக்கம் |
| | 9. திருக்கழுக்குன்றம். |
| திருவள்ளூர் | 1. அம்பத்தூர் |
| | 2. பொன்னேரி |
| | 3. வில்லிவாக்கம் |
| | 4. திருத்தணி |
| | 5. திருவள்ளூர் |
| | 6. கும்மிடிப்பூண்டி |
| | 7. கும்மிடிப்பூண்டி (சிப்காட்) |
| | 8. ஆவடி |
| | 9. செங்குன்றம் |
| | 10. பள்ளிப்பட்டு நகர் |
| | 11. பூவிருந்தவல்லி |
| | 12. பேரம்பாக்கம் |
| | 13. திரூர் |

வடமண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம் - 47

| | |
|---|---|
| | **2. மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி** |
| திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி |
| | 2. திருவரங்கம் |
| | 3. மணப்பாறை |
| | 4. புள்ளம்பாடி |
| | 5. நாவல்பட்டு |
| | 6. துவரங்குறிச்சி |
| | 7. லால்குடி |
| | 8. உப்பிலியாபுரம் |

[2000 மே 12

| | | |
|---|---|---|
| கரூர் | 1. | கரூர் |
| | 2. | புகளூர் |
| | 3. | அரவக்குறிச்சி |
| | 4. | முசிறி |
| பெரம்பலூர் | 1. | பெரம்பலூர் |
| | 2. | துறையூர் |
| | 3. | அரியலூர் |
| | 4. | ஜெயங்கொண்ட சோழபுரம் |
| | 5. | வேப்பூர் |
| | 6. | செந்துறை |
| கடலூர் | 1. | கடலூர் |
| | 2. | சிதம்பரம் |
| | 3. | பண்ருட்டி |
| | 4. | நெல்லிக்குப்பம் |
| | 5. | விருத்தாசலம் |
| | 6. | காட்டுமன்னார்கோயில் |
| | 7. | குறிஞ்சிப்பாடி |
| | 8. | திட்டக்குடி |
| | 9. | கடலூர் (சிப்காட்) |
| | 10. | வேப்பூர் |
| | 11. | சேத்தியாதோப்பு |
| | 12. | திருமுட்டம் |
| | 13. | பரங்கிப்பேட்டை |
| | 14. | மங்கலம்பேட்டை |
| விழுப்புரம் | 1. | விழுப்புரம் |
| | 2. | கள்ளக்குறிச்சி |
| | 3. | திண்டிவனம் |
| | 4. | செஞ்சி |
| | 5. | திருக்கோவிலூர் |
| | 6. | சங்கராபுரம் |
| | 7. | மரக்காணம் |
| | 8. | உளுந்தூர்பேட்டை |
| | 9. | திருவெண்ணெய்நல்லூர் |
| | 10. | மேல்மலையனூர் |
| | 11. | வானூர் |



2000 மே 12]

| | | |
|---|---|---|
| புதுக்கோட்டை | 1. | புதுக்கோட்டை |
| | 2. | புதுக்கோட்டை (சிப்காட்) |
| | 3. | அறந்தாங்கி |
| | 4. | பொன்னமராவதி |
| | 5. | ஆலங்குடி |
| | 6. | திருமயம் |
| | 7. | இலுப்பூர் |
| | 8. | கந்தர்வக்கோட்டை |
| | 9. | கீரனூர் |
| | 10. | ஜெகதாப்பட்டினம் |
| | 11. | ஆவுடையார் கோவில் |
| தஞ்சாவூர் | 1. | தஞ்சாவூர் |
| | 2. | கும்பகோணம் |
| | 3. | பட்டுக்கோட்டை |
| | 4. | ஒரத்தநாடு |
| | 5. | திருக்காட்டுப்பள்ளி |
| | 6. | பாபநாசம் |
| | 7. | திருவிடைமருதூர் |
| | 8. | பேராவூரணி |
| | 9. | திருவையாறு |
| நாகப்பட்டினம் | 1. | நாகப்பட்டினம் |
| | 2. | மயிலாடுதுறை |
| | 3. | சீர்காழி |
| | 4. | தரங்கம்பாடி |
| | 5. | வேதாரண்யம் |
| | 6. | குத்தாலம் |
| | 7. | கீவளூர் |
| | 8. | பூம்புகார் |
| | 9. | வேளாங்கன்னி |
| திருவாரூர் | 1. | மன்னார்குடி |
| | 2. | நீடாமங்கலம் |
| | 3. | திருத்துறைப்பூண்டி |
| | 4. | திருவாரூர் |
| | 5. | நன்னிலம் |

திருவாரூர்—தொடர்ச்சி.
6. கூடவாசல்
7. கோட்டூர்
8. முத்துப்பேட்டைகாயல்
9. வலங்கைமான்
10. கூத்தாநல்லூர்

மத்திய மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம் - 82

3. தென்மண்டலம், மதுரை

மதுரை
1. மதுரை
2. தல்லாகுளம்
3. உசிலம்பட்டி
4. மேலூர்
5. திருமங்கலம்
6. சோழவந்தான்
7. கொட்டாம்பட்டி
8. அனுப்பானடி
9. கள்ளிக்குடி

தேனி
1. தேனி-அல்லிநகரம்
2. பெரியகுளம்
3. ஆண்டிப்பட்டி
4. கடமலைக்குண்டு
5. மயிலாடும்பாறை
6. உத்தமபாளையம்
7. கம்பம்
8. போடிநாயக்கனூர்

இராமநாதபுரம்-சிவகங்கை
1. இராமநாதபுரம்
2. பரமக்குடி
3. காரைக்குடி
4. தேவகோட்டை
5. சிவகங்கை
6. இராமேஸ்வரம்
7. கமுதி
8. முதுகுளத்தூர்
9. ஏர்வாடி
10. மண்டபம்
11. சிங்கம்புணரி
12. திருப்பத்தூர்



இராமநாதபுரம்-சிவகங்கை—தொடர்ச்சி.
13. மானாமதுரை
14. திருவாடானை
15. ராசசிங்கமங்கலம்
16. சாயல்குடி

விருதுநகர்
1. விருதுநகர்
2. சிவகாசி
3. ராஜபாளையம்
4. அருப்புக்கோட்டை
5. திருவில்லிபுத்தூர்
6. சாத்தூர்
7. திருச்சுழி
8. வத்திராயிருப்பு

திருநெல்வேலி
1. பாளையங்கோட்டை
2. திருநெல்வேலி-பேட்டை
3. தென்காசி
4. கடையநல்லூர்
5. நாங்குநேரி
6. அம்பாசமுத்திரம்
7. சங்கரன்கோவில்
8. வாசுதேவநல்லூர்
9. வள்ளியூர்
10. செங்கோட்டை
11. சுரண்டை
12. சேரன்மாதேவி
13. திசையன்விளை

கன்னியாகுமரி
1. நாகர்கோவில்
2. கன்னியாகுமரி
3. குழித்துறை

| | | |
|---|---|---|
| கன்னியாகுமரி—தொடர்ச்சி. | 4. | தக்கலை |
| | 5. | குலசேகரம் |
| | 6. | குளச்சல் |
| | 7. | கொல்லங்கோடு |
| தூத்துக்குடி | 1. | தூத்துக்குடி |
| | 2. | தூத்துக்குடி அனல்மின் நிலையம் |
| | 3. | கோவில்பட்டி |
| | 4. | திருச்செந்தூர் |
| | 5. | திருவைகுண்டம் |
| | 6. | சாத்தான்குளம் |
| | 7. | விளாத்திகுளம் |
| | 8. | கழுகுமலை |
| | 9. | தூத்துக்குடி (சிப்காட்) |

தென்மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம் - 70

**4. மேற்குமண்டலம், கோயம்புத்தூர்**

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர்-நீலகிரி | 1. | கோயம்புத்தூர் (தெறகு) |
| | 2. | கோயம்புத்தூர் (வடக்கு) |
| | 3. | பொள்ளாச்சி |
| | 4. | திருப்பூர் |
| | 5. | உடுமலைப்பேட்டை |
| | 6. | மேட்டுப்பாளையம் |
| | 7. | குன்னூர் |
| | 8. | உதகமண்டலம் |
| | 9. | கூடலூர் |
| | 10. | வால்பாறை |
| | 11. | பல்லடம் |
| | 12. | கணபதி |
| | 13. | திருப்பூர் (தெற்கு) |
| ஈரோடு | 1. | ஈரோடு |
| | 2. | கோபிச்செட்டிப்பாளையம் |
| | 3. | தாராபுரம் |
| | 4. | காங்கேயம் |
| | 5. | சத்தியமங்கலம் |



| | | |
|---|---|---|
| ஈரோடு—தொடர்ச்சி. | 6. | பவானி |
| | 7. | கொடுமுடி |
| | 8. | வெள்ளக்கோயில் |
| | 9. | பெருந்துறை |
| | 10. | அந்தியூர் |
| வேலூர் | 1. | வேலூர் |
| | 2. | அரக்கோணம் |
| | 3. | குடியாத்தம் |
| | 4. | இராணிப்பேட்டை |
| | 5. | திருப்பத்தூர் |
| | 6. | ஆம்பூர் |
| | 7. | வாணியம்பாடி |
| | 8. | இராணிப்பேட்டை-சிப்காட் |
| | 9. | சோளிங்கர் |
| | 10. | நாட்றாம்பள்ளி |
| | 11. | ஆற்காடு |
| | 12. | பேரணாம்பட்டு |
| | 13. | காட்பாடி |
| | 14. | ஒடுக்கத்தூர் |
| | 15. | ஆலங்காயம் |
| திருவண்ணாமலை | 1. | திருவண்ணாமலை |
| | 2. | ஆரணி |
| | 3. | வந்தவாசி |
| | 4. | செங்கம் |
| | 5. | போளூர் |
| | 6. | செய்யாறு |

| | | |
|---|---|---|
| திருவண்ணாமலை—தொடர்ச்சி. | 7. | தண்டராம்பட்டு |
| | 8. | ஜவ்வாதுமலை |
| | 9. | பெரணமல்லூர் |
| | 10. | வேட்டவலம் |
| | 11. | பெண்ணாத்தூர் |
| | 12. | சேத்துப்பட்டு |
| சேலம் | 1. | சேலம் |
| | 2. | மேட்டூர் |
| | 3. | ஆத்தூர் |
| | 4. | மேட்டூர் அனல்மின் நிலையம் |
| | 5. | சங்ககிரி |
| | 6. | ஏற்காடு |
| | 7. | ஓமலூர் |
| | 8. | எடப்பாடி |
| நாமக்கல் | 1. | நாமக்கல் |
| | 2. | கொல்லிமலை |
| | 3. | ராசிபுரம் |
| | 4. | திருச்செங்கோடு |
| தர்மபுரி | 1. | தருமபுரி |
| | 2. | கிருஷ்ணகிரி |
| | 3. | ஒசூர்-சிப்காட் |
| | 4. | பெண்ணாகரம் |



| | | |
|---|---|---|
| தர்மபுரி—தொடர்ச்சி. | 5. | பாலக்கோடு |
| | 6. | அரூர் |
| | 7. | ஊத்தங்கரை |
| | 8. | தேன்கனிக்கோட்டை |
| | 9. | பர்கூர் |
| | 10. | போச்சம்பள்ளி |
| திண்டுக்கல் | 1. | திண்டுக்கல் |
| | 2. | பழனி |
| | 3. | நத்தம் |
| | 4. | வத்தலக்குண்டு |
| | 5. | ஒட்டன்சத்திரம் |
| | 6. | வேடசந்தூர் |
| | 7. | கொடைக்கானல் |
| | 8. | நிலக்கோட்டை |

மேற்கு மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம்—80

சுருக்கம்

| | | |
|---|---|---|
| வடமண்டலம் | - | 47 |
| மத்தியமண்டலம் | - | 82 |
| தென்மண்டலம் | - | 70 |
| மேற்குமண்டலம் | - | 80 |
| மொத்தம் | - | 279 |

222783
சென்னை-600008
எழும்பூர்



V2,11,31,f99
2000-1051

## இணைப்பு-5

**தீ விபத்துகள் மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றிய ஆண்டு வாரியான விவரங்கள்**

| ஆண்டு | தீ விபத்துகளின் எண்ணிக்கை | இழப்பு | | காப்பாற்றப்பட்டவை | |
|---|---|---|---|---|---|
| | | சொத்துக்களின் மதிப்பு ரூபாய் | இறந்தவர்களின் எண்ணிக்கை | சொத்துக்களின் மதிப்பு ரூபாய் | காப்பாற்றப்பட்ட மனித உயிர்கள் |
| 1998 | 15,146 | 21,77,60,685 | 90 | 175,34,13,826 | 155 |
| 1999 | 16,367 | 13,64,40,210 | 72 | 131,93,15,121 | 78 |

## இணைப்பு-VI

**பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின்கீழ் 1999 ஆம் ஆண்டில் (1999 டிசம்பர் வரையில்) தீயணைப்புத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்த கட்டடங்களின் எண்ணிக்கை**

| தொடர் எண் | சட்டத்தின்/விதியின் பெயர் | கட்டடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் விதிகள் | |
| 2. | பொதுமக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம் | 3671 |
| 3. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம் | 1549 |
| 4. | தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் | 1379 |
| 5. | தொழிற்சாலைகள் சட்டம் | 270 |
| 6. | ஆய்வு செய்யப்பட்ட அரசுக் கட்டடங்கள் | 2240 |
| 7. | படைக்கலச் சட்டம் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் சட்டம் முதலியன. | 4461 |
| 8. | ஆய்வு செய்யப்பட்ட தனியார் கட்டடங்கள் | 2469 |
| 9. | பல்வேறு நிறுவனங்களிலும் கிராமங்களிலும் தீத்தடுப்பு நடவடிக்கை பற்றிய பிரச்சாரம் | 650 |
| | | 776 |

—0—

வெளியீடு 18-4-2001

Issued 18-4-2001

822

127/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மே 12, 2000 – தொகுதி 106 – எண் 1

Friday the 12th May, 2000 – Volume 106 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,

Chennai-600 009

[விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00